TNLA Debates

VII

No. 3.

1980

DIGITIZED

C

V211,31 N80
N81·7·3
23102

86 | 87

வெளியீடு—13-1-1981] [Issued—13-1-1981

1505

# தமிழ் நாடு சட்டமன்றப் பேரவை நடவடிக்கைகள்

# AMIL NADU LEGISLATIVE ASSEMBLY DEBATES

பணித்துறை வெளியீடு—OFFICIAL REPORT

புதன்கிழமை 1980 ஆகஸ்ட் 6 Wednesday 6th August 1980
தொகுதி VII—எண் 3 — Volume VII—No.3.

©
தமிழ்நாடு அரசு—GOVERNMENT OF TAMIL NADU
1981

சட்டமன்றப் பேரவைத் துறை, சென்னை-600 009
Legislative Assembly Department, Fort, St. George, Madras-600 009

விலை 3.15 காசுகள்] [Price 3.15 Paise

12 3102

# உள்ளடக்கம்.

6—8—1980


| | | பக்கங்கள். |
|---|---|---|
| 1. | வினாக்கள்—விடைகள்— | |
| | உடுக்குறியிட்ட வினாக்கள் .. .. | 213—244 |
| 2. | ஒத்திவைப்புத் தீர்மானம்— | |
| | சென்னை சேத்துப்பட்டில் தீ விபத்து .. | 244—250 |
| 3. | தகவல் கோரல்— | |
| | மணலியிலிருந்து வரும் எண்ணை திருட்டு போகாமல் பாதுகாப்பதற்கு மாநில அரசு தவறிவிட்டது என்ற குற்றச்சாட்டு .. | 251—253 |
| 4. | அறிவிப்புகள்— | |
| | (அ) உரிமைக்குழு உறுப்பினர்—தேர்தல் .. | 253—254 |
| | (ஆ) பேரவை விதிகள் குழு உறுப்பினர்கள்—நியமனம் .. .. .. .. .. | 254—255 |
| | (இ) அவைக்குழு உறுப்பினர்கள்—தேர்தல் | 255—256 |
| | (ஈ) அரசு உறுதிமொழிக் குழு உறுப்பினர்கள்—நியமனம் .. .. .. .. | 256 |
| | (உ) சட்ட விதிகள் ஆய்வுக்குழு உறுப்பிலார்கள்—நியமனம் .. .. .. .. | 257 |
| | (ஊ) கூட்டுறவுச் சங்கங்கள் சட்ட முன்வடிவு, 1986. .. .. .. .. | 266 |
| | (எ) வருவாய் வாரிய நீக்கச் சட்ட முன் வடிவு 1980 .. .. .. | 267 |
| | (ஏ) பேரவையின் அலுவல்கள் .. .. | 320—321 |
| | (ஐ) நிகழ்ச்சி நிரலில் மாற்றம் .. .. | 340 |
| | கவன ஈர்ப்புகள்— | |
| | (அ) நெல்லிக்குப்பத்தில் கரும்பு சாகுபடியாளர்களிடையே பதட்ட நிலை .. .. .. | 257—263 |
| | (ஆ) வடஆற்காடு மாவட்டம், திருப்பத்தூரில் அம்மைப்பாலுக்கு பதில் கள்ளிப்பால் பயன்படுத்தப்பெற்றது. | 263—264 |

பக்கங்கள்

6. ஒழுங்குப் பிரச்சனை—

விதிகளைத் தளர்த்தி அதிகமான கவன ஈர்ப்புகள் எடுத்துக்கொள்ளுதல். .. .. 264—265

7. அரசினர் சட்ட முன்வடிவுகள்—

(அ) சிவில் நீதி மன்றங்கள்—சென்னை மாநகர சிவில் நீதி மன்றம் (திருத்த) சட்ட முன்வடிவு, 1980 .. .. .. .. 265

(ஆ) சட்டங்களில் நடுவர் (மாஜிஸ்ட்ரேட்டு)களைக் குறிப்பிடும் சில குறிப்புகள் (தனி வகைமுறைகள்) சட்ட முன்வடிவு, 1980 .. 265—266

(இ) கூட்டுறவுச் சங்கங்கள் சட்ட முன்வடிவு, 1980 .. .. .. .. .. 266

(ஈ) பொதுப்பணிகள் பொறியியல் கழகம் (கையகப்படுத்துதல் பல்வகை விதித்துறைகள்) சட்ட முன்வடிவு, 1980 .. 266—267

(உ) வருவாய் வாரிய நீக்கச் சட்ட முன்வடிவு. (1980 சட்டமன்றப் பேரவை சட்ட முன்வடிவு எண் 22/1980) 267—311

(ஊ) பொது விற்பனை வரி (திருத்த) சட்ட முன்வடிவு, 1980 (சட்டமன்றப் பேரவை சட்ட முன்வடிவு எண் 29/1980.) 311—320

(எ) அடகுக் கடைக்காரர்கள்—கடன் நிவாரணச் சட்டங்கள் (திருத்த) சட்ட முன்வடிவு 1980 (சட்டமன்றப் பேரவை சட்ட முன்வடிவு எண் 28/1980) .. .. .. 321—340

8. பேரவை முன் வைக்கப்பெற்ற ஏடுகள் .. 340—342

## தமிழ்நாடு சட்டமன்றப் பேரவை.

### புதன்கிழமை, 1980 ஆகஸ்ட் 6.

சென்னை செயின்ட் ஜார்ஜ் கோட்டையிலுள்ள சட்டமன்றப் பேரவை மண்டபத்தில் காலை 9.00 மணியளவில் மாண்புமிகு பேரவைத் தலைவர் திரு. க. இராசாராம் அவர்கள் தலைமையில் பேரவை கூடியது.

**மாண்புமிகு பேரவைத் தலைவர் :**

''எண்பொருள் வாகச் செலச்சொல்லித் தான்பிறர்வாய்
நுண்பொருள் காண்பது அறிவு.''

தான் சொல்ல விரும்புவதை எளிதாகப் புரியத்தக்க சொற்களால் பிறர் மனதில் பதியும்படி சொல்ல வேண்டும். பிறர் சொல்லும் சொற்களில் பொதிந்துள்ள நுட்பமான பொருளையும் ஆராய்ந்து காண வேண்டும். இவ்விரண்டும் அறிவுடையோரின் இயல்புகளாகும்.

### 1. வினாக்கள்—விடைகள்.

### உடுக்குறியிட்ட வினாக்கள்.

**திருவில்லிபுத்தூர் கூட்டுறவு பால் வழங்கு சங்கத்திற்கென எடுக்கப்பட்ட நிலத்திற்கு நஷ்டஈடு.**

*வினா எண் 108. திரு. இரா. தாமரைக்கனி: மாண்புமிகு வருவாய்த்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா :—

(அ) திருவில்லிப்புத்தூர் கூட்டுறவு பால் வழங்கும் சங்கத்திற்கு நில உச்சவரம்பு சட்டத்தின் கீழ் எடுக்கப்பட்ட சுமார் 60 ஏக்கர் நிலத்திற்கு நஷ்ட ஈடு தொகை கொடுக்கப்படவில்லை என்பது உண்மையா?

(ஆ) ஆம் எனில், அதற்கான காரணம் யாது ?

**மாண்புமிகு திரு. எஸ். டி. சோமசுந்தரம் :**

(அ) ஆம்.

(ஆ) திருவில்லிப்புத்தூர் கூட்டுறவு பால் வழங்கும் சங்கத்தின் மொத்த உடைமை 90.34 சாதாரண ஏக்கர் உபரி நிலங்கள். இதில் 30.34 சாதாரண ஏக்கர் உபரி நிலம் அரசால் எடுக்கப்

பட்டுள்ளது. அதற்குக் கொடுக்கப்பட வேண்டிய தொகை ரூ. 1,304.04. இத்தொகை பெறுவதற்குச் சங்கம் படிவம் 'K'-ல் தனது கோரிக்கையை அளிக்காமல் நிலத்தை குறைந்தக் தொகைக்குக் குத்தகைக்குக் கேட்பதால் தொகை இன்னும் கொடுக்கப்படவில்லை.

திரு. இரா. தாமரைக்கனி : இந்தக் கூட்டுறவு பால் பண்ணையிலிருந்து எடுக்கப்பட்ட நிலங்களுக்கு நஷ்டஈடாக ரூ. 1,304.04 கொடுப்பதாக அமைச்சர் அவர்கள் அறிவித்தார்கள். ஒரு ஆண்டு குத்தகையாக அந்தப் பால்பண்ணை ரூ. 133-க்குக் கேட்கிறார்கள். அது பத்து ஆண்டுகளுக்கு ரூ. 1,330 ஆகிறது. இது கூட்டுறவுப் பால்பண்ணையாக இருக்கிற காரணத்தால் அதற்கு ஒரு விதி விலக்கு வைத்து ஏன் அரசாங்கமே மேற்படி சங்கத்திற்குக் குத்தகைக்கு விடக்கூடாது ?

மாண்புமிகு திரு. எஸ். டி. சோமசுந்தரம்:—முதலிலே அந்த நிலத்தை எடுத்த பிறகு அந்த நிலத்திற்குரிய பணத்தைக் கேட்கிற உரிமைப்படி அவர்கள் கேட்கவில்லை. முதலில் அந்த நிலத்திற்கு ஆண்டுக்கு ரூ. 914.04 அரசாங்கத்தால் வழங்கப்பட்டது. ஆனால் 1385, 1386, 1387 என்ற இந்த மூன்று பசலிகளில் அவர்கள் அந்த நிலத்தைப் பயன்படுத்தவில்லை. அது மட்டுமல்ல, அந்தச் சங்கம் எங்களுக்கு இருக்கிற குத்தகையை ரத்து செய்யுங்கள் என்று கோரிக்கை விட்டதன்பேரில் அந்தக் கோரிக்கையை ஏற்று அவர்களின் குத்தகையை ரத்து செய்திருக்கிறது.

திரு. இரா. தாமரைக்கனி:—உச்சவரம்பின்கீழ் நிலத்தை எடுத்தவர்கள் ஒப்படைப்பு செய்யப்பட்ட நிலத்தைத் திருப்பி பதிவு செய்யப்பட்டவர்களுக்கு பட்டா செய்து கொடுக்காமல் ஒரே நபருக்கு பல புனைப் பெயர்களில் பட்டா செய்துகொடுப்பது அரசுக்குத் தெரியுமா? அது பெரிய புல்வெளிக் காடாக இருக்கிறது. ப்ரொட்டீன் சத்துள்ள புல்வெளியாக இருப்பதால் மாடுகளுக்கு நல்ல சத்துள்ள ஆகாரமாக இருக்கிறது. ஆகவே நான் மீண்டும் வலியுறுத்திக் கேட்கிறேன். ஏன் அந்தக் கூட்டுறவு பால்பண்ணைக்கு இந்த நிலத்தைக் கொடுக்கக்கூடாது ?

மாண்புமிகு திரு. எஸ். டி. சோமசுந்தரம்:—இதிலே, பலருக்குக் கொடுக்கப்பட்டிருப்பது தெரியுமா என்று கேட்கிறபோது அதற்கு என் பதில் "தெரியாது". ஆனால் சொன்னால் அதைப்பற்றிக் கவனிக்கிறேன். அடுத்து அந்தப் பால்பண்ணைக்கு திருப்பிக் கொடுக்க அரசாங்கம் உத்தேசித்திருக்கிறதா என்றால், பால் பண்ணைக்கு அடமானம் பண்ணியாகிவிட்டது என்று அவர்களே சொல்லியிருக்கிறார்கள். அடமானம் பண்ணியிருப்பதால் பால்பண்ணைக்கு எப்படி மீண்டும் கொடுக்கமுடியும் ? அடமானத்திலே தவறு இருக்கிறது என்று சொன்னால் அதைக் கண்டுபிடிக்க அரசாங்கம் தயாராகயிருக்கிறது.



1505

திரு. மு. ஜான் வின்சென்ட்:—கிராமங்களில் இயங்குகிற பால் உற்பத்தியாளர் சங்கங்கள் கட்டடம் கட்ட இடம் இல்லாமல் இருக்கிற இடங்களில் அரசுக்கு உடைமைப்பட்ட இடங்களை அரசு கொடுக்க முன்வருமா ?

மாண்புமிகு திரு. எஸ். டி. சோமசுந்தரம்:—கொடுப்பதற்கு முன்வரும்.

திரு. பாபு ஜனார்த்தனன்.—பேரவைத் தலைவர் அவர்களே, திருவில்லிப்புத்தூர் கூட்டுறவு பால் வழங்குச் சங்கத்திற்கென எடுக்கப்பட்ட நிலத்திற்கு ரூ. 1,304.04 கொடுக்க இருப்பதாக மாண்புமிகு அமைச்சர் அவர்கள் சொன்னார்கள். அதேபோல், செய்யாறு கூட்டுறவு பால் வழங்குச் சங்கத்திற்குப் பால் வினியோகிக்கும் திட்டத்திற்கு ஒரு நிலம் வாங்குவதற்கு ஏற்பாடு செய்யப்பட்டு இருக்கிறது. அதற்கும் நிதி உதவி செய்ய அரசு முன்வருமா?

மாண்புமிகு திரு. எஸ். டி. சோமசுந்தரம்:—தலைவர் அவர்களே, இது வேறு இலாகாவிலே கேட்கப்படவேண்டியகேள்வி(

## பெருந்துறை வட்ட அலுவலகத்திற்குக் கட்டிடம்.

*வினா எண். 109. திரு. தி. கா. நல்லப்பன்:—மாண்புமிகு வருவாய்த்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா ?

(அ) பெருந்துறை எப்போது தனி வட்டமாகப் பிரிக்கப்பட்டது?

(ஆ) வட்ட அலுவலகத்திற்கு சொந்தக் கட்டிடம் கட்ட உத்தேசம் உள்ளதா?

(இ) ஆம் எனில், எப்போது, எவ்வளவு செலவில் கட்டப்பட உள்ளது ?

மாண்புமிகு திரு. எஸ். டி. சோமசுந்தரம்:—

(அ) 4—7—1979

(ஆ) ஆம்.

(இ) நாளாவட்டத்தில் கட்டப்படும்.

*திரு. தி. கா. நல்லப்பன் : பேரவைத் தலைவர் அவர்களே, ஒரு வருஷத்திற்கு மேலாக ஆகியும் ஏற்கனவே இருந்த துணை வட்ட அலுவலகத்திலேயே தான் அந்த வட்ட அலுவலகம் நடந்து

கொண்டு இருக்கிற காரணத்தால், மிகப் பெரிய நெருக்கடி அங்கே ஏற்பட்டு இருக்கிறது. ஆகவே, உடனடியாக அந்த வட்ட அலுவலகத்திற்குக் கட்டிடம் கட்ட அரசு ஏற்பாடு செய்யுமா ?

மாண்புமிகு திரு. எஸ். டி. சோமசுந்தரம் : பேரவைத் தலைவர் அவர்களே, 1979 ஆம் ஆண்டு ஜூலை மாதம் 4 ஆம் நாள் அன்று 13 துணை வட்டங்கள் வட்டங்களாக ஆக்கப்பட்டு இருக்கின்றன. அதனால்தான் அந்தத் துணை வட்ட அலுவலகங்களிலேயே வட்ட அலுவலகங்களும் நடைபெற்றுக் கொண்டு வருகின்றன. எங்கே இட நெருக்கடி இருக்கிறதோ அங்கே எல்லாம் அரசு பக்கத்தில் உள்ள கட்டிடங்களை வாடகைக்கு எடுக்கச் சொல்லியிருக்கிறது. ஒரே நாளில் கட்டிடம் கட்டிவிட முடியாது. அலாவுதீன் அற்புத விளக்கு நம்மிடத்தில் இல்லை. இப்படிப்பட்ட கட்டிடங்கள் கட்டுவதற்காக ரூ. 10 இலட்சம் ஒதுக்கப்பட்டு இருக்கிறது. கட்டிடங்கள் கட்டுவதற்கான எல்லா ஏற்பாடுகளையும் அரசு செய்து கொண்டு இருக்கிறது.

திரு. கு. ரமணி : தலைவர் அவர்களே, வட்டங்களை அதிகமாக்கி இருப்பது நிர்வாகத் திறமையை நல்ல முறையில் இந்த அரசு வளர்க்க எடுக்கும் ஒரு நடவடிக்கை. அது வரவேற்கத்தக்கது. வட்டமாக அது உயர்த்தப்பட்ட உடனேயே அந்த வட்டத்திற்கு இருக்கும்படியான அத்தனை வேலை சுமையும் அங்கே வந்து சேருகிறது. வேலைகள் அதிகமாகச் சேரும் போது நெருக்கடி அதிகமாகிறது. ஆகவே, அலாவுதீன் அற்புத விளக்கு அரசிடத்தில் இல்லாவிட்டாலும், பக்கத்தில் இருக்கக் கூடிய நல்ல பெரிய கட்டிடங்களை, தேவையான கட்டிடங்களை வாடகைக்கு எடுத்து, அந்த அலுவலகங்களை அங்கே வைப்பதற்கு அரசு ஏற்பாடு செய்யுமா ? அந்தக் கட்டிடம் கட்டும் வேலையையும் துரிதப்படுத்த அரசு ஆவன செய்யுமா?

மாண்புமிகு திரு. எஸ். டி. சோமசுந்தரம் : பேரவைத் தலைவர் அவர்களே, இந்த அரசு வந்த பிறகுதான், துணை, வட்டங்களை வட்டங்களாக ஆக்குகிற போதே, அந்த வட்டத்திற்கு என்னென்ன தேவை, அதையெல்லாம் சேர்த்து ஒன்றாக, ஒரே ஆர்டராகப் போட்டு இருக்கிறது. இதற்கு முன்னால் எல்லாம் அப்படிப் போட மாட்டார்கள். இப்போது ஜீப், போன், மற்றும் என்னென்ன தளவாடங்கள் தேவையோ அவற்றையெல்லாம் சேர்த்து அந்த ஆர்டர் போடப்பட்டு இருக்கிறது. அது மட்டுமல்ல, நான் மேலும் தெரிவித்துக் கொள்வேன், அங்கே இருக்கிற மாவட்ட ஆட்சித் தலைவரிடம் நேரடியாகச் சொல்லியிருக்கிறேன், பொது மக்களுக்கு





இடையூறாக எங்கெங்கே அந்த அலுவலகங்கள் இருக்கின்றனவோ அங்கே எல்லாம் வாடகைக் கட்டிடங்கள் எடுத்துக் கொண்டு, அதை சிபார்சு செய்தால் அதை நான் ஏற்றுக் கொள்கிறேன் என்று சொன்னேன். அவர்களே, அரசைக் கேட்காமல் வாடகைக்கு எடுத்துக் கொள்ளலாம் என்று இந்த அரசு தான் முதன் முதலாகச் சொல்லியிருக்கிறது என்பதை மகிழ்ச்சியுடன் தெரிவித்துக் கொள்கிறேன்.

திரு. மு. அம்பிகாபதி : தலைவர் அவர்களே, 1979 ஆம் ஆண்டு ஜூலை மாதம் 4 ஆம் நாள் அன்று பெருந்துரை துணை வட்டமாக ஆக்கப்பட்டு இருக்கிறது. அதற்கு அலுவலகக் கட்டிடம் உடனடியாகக் கட்ட வேண்டும் என்று திரு. நல்லப்பன் அவர்கள் கேட்டார்கள். மாண்புமிகு அமைச்சர் அவர்கள் அலாவுதீன் அற்புத விளக்கு இல்லை என்று குறிப்பிட்டார்கள். பாதாளபைரவியின் அருள் பெற்று (அப்படி ஒரு சினிமா வந்து இருக்கிறது) சீக்கிரத்தில் கட்டி முடிக்க நடவடிக்கை எடுக்கப்படுமா ?

மாண்புமிகு திரு. எஸ். டி. சோமசுந்தரம் : தலைவர் அவர்களே, நான் பகுத்தறிவுவாதி. பாதாளபைரவியின் அருள் எனக்குக் கிடைக்காது.

திரு. தி. கா. நல்லப்பன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, அந்த அலுவலகத்திற்குப் பக்கத்திலேயே அரசின் காலியிடம் இருக்கிறது. அலாவுதீன் அற்புத விளக்கு இல்லாவிட்டாலும், மனித உணர்வின் காரணமாக அதை விரைவில் கட்டித்தர அரசு முன் வருமா ?

மாண்புமிகு திரு. எஸ். டி. சோமசுந்தரம் : தலைவர் அவர்களே, அந்த அலுவலகங்கள் கட்டுவதற்காகத்தான் 10 இலட்ச ரூபாய் ஒதுக்கப்பட்டு இருக்கிறது. வேலைகள் நடக்க ஏற்பாடுகள் செய்ய வேண்டும் என்று அரசு ஆணையிட்டு இருக்கிறது. ஆனாலும், கட்டிடம் கட்டுகிற வரையிலும் பொது மக்களுக்கு இடையூறு இருந்தால், அங்கே இருக்கும் மாவட்ட ஆட்சித் தலைவர் இடையூறாக இருக்கிறது என்று கருதினால், அவரே வாடகைக்கு கட்டிடங்களை எடுத்துக் கொண்டு விட்டு, பிறகு எங்களுக்குத் தெரிவிக்கலாம் என்கிற வகையில் அவர்களுக்கு அனுமதி வழங்கப்பட்டு இருக்கிறது.

[1980 ஆகஸ்ட் 6

(முற்பகல் 9-10)

திரு. செ. சிவசாமி : தலைவரவர்களே, தொடர்ச்சியாக, துணை வட்டங்களுக்கு கட்டிடங்கள் கட்டப்படும் என்று சொல்லப் படுகிறது; வரவேற்கிறோம். அதே நேரத்தில் வேகமாக கட்டிடங்களைக் கட்டுவதற்கும், கட்டிடங்களைக் கட்டும்போதே துணை வட்டங்களுக்கு வரக்கூடிய பொது மக்கள் தங்குவதற்கு ஏற்ற முறையில் 'ஷெட்'களும் கட்டுவதற்கு உரிய நடவடிக்கை எடுக்கப்படுமா ?

மாண்புமிகு திரு. எஸ். டி. சோமசுந்தரம் : தலைவரவர் களே, புதிதாகக் கட்டப்படுகிற வருவாய்த் துறை அலுவலகங் களில் எல்லாம் பொதுமக்களை வரவேற்பதற்காக வரவேற் பாளர் இடமும், பொதுமக்கள் தங்குவதற்கு இடமும் அமைக்கப் படும். இதற்கு முன்னால் இருக்கிற பழைய கட்டிடங்களை அந்த முறையில் மாற்றியமைக்கவும் அரசு உத்திரவிட்டிருக் கிறது. அது மட்டுமல்ல. இப்போது புதிதாகக் கட்டப்படுகிற வருவாய்த் துறை கட்டிடங்கள் எதுவாக இருந்தாலும், ஆர்.டி.ஓ. அல்லது டி.ஆர்.ஓ. அல்லது வேறு அதிகாரியாக இருந் தாலும், அவர்கள் தனியான அறையில் இல்லாமல் எல்லோ ருடைய பார்வையிலும் அவர் இருந்து, மற்றவர்களை கண் காணிக்கின்ற வகையில் அமர்ந்து பணியாற்ற வேண்டுமென்று அரசு முடிவு செய்து, அதையும் நடை முறைப்படுத்த இருக்கிறது என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : வினாக்கள் 110, 111 இரண்டையும் சேர்த்து எடுத்துக் கொள்ளலாம்.

## பருத்தி கொள்முதல்.

*வினா எண். 110— திரு. என். பழனிவேல், திரு. ரா. கிருஷ்ணன்: மாண்புமிகு வேளாண்மைத் துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா :

(அ) 1979–80 ஆம் ஆண்டில் பழனி தாலுகாவில் உற்பத்தி செய்யப்பட்ட சுவின் வரலட்சுமி, எம்.சி.யு. 5 ஆகிய பருத்தி ரகங்கள் இன்னும் விற்பனை ஆகாமல் உள்ளதா ?



1980 ஆகஸ்ட் 6]

மாண்புமிகு திரு. கா. காளிமுத்து :

(அ) ஆம்.

(ஆ) விற்பனை ஆகாமல் உள்ள பருத்தியை இந்தியப் பருத்திக் கழகம் (Cotton Corporation of India) மற்றும் தேசிய பஞ்சாலை நிறுவனம் (National Textile Corporation) மூலம் விற்பனை செய்ய வேண்டிய நடவடிக்கை எடுக்கப்பட்டு வருகிறது.

*வினா எண். 111—திரு. சோ. அழகர்சாமி, திரு. எம். ஆறுமுகம், திரு. இரா. கருப்பையா : மாண்புமிகு வேளாண்மைத் துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா:

கடந்த ஆடிப்பட்டத்தில் பயிர் செய்யப்பட்டு விவசாயிகளிடம் தேங்கியுள்ள 'சுவின்' மற்றும் வரலட்சுமி பருத்தி ரகங்களை பருத்தி கார்ப்பரேஷன் கொள்முதல் செய்வதில் உள்ள இடர்ப் பாடுகளை நீக்க அரசு எடுத்துள்ள நடவடிக்கை யாது ?

மாண்புமிகு திரு. கா. காளிமுத்து: இந்தியப் பருத்திக் கழகம் தங்களிடம் சென்ற ஆண்டில் கொள்முதல் செய்த பருத்தியே விற்பனையாகாமல் தேங்கியிருப்பதைக் காரணம் காட்டி கொள்முதல் செய்ய முன்வரவில்லை. கடந்த 1980 ஆம் ஆண்டு ஜுலை மாதம் 8 ஆம் நாள் அன்று ஒரு கூட்டம் கூட்டப்பட்டு, இது சம்பந்தமாக விவாதிக்கப்பட்டது. இதன் விளைவாக, இந்தியப் பருத்திக் கழகம் விவசாயிகளிடமிருந்து உடனடியாகப் பருத்தியைக் கொள்முதல் செய்வதற்கு ஏற்பாடுகள் செய்தது. தற்பொழுது இந்தியப் பருத்திக் கழகம், தரத்தின் வாரியாக பருத்தியைக் கொள்முதல் செய்து வருகிறது.

திரு. என். பழனிவேல் : தலைவரவர்களே, கடந்த 1979, 1980 ஆண்டுகளில் உற்பத்திச் செய்யப்பட்ட உயர் ரக பருத்தி களாகிய சுவின், வரலட்சுமி, எம்.சி.யு.-5 ஆகியவை பழனி தாலுகாவில் அதிகமாக விற்பனை ஆகாமல் தேங்கிக் கிடக் கின்றன. அதனால் விவசாயிகள் பெரும் சிரமத்திற்கு உள்ளாகி இருக்கிறார்கள். அமைச்சரவர்கள் அதை விற்பனை செய்வதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டு வருவதாகச் சொன்னார்கள். அதன் பயனாக இன்று வரையில் ஏதாவது அப்படி கொள்முதல் செய்யப்பட்டுள்ளதா என்று அறிய விரும்பு கிறேன்.

மாண்புமிகு திரு. கா. காளிமுத்து : தலைவரவர்களே, கடந்த 8-ந்தேதி அந்தப் பருத்திக் கழகத்தினுடைய நிர்வாகப் பொறுப்பில் உள்ளவர்களுடன் ஆலோசனை நடத்தி, பேச்சு வார்த்தைகள் நடத்தி, கொள்முதல் செய்ய நடவடிக்கை எடுக்கப் பட்டு வருகிறது.

[1980 ஆகஸ்ட் 6

திரு. ரா. கிருஷ்ணன் : தலைவரவர்களே, இன்றைக்கு பருத்தி விலை குறைவு. ஆனால் நூல் விலை அதிகமாக இருக்கிறது. இந்த காட்டன் கார்ப்பரேஷனைப் பொறுத்தவரையில் தரமான பருத்தியைப் பெறுவதில் பெருத்த மோசடி நடந்திருக்கிறது என்பது அரசுக்குத் தெரியுமா? தரம் குறைவான பருத்தியை தரமானப் பருத்தியுடன் 'மிக்ஸ்' பண்ணுவதாகச் சொல்லப்படுகிறது. குறிப்பாக சங்கரன் கோவிலில் அந்த மாதிரி சம்பவம் நடந்திருக்கிறது. இது அரசுக்குத் தெரியுமா? பருத்தியின் தரத்தை உயர்த்தி, பருத்தி விவசாயிகளை ஊக்குவிக்கும் வகையில் விலை நிர்ணயம் செய்து, மார்க்கெட்டிங் சொசைட்டி மூலம் விற்பனை செய்ய நடவடிக்கை எடுக்கப்படுமா?

மாண்புமிகு திரு. கா. காளிமுத்து : தலைவரவர்களே, அவர்கள் பருத்தியைச் சரியாகக் கொள்முதல் செய்யவில்லை என்பதன் அடிப்படையில்தான் பேச்சுவார்த்தை நடைபெற்றது. ஆனால் விவசாயிகள் தங்களுடைய பருத்தியை விற்பனைக் கூடங்கள் மூலமாக விற்பனை செய்ய முன்வந்தால் இந்தச் சிக்கல் ஏற்படாது.

திரு. ரா. உமாநாத் : தலைவரவர்களே, 'இந்தியன் காட்டன் கார்ப்பரேஷன்' செயல்படும் முறையைப் பார்த்தால் எந்த நோக்கத்திற்காக அது ஆரம்பிக்கப்பட்டதோ அந்த நோக்கம் நிறைவேறவில்லை என்று தெரிகிறது. இந்த கார்ப்பரேஷன் பஞ்சு வாங்குவதைப் பார்த்தால் 'டாட்டாஸ் அண்டு பிர்லாஸ்'—அவர்களுடைய தேவையின் அடிப்படையில்தான் இன்றைக்கு காட்டன் கார்ப்பரேஷன் செயல்படுகிறது. அதன் விளைவுதான் இங்கே அங்கத்தினர்கள் கூறியது. மகாராஷ்டிரத்தில் காட்டன் கார்ப்பரேஷன் என்ற ஒரு அமைப்பை ஸ்டேட் கவர்ன்மென்ட் அமைத்து செயல்படுத்தி வருகிறது. நம்முடைய தமிழ் நாட்டிலும் அதைப் போல தனியாக ஏன் ஒரு காட்டன் கார்ப்பரேஷன் ஆரம்பிக்கக் கூடாது? தனியாக அமைத்தால்தான் இங்கே இருக்கக்கூடிய விவசாயிகளுக்கு நிவாரணம் கொடுக்க முடியும். ஆகவே, அதற்கு அரசாங்கம் ஏற்பாடு செய்யுமா?

மாண்புமிகு திரு. கா. காளிமுத்து : தலைவரவர்களே, தமிழக அரசின் சார்பில் தனியாக ஒரு பருத்திக் கழகம் அமைக்கும் சிந்தனை இருக்கிறது. மராட்டியத்தில் அமைக்கப்பட்டிருக்கிற அந்தப் பருத்திக் கழகத்தைப் பார்த்து, அது எந்த வகையில் அமைக்கப்பட்டிருக்கிறது, அதன் விதிமுறைகள் என்ன என்பவற்றைக் கண்டறிந்து, அந்தவகையில் நாமே ஒரு பருத்திக் கழகத்தைத் தொடங்கலாம் என்ற எண்ணம் அரசுக்கு இருக்கிறது.



1980 ஆகஸ்ட் 6]

திரு. இரா. தாமரைக்கனி : பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் திரு. கிருஷ்ணன் அவர்கள் கேள்வி கேட்கின்றபோது மார்க்கெட்டிங் சொசைட்டி மூலமாக விவசாயிகளிடம் இருந்து கொள் முதல் செய்ய வேண்டும் என்று சொன்னார்கள். ஆனால், அப்படி மார்க்கெட்டிங் சொசைட்டி மூலமாகக் கொள்முதல் செய்யாமல் வியாபாரிகளிடமிருந்து மட்டரகமான பருத்திகளை அதிகமான விலைக்கு ராஜபாளையம் போன்ற பகுதிகளில் இந்தக் காட்டன் கார்ப்பரேஷன் கொள்முதல் செய்கின்றது. இதனால் அந்தப் பகுதியில் பதட்டமான நிலை இருக்கின்றது. ஆகவே, உடனடியாக இது குறித்து நடவடிக்கை எடுப்பதற்கு அரசு முயற்சிக்குமா?

மாண்புமிகு திரு. கா. காளிமுத்து : பேரவைத் தலைவரவர்களே, அதுபோன்ற புகார்களினுடைய அடிப்படையிலேதான் இந்தியப் பருத்திக் கழகத்தின் ஆலோசகர்களையும் அதனுடைய நிர்வாகப் பொறுப்பிலே உள்ளவர்களையும் அழைத்துப் பேசி அவர்களோடு நானும் கலந்தாலோசித்த பிறகு இப்போது முறையாகக் கொள்முதல் செய்கிறோம் என்கின்ற உறுதியைத் தெரிவித்திருக்கிறார்கள். ஆகவே, அந்த முயற்சியை அவர்கள் மேற்கொண்டிருக்கிறார்கள் என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

திரு. செ. இராமலிங்கம் : தலைவரவர்களே, ஒழுங்குமுறை விற்பனைக் கூடங்கள் மூலம் பருத்தியை விற்பனை செய்கின்றபோது குறைந்தபட்சம் 75 சதவீதம் முன்பணம் கொடுக்க முன்வருமா என்பதைத் தெரிந்துகொள்ள விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு கா. காளிமுத்து : தலைவரவர்களே, அப்படி உத்தேசம் இல்லை.

திரு. என். வரதராஜன் : காட்டன் கார்ப்பரேஷன் இந்தியா முழுவதும் சேர்த்து மொத்தமாக ஆண்டொன்றுக்கு 5 கோடி ரூபாய் குத்தான் கொள்முதல் செய்கிறார்கள். இதிலே டாட்டா, பிர்லா தலையீடு இருக்கின்றது என்று சொல்லப்படுகின்றது. அடுத்து, தமிழ்நாட்டிலே கொள்முதல் நடைபெறும்போது சாதாரண விவசாயிகளிடம் நேரடியாகக் கொள்முதல் செய்யாமல் கமிஷன் ஏஜெண்டுகளின் மூலமாகக் கொள்முதல் செய்வது தொடர்ச்சியாக தமிழ்நாட்டில் நடைபெற்றுகொண்டிருக்கின்றது. இதனை விவசாயிகள் மிகப் பெரிய குறையாகச் சொல்லக்கூடிய நிலைமை இருக்கின்றது. ஆகவே சர்க்கார் இந்த ஆண்டு ஒரு கார்ப்பரேஷன் அமைக்கும் என்று அமைச்சரவர்கள் உறுதி கொடுத்திருக்கின்றார்கள். இந்த ஆண்டு கொள்முதல் செய்வதற்குக் கொள்முதல் குழு ஒன்றை அமைப்பதற்கு இந்த அரசு முன்வருமா என்பதை அறிய விரும்புகிறேன்.

[1980 ஆகஸ்ட் 6

மாண்புமிகு திரு. கா. காளிமுத்து : தலைவரவர்களே, விவசாயிகள் நம்முடைய விற்பனைக் கூடங்களின் மூலமாக விற்க ஆரம்பித்தாலே இந்தப் பிரச்சினை தீர்ந்துவிடும்.

திரு. என். எஸ். வி. சித்தன் : பேரவைத் தலைவரவர்களே, இந்தக் கேள்வியில் குறிப்பிடப்பட்ட சுவின், வரலட்சுமி போன்ற பருத்தி ரகங்கள் முன்பு வெளிநாடுகளில் இருந்து இறக்குமதி செய்யப்பட்டவை. தேங்கி இருக்கின்ற பருத்தி எவ்வளவு இருக்கின்றது ? தற்போது பருத்திக்கும் நூலுக்கும் அதிக விலை வித்தியாசம் இருப்பதால் கொள்முதல் செய்வதைப் பொறுத்த வரையில் தற்போதைய விலை விவரம் எந்த அளவுக்கு இருக்கின்றது? அரசாங்கமே நேரடியாக விவசாயிகளிடமிருந்து நடப்பு சீசனிலே கொள்முதல் செய்வதற்கு ஏற்பாடு செய்யப்படுமா ?

மாண்புமிகு திரு. கா. காளிமுத்து : பேரவைத் தலைவர் அவர்களே, அதுபோல் இப்போது கொள்முதல் நடைபெற்று வருகின்றது. ஆனால் விலையைப் பற்றிய விவரம் இல்லை.

திரு. என். பழனிவேல் : தலைவரவர்களே, அமைச்சரவர்கள் பதில் சொல்கின்றபோது இப்போது அவ்வாறு கொள்முதல் செய்வதற்குரிய நடவடிக்கைகளில் ஈடுபட்டிருப்பதாகச் சொன்னார்கள். தேங்கிக் கிடக்கக்கூடிய அந்தப் பருத்தியினுடைய மொத்த மதிப்பு எவ்வளவு என்பதை அமைச்சரவர்கள் அறிவிப்பார்களா ?

மாண்புமிகு திரு. கா. காளிமுத்து : தலைவரவர்களே, மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் மூலக்கேள்வியில் பழனியைப் பற்றி மட்டும் கேட்டிருக்கிறார்கள். அங்கு 1,300 குவிண்டால் சுவின் ரகமும், 500 குவிண்டால் வரலட்சுமி என்ற ரகமும், கொள்முதல் செய்யப்பட்டு விற்பனை ஆகாமல் வைக்கப்பட்டிருக்கின்றது என்று தகவல் வந்திருக்கின்றது.

திரு. மு. அம்பிகாபதி : மாண்புமிகு பேரவைத் தலைவரவர்களே, இந்த ஆடிப்பட்டத்திலே பயிர் செய்யப்பட்ட வரலட்சுமி போன்ற பருத்திகளைக் கொள்முதல் செய்வதிலே ஏற்பட்ட தேக்கத்தின் விளைவாக விவசாயிகள் பலருக்கு இன்று நஷ்டம் ஏற்பட்டிருப்பதாக சொல்லப்படுகின்றது. அடுத்து பருத்தி கொள்முதல் செய்கின்ற அந்தக் கார்ப்பரேஷனிலே டாட்டா, பிர்லா ஆகியோரின் ஆட்கள் இருந்து கொண்டு விவசாயிகளுக்குப் பாதகமான செயல்களில் ஈடுபடுவதாக சொல்லப்படுகின்றது. இதன் விளைவாகப் பாதிக்கப்படுவது நம்முடைய தமிழக விவசாயிகள் தான். மத்திய அரசு ஒவ்வொரு துறையிலேயும் தமிழக விவசாயிகளுக்குத் தொந்தரவு கொடுக்கவேண்டும் என்ற நிலைமை



1980 ஆகஸ்டு 6]

யிலே இருப்பதைக் கருத்தில் கொண்டு நம்முடைய அரசே கொள்முதல் செய்வதற்குரிய வகையிலே மராட்டியத்திலே இருப்பதைப் போல கார்ப்பரேஷன் அமைப்பதற்கு எவ்வளவு காலம் பிடிக்கும் என்பதை அறிந்து கொள்ள விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. கா. காளிமுத்து : தலைவரவர்களே, எவ்வளவு விரைவிலே முடியுமோ அவ்வளவு விரைவில் செய்கிறோம்.

திரு. மு. ப. முனுசாமி : தலைவரவர்களே, கரும்புக்கு எப்படி விலை நிர்ணயம் செய்கின்றோமோ அதுபோல் பருத்திக்கும் ஒரே விலையை நிர்ணயம் செய்வதற்கு அரசு முன்வருமா ?

மாண்புமிகு திரு. கா. காளிமுத்து : தலைவரவர்களே, ரகங்களுக்குத் தகுந்தாற்போலத்தான்விலை நிர்ணயம் செய்யமுடியும்.

திரு. செ. சிவசாமி : பேரவைத் தலைவரவர்களே, வரலட்சுமி, எம். சி. யு. போன்ற நல்ல ரகங்கள் இங்கே உற்பத்தி செய்யப்பட்டு வருகின்றது. ஆனால் இதனை உணராமல் இங்கிருக்கக்கூடிய முதலாளிகள் அயல்நாடுகளிலே இருந்து பருத்தியை வரவழைக்கிறார்களே, அதனால், நம்முடைய நாட்டிலே உற்பத்தி செய்யப்படுகின்ற பருத்தி சேல்ஸ் ஆகாமல் தேங்கிக் கிடக்கின்றது என்பது உண்மையா ?

[முற்பகல் 9·20]

மாண்புமிகு திரு. கா. காளிமுத்து : தலைவர் அவர்களே, வரலட்சுமி வரண்ட லட்சுமியாகாமல், வரம் தரும் லட்சுமியாக ஆக வேண்டும் என்பதுதான் அரசின் விருப்பம்.

## காஞ்சிபுரம் நகரில் குடிநீர் தட்டுப்பாடு.

*வினா எண். 113—திரு. என். எஸ். வி. சித்தன், திரு. ப. வெங்கிடசுப்பிரமணியம் : மாண்புமிகு தொழிலாளர் நலத் துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா ?

(அ) காஞ்சீபுரம் நகரில் குடிநீர் தட்டுப்பாடு அதிகமாக உள்ளதா ?

(ஆ) ஆம் எனில், அதனைத் தவிர்ப்பதற்கு அரசு எடுத்துள்ள நடவடிக்கைகள் யாவை ?

[1980 ஆகஸ்ட் 6

மாண்புமிகு திரு. எஸ். இராகவானந்தம் : (அ) சில இடங்களில் குடிநீர் தட்டுப்பாடு இருப்பதாகத் தெரிகின்றது.

(ஆ) குறைகளை நிவர்த்திக்கும் பொருட்டும் உயர்ந்து வரும் மக்கட் தொகைக்குப் போதுமான அளவு தண்ணீர் விநியோகம் செய்யும் பொருட்டும் இந்த நகராட்சிக்கு குடிநீர் அபிவிருத்தித் திட்டம் மேற்கொள்ள ஆய்வுப் பணிகள் செய்ய திட்டமிடப் பட்டுள்ளது.

திரு. என். எஸ். வி. சித்தன் : பேரவைத் தலைவர் அவர்களே, காஞ்சீபுரத்தில் காமாட்சி அம்மனும், வரதராஜப் பெருமாளும் குடி கொண்டிருக்கின்றார்கள். இந்துக்களுடைய தெய்வமாக விளங்குகின்ற காமகோடி பீடாதிபதி அவர்கள் இருக்கிறார்கள். முன்னாள் முதல்வர் பேரறிஞர் அண்ணா அவர்கள் பிறந்த இடம். (குறுக்கீடு).

என்னைப் பேசவிடாமல் இப்படி குறுக்கிட்டுக் கொண்டே இருந்தால் என்ன செய்வது ? குடிதண்ணீர் தேவை அந்த இடத்திற்கு எவ்வளவு அத்தியாவசியம் என்பதைச் சொல்வதற்காகத் தான் இத்தனையும் நான் சொல்லிக் கொண்டு வருகிறேன்.....

மாண்புமிகு பேரவைத் தலைவர்: சொல்வதைக் கொஞ்சம் சுருக்கமாகச் சொல்லுங்கள்.

திரு. என். எஸ். வி. சித்தன் : ஆகையினால் பல்லாயிரக் கணக்கான மக்கள் அதை புனித ஸ்தலமாக கருதி வந்து போய்க் கொண்டிருக்கின்றார்கள். ஆகவே குடிதண்ணீர் தட்டுப்பாடு அதிக அளவில் இருக்கிறது. சில இடங்களில்தான் என்று அமைச்சர் அவர்கள் சொன்னார்கள். எப்படி இருந்தாலும், போர்க்கால நடவடிக்கைகளைப் போல, புயல் கால ஏற்பாடுகளைப் போல, விரைவில் அதற்கான திட்டங்களைக் கொண்டு வந்து, அதிகப் படியான தண்ணீர் அந்தப் பகுதி மக்களுக்கு வழங்கும்படி அரசு ஏற்பாடு செய்ய முன் வருமா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. எஸ். இராகவானந்தம் : தலைவர் அவர்களே, காஞ்சீபுரம் நகரில் குடிதண்ணீர் அபிவிருத்தித் திட்டம் இடுவதற்கான ஆய்வுப் பணிகள் மேற்கொள்ள திட்டமிடப்பட்டு உள்ளது. மேற்குறித்த ஆய்வுப் பணிகளுக்காக 1'2 லட்சத்திற்கான அளவிற்கு மதிப்பிடப்பட்டு, அந்த மதிப்பீடுகள் தற்போது நகராட்சி மன்றத்தின் ஒப்புதலுக்காக அனுப்பப் பெற்றுள்ளது. நகராட்சியின் ஒப்புதலைப் பெற்ற பிறகு 4 மாத காலத்தில் ஆய்வுப் பணிகள் முடிக்கப் பெற்று மேற்கொண்டு திட்டத்தின் உத்



1980 ஆகஸ்ட் 6]

தேச மதிப்பீடுகள் அளிக்கப்பெற்று, அரசின் ஒப்புதலுக்கு அனுப்பப்பெற்று, திட்டம் நிறைவேற்றப்படும். காஞ்சீபுரத்தில் அதிகப் படியான தண்ணீர் வழங்கப்படும். கஞ்சி வரதப்பா தண்ணீர் கிடைக்குமப்பா என்று பிறகு சொல்லலாம்.

திரு. என். எஸ். வி. சித்தன் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, அமைச்சர் அவர்கள் சொன்ன பதிலிலிருந்து சமீபத்தில் அதற்கான வேலைகள் தொடங்கப்படுவதாக தெரியவில்லை. அதற்கு எவ்வளவு மாதக்கணக்காகுமோ, வருஷக் கணக்காகுமோ என்ற பயமும், அக்கறையும் இம்மாமன்ற உறுப்பினர்கள் அனைவருக்கும் இருக்கிறது. ஆகவே, இந்த காஞ்சீபுரம் நகரத்திலே குடிதண்ணீர் அதிகமாக கொடுக்கப்பெற வேண்டும் என்ற கோரிக்கை எப்பொழுது வந்தது ? எப்போழுது அதை ஆய்வில் எடுத்துக் கொண்டார்கள் ? இருக்கும் நிலைமையை உத்தேசித்து விரைவில் தண்ணீர் அதிகமாக அந்நகரத்துக்கு கிடைக்கும்படி ஏற்பாடு செய்ய அரசு முன் வருமா என்று அறிய விரும்புகிறேன் ?

மாண்புமிகு திரு. எஸ். இராகவானந்தம் : பேரவைத் தலைவர் அவர்களே, நான் முன்னே சொன்னது போல, குடி தண்ணீர் அபிவிருத்தித் திட்டத்திற்கான ஆய்வு பணிகள் மேற்கொள்ள திட்டமிடப்பட்டுள்ளது. அது 1'2 லட்சத்திற்கான அளவிற்கு மதிப்பிடப்பட்டு, அந்த மதிப்பீடுகள் தற்போது நகராட்சி மன்றத்தின் ஒப்புதலுக்காக அனுப்பப்பட்டுள்ளது. நகராட்சியின் ஒப்புதலைப் பெற்ற பிறகு 4 மாத காலத்தில் ஆய்வுப் பணிகள் முடிக்கப் பெற்று மேற்கொண்டு அரசின் ஒப்புதலைப் பெற்று, திட்டம் நிறைவேற்றப்படும். எவ்வளவு விரைவில் பணிகளை முடிக்க நடவடிக்கை எடுககப் பெற வேண்டுமோ அவ்வளவு விரைவில் நடவடிக்கை எடுக்கப்பெறும்.

திரு. வ. சத்தியமூர்த்தி : தலைவர் அவர்களே, மாமன்றத்தின் உறுப்பினர்களுக்கு பயம் ஏற்பட்டிருப்பதாக திரு. சித்தன் அவர்கள் கூறினார்கள்......

திரு. என். எஸ். வி. சித்தன் : காஞ்சீபுரத்திற்கு அதிகப்படி தண்ணீர் கிடைக்க வேண்டும் என்று எல்லா உறுப்பினர்களுக்கும் அக்கறை இருக்கின்றது என்றுதான் சொன்னேன். அதில் என்ன தவறு ?

மாண்புமிகு பேரவைத் தலைவர் : இப்படி உறுப்பினர்கள் தங்களுக்குள்ளேயே கேள்வி கேட்டு பதில் சொல்லிக் கொண்டிருக்கக் கூடாது.

மோர்தானா அணைத்திட்டம்.

*வினா எண். 114—திரு. கே. ஆர். சுந்தரம் : மாண்புமிகு நீர்ப்பாசனத்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா ?

(அ) குடியாத்தம் தொகுதியில் மோர்தானா அணைக்கட்டு கட்டும் திட்டம் அரசின் பரிசீலனையில் உள்ளதா ?

(ஆ) ஆம் எனில், அதன் விபரம் என்ன ?

மாண்புமிகு திரு. கே. இராஜா முகமது : (அ) குடியாத்தம் தொகுதியில் மோர்தானா அணை கட்டும் திட்டம் தலைமைப் பொறியாளரின் ஆய்வில் உள்ளது.

(ஆ) இத்திட்டம் ஆய்வில் உள்ளதால் இக்கேள்விக்கு இடமில்லை.

திரு. கே. ஆர். சுந்தரம் : மாண்புமிகு அமைச்சர் அவர்கள் இது ஆய்வில் இருப்பதாகச் சொன்னார்கள். 1954ஆம் ஆண்டு பெரும் தலைவர் காமராஜ் அவர்கள் அங்கே போட்டியிட்ட நேரத்தில் இந்த அணைக்கட்டு திட்டம் கட்ட வாக்குறுதி அளிக்கப்பட்டது. 1971ஆம் ஆண்டு மாண்புமிகு கலைஞர் அவர்கள் அந்தத் தொகுதிக்கு சுற்றுப்பயணம் செய்தபோது இந்த அணையைக் கட்ட கல் நாட்டு விழா செய்யப்பட்டதாக அறியப்படுகிறது. ஆகவே, இந்தத் திட்டம் எவ்வளவு துரிதமாக ஆரம்பித்து நடத்தப்படும் என்பதை அமைச்சர் அவர்கள் திட்டவட்டமாக அறிவிப்பார்களா ?

மாண்புமிகு திரு. கே. இராஜா முகமது : மாண்புமிகு உறுப்பினர் அவர்களின் கேள்வியிலேயே சில விடைகள் அடங்கியிருக்கின்றன. 1954-ஆம் ஆண்டிலிருந்து வருகிறது, வருகிறது என்று சொல்லியிருக்கிறார்கள் என்றால் ஏதோ அதில் சில பிரச்சினைகள் இருக்கின்றன என்று அர்த்தம். இங்கே கொடுக்கப்பட்டிருக்கின்ற குறிப்பைப் பார்க்கின்ற போது பாலாறு நதிப் படுகையில் உள்ள பாலாறு அணையில் உபரி நீர் மிகவும் குறைவாக இருக்கிறது. எனவே, ஒரு அய்ந்து வருட காலத்திற்கு நீரளவை நாம் கணக்கில் எடுத்துக் கொள்ள வேண்டும். அதற்குப் பிறகு உபரி நீர் இருக்கிறது என்று கருதப்படுமானால் இந்தத் திட்டத்தை எடுத்துக் கொள்ளலாம் என்று அரசாங்கம் கருதுகிறது.





திரு. கே. ஆர். சுந்தரம் : இந்தத் திட்டம் அமலாக்கப்பட்டால் குடியாத்தம் தாலுகா, வேலூர் தாலுகா விவசாயிகளுக்கு நல்ல முறையில் வசதியாக இருக்கும். அதோடு குடிநீர் பிரச்சினையும் இந்த இரண்டு தாலுக்காக்களிலும் தீர்க்கப்படும் என்ற அடிப்படையில் இந்தத் திட்டம் இருக்கிறது. அதோடு கூட இந்த அணையைக் கட்டுவதினால் நிலத்தடி நீரும் பெருக முடியும் என்று ஆலோசகர்கள் கருதுகிறார்கள். ஆகவே, இதை அவசரமாக செய்வதற்கு அரசாங்கம் உடனடியாக நடவடிக்கைகள் எடுக்க முன்வருமா ?

மாண்புமிகு திரு. கே. இராஜா முகமது : ஏற்கெனவே நமக்குக் கிடைத்த தகவல்படி, 382 மில்லியன் கன அடி நீரைத் தேக்கி அதன் மூலம் 9,701 ஏக்கர் நிலங்களுக்கு பாசன உறுதியும் 1,107 ஏக்கர் பாசனப் பற்றாக்குறையைப் போக்கவும் என்று தலைமைப் பொறியாளரால் ஆய்வு நடத்தப்பட்டிருக்கிறது. இந்த அளவிற்கு தண்ணீர் தேக்க வேண்டும் என்று சொன்னால் நீர் அளவு அந்த அளவிற்கு இருக்கிறதா என்பதை ஆய்வு செய்து கொண்டிருக்கிறோம். அதற்கு சரியாக அய்ந்து ஆண்டுகள், அய்ந்து ஆண்டுகள், என்றால் இப்போது மூன்றாம் ஆண்டில் நின்று கொண்டிருக்கின்றோம். இன்னும் இரண்டு ஆண்டுகளில் நீர் அளவை எடுத்த பிறகு அந்தத் திட்டத்தை எடுத்துக் கொள்வதுபற்றி யோசிக்கலாம்.

திரு. ப. சுந்தரம் : வட ஆற்காடு மாவட்டத்தில் குடியாத்தம் தவிர வேறு எங்கேயாவது புது அணைகள் கட்ட அரசிடம் திட்டமுள்ளதா ?

மாண்புமிகு திரு. கே. இராஜா முகமது : வட ஆற்காடு மாவட்டத்தில் இரண்டு மூன்று திட்டங்கள் அரசின் ஆய்வில் இருக்கின்றன.

திரு. என். வரதராஜன் : தமிழ்நாட்டிலே ஆற்று நீர், நதி நீர் பிரச்சினை என்பது ஒரு எல்லைக்குள் இருக்கக்கூடிய நிலைதான் இருக்கிறது. ஆகவே, சிற்சில ஓடைகளை தடுத்து நிறுத்தி சிறிய பெரிய அணைக்கட்டுகள் கட்டுவதற்கு புதுத் திட்டங்கள் தீட்டுவதுதான் அரசின் முன்னால் உள்ள பெரிய கடமையாக இருக்கிறது. பல ஆண்டுகளாக ஆய்வில் உள்ள திட்டங்கள் பற்றி வருகிறபோது, ஆறு, ஒன்பது மாதங்களுக்குள் அடுத்த பட்ஜெட் கூட்டத்திற்கு முன்பு பாசனத்துறை அமைச்சர் அவர்கள் மாவட்ட அளவில் ஆலோசனை மாநாடுகள் நடத்தி திட்டங்களை விரைவுபடுத்த முன் முயற்சி எடுத்துக் கொள்வார்களா ?

மாண்புமிகு திரு. கே. இராஜா முகமது : இந்த மானியக் கோரிக்கை விவாதத்தின்போது அரசு சார்பில் நான் ஒரு கருத்தைத் தெரிவித்திருக்கிறேன். அதன்படி அனைத்து மாவட்டங்களிலும் நீர்ப்பாசன கருத்தரங்குகள் மேற்கொள்ள இருக்கின்றன. அந்தக் கருத்தரங்குகளில் அந்தந்தப் பகுதிகளில் எஸ்.எம்.ஐ.பி.ன் கீழ் எடுத்துச் செயல்படுத்துகிற சாத்தியக்கூறுகளை நாம் விரைவுபடுத்தி நிதிநிலை அறிக்கை தயார் செய்கிறபோது அதற்கு முன் உரிமை கொடுத்து சிற்றார்கள், ஓடைகளில் உள்ள நீரை பயன்படுத்துகின்ற முயற்சிகளில் அரசு அக்கறை எடுத்துக் கொள்ளும்.

## பெரியாறு மேம்பாட்டுத் திட்டத்தின் கீழ் பாசன வசதிகள்,

*வினா எண். 115— திருமதி ஏ. எஸ். பொன்னம்மாள் : மாண்புமிகு நீர்ப்பாசனத்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா

(அ) பெரியார் Improvement scheme-ன்கீழ் உபரியாக எவ்வளவு ஏக்கர் நிலங்களுக்கு தண்ணீர் கிடைக்கும் ?

(ஆ) இந்த உபரித் தண்ணீர் எந்தெந்த பகுதிகளுக்கு கொண்டு செல்லப்பட இருக்கிறது ?

(இ) இவ்விதம் உபரி தண்ணீர் கொண்டுச் செல்லப்படும்போது நிலக்கோட்டை தொகுதியில் உள்ள வறண்ட பகுதியில் வாழும் மக்களுக்குப் பயன்படக்கூடிய அளவில் இருக்குமா?

மாண்புமிகு திரு. கே. இராஜா முகமது : (அ) சுமார் 39,000 ஏக்கர்கள்.

(ஆ) மதுரை மாவட்டத்தில், பெரியகுளம், நிலக்கோட்டை, உசிலம்பட்டி, திருமங்கலம், மற்றும் மேலூர் வட்டங்களுக்கும் இராமநாதபுரம் மாவட்டத்தில், திருப்பத்தூர் மற்றும் சிவகங்கை வட்டங்களுக்கும் உபரித் தண்ணீர் கொண்டு செல்லப்படவிருக்கிறது.

(இ) நிலக்கோட்டை வட்டத்தில் சுமார் 3,000 ஏக்கர் நிலங்கள் இத்திட்டத்தினால் பயன் அடையும் என்று எதிர்பார்க்கப்படுகிறது.

திரு. என். எஸ். வி. சித்தன் : இந்த பெரியாறு இம்புருவ்மெண்ட் ஸ்கீம் வேர்ல்ட் பாங்க் உதவியோடு நடத்தப்படுகின்ற ஒரு அருமையான திட்டமாகும். அந்தத் திட்டப் பகுதியில்



திருமங்கலத்தையும் சேர்த்திருப்பதாக சொன்னார்கள். அங்கே இரண்டு கட்டங்களாக வேலைகள் ஆய்வு செய்யப்பட்டும்கூட முதல் கட்ட வேலை கூட ஆரம்பிக்கப்படாத நிலையில் இருந்து கொண்டிருக்கிறது. எனவே இதை விரைவு படுத்தி விரைவில் முடிக்க அரசாங்கம் என்ன நடவடிக்கைகள் எடுக்க இருக்கின்றன. மாண்புமிகு அமைச்சர் அவர்கள் இதை விரைவுபடுத்துமுகத்தான் அங்கே நேரில் விஜயம் செய்து அந்தப் பகுதிகளை பார்வையிடுவார்களா ?

[முற்பகல் 9—30.]

மாண்புமிகு கே. இராஜாமுகமது : தலைவர் அவர்களே, இந்த உலக வங்கியின் மதிப்பீடு அறிக்கைபடி தயாரிக்கப்பட்டபோது, இந்த பெரியார்—வைகை பாசனத் திட்டத்திற்கு முதலிலே 41·04 கோடி ரூபாய் மதிப்பீடு தயாரிக்கப்பட்டு, நடைமுறைப்படுத்த யோசிக்கப்பட்டது. பிறகு, திருத்தப்பட்ட மதிப்பீடு தயாரிக்கப்பட்டபோது விலையேற்றம் அல்லாமல் தயாரிக்கப்பட்டபோது 65 கோடி ரூபாய் தேவைப்பட்டது. அதற்குப் பின்னர் தயாரிக்கப்பட்டபோது 72 கோடி ரூபாய் தேவைப்படும் என்று மதிப்பிடப்பட்டிருக்கிறது. 81ஆம் ஆண்டிற்குள் முடிக்க வேண்டுமென்பதை கொஞ்சம் மாற்றி, 84 ஆம் ஆண்டு வரை நான் இதை நடைமுறைப்படுத்தினால், வேலைகளின் ஸ்டான்டர்டு அதாவது சொல்லக்கூடிய தரத்தை காப்பாற்றக்கூடிய அளவில் செய்து கொடுக்க முடியுமென்று, அந்தப் பணிகள் துவக்கப்பட்டிருக்கின்றன. இரண்டாவது கேள்விக்கு, இந்த மாதம் 29ஆம் தேதி மாண்புமிகு உறுப்பினர் சித்தன் அவர்கள் தொகுதிக்கு சுற்றுப்பயணம் வைத்திருக்கிறேன். அப்போது உறுப்பினர் அவர்களுக்கு தகவல் தெரிவிக்கப்படும். அப்போது அந்தப் பகுதியில் இருக்கின்ற குறைபாடுகளை நான் நேரில் கண்டறிவதற்கு வாய்ப்பிருக்கிறது.

*திரு. ப. நெடுமாறன்: மதிப்பிற்குரிய அவைத் தலைவர் அவர்களே, அமைச்சர் அவர்கள் இங்கே உபரி நீரைப் பற்றிக் குறிப்பிட்டார்கள். இந்த உபரி நீரை பங்கிடுவதில், மதுரை நகர மக்களின் குடிநீர் தேவையை மனதில்கொண்டு, அதற்கான திட்டம் ஏதாவது துவக்குவதற்கு உத்தேசிக்கப்பட்டிருக்கின்றதா என்பதை அறிய விரும்புகிறேன் ?

மாண்புமிகு திரு. கே. இராஜா முகமது : தலைவர் அவர்களே, இது நீர்ப்பாசனத்தைப் பற்றிய குறிப்பு. குடிநீருக்குத் தனியாக மாஸ்டர் பிளான் தயாரித்து, அதிலிருந்து குடிநீருக்குப் பயன்படுத்துவதற்காக ஏற்கனவே ஆய்வு நடத்தப்பட்டிருக்கின்றது என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

திரு. ஆ. வெள்ளைச்சாமி: மாண்புமிகு பேரவைத் தலைவரவர்களே, பெரியார்-வைகை கால்வாயை நவீனப்படுத்துவதன் மூலம் என்னென்ன சாதனைகளை இந்த அரசு செய்ய இருக்கிறது? குறிப்பாக, ஒன்றிரண்டை அறிவிக்க இயலுமா என்பதை அறிய விரும்புகிறேன். அதோடு, இந்தத் திட்டத்தின் மூலம் அருகில் இருக்கின்ற என்னுடைய தொகுதியாகிய ஆத்தூர் என்ன பயனடைய இருக்கின்றது என்பதை அறிய விரும்புகிறேன் ?

மாண்புமிகு திரு. கே. இராஜா முகமது : தலைவர் அவர்களே, இந்த பெரியார்-வைகை கால்வாயை நவீனப்படுத்துவதன் மூலமாக 35 சதவிகித பாசனம் பெறக்கூடிய அளவுக்கு அதிகரிக்க வேண்டுமென்பது இதனுடைய நோக்கம். இதனால் சுமார் 56 ஆயிரம் ஏக்கர்கள் பரப்பளவு அதிகரிக்க வேண்டும். அதற்குப் பிறகு இதிலே மிக முக்கியமானதாகச் சொல்ல வேண்டுமானால், இந்தத் திட்டத்தின் மூலம் 600 ஏரிகள் நீர்வளம் பெருகக்கூடிய அளவில், மேம்படுத்த வாய்ப்பு இருக்கிறது. இது தான் அடிப்படையான அம்சம். இதனால், பாசனம் பெருகும். மாண்புமிகு உறுப்பினர் தொகுதி வேறு பகுதியிலே இருக்கிறது. நதி நீரைத் திருப்பி விட்டால்தான் அந்தப் பகுதிக்கு தண்ணீர் கிடைப்பதற்கான வாய்ப்பிருக்கிறது. எனவே, அது சாத்தியம் அல்ல.

திரு. எஸ். ஆண்டித் தேவர் : பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு அமைச்சர் அவர்கள் சொல்கிறபோது, உசிலம்பட்டி தொகுதிக்கு விஸ்தரிக்கப்படும் என்று சொன்னார்கள். இந்த உசிலம்பட்டி தொகுதிக்கு அங்கிருந்து எவ்வளவு ஏக்கர் நிலப் பரப்பிற்கு விஸ்தரிக்கப்பட இருக்கிறது. ஏற்கனவே, திருமங்கலம் மெயின் கால்வாயில் பொட்டலப்பட்டியிலிருந்து காளப்பன்பட்டிவரை 1970-லே திட்டமிடப்பட்டது, இந்தப் பகுதிக்கு இப்போது எந்த அளவுக்கு தண்ணீர் விட வாய்ப்பிருக்கின்றது என்பதை அறிய விரும்புகிறேன் ?

மாண்புமிகு திரு. கே. இராஜா முகமது : தலைவர் அவர்களே, உசிலம்பட்டி பகுதியைப்பற்றி தனிக் குறிப்பு என்னிடம் இல்லை. அந்த விவரத்தைப் பெற உறுப்பினர் அவர்கள் தனியாக கேள்வி போட வேண்டும். ஆண்டிப்பட்டி, உசிலம்பட்டி





திருமங்கலம் ஆகிய பகுதிகளுக்கு நான் சுற்றுப்பயணம் வைத்து, அந்தப் பகுதிகளில் இந்தத் திட்டத்தின் மூலம் எந்தந்தப் பகுதிகளுக்கு நிறைவேற்ற முடியும் என்பதை ஆராய்ந்து இந்தத் திட்டப் பணியிலேயே சேர்த்துக்கொள்ள அரசு விரும்புகிறது. சுற்றுப்பயணத்திற்குப் பிறகு நல்ல தகவல்களை மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்கு கொடுக்கப்படும்.

திரு. உ. சுப்பிரமணியம் : பேரவைத் தலைவர் அவர்களே, பெரியார்-வைகை மேம்பாட்டுத் திட்டத்தின்கீழ் சுமார் 59,000 ஏக்கர்கள்பரப்பளவிற்கு நீர் கிடைக்கும் என்று சொன்னார்கள். அப்படி அதைப் பங்கீடு செய்யும்போது, வைகை-பெரியார் தண்ணீர் ஒரு நூற்றாண்டுக்கு முன்பு வெள்ளைக்காரன் காலத்தில் லெல்லீஸ்கால், சிட்கால் காலத்தில் சிவகங்கைப் பகுதிக்கு பாசனம் அளிக்கப்பட்டு வந்தது. அந்த வகையில் இதற்கு முன்னுரிமை தந்து, கிழக்கு இராமநாதபுரம் பகுதி ஒரு பின் தங்கிய, வறட்சிப் பகுதியாக இருக்கின்றது என்பதை மத்திய அரசாங்கமும், நமது அரசாங்கமும் ஏற்கனவே அங்கீகரித்திருப்பதால், அதற்கு முன்னுரிமை தந்து, natural gravity of flow மேலே இருந்து கீழே தண்ணீர் வருவது சுலபமாக இருக்கின்ற காரணத்தினால், இதற்கு முன்னுரிமை அளித்து, இந்தத் திட்டத்தில் சேர்த்துக் கொள்ளப்படுமா என்று அறிய விரும்புகிறேன் ?

மாண்புமிகு திரு கே. இராஜா முகமது : மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் சிவகங்கை பகுதியில் இருக்கக்கூடிய திட்டத்தைப் பற்றிக் குறிப்பிடுகிறார்கள். ஏற்கனவே மாண்புமிகு பண்ருட்டி இராமசந்திரன் அவர்கள் நீர்பாசனத் துறை அமைச்சராக இருந்த போது மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் கோரிக்கைக்கு முக்கியத்துவம் கொடுத்து ஒருசில பகுதிகளை இந்தத் திட்டத்தோடு இணைத்திருக்கிறார்கள். வேறுசில பகுதிகளும் விடுப்பட்டுப் போயிருக்கும் என்று சொன்னார்கள். தலைமைப் பொறியாளரை அவை பற்றியும் பரிசீலனை செய்யச் சொல்லியிருக்கிறோம். மூன்றாவது கட்டத்தில் உறுதியாகச் சேர்த்துக் கொள்ள வேண்டுமென்று அரசு உத்தரவிட்டிருக்கிறது. இந்த நவீனப்படுத்துகிற திட்டம் முடிகிறபோது அந்தப் பகுதியில் எந்தக் குறையும் இல்லாமல் இந்தத் திட்டங்கள் செயல்படுத்தப்படும் என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

திரு. செ. சிவசாமி : பெரியார் அணை உடைத்துக் கொண்டு போகக்கூடிய நிலை இருப்பதாகச் சொல்லப்படுகிறது. அந்த அணையின் நிலை என்ன என்பதை அமைச்சர் அவர்கள் கூற வேண்டும். பெரியாரில் தண்ணீர் வந்தால் வைகையில் தொடர்ச்சியாகத் தண்ணீர் வந்து கொண்டிருக்கும். பல அணைகள் கட்டப்பட்டதன் காரணமாக கிழக்கு இராமநாதபுரம் வறட்சியாக ஆக்கப்பட்டிருக்கிறது. அந்த நிலைமையை

[1980 ஆகஸ்ட் 6

மாற்றி பெரியார் தண்ணீர் கிழக்கு இராமநாதபுரத்திற்கு வர வைகை இம்ப்ரூமெண்ட் ஸ்கீமில் சேர்த்து தொடர்ச்சியாகத் தண்ணீர் விட ஏற்பாடு செய்யப்படுமா ?

மாண்புமிகு திரு. கே. இராஜா முகமது : நவீனப்படுத்துகிற திட்டத்தின் மூலமாக அந்தப் பகுதி பாதிக்கப்படும் என்றால் நிச்சயமாக அரசு வேடிக்கை பார்த்துக் கொண்டிருக்காது. திரும்பவும் ஆய்வு செய்யக்கூட அரசு தயாராக இருக்கிறது. இன்னொரு கருத்தைப் பெரியார் அணை பற்றிக் கூறினார்கள். பெரியார் அணை தந்தை பெரியாரைப் போல் உறுதியாக இருக்கிறது. அந்தப் பகுதியில் அணை பலவீனமாக இருக்கிறது என்று சொல்லிச் சொல்லி 146 அடி கொள்ளளவு உள்ள அந்த அணையில் தற்போது 132 அடி அளவே தண்ணீர் தேக்கி வைத்திருக்கிறார்கள். அப்படி எந்த நோக்கத்தோடு சொல்லப்படுகிறது என்று தெரியவில்லை. பெரியார் அணை பெயருக்கேற்றாற் போல் உறுதியாக இருக்கிறது. சில காபின் பவுண்டேஷன்கள் எல்லாம் போட 50 இலட்சம் ரூபாய் செலவு செய்யப்படுகிறது. 1981 ஆம் ஆண்டுக்குள் பணிகள் எல்லாம் முடிந்து முன்பு போலவே பெரியார் அணையில் 146 அடி தேக்கி வைக்கப்பட்டு எல்லாப் பகுதிகளுக்கும் பாசனத்திற்குத் தண்ணீர் தரத் தயாராக இருக்கிறோம்.

திரு. வ. சத்தியமூர்த்தி : மாண்புமிகு அமைச்சர் அவர்கள் பதிலில் உபரி நீரை எந்தெந்தப் பகுதிகளுக்குக் கொடுப்பது என்று குறிப்பிட்டபோது ஏற்கனவே நீர்ப்பாசனம் உள்ள பகுதிகளையே குறிப்பிட்டார்கள். கிழக்கு முகவை மாவட்டம் முதுகுளத்தூரில் நதிகள் இருக்கின்றன, நீர் கிடையாது. மானாமதுரையோடு தொடர்புபடுத்திவிட்டால் பிறகு நீர் செல்ல நதிகள் இருக்கின்றன. அவை மூலம் எங்கள் பகுதி பாசனம் பெறுவது சுலபமாக இருக்கும். ஆகவே, அந்த வகையில் அமைச்சர் அவர்கள் சிந்தித்து செயல்படுத்துவார்களா ?

மாண்புமிகு திரு. கே. இராஜா முகமது : இப்போதே அரசு சிந்தித்துத்தான் செயல்பட்டு வருகிறது. சிவகங்கை, திருவாடானை பகுதிகள் நதிகள் ஓடுவதற்கு ஏற்ற பகுதிகள் என்பது மட்டுமல்ல, ஏற்கனவே அந்தப் பகுதிகளில் நீர் போய்க் கொண்டிருந்தது. மாடர்னிசேஷன் மூலம் கிடைக்கக் கூடிய நீரை அந்தப் பகுதிக்குக் கூடுதலாக அளிக்க வேண்டுமென்பதுதான் திட்டம். மாண்புமிகு உறுப்பினர் பகுதிக்கு பாசன வசதிக்காக மலட்டாறு திட்டங்கள் ஆய்வில் இருக்கின்றன. அதை விரிவுபடுத்துவதன் மூலம் அந்தப் பகுதியில் இருக்கும் பற்றாக்குறை தீர்க்கப்படும் என்று அரசு கருதுகிறது.



1980 ஆகஸ்ட் 6]

திரு. என். எஸ். வி. சித்தன் : மதுரை மாவட்டத்தில் இருக்கும் திருமங்கலம், உசிலம்பட்டி தாலுகாக்கள், கிழக்கு இராமநாதபுரம் தாலூகா ஆகியவை காலம் எல்லாம் வறட்சியால் பாதிக்கப்பட்டிருக்கக்கூடிய பகுதிகள். இந்த திட்டம் அந்தத் தாலுகாக்களுக்கு வரப்பிரசாதமாக அமைந்திருக்கிறது. அமைச்சர் அவர்கள் பதில் சொல்லும்போது 40 கோடி ரூபாயில் திட்டமிடப்பட்ட இந்தத் திட்டம் 60 கோடி ரூபாயாகி, தற்போது 80 கோடி ரூபாய் அளவுக்கு உயர்ந்திருக்கிறது. இந்தத் திட்டம் விரைந்து செயல்படுத்தப்படாதது இதற்குக் காரணமா அல்லது மதிப்பீடு குறைவாகப் போட்ட காரணமா ? அமைச்சர் அவர்களுக்கு நான் தெரிவிக்க விரும்புவது— திருமங்கலம் கால்வாய் என்று இருக்கிறது. அதன் மூலம் திருமங்கலத்திற்குத் தண்ணீர் வருவது இல்லை. வைகை இம்ப்ரூவ்மென்ட் ஸ்கீம் மூலம் கிடைக்கக்கூடிய உபரி தண்ணீரைத் திருமங்கலத்திற்குக் கொடுக்க அரசு முன்வருமா ?

மாண்புமிகு திரு. கே. இராஜா முகமது : செலவு அதிகரிக்க மூன்று அடிப்படைக் காரணங்கள் இருக்கின்றன. ஒன்று, திட்டச் செலவு இப்போது அதிகரித்திருக்கிறது. இரண்டாவது திட்டம் நிறைவேற்றப்படுவதில் கால நீட்டிப்பு ஒரு காரணமாக இருக்கிறது. அதிலேதான் விலையேற்றத்தின் காரணமாக திட்டத்தின் மதிப்பீடுகளைத் தயாரிக்க வேண்டியவர்களாக இருக்கிறோம்.

(முற்பகல் 9-40)

மூன்றாவது திட்டத்தினுடைய நோக்கம், ஸ்கோப் ஆப் திபுராஜக்ட். அதிலே சில மறு ஆய்வுகளை நாம் செய்ய வேண்டியிருக்கிறது. மாண்புமிகு திரு. சுப்பிரமணியம் அவர்கள் குறிப்பிட்டதைப் போல சிவகங்கை போன்ற பல பகுதிகள் விடப்பட்டிருக்கின்றன. இதையெல்லாம் கவனத்தில் கொண்டு பாசன வசதி பெறுகின்ற நிலப் பரப்பை அதிகமாக்க வேண்டுமானால் மறு ஆய்வு செய்யப்பட வேண்டியிருக்கிறது. எனவே இத்திட்டத்தின் நோக்கத்தையே இன்னும் கொஞ்சம் விரிவாக்கிக் கொண்டு செல்ல வேண்டியிருப்பதால்தான் விலையேற்றம் ஏற்பட்டிருக்கிறது. குறிப்பாகச் சொல்ல வேண்டுமானால் உலக வங்கி மதிப்பீட்டு அறிக்கையின் படி இத்திட்டத்தின் கீழ் 25,455 ஏக்கர் நிலப் பரப்புக்கள் ஆயக்கட்டுகள் விரிவாக்கப்பட வேண்டும். ஆனால் எதிர் பார்க்கப்படும் நீர் மிச்சத்தைக் கணக்கிலே கொண்டு ஏரிகள் மூலமாக 39,418 ஏக்கர் நிலப் பரப்புக்கு மறைமுகமான ஆயக்கட்டுகளுக்கு பாசன வசதி கொடுப்பதற்கு வாய்ப்பு இருக்கிறது என்று சொல்கிறபோது கூடுதலாக 14 ஆயிரம் ஏக்கருக்கு நாம் பாசன வசதி கொடுக்கலாம் என்று அங்கே போய் ஆய்வு

செய்கிற போது ஒரு முடிவு கிடைக்கிறது. இந்தக் காரணங்களினால் இந்தத் திட்டத்தினுடைய நோக்கங்கள் விரிவு படுத்தப் படுகின்றன. அதன் காரணமாக கால அளவு 84 வரை என்று இன்று முடிவு செய்யப்பட்டிருக்கிறது. இதன் காரணமாக விலையேற்றம் தவிர்க்க முடியாததாக இருக்கிறது.

## போளூருக்கு அருகில் சர்க்கரை ஆலை

வினா எண். 116—திரு. பெ. சு. திருவேங்கடம் மற்றும் , திரு. இல. பலராமன்: மாண்புமிகு தொழில் அமைச்சர் கீழ்க் கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா:

(அ) வட ஆற்காடு மாவட்டம் போளூருக்கு அருகில் சர்க்கரை ஆலை ஆரம்பிக்கும் திட்டம் அரசின் பரிசீலனையில் உள்ளதா ?

(ஆ) ஆம் எனில், அத்திட்டம் எந்த அளவில் உள்ளது ?

மாண்புமிகு திரு. எஸ். திருநாவுக்கரசு :

(அ) இல்லை.

(ஆ) இவ்வினாவிற்கு இடமில்லை.

திரு. பெ. சு. திருவேங்கடம் : தலைவர் அவர்களே, போளூர் பகுதியிலே போளூர், கலசப்பாக்கம், பெரணமல்லூர் போன்ற பகுதிகள் அடங்கும். அங்கே இருக்கின்ற மக்களின் முக்கிய தொழிலாக விவசாயம் இருக்கிறது. அங்கே ஒரு சர்க்கரை ஆலையை ஏற்படுத்துகிற வகையிலே நிலங்களை எல்லாம் அதிகாரிகள் வந்து பார்வையிட்டார்கள். அந்தத் திட்டம் எந்த நிலையிலே உள்ளது? ஏற்கனவே இருந்தது இப்போது இல்லையென்றாலும் புதிதாக ஒரு சர்க்கரை ஆலையை தோற்றுவிக்கின்ற முறையிலே அரசு நடவடிக்கை எடுக்குமா ?

மாண்புமிகு திரு. எஸ். திருநாவுக்கரசு : தலைவர் அவர்களே, 1,250 டன் பிடி திறன் கொண்ட சர்க்கரை ஆலையைத் துவக்க வேண்டுமென்றால் 15 ஆயிரம் ஏக்கரில் கரும்பு பயிரிடப் பட வேண்டும். போளூர் பகுதியிலேயும், அதைச் சுற்றியிருக்கிற பகுதிகளிலேயும் 5 ஆயிரம் ஏக்கரில்தான் கரும்பு பயிரிடப்படுகிறது. இது ஒன்று, இரண்டாவது, ஆண்டு முழுவதும் போதிய





தண்ணீர் வேண்டும், அங்கே கிணறுகள், ஏரிகள் மூலமாக வருகின்ற தண்ணீர் சர்க்கரை ஆலைக்குப் போதுமானதாக இருக்காது இந்தக் காரணங்களால் தான் அந்தப் பகுதியிலே சர்க்கரை ஆலை துவக்குகிற திட்டம் இல்லை.

*திரு. த. வேணுகோபால் : தலைவர் அவர்களே, வட ஆற்காடு மாவட்டத்திலே போளூர் மையமான இடம். வேலூர் அல்லது கள்ளக்குறிச்சி சர்க்கரை ஆலைக்குப் போவது என்றாலும் போளூரிலிருந்து 50 மைல் போக வேண்டும். அவ்வளவு தூரம் கரும்பை எடுத்துக் கொண்டு போவதற்கு போக்குவரத்துச் செலவுகள் போன்றவை அதிகமாகும். ஆகவே, மாண்புமிகு உறுப்பினர் சுட்டிக் காட்டியதைப் போல விவசாயிகளுக்கு நன்மை செய்கிற வகையில் போளூரிலே ஒரு சர்க்கரை ஆலையை ஏற்படுத்த அரசு முன்வருமா ?

மாண்புமிகு பேரவைத் தலைவர் : அது முடியாது என்று அமைச்சர் ஏற்கெனவே பதில் சொல்லிவிட்டார். அந்தக் கேள்வி வேண்டாம்.

திரு. பெ. சு. திருவேங்கடம் : தலைவர் அவர்களே, அமைச்சர் அவர்கள் சொல்கிற போது தண்ணீர் வசதி இல்லை, அதிகமான ஏக்கரில் கரும்பு பயிரிடப் படவில்லை என்று சொன்னார்கள். இப்போது அங்கேயிருந்து கரும்பை வேலூருக்கோ கள்ளக்குறிச்சிக்கோ ஆம்பூருக்கோ போக வேண்டியிருக்கிறது. 35 மைல் போக வேண்டியிருக்கிறது, அங்கே ஒரு ஆலை துவங்குவதற்காக ஏற்கனவே ஏற்பாடு செய்யப் பட்டது. அரசாங்கம் அதற்கு பரிந்துரை செய்தது. இப்போது அமைச்சர் அவர்கள் அங்கே கிணறுகள் பம்பு செட்டுகள் அதிகமாக இருக்கின்றன, தண்ணீர் வசதி இருக்கிறது, அணை கட்டுவதற்குக் கூட ஏற்பாடுகள் செய்யப்படுகின்றன. அந்தப் பகுதி மக்கள் மீது கருணை வைத்து மறு ஆய்வு செய்து அங்கே சர்க்கரை ஆலையை ஆரம்பிக்க அந்த ஆலோசனையை புதுப்பித்தாவது ஏற்பாடு செய்ய முன்வருவார்களா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. எஸ். திருநாவுக்கரசு : ஆய்வு செய்வது வேறு, முடிவு செய்வது வேறு. மாநிலம் முழுவதும் ஆய்வு செய்யப்பட்டிருக்கிறது. ஆய்வுக்குப் பின்னர் அங்கே துவங்குவதற்கு வழியில்லை என்று முடிவு செய்யப்பட்டிருக்கிறது.

[1980 ஆகஸ்ட் 6

திரு. க. இரா. சின்னராசு : தலைவர் அவர்களே, கோவை மாவட்டத்திலே ஒரு சர்க்கரை ஆலை துவங்குவதற்கு பொது மக்களிடமிருந்து மூலதனப் பணம் வசூலிக்கப்பட்டது, ஆனால் அந்த ஆலை துவக்கப்படவில்லை. அரசு இனியாவது அதைத் துவக்குவதற்கு ஏற்பாடு செய்யுமா ?

மாண்புமிகு பேரவைத் தலைவர் : கேள்வி போரூரை பற்றியது.

திரு. மு. அம்பிகாபதி : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, போரூரைப் பற்றிய கேள்விக்குப் பதில் அளிக்கும் பொழுது அமைச்சரவர்கள், மாநிலத்தில் பல்வேறு இடங்களில் ஆய்வு செய்யப்பட்டிருக்கிறது என்று சொன்னார்கள். அந்த அடிப்படையில் மன்னார்குடி, மேலவாசல் பஞ்சாயத்தைச் சேர்ந்த குமரபுரம் என்ற இடத்தில் ஆய்வு செய்யப்பட்டது. Very best soi கல்லணைக் கால்வாய் பாசனம் உள்ள இடம்.

(பதில் இல்லை.)

## VETERINARY HOSPITALS

Q. No. 117 Thiru G. VISWANATHAN & Thiru S.RAJARAMAN Will the Hon. the Minister for Social Welfare be pleased to state.

(a) whether the governments are aware of the demand fo more veterinary hospitals in the State and

(b) if so, the action taken thereon

மாண்புமிகு திருமதி கோமதி சீனிவாசன் : (அ) ஆம்.

(ஆ) ஒவ்வொரு ஆண்டும் 10 கால்நடை மருந்தகங்க இம்மாநிலத்தில் ஆரம்பிக்கப்பட்டு வருகிறது.

திரு. மு. ஜான் வின்சென்ட் : பேரவைத் தலைவரவர்களே சிலயிடங்களில் சப்-சென்டர்கள் அமைக்கப்பட்டு, 1979 ஆ ஆண்டும் மீண்டும் எடுக்கப்பட்டது. இந்த ஆண்டு மீண்டு எடுக்கப்பட்ட அந்த சப்-செண்டர்களை அந்தந்த இடங்களி அமைக்கப்படுமா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திருமதி கோமதி சீனிவாசன் : பேரவைத் தலை வர் அவர்களே, கால் நடை மருந்தகங்கள் நன்றாகச் செயல்படு இடங்களில் மீண்டும் அமைக்கப்படும்.



1980 ஆகஸ்ட் 6]

திரு. இரா. தாமரைக் கனி : பேரவைத் தலைவரவர்களே, கால் நடைகள் அதிக அளவிற்குக் கிராமங்களில் இருப்பதால், அவைகளை மருத்துவமனைக்கு ஆம்புலன்ஸ் வேன் மூலம் எடுத்துச் செல்வதற்கு உத்தேசம் இருக்கிறதா ? மனிதர்களை ஆம்புலன்ஸ் வண்டிகளில் எடுத்துச் செல்கிறார்கள். கால் நடைகள், மாடுகள் போன்றவை பெரிய உருவங்களாக இருப்பதால் பெரிய ஆம்புலன்ஸ் வண்டிகளுக்கு ஏற்பாடு செய்து கால் நடை மருத்துவமனைகளுக்குக் கொண்டு போவதற்கான திட்டம் இருக்கிறதா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திருமதி கோமதி சீனிவாசன் : பேரவைத் தலைவர் அவர்களே, அப்படி ஒன்றும் திட்டம் இல்லை. அப்படித் திட்டம் வர வேண்டுமென்றால் அதைப் பற்றிப் பரிசீலிக்க வேண்டும்.

திரு. சி. கோபால் : மாண்புமிகு பேரவைத் தலைவரவர்களே, அமைச்சரவர்கள் அறிவிக்கும் நேரத்தில் ஆண்டுக்கு 10 கால் நடை மருந்தகங்கள் ஆரம்பிக்கப்பட்டு வருவதாகச் சொன்னார்கள். இந்த ஆண்டில் வடார்க்காடு மாவட்டத்தில் எங்கேயாவது அமைக்கும் திட்டம் உண்டா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திருமதி கோமதி சீனிவாசன் : பேரவைத் தலைவர் அவர்களே, வடார்க்காடு மாவட்டத்தில் அமைப்பதைப் பற்றி ஒன்றும் தகவல் வரவில்லை.

திரு. எல். இளையபெருமாள் : மாண்புமிகு பேரவைத் தலைவரவர்களே, மருத்துவமனைகள் கட்டப்பட்டும் டாக்டர்கள் இல்லாமல் இருப்பது உண்மைதானா ? அதிகப்படியான டாக்டர்கள் வேலை கிடைக்காமல் இருப்பது அரசுக்குத் தெரியுமா ? ஒரே டாக்டர் மூன்று மருத்துவமனைகளுக்கு அனுப்பப்படுவது உண்மைதானா ? என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திருமதி கோமதி சீனிவாசன் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, கால் நடை மருந்தகங்கள் ஏற்பட்டும் டாக்டர்கள் இல்லை என்று கூறினார்கள். இந்த வருஷம் 100 டாக்டர்கள் ஒவ்வொரு கால் நடை மருந்தகத்திற்கும் அமைக்க வேண்டுமென்று திட்டம் வகுத்துள்ளார்கள். அதன்படி ஒவ்வொரு கால் நடை மருந்தகத்திற்கும் டாக்டர்கள் அனுப்பப்படுவார்கள்.

[1980 ஆகஸ்ட் 6

திரு. இரா. கருப்பையா : பேரவைத் தலைவரவர்களே, டாக்டர்கள் அனுப்பப்படுவார்கள் என்று அமைச்சரவர்கள் அறிவித்தார்கள். திருச்சி மாவட்டத்தில் தோகமலை என்ற இடத்தில் ஒரு கால் நடை மருந்தகம் கட்டப்பட்டு இன்னும் துவக்கப்படாமல் இருக்கிறது. அது எப்பொழுது துவக்கப்படும் என்பதை அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திருமதி கோமதி சீனிவாசன் : மாண்புமிகு பேரவைத் தலைவரவர்களே, விரைவில் துவக்கப்படும்.

விவசாயக் கூட்டுறவுச் சங்கம், மாம்பாக்கம்.

*வினா எண். 112—திரு. கெ. சொக்கலிங்கம் : மாண்புமிகு கூட்டுறவு-சட்ட அமைச்சர் கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா :

செங்கல்பட்டு மாவட்டம் திருப்போரூர் ஒன்றியத்தில் அடங்கிய மாம்பாக்கம் விவசாய கூட்டுறவு சங்கம் சரிவர இயங்கவில்லை என்பது அரசுக்கு தெரியுமா ?

மாண்புமிகு திரு. சி. பொன்னையன் : சங்கத்தின் செயல் முறையில் குறைகள் ஏதும் இல்லை; எனினும், சங்கத்திற்கு வரவேண்டிய கடன் வசூலில் தவணை கடந்த கடன்கள் உள்ளன. தவணை தவறிய பாக்கிதாரர்களாக கமிட்டியில் 6 பேர் உள்ளனர். அவர்கள் மீது நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டுள்ளது.

திரு. கெ. சொக்கலிங்கம் : பேரவைத் தலைவரவர்களே, இந்தக் கூட்டுறவுச் சங்கத்தில் சென்ற ஆண்டு என்று நினைக்கிறேன், அந்தக் கூட்டுறவுச் சங்கம் நடைபெறாமல் இரண்டு மாதங்கள் மூடப்பட்டு, மூடப்பட்ட அந்தச் சங்கத்தில் அங்கேயிருந்த சூப்பர்வைசரை உடனடியாக அந்தத் தலைவர் நீக்கம் செய்து, நீக்கம் செய்யப்பட்ட சூப்பர்வைசர் வேலைக்கும் வரவில்லை ; ஆனால் சங்கத்திலிருந்த உர மூட்டைகளை பக்கத்தில் இருந்த தலைவருக்கு வேண்டிய சில நண்பர்கள் கதவைப் பின் பக்கமாக உடைத்து அந்த மருந்தை எடுத்திருக்கிறார்கள். இது அரசின் கவனத்திற்கு வந்திருக்கிறதா ? இதுபற்றி நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கிறதா என்பதை அறிய விரும்புகிறேன்



1980 ஆகஸ்ட் 6]

[முற்பகல் 9-50]

மாண்புமிகு திரு. சி. பொன்னையன் : தலைவர் அவர்களே, 1961-லே அமைக்கப்பட்ட இந்தச் சங்கம் அந்த உறுப்பினர்களையே இன்றுவரை கொண்டிருக்கிறது. அந்தச் சங்கத்தின் கமிட்டியிலே இருக்கிற 9 உறுப்பினர்களில் 6 பேர்தான் தவணை கடந்த பாக்கியை வைத்திருக்கிறார்கள். அதுகூட விதி மீறல்களில் ஒன்றாக இருக்கிறது. அரசு நடவடிக்கை எடுக்க உத்தரவிட்டிருக்கிறது.

திரு. கெ. சொக்கலிங்கம் : தலைவர் அவர்களே, அந்த நபர்கள்மீது என்ன நடவடிக்கை எடுக்கப்படும்? எப்பொழுது நடவடிக்கை எடுக்கப்படும் ? அவர்கள் அங்கே எத்தனை கூட்டத்திற்கு வருகை தந்திருக்கிறார்கள் ? பதிவேட்டில் பதியப்பட்டிருக்கிறதா ? அதுபற்றி அரசு நடவடிக்கை எடுக்குமா ? உடனடியாக அவர்கள் மீது நடவடிக்கை எடுத்து செயல்படுமா ?

அது மட்டுமல்ல, சென்ற வாரம் கூட, அங்கே விநியோகிக்கப்பட்ட மண்ணெண்ணெயில் தண்ணீர் கலந்திருந்தது. நான் கூட, அங்கிருந்து வாங்கி வந்ததை வீட்டிலே பார்த்த நேரத்தில், தண்ணீர் ஒரு பக்கம், மண்ணெண்ணெய் ஒரு பக்கம் பிரிந்திருந்தது. அதைச் சென்ற வாரமே இங்கே கொண்டு வரலாம் என்று நினைத்தேன். அப்படி கலப்படம் நடந்திருக்கிறது. இது அரசின் கவனத்திற்கு வந்திருக்கிறதா ? அதன்மீது நடவடிக்கை எடுக்கப்பட்டதா ?

மாண்புமிகு திரு. சி. பொன்னையன் : தலைவர் அவர்களே, உர மூட்டைப் பற்றியோ, மண்ணெண்ணெயில் கலப்படம் பற்றியோ அரசுக்கு எந்தவிதமான தகவலும் இல்லை. உறுப்பினர் அவர்கள், ஆதாரங்களைத் தருவார்களானால், கண்டிப்பாக நடவடிக்கை எடுக்கப்படும்.

அதுமட்டுமல்லாமல், 1971-லே போடப்பட்ட அந்த கமிட்டியினுடைய உயிர் ஏற்கனவே காலாவதியாகிவிட்டது. ஆனால், மீண்டும் நீட்டிப்பு செய்யப்பட்டு, அந்த அங்கத்தினர்களே தொடர்ந்து இருந்து வருகிறார்கள். அந்த கமிட்டியிலே இருக்கிற 9 பேர்களிலே 6 பேர், தரவேண்டிய பாக்கியைத் தராமல் இருக்கிற காரணத்தால், அந்த கமிட்டி மீது நடவடிக்கை எடுப்பதோடு, அந்தக் கமிட்டியைக் கலைப்பதற்கும் நடவடிக்கை எடுக்கப்படும்.

திரு. பெ. சு. திருவேங்கடம் : தலைவர் அவர்களே, அந்த நிர்வாகிகளிலே 9 பேர்களிலே 6 பேர்கள் தவணை கடந்த பாக்கிதாரர்கள் என்று அமைச்சர் அவர்கள் அறிவிக்கிறார்கள்.

அந்த நிர்வாகிகள் மொத்தம் 9 பேர்களிலே, 6 பேர்கள் கடன் பாக்கிதாரர்கள் என்ற நிலையில் சங்கம் செயல்பட முடியாது. ஆகவே, அந்தச் சங்கத்தை உடனடியாகக் கலைக்க அரசாங்கம் ஏன் நடவடிக்கை எடுக்கவில்லை ? ஆகவே, அந்த நிர்வாகக் குழுவை கலைத்து, சங்கத்திற்கு உயிர் கொடுக்க அமைச்சர் அவர்கள் நடவடிக்கை எடுப்பார்களா என்று நான் அறிய விரும்புகிறேன்.

<u>மாண்புமிகு திரு. சி. பொன்னையன் :</u> தலைவர் அவர்களே, நான் ஏற்கனவே சொன்னேன். அந்த உறுப்பினர்களுடையலைப், அந்த கமிட்டியினுடைய லைப், அந்த 1975-லே முடிவுற்று விட்டது, பிறகு, நீட்டிக்கப்பட்டு, நீட்டிக்கப்பட்டு வந்திருக்கிறது. அரசினுடைய கவனத்திற்கு தற்பொழுது கொண்டு வரப்பட்டிருக்கிறது. கடுமையான நடவடிக்கை உடனடியாக எடுக்கப்படும்.

<u>திரு. செ. சிவசாமி :</u> பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு அமைச்சர் அவர்கள் சொல்லக்கூடிய காலத்திலே கடுமையான நடவடிக்கை எடுக்கப்படும் என்று சொன்னார்கள். அந்தக் கடுமையான நடவடிக்கை என்ன, என்ன என்று விவரமாகச் சொல்ல முடியுமா என்று நான் கேட்கிறேன்.

<u>மாண்புமிகு திரு. சி. பொன்னையன் :</u> தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் திரு. சொக்கலிங்கம் அவர்கள் சில குற்றச் சாட்டுகளைச் சொன்னார்கள். உரத்திலே தவறுகள் நடந்திருப்பதாகவும், சீமெண்ணெய் விநியோகத்தில் தவறுகள் இருப்பதாகவும் சொன்னார்கள். ஆதாரங்களைக் கேட்டிருக்கிறேன், உறுப்பினர் தருவார் என்ற நம்பிக்கையோடு இருக்கிறேன். புதுச் சட்டத்தையே கூட, தற்போது இந்த மன்றத்திலே நாம் நிறைவேற்றயிருக்கிறோம். அதன் அடிப்படையில் சிறைத் தண்டனை கூட அளிக்கின்ற வகையில் தவறு செய்கின்ற கூட்டுறவு சங்கத்திலே அங்கத்தினர்களாக இருப்பவர்களைக் கட்டுப்படுத்தக்கூடிய அடிப்படையில் இருக்கும். அந்த அடிப்படையில் நடவடிக்கை எடுக்கப்படும்.

## தொப்பையாறு அணைத்திட்டம்.

கு. கா. <u>வினா எண். 59—திரு. செ. செம்மலை</u>—மாண்புமிகு நீர்ப்பாசனத்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) தொப்பையாறு அணைக்கட்டுத் திட்டத்தின் மொத்த மதிப்பீடு எவ்வளவு ?



(ஆ) அந்த திட்டம் எப்போது முடிவுறும் ?

(இ) அத்திட்டத்தினால் பாசன வசதி பெறும் ரெவின்யூ கிராமங்கள் எவை ? எவை ? மொத்த நிலப்பரப்பு எவ்வளவு ?

<u>மாண்புமிகு திரு. கே. இராஜா முகமது :—</u>

(அ) தொப்பையாறு நீர்த்தேக்கத் திட்டத்தின் மதிப்பீட்டுச் செலவு 1978–79ஆம் ஆண்டு விலை வீதப்படி ரூ. 3,32 இலட்சம் ஆகும்.

(ஆ) இத்திட்டத்தின் வேலைகளை நான்கு ஆண்டுகளில் முடிக்க திட்டமிடப்பட்டுள்ளது.

(இ) இத்திட்டம் தருமபுரி மற்றும் சேலம் மாவட்டங்களில் 5,330 ஏக்கர் பரப்பளவு கொண்ட ஆயக்கட்டுகளின் புன்செய் பயிருக்கு பாசன வசதி அளிக்கும். அதன் விவரம் கீழ் வருமாறு:—

| கிராமங்களின் பெயர். | மாவட்டத்தின் பெயர். | பாசன வசதி பெறும் நிலப்பரப்பு. |
|---|---|---|
| (1) | (2) | (3) |
| | | (ஏக்கரில்) |
| 1. சொக்காரப்பட்டி .. .. | சேலம் .. | 41·20 |
| 2. வெள்ளார் .. .. | சேலம் .. | 1,638·88 |
| 3. திட்டிகிரிப்பட்டி .. .. | சேலம் .. | 513·76 |
| 4. மல்லிகுண்டம் .. .. | சேலம் .. | 1,086·16 |
| 5. தோப்பூர் .. .. | தருமபுரி | 422·00 |
| 6. கம்மம்பட்டி .. .. | தருமபுரி | 1,628·00 |
| | மொத்தம் .. | 5,330·00 |

செய்ய உத்தேசிக்கப்பட்டுள்ளது? கால்வாய்கள் மூலமாகவா? அல்லது வேறு வழியிலா? அப்படி கால்வாய்கள் மூலம் என்றால், அந்தத் திட்டத்தில் எத்தனை கால்வாய்கள் வெட்டப்படும் என்பதை அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. கே. இராஜா முகமது: தலைவர் அவர்களே, தர்மபுரி மாவட்டம் உப்பாளம்மன் கோவில் கிராமத்திற்கு அருகில் தொப்பையாற்றின் குறுக்கே 298·60 மில்லியன் கன அடி கொள் திறன் கொண்ட ஒரு நீர்த் தேக்கத்தை அமைக்கக் கூடிய திட்டம் இது. இத்திட்டத்தில் ஒரு அணைக்கட்டு, மற்றும் இரண்டு கால்வாய்கள் அடங்கும். இரண்டு கால்வாய்களின் மூலமாகத்தான் இந்தக் குறிப்பிட்ட கிராமங்களுக்கு நாம் நீர்ப்பாசன வசதியைக் கொடுப்போம்.

திரு. செ. செம்மலை: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நிலத்தடி நீர் வளத்தைச் செம்மைப் படுத்துகிற வகையில், தொப்பையாறு அணைக்கட்டு நீரைக் கொண்டு கட்டப்படும் கால்வாய் நீரால் பயன்பெறுகிற கிராமங்களைத் தவிர, மற்ற கிராமங்களில் ஆங்காங்குள்ள ஏரிகள், கண்மாய்களுக்குத் தண்ணீரைத் திருப்பி விட அரசு முன்வருமா என்பதை அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. கே. இராஜா முகமது: தலைவர் அவர்களே, இந்தத் திட்டம் நிறைவேற்றியதற்குப் பிறகு, 298·60 மில்லியன் கன அடி கொள்ளளவு திறனைத் தாண்டி ஓரளவுக்குத் தண்ணீர் கிடைக்குமானால். மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் சொல்வதுபோல, ஏரிகளுக்கும் கண்மாய்களுக்கும் பாசன வசதிதர அரசு முயற்சிக்கும்.

## திருப்பரப்பு வலதுபுறக் கால்வாய்த் திட்டம்

* கு. கா. வினா எண். 60—திரு ஜே. ஹேமச்சந்திரன்: மாண்புமிகு நீர்ப்பாசனத்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) குமரி மாவட்டத்தில் திருப்பரப்பு வலது புறக் கால்வாய்த் திட்டம் ஆய்வு செய்யப்பட்டுள்ளதா?

(ஆ) அதற்காக ஒதுக்கப்பட்ட நிதி எவ்வளவு?

(இ) எப்போது வேலை துவங்கப்படும்?



மாண்புமிகு திரு. கே. இராஜா முகமது: (அ), (ஆ) மற்றும் (இ) ரூ. 46·70 இலட்சத்திற்கான இத்திட்ட அறிக்கை அரசின் பரிசீலனையில் உள்ளது.

*திரு. ஜே. ஹேமச்சந்திரன்: தலைவர் அவர்களே, இத் திட்டம் திருவாங்கூர்-கொச்சி ராஜ்யத்தில் இருந்து இந்த மாவட்டம் தமிழகத்திலே சேர்க்கப்பட்ட காலத்தில் இருந்து பரிசீலனையில் இருந்து வருகிறது என்று சொல்லுகிற காரணத்தாலும், இவ்வளவு காலதாமதம் ஆகிவிட்ட காரணத்தாலும், இந்தக் கால தாமதத்தைத் தவிர்க்கும் முறையில் இவ்வருடத்திலேயே அந்த வேலை ஆரம்பிக்கப்படுமா என்பதைத் தெரிவிக்க வேண்டுகின்றேன்.

மாண்புமிகு திரு. கே. இராஜா முகமது: தலைவர் அவர்களே, இந்தத் திட்டத்தின் மூலம் தற்போதுள்ள 8,610 மீட்டர் நீளமுள்ள திருப்பரப்பு வலதுகரைக் கால்வாய் சீரமைப்பதுடன் மேலும் 8,190 மீட்டர் நீளத்திற்கு கால்வாய் விஸ்தரிப்பதற்குண்டான சாத்தியக் கூறுகளைச் சேர்த்திருக்கிறோம். அதற்குப் பிறகு இதன் மூலம் கிடைக்கக்கூடிய பாசன வசதி பெறக்கூடிய நிலங்களுடைய அளவுகள் எல்லாம் இப்போது எடுக்கப்பட்டு இருக்கின்றன. மொத்தமாக இந்தத் திட்டத்தின்பால் 1,133 டன் கூடுதல் உணவு உற்பத்தி கிடைக்கும் என்று கருதப்படுகிறது. இந்தத் திட்டத்தினுடைய பயன் செலவு விகிதம் 3·25:1 என்ற அளவுக்கு வந்திருக்கிறது. எனவே இந்தத் திட்டத்தை எடுத்துக்கொள்வதற்கான சாத்தியக் கூறுகள் இருக்கின்றன. ஆய்வு வேலைகளை துரிதப்படுத்த அரசு நிச்சயமாக இந்தத் திட்டத்தை எடுத்துக்கொள்ளும் என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

திரு. ஜே. ஹேமச்சந்திரன்: தலைவர் அவர்களே, இந்த பட்ஜெட் வருஷத்திலேயே நடைமுறைக்குக் கொண்டு வரப்படுமா என்பதை அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு கே. இராஜா முகமது: தலைவர் அவர்களே, இந்தத் திட்டத்தின் பயன் செலவு வகையிலும் ஏற்றுக்கொள்ளக் கூடிய அளவுக்கு இருக்கிற காரணத்தாலே, அடுத்த மானியக் கோரிக்கை வருகிற போது, 1981—82 ஆம் ஆண்டு அந்த சாதனைப் பட்டியலிலே இந்தத் திட்டம் நிச்சயமாக இடம் பெறும் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

*திரு. டி. மணி: தலைவர் அவர்களே, இந்தத் திருப்பரப்பு அணைக் கால்வாய் ஆரம்பிப்பதற்கு முன்னாலே ஆண்டுதோறும் இந்த திருப்பரப்பு அணைத் தண்ணீர் முழுவதும் திறந்து

விடப்படுகிறது. கடந்த 10 ஆண்டுக் காலத்துக்குள் 10 அடி மண் நிரம்பியுள்ளது. அந்த அணையில் மண் நிரம்பி அதனுடைய கொள்ளளவு குறைந்திருக்கிறது. இனி தண்ணீர் திறந்துவிடப்படும்போது அந்த தண்ணீர் முழுமையும் வெளியேற்றிய பிறகு, அந்த மண்ணை வாரும் நடவடிக்கை எடுக்கப்படுமா என்பதை அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. கே. இராஜா முகமது: தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் அவர்களுடைய கருத்தை அரசு பரிசீலனை செய்யும்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : வினாக்கள்-விடைகள் முடிவுற்றன.

[குறிப்பு :—ஓர் உரையின் தொடக்கத்தில் (*) உடுக்குறி இடப்பெற்றிருந்தால், உறுப்பினரால் அவ்வுரை சரிபார்க்கப் பெற்றது என்பதைக் குறிக்கும்.]

## 2. ஒத்திவைப்புத் தீர்மானம்.

### சென்னை, சேத்துப்பட்டில் தீ விபத்து.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : சென்னையில் உள்ள சேத்துப்பட்டில் 1980 ஆம் ஆண்டு ஆகஸ்டு மாதம் 4 ஆம் நாள் அன்று சுமார் 800-க்கும் மேற்பட்ட குடிசைகள் தீப்பிடித்து நாசமடைந்ததால் அப்பகுதி பொது மக்கள் இடையே ஏற்பட்ட பதட்ட நிலை குறித்து விவாதிக்கப் பேரவையின் இதர அலுவல்களை ஒத்திவைக்கவேண்டும் என்று கேட்டு திருவாளர்கள் எல். இளையபெருமாள், பி. ஈஸ்வரமூர்த்தி என்கிற சொரணம், ரா. உமாநாத், கு. ரமணி, உ. சுப்பிரமணியன், செ. சிவசாமி, மு. அம்பிகாபதி, எம். ஆறுமுகம், ஆர். கருப்பையா, பொ. உத்ததிராபதி, சு. பாலன், என். எஸ், வி. சித்தன், செ. இராமலிங்கம் ஆகியோர் தீர்மானங்கள் கொடுத்துள்ளனர். இது எப்படி அவசர முக்கியமானது என்பது குறித்துச் சுருக்கமா விளக்கும்படி கேட்டுக் கொள்கிறேன்.

[முற்பகல் 10-00]

திரு எல். இளையபெருமாள் : தலைவர் அவர்களே, சேத்துப்பட்டு விபத்தை அரசாங்கம் உணர்ந்து இருக்கிறது. மாண்புமிகு முதலமைச்சர் அவர்களும், சமூக நலத்துறை அமைச்சர்



அவர்களும், அரிசன நலத்துறை அமைச்சர் அவர்களும் அந்த இடத்தைப் பார்வை யிட்டதற்காக நன்றியைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

அந்த மக்கள் வாழ்கிற பகுதி நான்கு பிரிவுகளாக இருக்கிறது. ஒன்று, கார்ப்பரேஷன் நிலம், இரண்டாவது, அரசாங்க நிலம் மூன்றாவது, தனியார் நிலம், நான்காவது, மத்திய அரசு (ரயில்வே) நிலம். அந்த இடங்களில் சுமார் 820 குடிசைகள் தீயினால் பாழடிக்கப்பட்டு இருக்கின்றன. அதிலே சொந்த நிலம் உள்ளவர்கள் யாரும் கிடையாது. அங்கே அரிசன மக்கள் மட்டுமல்லாமல், அரிசன் அல்லாத மக்களும் வசித்து வந்தார்கள். திடீரென்று இந்த விபத்து ஏற்பட்டுவிட்ட காரணத்தால், பள்ளிக்கூடம் சென்று இருந்த குழந்தைகளுக்கு போட்டிருந்த துணியை விட வேறு எதுவும் இல்லை. அந்த மக்கள் எல்லாம் மிகவும் கஷ்டத்திற்குள்ளாக்கப்பட்டு இருக்கிறார்கள்.

முதலமைச்சர் அவர்களே அந்த இடத்தைப் பார்த்து இருக்கிற காரணத்தால் அவருக்கு அது பற்றித் தெரியும். ஆகவே, அந்தப் பகுதியில் தீப்பிடிக்காத வீடுகள் கட்டுவதற்கு முக்கியத்துவம் கொடுத்து கட்டித் தருவதற்கு அரசு முன்வரவேண்டும். அவர்களுக்கு பட்டா கொடுக்க வேண்டும். 30 ஆண்டுகளாக அவர்கள் பட்டா கொடுங்கள் என்று கேட்டுக்கொண்டு இருக்கிறார்கள். இன்னும் கொடுக்கப்படவில்லை. மேலும், தீப்பிடிக்காத வீடுகளை அங்கே கட்டிக் கொடுப்பதன் மூலம் அக்கம்பக்கத்தில் உள்ள வீடுகளும் தீப்பிடிக்காமல் இருக்கும். ஆகவே, இதில் அரசு உடனடியாக கவனம் செலுத்தி தீப்பிடிக்காத வீடுகளைக் கட்டித் தரவேண்டும் என்று கேட்டுக் கொள்கிறேன்.

சமையல் செய்கிற பாத்திரங்கள் கூட தீய்ந்து, கருகிப்போய், இருக்கிற இந்த நேரத்தில், மாநகராட்சி அதிகாரிகள் கருணையோடு செய்து இருக்கிற உதவிக்கு நன்றி தெரிவித்துக்கொள்கிறேன்.

தீயணைப்புப் படைகள் இரண்டு மணி நேரம் காலதாமதமாகத் தான் வந்தன. அப்படி வந்தும், அவைகளில் ஒன்று தண்ணீர் இல்லாமல் தான் வந்தது. எதனால் இப்படிப்பட்ட நிலைமை என்று தெரியவில்லை. அவசரத்தில் இந்த நிலைமை ஏற்பட்டு விட்டதா, அல்லது தண்ணீர் பஞ்சம் சென்னையிலும் வந்துவிட்டதா ? தீயணைப்புப் படை தண்ணீர் இல்லாமல் செல்வது இந்த அரசை மட்டுமல்ல, மக்களையும் பரிதாபகரமான சூழ்நிலைக்குத் தள்ளுகிற நிலை இருப்பதால், அதைத் தவிர்க்கவேண்டும். இப்படிப்பட்ட பல்வேறு பிரச்னைகள் குறித்து

விவாதிக்கவேண்டியிருப்பதால், இந்த அவையின் இதர அலுவல்களை ஒத்திவைத்து இது குறித்து விவாதிக்க வேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன்.

திரு பி. ஈஸ்வரமூர்த்தி என்கிற சொரணம்: பேரவைத் தலைவர் அவர்களே, சென்னை மாநகரத்தில் இருக்கக்கூடிய சேத்துப்பட்டு பகுதியில் உள்ள பிருந்தாவனம் தோட்டத்தில், எழை எளிய மக்கள் வாழும் அந்தப் பகுதியில் சுமார் 800 வீடுகள் சாம்பலாகி இருக்கின்றன. அந்த 800 வீடுகள் சாம்பலாகிற வரையில் தீயணைப்புப் படை வரவில்லை. அப்படியே வந்த பின்பும் அதைப் பூராவையும் அணைக்க முடியாத நிலையில் அவைகள் எரிந்து போய் விட்டன. இப்படி அங்கே பல குடிசைகள் தீயினால் சாம்பலாக்கப்பட்டு, பல மக்களின் உடமைகள் தீக்கிரையாக்கப்பட்டுள்ளன. அந்தப் பகுதியில் வாழும் மக்கள் ரொம்ப ஏழை எளிய மக்கள் . அவர்களுக்கு அந்த இடத்தைப் பட்டா செய்து கொடுக்க வேண்டும் என்று நீண்ட நாட்களாகக் கேட்டுக் கொண்டு இருக்கிறார்கள். அந்தப் பட்டா கொடுப்பது பரிசீலனையில் இருக்கிறதே தவிர பட்டா கொடுக்கப்படவில்லை. இப்போது அரசாங்கம் ஓரளவிற்கு நிவாரணம் கொடுத்தது இருக்கிறது. அது போதுமான தாக இல்லை. அவர்களுக்குப் போதுமான அளவிற்கு நிவாரணம் அளிக்கவும், அந்த 800 குடும்பங்களுக்கு பட்டா கொடுக்கவும், அவர்களுக்குத் தீப்பிடிக்காத வீடுகள் கட்டிக் கொடுக்கவும் போன்ற விஷயங்களைக் குறித்து விவாதிக்க வேண்டியிருப்பதால், இந்த அவையின் இதர அலுவல்களை ஒத்திவைத்து இது குறித்து விவாதிக்க வேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன்.

திரு மு. அம்பிகாபதி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, சென்னை நகரத்தில் பல இடங்களில் திடீரென்று தீப்பிடிக்கிறது. சேத்துப்பட்டு பிருந்தாவன் பகுதியில் 820-க்கும் மேற்பட்ட குடிசைகள் எரிந்து இருக்கின்றன. மாண்புமிகு முதலமைச்சர் அவர்களும், தொழிலாளர் நலத்துறை அமைச்சர் அவர்களும், சட்டமன்ற உறுப்பினர் டி. கே. கபாலி அவர்களும் அந்த இடத்தைப்போய் பார்வையிட்டதாக பத்திரிகையில் செய்தி பார்த்தேன். இப்படி சென்னை நகரத்தில் பல்வேறு பகுதிகளில் தீப்பிடிப்பதும், ஒத்திவைப்புத் தீர்மானம் கொண்டு வருவதும் என்ற நிலைமை தொடருகிறது. சென்னை நகரத்தில் இருக்கும் குடிசைகள் எல்லாம் ஒரு குறிப்பிட்ட ஆண்டுக்குள் அனைத்தும் மாற்றப்பட்டு, குடிசைகளே இல்லாத சென்னையாக ஆக்கப்படாத வரையில், இந்தத் தீப்பிடிப்பு சம்பவங்கள் தொடர்ந்து நடக்கும். இந்தத் தீ விபத்துக்களுக்குக் காரணம், வீடுகள் நெருக்கமாக இருப்பதால், ஒரு வீட்டில் எரிகிற அடுப்பில் இருந்து வருகிற நெருப்புப் பொறி பரவி





பல்வேறு விபத்துக்களுக்குக் காரணமாகிவிடுகிறது. ஆகவே, இந்த நிலையைப் போக்க சென்னை நகரத்தில் இருக்கும் குடிசைகளை மாற்றிவிடவேண்டும் என்று விவாதிப்பதற்காகவும், இப்போது வீடுகளை இழந்தவர்கள் பிருந்தாவனம் நகரில் தங்களுடைய வீடுகளைக் கட்டிக்கொள்கிற முறையில் அவர்களுக்குப் பட்டா கொடுக்கவும், அல்லது வேறு இடங்களில் அவர்களுக்கு வீடுகள் அளிக்கவும் அதிகமாக நிதி ஒதுக்கீடு செய்யவேண்டும் என்பது குறித்து விவாதிக்கவும், அந்த வீடுகளில் இருந்த குழந்தைகள் தங்களுடைய பாடபுத்தகங்களைக் கூட இழந்து இருக்கிற காரணத்தால், அவர்களுக்கு வாழ வழிவகை செய்யவேண்டும் என்பது குறித்து விவாதிக்கவும், இப்படி பல்வேறு பிரச்சனை குறித்து விவாதிக்கவும், இந்த அவையின் இதர அலுவல்களை ஒத்தி வைத்து, இது குறித்து விவாதிக்கவேண்டும் என்று நான் இந்தியக் கம்யூனிஸ்ட் கட்சியின் சார்பில் கேட்டுக்கொள்கிறேன்.

*திரு சு. பாலன்: மாண்புமிகு பேரவைத் தலைவரவர்களே, கடந்த இரண்டு நாட்களுக்கு முன்னால் சேத்துப்பட்டு பகுதியில் பிருந்தாவனம் என்ற இடத்தில் இருந்த சுமார் 800 குடிசைகளுக்குமேல் தீக்கு இரையாகி விட்டன. அங்கே மக்கள் மிகவும் நெருக்கமாக வாழுகிற காரணத்தால் ஆரம்பத்தில் தீ பிடித்தவுடனே மற்றவர்கள் தங்களுடைய பொருட்களை வெளியே எடுத்துச்செல்ல முடியாத நெருக்கடியில் இருந்த காரணத்தால் அவர்களுடைய சாமான்கள் உட்பட அத்தனையும் பாழாக்கப்பட்டு, இன்றைக்கு அந்த மக்கள் எல்லாம் நடுத்தெருவிலே மிகவும் மோசமான நிலையில் இருந்துகொண்டிருக்கிறார்கள்.

சென்னை மாநகரைப் பொறுத்தவரையில் நம்முடைய சட்டமன்றத் தேர்தல் நடைபெற்ற பிறகு, கடந்த ஜூன் மாதத்தில் பெரம்பூரில் சுமார் 60 குடிசைகள் தீக்கு இரையாகி விட்டன. கடந்த மாதம் நம்முடைய இராதகிருஷ்ணன் நகரில் 400-க்கு மேற்பட்ட குடிசைகள் தீக்கு இரையாகி விட்டன. இப்பொழுது பிருந்தாவனம் பகுதியில் 800-க்கு மேற்பட்ட குடிசைகள் தீக்கு இறையாகி இருக்கின்றன. சென்னையைப் பொறுத்தவரையில் குடிசைகள் ஏராளமாக இருப்பதால், குடிசைகளில் வாழுகின்றவர்கள் எந்த நேரத்தில் தங்களுடைய குடிசைகள் எரிந்துவிடுமோ என்ற அச்சத்தில் தங்களுடைய கடமைகளை ஆற்றிக்கொண்டிருக்கிறார்கள். அரசாங்கம் அவ்வப்போது தீயினால் பாதிக்கப்படுகின்றவர்களுக்கு நிவாரணம் அளிக்கிறது. இருந்தாலும் அது நிரந்தரமான பாதுகாப்பாக இல்லை. ஆகவே, சென்னையைப் பொறுத்தவரையில் எல்லாக் குடிசைகளையும் தீப் பிடிக்காத வீடுகளாகக் கட்டிக்கொடுக்க அரசு நடவடிக்கை எடுக்க

வேண்டும். நகர்புறத்திற்கு அருகில் ஏராளமான நிலங்கள் இருக்கின்றன. அங்கெல்லாம் உடனடியாக வீடுகள் கட்டித்தர வேண்டுமென்று கேட்டுக்கொள்வதுடன், அதைப்பற்றி நல்ல முறையில் விவாதித்து, வேண்டிய நடவடிக்கைகளை எடுக்க அவையின் இதர அலுவல்களை ஒத்திவைக்க வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன்.

மாண்புமிகு திரு ச. இராமச்சந்திரன்: தலைவரவர்களே, 4—8—1980 அன்று சேத்துப்பட்டு மீனாம்பாள் சிவராஜ் நகர், பிரிந்தாவனம், இரயில்வே காலனி குடிசைகளில் தீ பிடித்துக்கொண்டதாக சுமார் பகல் 12 மணிக்கு எழும்பூர் தீ அணைப்புப் படை கன்ட்ரோல் ரூமுக்கு தகவல் கிடைத்தது. உடனே தீ அணைப்புப் படைத் தலைவர் திரு. அருளையா தலைமையில் எழும்பூரிலிருந்து தீ அணைப்பு வண்டிகள் புறப்பட்டுச் சென்றன. அங்கே சென்றவுடன், அந்த வண்டிகள் போதாது என்று தெரிந்ததால் மேலும் பல தீ அணைப்பு வண்டிகளை அனுப்ப வேண்டுமென்று தகவல் கொடுத்து விட்டு, இவர்கள் தீ அணைப்புப் பணியில் ஈடுபட்டார்கள்.

சென்னையின் பல்வேறு பகுதிகளிலிருந்து மேலும் 9 தீ அணைப்பு வண்டிகளும் ஒரு ட்ரெயிலரும் அந்த இடத்திற்கு விரைந்து வந்தன. சுமார் இரண்டு மணிக்கு மேலாக தீ அணைப்பு படையினர் தீயோடு போராடி தீயினை அணைத்தார்கள்.

மாண்புமிகு உறுப்பினர்கள் இங்கே பேசும்போது தீ அணைப்பு வண்டியில் நீர் இல்லாமல் வந்தது என்று குறிப்பிட்டிருக்கிறார்கள். அது சரியல்ல என்று நான் அரசின் சார்பாக மறுக்க கடமைப் பட்டிருக்கிறேன். நான் கேட்டு தெரிந்துகொண்ட வகையில் கூட தீ அணைப்பு வண்டிகளைப் பொறுத்தவரையில் தண்ணீர் இல்லாமல் செல்ல வில்லை. ஆனால் காலதாமதம் ஏற்பட்டிருக்கிறது என்ற ஒரு கருத்தை இங்கே குறிப்பிட்டார்கள். தகவல் கிடைத்த உடனே எழும்பூரிலிருந்து வண்டிகள் சென்றுவிட்டன. ஆனால் மற்ற இடங்களிலிருந்து வண்டிகள் வருவதற்கு தகவல் கொடுத்து இருக்கிறார்கள். அந்த வண்டிகளும் சிறிது இடைவெளி விட்டு, சிறிது இடைவெளி விட்டு அதாவது 10 நிமிடம், 15 நிமிடம் இடைவெளி கொடுத்து, அரை மணி நேரத்திற்குள்ளாக வந்திருக்கின்றன. அதனால்தான் இந்த தீயை வெகுவாகப் பாடுபட்டு, அணைக்க முடிந்திருக்கிறது. அது மட்டுமல்லாமல் சேதத்தின் அளவையும் குறைக்க முடிந்திருக்கிறது.

குடிசைகளில் ஒரு முனையில் இருந்த வீட்டில் தீ பிடித்து, காற்று வீசியதால் பரவி, மற்ற வீடுகளுக்கு தீ பரவிவிட்டது. தீ விபத்திற்கான காரணம் காவல் துறையின் புலனாய்வில் இருக்கிறது. சமூக விரோத சக்தி எதுவும் இதற்கு காரணமாக இருந்ததாக இதுவரையில் தடயம் எதுவும் இல்லை





[முற்பகல் 10-10]

தீயினால் 469 குடிசைகள் சேதம் அடைந்துள்ளன. 800—க்கு மேற்பட்ட குடிசைகள் என்று மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் சொன்னார்கள். ஆனால் 400 குடிசைகள்தான் சேதமுற்றிருக்கின்றன. உயிர்ச் சேதம் எதுவும் இல்லை. பொருட்சேதம் 5 இலட்ச ரூபாய் இருக்குமென மதிப்பிடப்பட்டுள்ளது. மாநகராட்சி அதிகாரிகளும் வருவாய்த்துறை அதிகாரிகளும் பாதிக்கப்பட்டவர்களுக்கு நிவாரணம் அளிக்க நடவடிக்கைகளை மேற்கொண்டுள்ளனர். வீடிழந்தவர்களுக்கு வசிப்பதற்கு வசதி செய்து தரப்பட்டுள்ளது. பாதிக்கப்பட்டவர்கள் எனக்கருதப்படும் சுமார் 12,000 பேர்களுக்கு உணவுப் பொட்டலங்கள் வழங்கப்பட்டன. 5 வேளை இலவசமாக இத்தகைய உணவளிக்கும் நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டது. பாதிக்கப்பட்ட குடும்பம் ஒவ்வொன்றுக்கும் 200 ரூபாயும் 5 கிலோ அரிசியும் ஒரு சேலையும் ஒரு வேட்டியும் தரப்பட்டுள்ளது. 5—8—80 அன்று காலை மாண்புமிகு தமிழக முதல்வர் அவர்களும் தீப்பிடித்த பகுதிகளை நேரில் பார்வையிட்டு பாதிக்கப்பட்டவர்களுக்கு ஆறுதல் கூறியுள்ளார். மேலும் நிவாரண நடவடிக்கைகளைத் துரிதப்படுத்தவும் அதிகாரிகளுக்கு உத்தரவிட்டுள்ளார்.

இங்கே, சென்னை நகரத்திலே இருக்கின்ற எல்லாக் குடிசைகளையும் அகற்றிவிடுவது தான் இன்றைக்கு சிறந்த வழி என்று மாண்புமிகு உறுப்பினர் திரு அம்பிகாபதி அவர்களும் இன்னும் பல மாண்புமிகு உறுப்பினர்களும் கூறினார்கள். ஆகவே காலவரையறைக்குட்பட்ட திட்டம் தீட்டி எல்லாக் குடிசைகளையும் மாற்ற வேண்டும் என்ற கருத்தையும் இவர்கள் சொல்லி தீ பிடிக்காத வீடுகளைக் கட்டித் தரவேண்டும் என்று குறிப்பிட்டார்கள். அந்தக் கொள்கையிலேதான் குடிசை மாற்று வாரியம் உருவாக்கப்பட்டிருக்கின்றது. அது அந்தப் பணிகளைச் செய்து வருகின்றது. ஆனால் ஏற்பட்டிருக்கின்ற சிக்கல் என்னவென்றால் ஒரு நூறு குடிசைகள் ஒரு இடத்திலே இருப்பதை மாற்றி வேறு வீடுகளைக் கட்டுகின்ற திட்டங்களைத் தீட்டி செயல்படுகின்ற போது இன்னொரு 100 குடிசைகள் வந்து விடுகின்றன. ஆகவே புதிதாக வருகின்ற குடிசைகளைத் தடுக்கவேண்டும் என்பதற்காகச் சட்டத்திலே இடம் இருக்கின்றது. அதனை குடிசை மாற்று வாரியமும் அமல்படுத்தலாம். ஆனால் அதை நடைமுறைப் படுத்துவதிலே எவ்வளவோ சிக்கல்கள் இருக்கின்றன. அனைத்துக் கட்சிகளைச் சேர்ந்தவர்களும் ஒத்துழைப்பு தந்தால் புதியக் குடிசைகள் வராமல் இருப்பதற்குரிய நடவடிக்கைகளை எடுக்கலாம். அதற்குப் பிறகு இருக்கின்ற குடிசைகளை மாற்றிவிட்டு வீடு கட்டும் திட்டத்தை மேற்கொள்ளலாம். அனைத்துக் கட்சியினரும்

இதற்கு ஒத்துழைப்பு தருவார்களா என்பது நம் முன்னால் இருக்கக்கூடிய பிரச்சினை. அரசு வேண்டிய எல்லா நடவடிக்கைகளையும் மேற்கொண்டு வருவதால் பேரவையின் இதர அலுவல்களை ஒத்திவைத்து விவாதிக்க வேண்டிய தேவை இல்லை என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

திரு. எல். இளையபெருமாள் : தலைவரவர்களே, The Hon. Minister is misleading the House. That is why I want a clarification from the Hon. Minister. மாண்புமிகு அமைச்சரவர்கள் பதில் சொல்கின்றபோது 400 குடிசைகள் என்று சொன்னார்கள். 400 வீடு என்று சொன்னாலும் ஒவ்வொரு குடிசையிலும் இரண்டு குடும்பங்கள் இருந்திருக்கின்றன என்று என்னிடத்திலே தெரிவிக்கப்பட்டது. அது என்னுடைய தொகுதி. நான் நேற்று அங்கு சென்றிருந்தேன். மாண்புமிகு முதலமைச்சரவர்களும் அங்கு சென்றிருக்கிறார்கள். ஆகவே, 400 என்று சொல்வது சரியல்ல. ஒவ்வொரு குடும்பத்திலும் இரண்டு குடிசைகள் இருந்தன. ஆகவேதான் 800 என்று சொன்னேன். அடுத்து மாண்புமிகு அமைச்சர் அவர்கள் பேசுகின்றபோது தீயணைப்பதற்கு தண்ணீர் வந்தது என்று சொன்னார்கள். ஆனால் அங்குள்ள பொதுமக்களிடமிருந்து நான் கேள்விப்பட்டது அவ்வாறு வரவில்லை என்று. உண்மையிலேயே தீயணைப்புப் படையினர் தண்ணீர் கொண்டு சென்றிருந்தால் நான் அவர்களுக்கு நன்றி தெரிவித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : இங்கே, சென்னையிலே ஒரு குடிசையிலே இரண்டு குடும்பங்கள் இருக்கின்றன. ஆனால் எங்களுடைய பகுதிகளிலே ஒரு குடிசைக்கு 5 குடும்பங்கள் இருக்கின்றன. மாண்புமிகு மின்சாரத்துறை அமைச்சரின் விளக்கத்திற்குப் பிறகு, அவையின் பிற அலுவல்களை ஒத்திவைத்து, இத்தீர்மானம் குறித்து விவாதிக்க வேண்டிய தேவையில்லை என்ற காரணத்தினால் இதற்கு இசைவு மறுக்கப்படுகின்றது.



## 3. தகவல் கோரல்

மணலியிலிருந்து வரும் எண்ணெய் திருட்டுப் போகாமல் பாதுகாப்பதற்கு மாநில அரசு தவறிவிட்டது என்ற குற்றச்சாட்டு.

திரு. ரா. உமாநாத் : தலைவர் அவர்களே, மணலியிலிருந்து வரக்கூடிய எண்ணெய் திருடு போவது சம்பந்தமாக, "அதை பாதுகாப்பதற்கு மாநில சர்க்கார் தவறி விட்டது" என்ற ஒரு சீரியஸ் குற்றச் சாட்டை மத்திய அரசு மாநில அரசின் மீது சுமத்தியிருக்கிறது. அதைப்பற்றி செய்திகள் பத்திரிகைகளில் வந்து கொண்டிருக்கின்றன. இந்த அவை நடந்து கொண்டிருக்கிற நேரத்தில் இப்படிப்பட்ட செய்திகள் வந்து கொண்டிருக்கின்றன. ஆகவே, The House is entitled to know. திருட்டைத் தடுப்பதற்கான பாதுகாப்பு நடவடிக்கைகளை தமிழக அரசு எடுக்கவில்லை என்பது போன்ற சீரியஸ் சார்ஜ் வந்திருக்கிறபோது, உண்மை என்ன? நடவடிக்கை எடுக்க தவறியது உண்மையா? தவறாமல் இருப்பது உண்மையா என்பது போன்ற விவரங்களை இந்த அவைக்கு அறிவிக்க வேண்டும். பத்திரிகைகளின் ஹேஷ்யங்கள் வேண்டாம்.

We want an official communication from the Government on the facts of the case.

மாண்புமிகு திரு. ச. இராமச்சந்திரன் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உமாநாத் அவர்கள் ஒரு முக்கியமான பிரச்னையைப் பற்றி எழுப்பியிருக்கிறார்கள். அந்த செய்தி பத்திரிகைகளில் வந்திருக்கிறது. குறிப்பாக மத்திய அமைச்சர் வீரேந்திர பட்டீல் அவர்கள் குறிப்பிட்டிருக்கிற கருத்தைப் பற்றிச் சொன்னார்கள். நான் இந்த மன்றத்திற்கு சொல்லிக் கொள்ள விரும்புவது, 'நம்மைப் பொருத்த வரையில் நாம் எதையுமே பொறுப்பாகச் செய்து பழக்கப்பட்டவர்கள், அவசரப்பட்டு, எதையும் சொல்லக் கூடாது, செய்ய கூடாது என்ற கருத்தை வழி வழியாக கடைப்பிடிப்பவர்கள் தமிழக மக்கள் என்கிற தனிப் பாரம்பரியம் உண்டு" ஆகையினால் மத்திய அமைச்சர் உண்மையிலேயே அப்படி பேசினாரா அல்லது பத்திரிகையிலே வேறு விதமாக வந்து விட்டதா என்பதையும் தெரிந்து கொள்ள வேண்டும். உண்மையாகவே நாம் என்ன நடவடிக்கைகளை எடுத்திருக்கிறோம் என்பதையும் நாம் பரிசீலிக்க வேண்டும். அவற்றை எல்லாம் பற்றி விரிவாக விளக்கமாக, நாளைக்காலை, மாண்புமிகு உறுப்பினர்கள் அனைவரும் ஒப்புக் கொண்டால், அவை அனுமதித்தால், முழு அறிக்கை ஒன்றைத் தரத் தயாராக இருக்கிறேன்.

திருமதி டி. யசோதா : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நமது மின் துறை அமைச்சர் அவர்கள் குறிப்பிடுகிற நேரத்தில், தீ அணைக்கும் அந்த வண்டிகளிலே தண்ணீர் இருந்தது என்று தவறான தகவலை.... (மணியடிக்கப் பெற்றது).

[1980 ஆகஸ்ட் 6

மாண்புமிகு பேரவைத் தலைவர் : தீ அணைந்து போய் வெகு நேரம் ஆகிவிட்டது. ஒத்தி வைப்புத் தீர்மானமும் முடிந்து போய் விட்டது. இதிலே அமைச்சர் அவர்களின் விளக்கத்திற்கு பிறகு கிளாரிபிகேஷன்கள் கிடையாது. அதுவும் இல்லாமல் உங்கள் கட்சியின் சார்பில் மாண்புமிகு இளையபெருமாள் அவர்கள் கேட்க வேண்டியதை கேட்டு விட்டார்கள்.

திரு. அ. ரகுமான்கான் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு அமைச்சர் அவர்கள், மத்திய அமைச்சர் திரு. வீரேந்திர பட்டீல் அவர்கள் கூறிய குற்றச்சாட்டு சம்பந்தமாக அறிக்கை தருவதாகச் சொன்னார்கள். மண்ணெண்ணெய் விநியோகம் சம்பந்தமாகவும் அவர் பேசியிருக்கிறார். ஆகையினால் அறிக்கை கொடுப்பது என்பதற்கு பதிலாக ஒத்தி வைப்புத் தீர்மானம் கொண்டு வர அனுமதித்தால் இங்கே விவாதிப்பதற்கு ஏதுவாக இருக்கும். அறிக்கை தந்து விட்டால் விவாதிக்க முடியாது. ஆகவே அது சம்பந்தமாக ஒத்தி வைப்புத் தீர்மானத்திற்கு அனுமதி அளிக்க வேண்டும் என்று கேட்டுக் கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : மாண்புமிகு உமாநாத் அவர்கள் விளக்கம் கேட்டார்கள், அமைச்சர் அவர்கள் அறிக்கை தருகிறேன் என்று சொல்லிவிட்டார்கள். ஆகவே ஒத்தி வைப்புத் தீர்மானம் இங்கு வரவேண்டியதில்லை.

மாண்புமிகு திரு. ச. இராமச்சந்திரன் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உமாநாத் அவர்கள் எழுப்பிய பிரச்னை வேறு-அது திருடு போவது சம்பந்தமாக. ஆனால் மாண்புமிகு ரகுமான்கான் அவர்கள் எழுப்பியிருக்கிற பிரச்னை வேறு. ஆகையினால் அவர் சொல்வதை வேண்டுமானால், தாங்கள் அனுமதித்தால் ஒத்தி வைப்புத் தீர்மானத்திற்கு எடுத்துக் கொள்ளலாம்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : திரு. உமாநாத் அவர்கள் சொல்வது வீரேந்திர பட்டீல் அவர்கள் குறிப்பிட்டது பற்றி, நீங்கள் கேட்பது வேறு பிரச்னை. ஆகவே...

திரு. அ. ரகுமான்கான் : தலைவர் அவர்களே, வீரேந்திர பட்டீல் அவர்கள் இதைப்பற்றியும் சொல்லியிருக்கிறார்கள். 'மண்ணெண்ணெய் விநியோகத்தை ஒழுங்காகத்தான் நாங்கள் செய்கிறோம். அது தமிழ் நாட்டில் தான் சரியாக நடைபெறவில்லை' என்று சொல்லியிருக்கிறார்கள். ஆகவே தான் அது பற்றி ஒத்தி வைப்புத் தீர்மானம் கேட்கிறேன்.



1980 ஆகஸ்ட் 6]

திரு. செ. இராமலிங்கம் : தலைவர் அவர்களே, தமிழகம் முழுவதும் கல்லூரிகள் தொடங்கி நடந்து கொண்டிருக்கும் நேரத்தில் குடந்தைக் கல்லூரி மட்டும் நிரந்தரமாக மூடப்பட்டிருக்கிறது. அங்கே மாணவர்களிடையே....

மாண்புமிகு பேரவைத் தலைவர் : அது பற்றி ஒத்தி வைப்புத் தீர்மானமே வருகிறது. அது வருகிறபோது அதைப் பற்றி நீங்கள் விரிவாக பேச நிறைய இடம் இருக்கிறது. ஆகவே, இப்போது அது வேண்டாம்.

[முற்பகல் 10-20]

## 4. அறிவிப்புகள்.

### அ. உரிமைக் குழு உறுப்பினர்கள்—தேர்தல்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : பேரவைக்கு சில அறிவிப்புகள்.

1980–81 ஆம் ஆண்டுக்கான உரிமைக் குழுவிற்கு தமிழ்நாடு சட்டமன்றப் பேரவையின் பதினான்கு உறுப்பினர்களைத் தேர்ந்தெடுக்கும் பொருட்டு கீழ்க்கண்ட பதினான்கு உறுப்பினர்கள் முறைப்படி நியமனம் செய்யப்பட்டுள்ளனர் என்பதை நான் பேரவைக்கு அறிவிக்கிறேன்:—

1. திரு. சோ. அழகர்சாமி.
2. திரு. எஸ். ரெத்தினராஜ்.
3. திரு. அ. ரகுமான்கான்.
4. திரு. பி. முகமது இஸ்மாயில்.
5. திரு. எஸ். பழனிசாமி.
6. திரு. பி. வெங்கடசுப்பிரமணியன்.
7. திரு. என். விஜயபாலன்.
8. திரு. எம். சின்னசாமி.
9. திரு. கே. ஏ. செங்கோட்டையன்.
10. திரு. எம். பிச்சை.
11. திரு. சி. வே. வேலப்பன்.
12. திரு. எஸ். இராஜாராமன்.
13. திரு. ஏ. சந்திரசேகரன்.
14. திரு. சா. கிருட்டிணமூர்த்தி.

முறையாக நியமனம் செய்யப்பட்டுள்ள வேட்பாளர்களின் எண்ணிக்கை தேர்ந்தெடுக்கப்பட வேண்டியவர்களின் எண்ணிக்கைக்குச் சமமாக இருப்பதால் 1980—81 ஆம் ஆண்டிற்கான உரிமைக் குழுவிற்கு இவர்கள் தேர்ந்தெடுக்கப்பட்டதாக நான் அறிவிக்கின்றேன்.

மாண்புமிகு பேரவை முன்னவர், மாண்புமிகு எதிர்க்கட்சித் தலைவர் மற்றும் மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் ஆகியோர் தங்கள் அலுவல் காரணமாக இக்குழுவின் உறுப்பினர்களாவர்.

பேரவையின் 245(4)—வது விதியின் கீழ் மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களை இக்குழுவின் தலைவராக நான் நியமிக்கிறேன்.

## ஆ. பேரவை விதிகள் குழு உறுப்பினர்கள்—நியமனம்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : தமிழ்நாடு சட்டமன்றப் பேரவை 291(1)-வது விதியின் கீழ், 1980—81 ஆம் ஆண்டுக்கு பின்வரும் உறுப்பினர்களை பேரவை விதிகள் குழுவின் (ரூல்ஸ் கமிட்டி) உறுப்பினர்களாக நான் நியமிக்கிறேன்:—

1. மாண்புமிகு முதல் அமைச்சர்.
2. மாண்புமிகு பேரவை முன்னவர்.
3. மாண்புமிகு திரு. சி. பொன்னையன் (கூட்டுறவு-சட்ட அமைச்சர்).
4. மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்.
5. திரு. க. அன்பழகன்.
6. திரு. கே. எஸ். ஜி. ஹாஜாசெரீப்.
7. திரு. ஆர். மணிமாறன் (அரசு கொறடா).
8. திரு. கா. கோபாலகிருஷ்ணன்.
9. திரு. மா. சுப்பிரமணியன்.
10. திரு. வே. அரங்கராசன்.
11. திரு. இ. கணேசன்.
12. திரு. கு. பா. பழனியப்பன்.
13. திரு. நா. சுந்தரராஜ்.
14. திரு. பி. ஈஸ்வரமூர்த்தி என்கிற சொரணம்.
15. திரு. மு. அம்பிகாபதி.
16. திரு. இ. முத்துராமலிங்கம்.



பேரவையின் 291(1)—வது விதியின் கீழ், மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்கள் அலுவல் காரணமாக இக்குழுவின் தலைவர் ஆவார்.

## (இ) அவைக் குழு உறுப்பினர்கள்—தேர்தல்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : 1980-81 ஆம் ஆண்டிற்கான அவைக் குழுவின் (ஹௌஸ் கமிட்டி) சட்டமன்றப் பேரவையின் உறுப்பினர்களைத் தேர்ந்தெடுக்கும் பொருட்டு கீழ்க்கண்ட பதின்மூன்று உறுப்பினர்கள் முறைப்படி நியமனம் செய்யப் பட்டார்கள்;—

1. திரு. செ. சிவசாமி
2. திரு. ஏ. இராமலிங்கம்
3. திரு. அ. து. குலசேகர்
4. திரு. க. ரங்கசாமி
5. திரு. எம். கே. ராஜமாணிக்கம்
6. திரு. ப. குருசாமி
7. திரு. த. மாரிமுத்து
8. செல்வி ப. விஜயலட்சுமி
9. திரு. கே. நாராயணசாமி
10. திருமதி தா. இராசாம்பாள்
11. திரு. பி. மொக்கையன்
12. திரு. பெ. கலியமூர்த்தி
13. திரு. ச. பாலகிருஷ்ணன்

நியமனம் செய்யப்பட்ட வேட்பாளர்களின் எண்ணிக்கை தேர்ந்தெடுக்கப்பட வேண்டியவர்களின் எண்ணிக்கைக்குச் சமமாக இருப்பதால், 1980-81 ஆம் ஆண்டிற்கான அவைக் குழுவிற்கு இவர்கள் முறைப்படி தேர்ந்தெடுக்கப்பெற்றதாக நான் அறிவிக்கிறேன்.

பேரவையின் 288(1)-வது விதிக்கிணங்க—

1. திரு. ஆர். சக்கரபாணி
2. திரு. எஸ். அரங்கநாதன்
3. திரு. கே. எம். அப்துல் ரசாக்
4. திரு. என். சிவஞானம்

ஆகியவர்களை இக் குழுவின் உறுப்பினர்களாக நான் நியமிக்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்கள் அலுவல் காரணமாக இக் குழுவின் தலைவராவார்.

(ஈ). அரசு உறுதிமொழிக் குழு உறுப்பினர்கள் —நியமனம்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : தமிழ்நாடு சட்டமன்றப் பேரவை 279(1)ஆவது விதியின்கீழ், பின்வரும் பேரவை உறுப்பினர்களை 1980-81 ஆம் ஆண்டிற்கான அரசு உறுதி மொழிக் குழுவின் (கமிட்டி ஆன் கவர்ன்மென்ட் அஷ்யூரன்ஸஸ்) உறுப்பினர்களாக நான் நியமிக்கின்றேன்;—

1. திரு. பி. எம். வெங்கடேசன்
2. திரு. ஜி. கிருஷ்ணராஜ்
3. திரு. எம். வி. இரத்தினம்
4. திரு. ஆர். டி. கோபாலன்
5. திரு. ஆர். ரங்கசாமி
6. திரு. ஜே. எஸ். இராசு
7. திரு. ஆர். சுந்தரமூர்த்தி
8. திரு. ரா. கிருஷ்ணன்
9. திரு. ப. தீர்த்தராமன்
10. திருமதி ஏ. எஸ். பொன்னம்மாள்
11. திரு. கே. சட்டநாத கரையாளர்
12. திரு. ஏ. சாகுல் ஹமீது

பேரவையின் 280(1)-வது விதியின் கீழ் திரு. கே. சட்டநாத கரையாளர் அவர்களை இக் குழுவின் தலைவராக நான் நியமிக்கிறேன்.



உ. சட்ட விதிகள் ஆய்வுக் குழு உறுப்பினர்கள் நியமனம்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : தமிழ்நாடு சட்டமன்றப் பேரவை 264-(1), வது விதியின் கீழ் பின்வரும் உறுப்பினர்களை 1980-81 ஆம் ஆண்டிற்கான சட்ட விதிகள் ஆய்வுக் குழுவிற்கு (கமிட்டி ஆன் டெலிகேட்டட் லெஜிஸ்லேஷன்) உறுப்பினர்களாக நான் நியமிக்கின்றேன்:—

1. திரு. சி. கோபால்
2 திரு. சீ. சிவப்பிரகாசம்
3. திரு. பி. ஜி. நாராயணன்
4. திரு. வேடசெந்தூர்வி. பி. பாலசுப்பிரமணியன்
5. திரு. பெ. திருமாறன்
6. திரு. சி. கேசவ ஆதித்தன்
7. திரு. பி. துரைராஜ்
8. திரு. ஜி. சொக்கலிங்கம்
9. திரு. செஞ்சி ந. இராமச்சந்திரன்
10. திரு. டி. வெங்கடா ரெட்டி
11. திரு. ஜே. ஹேமச்சந்திரன்
12. திரு. ஜி. மூர்த்தி.

பேரவையின் 265-ஆவது விதியின்கீழ் திரு வேடசெந்தூர் வி. பி. பாலசுப்பிரமணியன் அவர்களை இக்குழுவின் தலைவராக நான் நியமிக்கின்றேன்.

மேலும், மேற்படி குழுவில் பணியாற்ற கீழ்க்கண்ட ஐந்து மேலவை உறுப்பினர்கள் தேர்ந்தெடுக்கப் பெற்றுள்ளார்கள் என்று மாண்புமிகு மேலவைத் தலைவரிடமிருந்து செய்தி வரப் பெற்றுள்ளது:—

1. திரு. ஓ. எஸ். துரைசாமி
2. திரு. காடுவெட்டி கண்ணப்பன்
3. திரு. ப. மாணிக்கம்
4. திரு. ம. சங்கரலிங்கம்
5. திரு. ஏ. ஜே. தாஸ்.

5. கவன ஈர்ப்புகள்.

(அ) நெல்லிக்குப்பத்தில் கரும்பு சாகுபடியாளர்களிடையே பதட்டநிலை.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : ஈ.ஐ.டி. பாரி அண்டு கம்பெனி தமிழக விவசாயிகள் சங்கத்திற்கு கரும்பு விலையிலிருந்து கழித்து வசூல் செய்து கொடுப்பதால் நெல்லிக்குப்பத்தில் உள்ள கரும்பு விவசாயிகளிடம் காணப்படும்

பதட்ட நிலை குறித்து, திருவாளர்கள் வி. கிருஷ்ணமூர்த்தி, என். எஸ். வி. சித்தன், துரைமுருகன் ஆகியோர் கவன ஈர்ப்புத் தீர்மானம் கொடுத்துள்ளனர். திரு. வி. கிருஷ்ணமூர்த்தி

திரு. வி. கிருஷ்ணமூர்த்தி ; பேரவைத் தலைவர் அவர்களே, "ஈ.ஐ.டி. பாரி அண்டு கம்பெனி தமிழக விவசாயிகள் சங்கத்திற்கு கரும்பு விலையிலிருந்து கழித்து வசூல் செய்து கொடுப்பதன் காரணமாக, நெல்லிக்குப்பம் கரும்பு சாகுபடியாளர்களிடையே நிலவும் பதட்ட நிலை குறித்து" மாண்புமிகு வேளாண்மைத் துறை அமைச்சர் அவர்களின் கவனத்திற்கு கொண்டு வருகிறேன்.

மாண்புமிகு திரு. கா. காளிமுத்து : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

ஈ.ஐ டி. பாரி அண்ட் கம்பெனி தமிழக விவசாயிகள் சங்கத்திற்கி கரும்பு விலையிலிருந்து கழித்து வசூல் செய்து கொடுப்பதால் நெல்லிக்குப்பத்தில் உள்ள கரும்பு விவசாயிகளிடம் காணப்படும் பதட்ட நிலை குறித்து." கவன தீர்ப்பு தீர்மானம்

உள்ள நிலைமை கீழே விளக்கப்படுகிறது :—

ஈ.ஐ.டி. பாரியின் சிறப்பு இயக்குநர் 1979-80 'சர்க்கரைப் பருவத்தில் தனிப்பட அமைந்த விலையாக டன் ஒன்றுக்குக் கூடுதலாக அளிக்கப்படவிருக்கும் ரூ. 10-ல் டன் ஒன்றுக்கு 50 பைசா வீதம் வசூல் செய்து தமிழக விவசாயிகள் சங்கத்திற்கு அளிக்குமாறு சங்கம் கேட்டுக் கொண்டதாக சர்க்கரை துறையினரிடம் கூறியுள்ளார். சங்கம் கேட்டுக்கொண்டதன் பேரில் அவ்வாறு செய்யத் தங்களால் இயலாது என்றும் உற்பத்தியாளரின் ஆணையுரிமை கிடைக்கப்பெற்றால் அவர்களுக்குக் கொடுக்கவேண்டிய தொகையிலிருந்து கழித்துக் கொடுக்க இயலும் என்றும் அவர் தெரிவித்ததாகக் கூறியுள்ளார்.

ஒவ்வொரு உற்பத்தியாளரிடமிருந்தும் வற்புறுத்தி ஆணையுரிமை இல்லாமல் தொகை ஏதும் கரும்பு விலையிலிருந்து கழித்துக்கொடுக்கப்படவில்லை என்றும் ஈ.ஐ.டி. பாரி தெரிவித்துள்ளது.

மாவட்ட வேளாண்மை அலுவலர் (கரும்பு அபிவிருத்தி) கடலூர், தாம் தொழிற்சாலையின் பொது மேலாளரிடம் பேச்சுவார்த்தை நடத்தியதாகவும், அதிலிருந்து விவசாயிகள் சங்கத்திற்காகக் கரும்பு விலையிலிருந்து தொகையேதும் ஆணையுரிமையில்லாமல் கழித்துக் கொடுக்கப்படவில்லை என்று தெரிய வருகிறது என்றும் சர்க்கரை இயக்குநருக்கு அறிக்கை அனுப்பியுள்ளார்.



மேலும் விவசாயிகள் சங்கத்திடமிருந்து தொழிற்சாலைக்குக் கிடைக்கப்பெற்ற அச்சிடப்பட்ட பாரங்களில் கையெழுத்திட்டுக் கேட்டுக் கொண்டால் டன் ஒன்றுக்கு 50 பைசா வீதம் கருமபு விலையில் இருந்து கழிக்கப்பட்டு விவசாயிகள் சங்கத்திற்கு அனுப்பப்படுகிறது என்று தொழிற்சாலையின் பொது மேலாளர் கூறியதாக மாவட்ட வேளாண்மை அலுவலர் தெரிவித்திருக்கிறார். மேலே கூறப்பட்டதிலிருந்து ஆணையுரிமையில்லாமல் ஈ.ஐ.டி. பாரி விவசாயிகள் சங்கத்தின் உறுப்பினராக இருப்பதற்கு கரும்பு விலையிலிருந்து தொகை ஏதும் கழித்துக்கொண்டு அத்தொகையை சங்கத்திற்கு அளிப்பதாகத் தெரியவில்லை. அதே சமயத்தில், ஒவ்வொரு கரும்பு உற்பத்தியாளரும் கரும்பு விலையிலிருந்து கழித்துக் கொடுக்கலாம் என எழுதிக் கொடுத்தால் அவ்வாறு கழித்துக் கொடுக்கப்படும் என்றும் தெரியவருகிறது.

ஒவ்வொரு கரும்பு உற்பத்தியாளரும் கரும்பு விலையிலிருந்து கழித்துக் கொடுக்கலாம் என எழுதிக் கையெழுத்திட்டுக் கொடுத்தால் அரசு இதில் தலையீடு செய்ய இயலாது.

திரு. வி. கிருஷ்ணமூர்த்தி : பேரவைத் தலைவர் அவர்களே, இது சம்பந்தமாக 22—7—1980 அன்று சர்க்கரை நெறியாளர், டைரக்டர் ஆப் சுகர்ஸ் அவர்களைச் சந்தித்து, இது சம்பந்தமான புகாரை நான் கொடுத்திருக்கிறேன்,. அவர்,

Your complaint about the irregular deduction has been taken up with the Mills and we are looking into the matter. This is for your information.

என்று அவர்கள் அன்றையதினமே என்னிடத்திலே கொடுத்திருக்கிறார்கள். ஒரு சங்கம், கரும்பு விவசாயிகள் சங்கமானாலும் சரி, வேறு சங்கமானாலும் சரி, தமிழக விவசாயிகள் சங்கமாக இருந்தாலும் சரி விவசாயிகள் நலனைப் பாதுகாப்பதற்காகப் போடப்பட வேண்டும். அதே சமயத்தில் அந்தச் சங்கத்திற்கு நிதி வேண்டுமென்றால், கரும்பு விவசாயிகள் சங்கமோ, மற்றும் விவசாயிகள் சங்கமோ கிராமங்களுக்குச் சென்று வசூல் செய்வதைப் பற்றி எனக்கோ, இந்த மன்றத்திலே இருக்கிறவர்களுக்கோ எந்தவிதமான அதிருப்தியும் இருக்க முடியாது. ஆனால், ஒரு சங்கத்தை வைத்துக்கொண்டு ஏறக்குறைய 4 லட்சம் டன் கரும்பை அந்த ஆலைக்கு சென்ற ஆண்டு சப்ளை செய்திருக்கிறார்கள். 10 ரூபாய் அதிகம் கொடுக்க வேண்டுமென்று, கவர்னர் ஆட்சி நடந்த சமயத்திலேதான், கவர்னர் அவர்களோடு பேசி, ஒரு உடன்பாடு ஏற்பட்டு, அந்த அக்ரிமென்டிலே நானும் கையெழுத்து போட்டிருக்கிறேன், 10 ரூபாய் அதிகம் கொடுக்க வேண்டுமென்று முடிவாகியிருக்கிறது. அப்படி

யெல்லாம் பிடிக்க வேண்டுமென்பதிலே பிரச்னை கிடையாது. இதிலே அரசாங்கத்தின் கொள்கை என்ன என்பதை நான் முதலிலே தெரிந்துகொள்ள விரும்புகிறேன்.

இந்த ஒரு நெல்லிக்குப்பம் சர்க்கரை ஆலை மட்டும் அல்ல, இன்னும் 19 சர்க்கரை ஆலைகள் தமிழகத்திலே இருக்கின்றன. தமிழக விவசாயிகள் சங்கத்தைப் போல் இன்னும் பல சங்கங்கள் இருக்கின்றன. பல சங்கங்கள் இன்னும் புதிதாக உருவாகலாம். இந்த விவசாயிகள், கரும்பு விவசாயிகள் சங்கம் என்று வைத்துக் கொண்டு . . . .

திரு. ஆர். மணிமாறன் : தலைவர் அவர்களே, நேற்றைக்கு 54-வது விதியின் கீழ் கவன ஈர்ப்பு கொடுத்தபோது, ஒன்றுக்கு மேல் எடுத்துக்கொள்ளக் கூடாது என்று விதியைக் காட்டினீர்கள். சில கருத்துக்களை மேற்கோளாகச் சொன்னார்கள். ஆனால், இன்றைக்கு மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் விளக்கம் சொல்லிக் கொண்டிருக்கிறார்கள். இதை எப்படித் தாங்கள் அனுமதிக்கிறீர்கள் ? என்பதை உங்கள் கவனத்திற்கு கொண்டு வர விரும்புகிறேன் ? மாண்புமிகு எதிர்க் கட்சித் தலைவர் அவர்கள்கூட இதைப்பற்றி கோடிட்டுக் காட்டினார்கள் என்பதையும் உங்கள் கவனத்திற்கு கொண்டு வர விரும்புகிறேன்.

THIRU V. KRISHNAMOORTHY : I am aware of the Rules. I am just framing the question.

[முற்பகல் 10-30]

நான் கேட்கிற கேள்வி தெளிவாக இருந்தால்தான் அமைச்சர் அவர்கள் பதில் சொல்ல முடியும். நெல்லிக்குப்பத்தில் இருக்கக்கூடிய சர்க்கரை ஆலையைப் போல் 19 சர்க்கரை ஆலைகள் இருக்கின்றன. தமிழக விவசாயச் சங்கங்களும் இருக்கின்றன. தமிழக விவசாயச் சங்கங்கள் விவசாயிகளிடமிருந்து ஆதரிசேஷன் லெட்டர் வாங்கி இப்படி வசூலித்துக் கொண்டிருப்பதை இந்த அரசாங்கம் பார்த்துக் கொண்டிருக்குமா ? இரண்டாவது, ஆதரிசேஷன் லெட்டர் என்று சொல்லும்போது அது அவர்களாக வாலண்டரியாக கொடுத்தது அல்ல. கிராமங்களுக்கு விவசாயச் சங்கத்தினைச் சேர்ந்தவர்கள் சென்று வற்புறுத்தி வெள்ளைக் கடுதாசியில் கையெழுத்து வாங்குகிறார்கள். கடந்த 20-ஆம் தேதி கூட ஆயிரம் ரூபாய்வாங்க வேண்டிய விவசாயிகள் 100 ரூபாயை இவர்கள் பிடுங்கிச் கொள்வார்களே என்ற காரணத்தால் என்ன செய்வது என்று தெரியாமல் அதை வாங்க வராமல் இருக்கிறார்கள். இதிலே அரசாங்கத்தின் கொள்கை என்ன ? விவசாயிகள் இப்படி அல்லல்



பட வேண்டுமென்ற நிலையில் பணத்தைப் பிடித்துக் கொள்ளலாம் என்பதை நியாயம் என்று ஏற்றுக் கொள்கிறார்களா ? இல்லையென்றால் இனிமேல் பிடிக்கக்கூடாது என்று சொல்லுவதோடு அரசாங்கத்தின் அதிகாரத்தைப் பயன்படுத்தி பிடித்த பணத்தையும் அந்த விவசாயிகளுக்குத் திருப்பிக் கொடுக்க நடவடிக்கை எடுக்க முன்வருவார்களா ?

மாண்புமிகு திரு. கா. காளிமுத்து : இதிலுள்ள நிலை விவசாயிகள் விருப்பத்தின் பேரில் கையெழுத்திட்டுக் கொடுத்திருக்கிறார்கள் என்பதுதான். அச்சிடப்பட்டு வழங்கப்பட்ட பாரத்தில் விவசாயிகள் கையெழுத்திட மறுத்திருந்தால் பிரச்சினை எழுந்திருக்காது. என்ன இருந்தாலும் அரசாங்கம் அறிவித்தபடி பலன் விவசாயிகளுக்கு கிடைக்க வேண்டும். சிந்தாமல் சிதறாமல் அவர்களுக்குக் கிடைக்க வேண்டும் என்ற வகையில் விவசாயிகளைக் காக்க அரசு முயற்சி எடுத்துக் கொள்ளும். மாண்புமிகு தொழிலமைச்சரோடு பேசியிருக்கிறேன். விவசாயச் சங்கத்திற்குச் சந்தா சேர்க்கும் வேலையை சர்க்கரை ஆலைகள் ஏற்றுக்கொள்ளக்கூடாது என்று அரசு கருதுகிறது. இந்த நடவடிக்கையை நிறுத்தி வைக்க அரசு முற்படும்.

(THIRU V. KRISHNAMOORTHY rose.)

MR. SPEAKER : Hon. Member Thiru N. S. V. Chithan.

THIRU V. KRISHNAMOORTHY : I cannot lose my right I am entitled to put two questions.

MR. SPEAKER : If the Hon. Member does not want to lose his right, he must be concise.

THIRU V. KRISHNAMOORTHY : I will be very concise.

அரசாங்கம் இந்த நடவடிக்கையை நிறுத்தி வைக்க முற்படும் என்று அமைச்சர் அவர்கள் சொன்னார்கள். அதுவரை வரவேற்கத்தக்கது. கன்செண்ட் லெட்டர் மட்டும் கரும்பு விவசாயிகள் கொடுக்கவில்லை. இ.ஐ.டி. பாரியால் அச்சடிக்கப்பட்ட கிரெடிட் ஸ்லிப்பில் கையெழுத்து வாங்கி விவசாய சங்கத்தின் சஸ்பென்ஸ் அக்கவுண்டில் இன்னார் பணத்திலிருந்து இவ்வளவு ரூபாய் பிடிக்க வேண்டுமென்பதற்கான முயற்சிகளைச் செய்து கொண்டிருக்கிறார்கள். நெல்லிக்குப்பம் விவசாயச் சங்கத்தினர் போராடிய சமயத்தில் ஒரு கோரிக்கை வைத்தார்கள். கூட்டுறவுச் சங்கங்களுக்கும் அனைத்து வங்கிகளுக்கும் நாங்கள் எழுதிக் கொடுத்த ஆதரிசேஷன் நாங்கள் திரும்பப் பெறுகிறோம், அவர்கள் அந்தப் பணத்தை நேரடியாக விவசாயிகளிடமே கொடுத்துவிட வேண்டும். அவர்கள்

விவசாயிகளிடமிருந்து பணத்தைப் பிடிக்கக்கூடாது என்று கூறினார்கள். ஆகவே, இப்படி கரும்பு விவசாயிகளிடமிருந்து பணம் வசூலிப்பதை அரசாங்கம் அனுமதிக்கிறதா ? பிடித்த பணத்தை அவர்களிடம் திருப்பிக் கொடுக்க வேண்டுமென்பதற்கு இந்த அரசு ஆலை முதலாளிகளை அழைத்துப் பேசி உத்தரவிடுவார்களா ?

மாண்புமிகு திரு. கா. காளிமுத்து : இதற்குப் பொறுப்பு அரசாங்கம் அல்ல. தமிழக விவசாய சங்கத்தின்மீது மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் இந்தக் குற்றச்சாட்டைச் சொல்கிறார்கள் என்று கருதுகிறேன். விவசாயிகள் கையெழுத்திட்டுச் தந்திருக்கிறார்கள். பாரி கம்பெனியிடம் விசாரித்ததில் இந்த பாரத்தை அவர்கள் அச்சடித்துத் தரவில்லை என்று சொல்லுகிறார்கள். மேற்கொண்டு இப்படிப் பிடிக்கக்கூடாது என்று அரசு நிச்சயமாகக் கருதுகிறது. ஏற்கனவே வசூலிக்கப்பட்ட தொகை விவசாயிகள் சங்கத்தினுடைய பேரேட்டிற்குச் சென்றிருந்தால் அதைத் திரும்பப் பெறுவது நம்மால் இயலாது.

* திரு. என். எஸ். வி. சித்தன்: தலைவர் அவர்களே, விவசாய சங்கத்திற்குச் செலுத்தியிருக்கிறார்களா இல்லையா என்பது நம்முடைய பிரச்சினை அல்ல. தமிழகம் முழுவதும் உள்ள ஆலைகளிலே இன்றைக்கு இந்த முறை பின்பற்றப்படுகிற, கட்டாயப்படுத்துகிற சூழ்நிலை உருவாகியிருக்கிறது. அதற்கு ஆலையின் நிர்வாகம் உடந்தையாக இருந்திருக்கிறது. நம்முடைய கோரிக்கை எல்லாம், அந்த விவசாயிகளிடமிருந்து, தனிப்பட்டவர்களுக்குப் பணம் வரவேண்டும் என்றால், அதை அந்த நிர்வாகம் பிடித்துக் கொடுக்க முன்வருமா ? இது ஒரு தவறான முன்மாதிரி. வசூலிக்கப்பட்ட பணம் முழுவதும் அவர்களுக்குத் திரும்பக் கொடுக்கப்பட வேண்டும். தமிழகம் முழுவதும் நிறைய சங்கங்கள் இருக்கின்றன. எல்லா இடங்களிலும் ஒட்டு மொத்தமாக இப்படிப்பட்ட நிலைமை தோன்றிவிடக் கூடாது. ஏதோ விவசாயிகளுக்குக் கிடைக்கிற கொஞ்சம் பணம்கூட அவர்களுக்கு போய்ச் சேராமல் இவர்கள் எடுத்துக் கொள்கிற நிலைமை ஏற்படுகிறது. ஆகவே அதற்கு உடந்தையாக இருந்த அந்த நிர்வாகத்தின்மீது நடவடிக்கை எடுக்கப்படுமா ? ஏற்கனவே பிடிக்கப்பட்ட பணம் திரும்பக் கொடுக்கப்படுவதற்கு ஏற்பாடுகளைச் செய்ய அரசு முன்வருமா ?

மாண்புமிகு திரு. எம். ஜி. இராமச்சந்திரன் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் திரு. கிருஷ்ணமூர்த்தி அவர்கள் ஒரு நல்ல பிரச்சினையை இங்கே





தெரிவித்திருக்கிறார்கள். அது நியாயமாக நடைபெறக் கூடாத, அனுமதிக்க முடியாத ஒன்று. ஆனால், சில இடங்களிலே தொழிற் சங்கங்கள் இப்படி வசூலிப்பதாகத் தகவல் இருக்கிறது. அது உண்மையா இல்லையா என்பதை பிறகு தான் பார்க்க வேண்டும். இதனுடைய தொடர்ச்சி எங்கே போய் நிற்கும் என்பதை நாம் பார்க்க வேண்டும். எனினும் தவறான மரபை ஏற்படுத்துவதற்கு மாண்புமிகு உறுப்பினர்கள் விரும்பாத காரணத்தால் அரசு அதைப்பற்றி பரிசீலிக்கும் என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

திரு. துரை முருகன் : தலைவர் அவர்களே, இதிலே, ஒன்றும் பெரிய பிரச்சினை இல்லை. கன்சர்ன்ட் மினிஸ்டர் சொல்லி விட்டார், அதற்குப் பிறகு முதலமைச்சரும் சொல்லி விட்டார். வசிஷ்டர் சொல்லிவிட்ட பிறகு மேலே அப்பீலே கிடையாது. நான் கேட்டுக்கொள்வது எல்லாம் ஏற்கனவே பிடித்து வைக்கப் பட்டிருக்கின்ற பணம் விவசாயிகளுக்குத் திருப்பித் தரப்படுமா ? அதற்கு அரசாங்கம் ஏற்பாடு செய்யயுமா ? திரு. காளிமுத்து அவர்கள் சொன்னார்கள் அது அரசினுடைய கவனத்திற்கு வர வில்லை, வந்ததும் நடவடிக்கை எடுக்கிறேன் என்று சொன் னார்கள், எனக்கு மகிழ்ச்சி. அதைத்தான் முதலமைச்சர் உறுதி செய்தார். நான் கேட்டுக்கொள்வது பிடிக்கப்பட்ட பணம் அவர்கள் கையில் இருக்கிறது, சஸ்பென்ஸ் அக்கவுன்டில்தான் வைத்திருக்கிறார்கள், அதை விவசாயிகளுக்குத் திருப்பிக் கொடுக்க நடவடிக்கை எடுக்கப்படுமா ?

மாண்புமிகு திரு. எம். ஜி. இராமச்சந்திரன் : தலைவர் அவர்களே, இந்தப் பிரச்சினையை எங்கே கொண்டுபோய் அவர்கள் என்னிடமிருந்து பதிலை எதிர்பார்க்கிறார்கள் என்பது எனக்குப் புரிகிறது. அதைப்பற்றி நான் ஆலோசிப்பேன் என்று சொல்லும்போதே அவை அத்தனையும் அடங்கியிருக்கிறது என்பதையும் அது கவனிக்கப்படும் என்பதையும் தெரிவித்துக் கொள்கிறேன்.

(ஆ) வட ஆற்காடு மாவட்டம், திருப்பத்தூரில் அம்மைப் பாலுக்கு பதில் கள்ளிப்பால் பயன்படுத்தப்பெற்றது.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : அடுத்து, 54—வது விதியின் கீழ் திரு. பொ. விஜயராகவன் அவர்கள் கொடுத்துள்ள கவன ஈர்ப்பு. அவர்கள் இருக்கையில் இல்லை. அவர்கள் கொடுத் துள்ள கவன ஈர்ப்புக்குறிய விவர அறிக்கையை மக்கள் நல் வாழ்வுத் துறை அமைச்சர் அவர்கள் அளிக்குமாறு கேட்டுக் கொள்கிறேன்.

[1980 ஆகஸ்ட் 6

மாண்புமிகு டாக்டர் எச். வி. ஹாண்டே: 23—6—80, 24—6—80, 27—6—80 ஆகிய 3 நாட்களிலும் நாட்றம்பள்ளி பஞ்சாயத்து ஒன்றியப் பகுதியிலுள்ள கோட்டூர் மற்றும் கோட்டக்கோட்டை கிராமத்தில் 30 குழந்தைகளுக்கு சுகாதார உதவியாளர் முதல் நிலை அம்மை குத்தினார். அதில் சுவாமிநாதன் என்கிற சொக்கட்டானின் மகள் பூங்கொடிக்கு 24—6—80 அன்று அம்மை வைக்கப்பட்டது. இக்குழந்தை அம்மை வைக்கப்பட்ட இடத்தில் புண் தோன்றியதால் 7—7—80 அன்று திருப்பத்தூர் அரசு மருத்துவ மனையில் சேர்க்கப்பட்டது. சிகிச்சைக்குப் பின், அக்குழந்தை மருத்துவ மனையிலிருந்து 11—7—80 வீட்டிற்கு சென்றது. பூங்கொடியின் பெற்றோர் அம்மைப்பால் வைக்காமல் கள்ளிப்பால் வைத்ததால் தன் குழந்தை பாதிக்கப்பட்டதாக குற்றம் சாட்ட, அதன்மீது நாட்றம்பள்ளி ஆரம்ப சுகாதார நிலைய மருத்துவ அலுவலர் 14—7—80 அன்று விரிவான விசாரணை செய்தார். அம்மை குத்தப்பட்ட 30 குழந்தைகளில், 13 குழந்தைகளைப் பரிசோதனை செய்தார். அக் குழந்தைகள் எல்லோருக்கும் சாதாரண அம்மை குத்தினால் ஏற்படும் நிலைமை தவிர வேறொன்றுமில்லை. மற்ற குழந்தைகளின் பெற்றோர்களும் அம்மைப்பால் தான் வைத்ததாக மருத்துவ அலுவலரிடம் கூறியுள்ளார். விசாரணையிலிருந்து சப்பாத்திக் கள்ளி பாலை வைத்ததாக கூறப்படுவதற்கு எந்த வித ஆதாரமும் இல்லை என்றும், அத்தகைய குற்றச்சாட்டு தவறானது என்றும் கூறிக் கொள்கிறேன்.

## 6. ஒழுங்குப் பிரச்சினை.

விதிகளைத் தளர்த்தி அதிகமான கவன ஈர்ப்புகள் எடுத்துக் கொள்ளுதல்.

[முற்பகல் 10–40]

திரு. கு. ரமணி: பாயின்ட் ஆப் ஆர்டர் சார்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: பாயின்ட் ஆஃப் ஆர்டர் என்று எல்லாக் கட்சிக்காரர்களும் பேசி முடித்து விட்டார்கள். மாண்புமிகு உறுப்பினரவர்கள் லேட்டாகச் சபைக்கு வந்திருக்கிறார்கள்.

திரு. கு. ரமணி: தலைவரவர்களே, ஏராளமான கால்-அட்டென்ஷன் நோட்டீஸ்கள் தங்களுக்கு வந்து சேர்ந்துள்ளன.



1980 ஆகஸ்ட் 6]

மாண்புமிகு பேரவைத் தலைவர்: அதைப்பற்றி ஆராய்வதற்கு அலுவல் ஆய்வுக் குழுவை இன்றைக்கு 11 மணிக்குக் கூட்டியிருக்கிறேன். அதில் தலைவர்கள் வருவார்கள். அதைப் பற்றி அவர்களுடன் பேசவிருக்கிறேன். நேற்றுகூட இதுபற்றிச் சபைக்கு அறிவித்திருக்கிறேன்.

திரு. கு. ரமணி: ஒரேயொரு நிமிடத்தில் முடித்து விடுகிறேன். அவையினுடைய காலம் மூன்று நான்கு நாட்களுக்குத்தான் இருக்க முடியும். அதற்குள்ளே தாங்கள் இதைப்பற்றி ஒரு முடிவைச் செய்து இப்பொழுது இருக்கும் விதிகளைத் தளர்த்தி கொஞ்சம் அதிகமாக......

மாண்புமிகு பேரவைத் தலைவர்: அதற்காகத்தான் அலுவல் ஆய்வுக் குழுவை இன்றைக்குக் கூட்டியிருக்கிறேன். உங்கள் கட்சியிலிருந்து எந்தத் தலைவர் அதற்கு வருகிறார்களோ அவர்களிடம் இந்தக் கருத்தைச் சொல்லியனுப்புங்கள்.

## 7. அரசினர் சட்ட முன்வடிவுகள்.

### (அ) சிவில் நீதிமன்றங்கள்—சென்னை மாநகர சிவில் நீதிமன்றம் (திருத்த) சட்ட முன்வடிவு 1980.

மாண்புமிகு திரு. சி. பொன்னையன்: தலைவர் அவர்களே, தமிழ்நாடு 1980 ஆம் ஆண்டு சிவில் நீதி மன்றங்கள்—சென்னை மாநகர சிவில் நீதிமன்றம் (திருத்த) சட்ட முன்வடிவைப் பேரவைமுன் அறிமுகம் செய்ய அனுமதி கோருகிறேன்.

தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்பெற்று, நிறைவேற்றப் பெற்று, அனுமதி வழங்கப்பெற்றது.

மாண்புமிகு திரு. சி. பொன்னையன்: இச்சட்ட முன்வடிவை பேரவை முன் அறிமுகம் செய்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: இச்சட்ட முன்வடிவு அறிமுகம் செய்யப் பெற்றிருக்கிறது.

### (ஆ) சட்டங்களில் நடுவர் (மாஜிஸ்ட்ரேட்டு) களைக் குறிப்பிடும் சில குறிப்புகள் (தனி வகைமுறைகள்) சட்ட முன்வடிவு, 1980.

மாண்புமிகு திரு. சி. பொன்னையன்: தலைவர் அவர்களே, 1980ஆம் ஆண்டு தமிழ்நாடு சட்டங்களில் நடுவர் (மாஜிஸ்ட்ரேட்டு) களைக் குறிப்பிடும் சில குறிப்புகள் (தனி வகைமுறைகள்) சட்ட முன்வடிவைப் பேரவைமுன் அறிமுகம் செய்ய அனுமதி கோருகிறேன்.

[1980 ஆகஸ்ட் 6

தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்பெற்று, நிறைவேற்றப்பெற்று, அனுமதி வழங்கப்பெற்றது.

மாண்புமிகு திரு. சி. பொன்னையன்: இச்சட்ட முன்வடிவைப் பேரவை முன் அறிமுகம் செய்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: இச்சட்ட முன்வடிவு அறிமுகம் செய்யப் பெற்றிருக்கிறது.

4. அறிவிப்புகள்—தொடர்ச்சி.

கூட்டுறவு சங்கங்கள் சட்ட முன்வடிவு, 1980.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: பேரவைக்கு ஓர் அறிவிப்பு, தமிழ்நாடு 1980 ஆம் ஆண்டு கூட்டுறவுச் சங்கங்கள் சட்ட முன்வடிவைப் பேரவையில் அறிமுகம் செய்ய ஆளுநர் அவர்கள் தமது இசைவைத் தெரிவித்துள்ளார்கள்.

7. அரசினர் சட்ட முன்வடிவுகள்—தொடர்ச்சி.

(இ) கூட்டுறவுச் சங்கங்கள் சட்ட முன்வடிவு, 1980.

மாண்புமிகு திரு. சி. பொன்னையன்: தலைவர் அவர்களே, தமிழ்நாடு 1980 ஆம் ஆண்டு கூட்டுறவுச் சங்கங்கள் சட்ட முன்வடிவைப் பேரவை முன் அறிமுகம் செய்ய அனுமதி கோருகிறேன்.

தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்பெற்று, நிறைவேற்றப் பெற்று, அனுமதி வழங்கப்பெற்றது.

மாண்புமிகு திரு. சி. பொன்னையன்: இச் சட்ட முன்வடிவைப் பேரவை முன் அறிமுகம் செய்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: இச் சட்ட முன்வடிவு அறிமுகம் செய்யப் பெற்றிருக்கிறது.

ஈ. பொதுப்பணிகள் பொறியியல் கழகம் (கையகப்படுத்துதல், பல்வகை விதித்துறைகள்) சட்ட முன் வடிவு, 1980



1980 ஆகஸ்ட் 6]

தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்பெற்று, நிறைவேற்றப்பெற்று, அனுமதி வழங்கப்பெற்றது.

மாண்புமிகு திரு. கே. இராஜா முகமது: இச் சட்ட முன்வடிவைப் பேரவை முன் அறிமுகம் செய்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: இச் சட்ட முன்வடிவு அறிமுகம் செய்யப் பெற்றிருக்கிறது.

4. அறிவிப்பு—தொடர்ச்சி.

(எ) வருவாய் வாரிய நீக்கச் சட்ட முன்வடிவு, 1980.

சட்ட மன்றப் பேரவை சட்ட முன்வடிவு எண் 22/1980).

மாண்புமிகு பேரவைத் தலைவர்: பேரவைக்கு ஓர் அறிவிப்பு

தமிழ்நாடு 1980 ஆம் ஆண்டு வருவாய் வாரிய நீக்கச் சட்ட முன்வடிவு (சட்ட மன்றப் பேரவை சட்ட முன்வடிவு எண் 22/1980) பேரவையில் ஆய்வுக்கு எடுத்துக்கொள்ள ஆளுநர் அவர்கள் தமது இசைவைத் தெரிவித்துள்ளார்கள்.

(7) அரசினர் சட்ட முன்வடிவுகள் —தொடர்ச்சி.

(உ) வருவாய் வாரிய நீக்கச் சட்ட முன்வடிவு, 1980.

(சட்டமன்றப் பேரவை சட்ட முன்வடிவு எண். 22/1980.)

மாண்புமிகு திரு. எஸ். டி. சோமசுந்தரம்: பேரவைத் தலைவர் அவர்களே,

" தமிழ்நாடு 1980-ஆம் ஆண்டு வருவாய் வாரிய நீக்கச் சட்ட முன்வடிவு (சட்ட மன்றப் பேரவை சட்ட முன்வடிவு எண் 22/1980) ஆய்வுக்கு* எடுத்துக் கொள்ளப் பெற வேண்டும் " என்று மொழிகிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: அமைச்சர் ஏதாவது முன்னுரையாகச் சொல்வதானால் சொல்லலாம்.

*1980-ஆம் ஆண்டு ஜூலை 8-ஆம் தேதியிட்ட தமிழ்நாடு சிறப்பு அரசிதழில் வெளியிடப் பெற்றுள்ளது.

[1980 ஆகஸ்ட் 6

மாண்புமிகு திரு. எஸ். டி. சோமசுந்தரம் : பேரவைத் தலைவர் அவர்களே, வருவாய் வாரியத்தை நீக்குவது என்கின்ற சட்ட முன்வடிவு அவையின் முன்னாலே மாண்புமிகு உறுப்பினர்களுடைய அரிய கருத்துக்களைக் கேட்டு நிறைவேற்றப்பட இருக்கிறது. வருவாய் வாரியம் நீக்கப்படும் என்ற செய்தியே வரலாற்று முக்கியத்துவம் வாய்ந்தது. அதுமட்டுமல்ல, அதை நீக்க வேண்டுமென்று இதற்கு முன்னாலே இருந்த அரசுகள் முயற்சிகள் எடுத்ததும் வரலாற்று முக்கியத்துவம் வாய்ந்தது என்பது உங்களுக்கு நன்றாகத் தெரியும்.

(மாண்புமிகு பேரவை மாற்றுத் தலைவர் தலைமை.)

வருவாய் வாரியம் எப்படி உருவாகியது என்பதைப் பற்றி அதை நீக்குவதற்கு முன்னால் நாம் எண்ணிப் பார்த்தால், 15-ஆம் நூற்றாண்டுக்கு முன்னால் ஐரோப்பா கண்டத்தினர் இந்தியத் துணைக் கண்டத்தில் தரை மார்க்கமாக வியாபாரம் செய்தார்கள். 15-ஆம் நூற்றாண்டில் எழுந்த ஒரு சண்டையில் துருக்கியர்கள் கான்ஸ்டாண்டி நோபில் என்ற நகரத்தைப் பிடித்துக் கொண்டார்கள். ஆகவே, ஐரோப்பா கண்டத்தைச் சேர்ந்தவர்கள் இங்கே வியாபாரம் செய்வதற்குக் கடல் மார்க்கத்தைத் தேடினார்கள். அப்படி கடல் மார்க்கத்தைத் தேடும்போது, போர்சுக்கீசியத்தைச் சேர்ந்த கடல் வீரன் வாஸ்கோடகாமா, இங்கே வந்து முதலிலே இடத்தைப் பிடித்தார் என்பது உங்களுக்குத் தெரியும்.

அதற்குப் பிறகு, பல ஆங்கிலேயர்கள் வந்தாலும், இந்தியாவுடன் வியாபாரம் செய்வது லாபகரமாக இருக்கும் என்று கிழக்கு இந்தியக் கம்பெனி ஒன்றை அமைத்தார்கள். அங்கே இருக்கின்ற அரசர்களிடத்திலே அனுமதி பெற்று, இந்தியாவிற்கு வந்து இங்கே முகலாய சாம்ராஜ்யத்தில் இருக்கிற சவானிடம் அனுமதி பெற்று, இங்கே வியாபாரத்தை ஆரம்பித்தார்கள்.

நாம் கூடியிருக்கின்ற இந்த இடமும், அதாவது இந்த மாமன்ற இடமும், அருகாமையில் இருக்கிற பகுதியும், இங்கே இருக்கின்ற தலைமைச் செயலகமும் 1639-ஆம் ஆண்டு ஜூலை மாதம் 22-ஆம் நாள் சந்திரகிரி மன்னரிடமிருந்து "சர் பிரான்சிஸ் டே" என்பவர் வாங்கியதும் என்பதும் உங்களுக்கு நன்றாகத் தெரியும்.

அதற்குப் பிறகு, சுதேசி மன்னர்களிடத்தில் வியாபாரத்திற்கு அனுமதி பெற்று அதற்கு மட்டுமல்ல, வியாபாரப் பொருள்களை வைத்துக் கொள்ள, கிடங்குகளுக்கு அனுமதி பெற்று, அதைக் காப்பாற்றிக் கொள்வதற்காக சிப்பாய்களை வைத்துக்



980 ஆகஸ்ட் 6] [திரு. எஸ். டி. சோமசுந்தரம்]

கொள்வதற்கு அனுமதி பெற்று, அந்தக் கிழக்கிந்தியக் கம்பெனி,
அந்த சிப்பாய்களை வைத்துக் கொண்டு உள்நாட்டிலேயிருக்கின்ற
தேசி மன்னர்களுடைய உள் நாட்டு கோயிலில் தலையிட்டார்கள்
ன்பது உங்களுக்குத் நன்றாகத் தெரியும். அப்படி தலையிடுகிற
பொழுது, அவர்களுக்கிருக்கின்ற சிப்பாய்களை வைத்துக்
கொண்டு, நவீனமான போர்க் கருவிகளை வைத்துக் கொண்டு,
அந்த இடங்களைப் பிடித்தார்கள், நிலப்பகுதிகளையும் பிடித்தார்
கள் என்பது உங்களுக்கு நன்றாகத் தெரியும்.

மராட்டிய மன்னர்களையும், கர்நாடக மன்னர்களையும்
முகலாய மன்னர்களையும் பிரித்தாளும் கொள்கையில் ஈடுபட்டு
கிழக்கிந்திய கம்பெனி, இந்தியாவினுடைய பெரும் பகுதியைப்
பிடித்தார்கள். பெரும்பகுதியைப் பிடித்து விட்டால் அதற்குப்
பிறகு வசூல் செய்ய வேண்டும். வரி வசூல் செய்ய வேண்டுமானால்
போக்கு வரத்து சாதனங்கள் இல்லாத அந்தக் காலத்தில், அங்கே
கலெக்டர்களை நியமித்து வரி வசூல் செய்தார்கள். கலெக்டர்
களை நியமிப்பது போதாது என்று, அப்போதுதான் போர்ட் ஆஃப்
ரெவின்யூ ஏற்பட்டது என்பதும், 1786-ஆம் ஆண்டுதான் முதலில்
வருவாய் வாரியம் ஏற்பட்டது என்பதும் உங்களுக்குத் தெரியும்.
வருவாய் வாரியம் ஏற்படுத்திய பொழுது 3 உறுப்பினர்களும்,
ஒரு செயலாளரும் இருந்தார்கள். ஆனால், அப்பொழுதெல்லாம்
வருவாய் வாரியத்திற்கு கவர்னர் அவர்கள் தலைமை தாங்கு
வார்கள். அப்பொழுது கவர்னர் ஆர்ச்பால்ட் கேம்பல் என்பவர்
முதலிலே, அதற்குத் தலைமை தாங்கினார் என்பதைத் தெரி
வித்துக் கொள்கிறேன்.

(முற்பகல் 10–50)

ஆனால் இன்றைக்கு இருக்கின்ற நடைமுறை சட்டம் போர்டு
ஸ்டான்டிங் ஆர்டர், 1878-ஆம் ஆண்டு இந்த வாரியத்தினுடைய
செயலாளராக இருந்த டாக்டர் சி. டி. மெக்லின் அவர்கள் இந்த
சட்டத்தை இயற்றினார்கள். அன்றைக்கு கவர்னராக இருந்தவர்
டியூகோ பக்கிங்காம், என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.
ஆனால் அதற்குப் பிறகு சிப்பாய்க் கலகம் ஏற்பட்டது என்பது
உங்களுக்குத் தெரியும். அந்த சிப்பாய் கலகத்திற்குப் பிறகு
விக்டோரியா மகாராணியினுடைய நேரடியான ஆளுகையின் கீழ்
இந்த நாடு வந்ததற்குப் பின்னாலும் இந்த வருவாய் வாரியம்
நீடித்தது.

ஆனால் கிழக்கிந்திய கம்பெனி ஆட்சியில் இருந்தபோதும்
சரி, அதற்குப் பின்னால் மன்னராட்சிக் காலத்திலும் சரி, அப்
போதும் இந்த வருவாய் வாரியம் இருந்து கொண்டே வந்திருக்
கிறது என்பது உங்களுக்குத் தெரியும். ஆனால் மன்னராட்சி
முடிந்து, இந்திய நாடு சுதந்திரம் பெற்ற பிறகு, மக்களால்
தேர்ந்தெடுக்கப்பட்ட ஆட்சி வந்து, அமைச்சர்கள், முதல்
அமைச்சர்கள் என்று வந்தாலும் வருவாய் வாரியம் தொடர்ந்து
இருந்தது என்பது உங்களுக்குத் தெரியும்.

வருவாய் வாரியத்தை நீக்க வேண்டும் என்று பலமுறை இங்கே பேசப்பட்டது. பல முறை முயற்சிகள் எடுக்கப்பட்டன. இந்தியத் துணைக்கண்டம் சுதந்திரம் அடைவதற்கு முன்னால் கூட, இரட்டை ஆட்சி முறை இருந்தபோது, பிரிக்கப்படாத சென்னை அப்போது சென்னை ராஜ்யம் என்று அதற்குப் பெயர்—அப்போது 1936-ஆம் ஆண்டு ராஜாஜி அவர்கள் முதலமைச்சராக இருந்த போது இந்த வருவாய் வாரியத்தை நீக்க வேண்டும் என்று முயற்சி செய்தார். ஆனால் எப்படியோ அந்த முயற்சி வெற்றி பெற வில்லை.

பிறகு இந்திய நாட்டில் ஜனநாயக முறைப்படி சட்ட மன்றம் வந்த பிறகு, அதன் மூலமாக முதலமைச்சராக வந்த ராஜாஜி அவர்கள் 1952-லேயும் இந்த வருவாய் வாரியத்தை நீக்க வேண்டும் என்று முயற்சி செய்தார்கள். அதுவும் நடைபெறவில்லை.

அதற்குப் பிறகு, 1969-லே வருவாய்த் துறை அமைச்சராக இருந்த திரு. கே. ஏ. மதியழகன் அவர்கள் இந்த வாரியத்தை நீக்குவதற்கு முயற்சி எடுத்துக் கொண்டார்கள். அப்போதும் நடைபெறவில்லை என்பதும் உங்களுக்குத் தெரியும். ஆனாலும், மக்களால் தேர்ந்தெடுக்கப்பட்ட அரசு வந்த பிறகும் இந்த வருவாய் வாரியம் இருக்க வேண்டுமா எனற கேள்வி பல இடங் களிலே கேட்கப்பட்டன என்பதும் உங்களுக்கு நன்றாகத் தெரியும். ஆனால் மக்களிடத்தில் நேரடியாகத் தொடர்பு கொண்டு, மக்க ளுடைய எண்ணங்களை—தேவைகளை விரைவாக நிறைவேற்ற வேண்டும் என்று ஆக்க பூர்வமாகச் செயலாற்றிக் கொண்டிருக்கிற தமிழக முதல்வர் புரட்சித் தலைவர் அவர்கள் வருவாய் வாரி யத்தை நீக்க வேண்டும் என்ற தங்களுடைய கருத்தைத் தெரி வித்தார்கள். அந்தக் கருத்தின் அடிப்படையில் அமைச்சரவையின் சார்பாக 4—2—1980 அன்று இந்த மாமன்றத்தின் முன்னால் வருவாய் வாரியம் நீக்க வேண்டும் என்ற சட்ட முன்வடிவு இங்கே வந்தது. ஆனால் உங்களுக்குத் தெரியும் அதை நிறை வேற்றுகின்ற நிலையிலே இல்லை. வருவாய் வாரியம் கலைக்கப் படவில்லை. ஆனால் எங்களைத் கலைத்துவிட்டார்கள் என்பது உங்களுக்குத் நன்றாகத் தெரியும். எங்களைக் கலைத்தாலும் மீண்டும் நாங்கள் வந்து அந்த சட்ட முன்வடிவை, விட்டவைகளை தொட்டவைகளை முடித்துத் தீரவேண்டும் என்ற நோக்கத்தோடு இந்த அரசு இங்கே மீண்டும் வந்திருக்கின்றது என்பது உங்களுக்குத் தெரியும்.

ஆனால் பல பேர்கள் முயற்சி செய்து என்ன காரணத்தாலோ அல்லது எந்த சந்தர்ப்பத்தாலோ, அல்லது பழமையை போக் கடித்து விட்டு புதுமையைக் கொண்டு வருகின்றபோது, அந்தச் சிக்கலை எல்லாம் சந்திப்பதற்குச் சங்கடம் என்று கருதியோ இது செய்யப்படவில்லை. ஆனால், 1937-லே ஆரம்பித்து இன்றைக்கு





1980 வரையிலே செய்யாத ஒன்றை இந்த அரசு இன்றைக்கு இருக்கிற முதலமைச்சர் புரட்சித் தலைவர் அவர்கள் தைரியமாக கலைப்பதற்கு முடிவெடுத்திருக்கிறார்கள் என்பதை உங்களுக்குத் தெரிவித்துக் கொள்கிறேன். அப்படி ஒரு முயற்சி எடுக்கின்ற எங்களுக்கு உங்களுடைய ஆதரவை தரவேண்டும் என்று நான் கேட்டுக் கொள்கிறேன்.

ஆனால் இன்றைக்கு ஆங்கிலேயர்களால் ஏற்படுத்தப்பட்ட இந்த வருவாய் வாரியம், ஆந்திராவிலே, கர்நாடக மாநிலத்திலே மராட்டிய மண்டலத்திலே பஞ்சாபிலே இதற்கு முன்னாலே கலைக்கப்பட்டாகிவிட்டது என்பதை உங்களுக்குத் தெரிவித்து, அது உங்களுக்கு முன்னோடியாக இருக்கிறது என்பதைத் தெரி வித்துக் கொள்கிறேன். வருவாய் வாரியத்தைக் கலைத்துவிட் டால் எப்படி நிர்வாகம் நடைபெறும் என்று யாராவது ஐயப் பட்டால், அவர்களுக்கு முன்னோடியாகப் பல மாநிலங்களில் இது கலைக்கப்பட்டிருக்கிறது என்பதையும் நான் தெரிவித்துக் கொள்ளக் கடமைப்பட்டிருக்கிறேன்.

இன்னொரு கருத்தையும் சொல்கிறேன். அஸ்ஸாம், பீகார், உத்திர பிரதேசம், மேற்கு வங்காளம் போன்ற இடங்களில் இன்னும் வருவாய் வாரியம் கலைக்கப்படவில்லை என்பதையும் உங்களுக்கு நான் தெரிவித்துக்கொள்கிறேன்.

வருவாய் வாரியத்தில் திறமை வாய்ந்த பலர் உறுப்பினர் களாக இருந்து பணியாற்றி வந்தாலும், அங்கேயிருக்கிற சில நடைமுறைச் சிக்கல்களினால் தான், இன்றைக்கு வருவாய் வாரி யத்தை நீக்கவேண்டும் என்று இன்றைக்கு இருக்கிற இந்த அரசு கருதுகிறது என்பதை நான் உங்களுக்குத் தெரிவித்துக் கொள்கி றேன்.

அது மட்டுமல்ல, வருவாய் வாரியம் சுமார் 200 ஆண்டு களுக்கு முன்னாலே ஏற்படுத்தப்பட்டது. அன்றைக்கு இருந்த சூழ்நிலைக்கு ஏற்றவாறு, வரி வசூலை மட்டுமே முக்கிய குறிக் கோளாகக் கொண்டு ஏற்படுத்தப்பட்டது என்பதை மாண்புமிகு உறுப்பினர்கள் நன்றாக அறிவார்கள். மக்களால் தேர்ந்தெடுக் கப்படாத அரசு இருந்த காலத்தில் ஏற்படுத்தப்பட்ட அமைப்பு, மக்களாட்சி ஏற்படுத்தப்பட்ட பிறகு தேவையா என்ற கேள் விக் குறி இன்று நாட்டு மக்கள் மத்தியிலே இருக்கிறது என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

வருவாய் வாரியத்தை நீக்கி மாற்று அமைப்பு ஏற்படுத்த வேண்டும் என்ற எண்ணம் மக்களிடையேயும், சட்டமன்ற உறுப் பினர்களிடையேயும் நீண்டகாலமாக இருந்து வருகிறது. ஆகவே நான் சொல்லிக்கொள்வேன், அரசின் கொள்கைகள் திட்டங்கள்

[திரு. எஸ். டி. சோமசுந்தரம்] [1980 ஆகஸ்ட் 6

பல இடங்களில் தாமதப்படுத்தப்படுவதைத் தவிர்த்து, அரசின் கொள்கைகள், திட்டங்கள், எளிதில் கிராமப்புற மக்களை அடைய மாவட்ட அளவில் செயல்பட்டு நிறைவேற்றப்பட வழி செய்ய வேண்டும் என்பது இந்த அரசின் கருத்தாகும். அதன் காரணமாக, வருவாய் வாரியத்தை நீக்கிவிட்டு, புதிய அமைப்பை உருவாக்க அரசு எண்ணி, இந்தச் சட்ட முன்வடிவை கொண்டு வந்து இருக்கிறது. மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, உங்கள் மூலமாக இங்கே இருக்கும் மாண்புமிகு உறுப்பினர்களின் கருத்துக்களை அறிந்து பிறகு, என் உரையைத் துவக்குகிறேன் என்று சொல்லி, என் முன்னுரையை முடிக்கிறேன்.

*<u>திரு. துரை முருகன் :</u> தலைவர் அவர்களே, தமிழ் நாட்டின் நிர்வாகத் துறையில் இருதயம் போன்று செயல்பட்டு வந்த வருவாய்த் துறை வாரியத்தைக் கலைத்து விடுவது என்ற சட்ட முன்வடிவை இந்த அவையின் முன்னாலே, வைத்து, இந்த மாமன்றத்தின் ஒப்புதலுக்காக மாண்புமிகு அமைச்சர் அவர்கள் பேசியிருக்கிறார்கள்.

வருவாய்த் துறை வாரியம் கலைக்கப்பட வேண்டுமா, வேண்டாமா என்கிற வாதம் இன்றைக்கு அல்ல, அது தோன்றிய காலத்தில் இருந்து தமிழகத்தில் உள்ள எல்லா நிர்வாக இயந்திரங்களிலும் அது ஒரு பட்டிமன்றமாகவே நடந்து இருக்கிறது. கலைக்கப்பட வேண்டும் என்று ஒரு பிரிவினரும், கலைக்கப்படக் கூடாது என்று ஒரு பிரிவினரும் என்று இப்படியே கிட்டத்தட்ட 150 ஆண்டுகளுக்கு மேலாக அந்த வாதம் நடைபெற்று, கடைசியில் முற்றுப்பெறாமல் நின்று இருக்கிறது. ஆனால், மாண்புமிகு அமைச்சர் அவர்கள் சொன்னது போல், வெள்ளைக்காரன் காலத்திலும் சரி, அவனை விரட்டிய காங்கிரஸ் கட்சி ஆட்சியானாலும் சரி, அதற்குப் பிறகு வந்த திராவிட முன்னேற்றக் கழகமாக இருந்தாலும் சரி, அந்த வருவாய் வாரியத்தைக் கலைத்து விட வேண்டும் என்று முயற்சித்தார்கள். ஆனால் அப்படி கலைக்கப்பட்ட பிறகு, அந்த இடத்திலே யாரை உட்கார வைப்பது, அந்த வருவாய் வாரியம் செய்கிற பணிகளை யார் நடைமுறையில் செய்ய முடியும் என்று ஆராய்ச்சிக்குப் போன பிறகு, அது இருந்தால் பரவாயில்லை என்று விட்டு விட்டார்கள். எனவே தான் அதைக் கலைக்காமலேயே கொஞ்சம் கொஞ்சமாக மாற்றி வைத்து விட்டார்கள்.

ஆனால், அனைத்திந்திய அண்ணா திராவிட முன்னேற்றக் கழக ஆட்சி, அந்த வருவாய் வாரியம் கலைப்பதிலே எங்களுக்கு மலைப்பு இல்லை என்ற வகையில் திட்டவட்டமான ஒரு சட்ட முன்வடிவைக் கொண்டு வந்து இருக்கிறார்கள்.



1980 ஆகஸ்ட் 6] [திரு. துரை முருகன்]

எனக்குத் தெரியும். நிச்சயமாக இந்தச் சட்டமுன்வடிவு இன்றைக்கு நிறைவேற்றப்பட்டு விடும். ஏனென்றால் நீங்கள் அதிகமான அங்கத்தினர்களை வைத்துக்கொண்டு இருக்கிறீர்கள். நான் உங்களைக் கேட்டுக்கொள்வது எல்லாம், மாண்புமிகு அமைச் சர் அவர்கள் அதனுடைய வரலாற்றைச் சொன்னார்கள், வருவாய் வாரியம் நம்முடைய நிர்வாகத்தின் இருதயமாக இருந்தது என்று நான் முன்பு சொன்னேனே அது போல் அது இயங்கி வந்து இருக்கிறது. ஆகவே, அந்த வருவாய் வாரியத்தை எடுத்தேன், கவிழ்த்தேன், சட்டம் என் கையில், மெஜாரிட்டி என் பக்கம், செய்து முடித்தேன் என்று அவசரபட்டு காரியத்தைச் செய்யாமல், அதை மீண்டும் பரிசீலனை செய்வது நாட்டுக்கு நல்லது என்று எடுத்துச் சொல்வதுதான் என்னுடைய பேச்சின் முதல் துவக்கம் என்று சொல்லிக்கொள்கிறேன்.

[முற்பகல் 11—00]

இங்கே அவர் சொன்னது நீண்ட வரலாறு. அவர்கள் குறிப்பிட்ட அந்த நீண்ட வரலாற்றை அமைச்சரவர்கள் ஒரு குறிப்பாகத் தயாரித்து, அங்கத்தினர்களுக்கு அனுப்பி இருக்கு லாம். இல்லாவிட்டால் வருவாய் வாரியத்தைக் கலைக்க வேண்டுமென்று சொல்லி, எங்களுடைய காலத்திலே வர்கீஸ் தலைமையில் போடப்பட்ட கமிட்டி ரிப்போர்ட்டை எங்களுடைய பார்வைக்கு அனுப்பி இருக்கலாம். அப்படி எதையும் செய் யாமல் 'மொட்டைத்தாதன் குட்டையிலே விழுந்தான்' என்பதைபோல ஒரே வரியில்

The Govern ent have decided to abolish the Board of Revenue

என்று மொட்டையாகப் போடப்பட்டிருக்கிறது. ஏன் கலைக்க வேண்டும்? அதன் சாதகம் என்ன? பாதகம் என்ன?

Advantages and disadvantages.

என்று குறிப்பிட்டிருந்தால் நாங்களும் அதைப் பார்த்திருப்போம், கருத்துக்கள் சொல்ல உதவியாக இருக்கும். அப்படி எதுவும் கொடுக்காமல் ஒரே வரியில்

'The G.vernment have decided to ab.lish the Board of Revenue'

என்று மொட்டையாகப் போடப்பட்டிருப்பதால் இதிலே உங்களுக்குத் தெளிவு இல்லாத கருத்து இருக்கிறது என்பதை நான் தெரிவித்துக்கொள்ள விரும்புகிறேன்.

அமைச்சரவர்கள் சொன்னார்கள், எப்படி இந்த வருவாய் வாரியம் ஏற்பட்டது என்று. கிழக்கிந்திய கம்பெனிக்காரன் இந்த நாட்டிலே நாட்டைப் பிடித்து, பிடித்த நாட்டை நிர்வகிப்பதற்காக 5,000 சதுர மைல் பரப்பை ஒரு ஜில்லாவாக ஆக்கி, அந்த ஜில்லாவை நிர்வகிக்க ஜில்லா கலெக்டர்களை நியமித்தார்கள். அப்படி நிர்வாகம் செய்ய நியமிக்கப்பட்ட கலெக்டர்களிடம்

Law and order, settlement of land, collection of revenues and emforcement of common laws.

ஆகிய பொறுப்புகள் இருந்தன. இவ்வளவு நிர்வாகத்தையும் வைத்திருக்கிற கலெக்டர்கள் செம்மையாகப் பணியாற்றுகிறார்களா என்பதைக் கவனிப்பதற்காக

'The Board of Revenue was set up, to regulate and supervise the work of Collectors'

என்ற முறையிலே இந்த வாரியம் அமைக்கப்பட்டது. இங்கே அமைச்சரவர்கள் சொன்னதைப்போல

It comprised of one of the Senior Members of the Governor's Council and three of the most intelligent Senior civil servants. The Governor presided and exercised a casting vote in the case of equality

என்ற முறையிலே அதனுடைய அமைப்புகள் அமைக்கப்பட்டன. ஆகவே, இந்த வருவாய் வாரியம் 1786 ஆம் ஆண்டு அமைக்கப்பட்டிருக்கிறது. அதைத்தான்

'The Board of Revenue was constituted in 1786. The Board of Revenue is the oldest British Inslitution which had played an important part in the administration of the Madras Presidency.

என்று குறிப்பிட்டார்கள்.

1786 ஆம் ஆண்டு என்று சொல்லும்போது கிட்டத்தட்ட 150 ஆண்டு காலத்திற்கு மேலாக இந்த நாட்டிலே இயங்கி வருகிற ஒரு நிர்வாகம். இந்த நிர்வாகத்தை இன்று மூடிவிட வேண்டும்; இந்த வாரியத்திற்கு மூடுவிழா நடத்த நாங்கள் தயார் என்று அமைச்சரவர்கள் முன்வந்திருக்கிறார்கள். அவர்கள் சுட்டிக்காட்டியதைப்போல இதற்கு 1803 ஆம் ஆண்டு விதிகள் வகுக்கப்பட்டிருக்கின்றன. இது கலெக்டர்களை மேற்பார்வையிடுகிற எஜமானன் வேலையை மட்டும் செய்யவில்லை. 1803 ஆம் ஆண்டு இதற்கு வகுக்கப்பட்ட விதிகளில்



The preamble to these regulations runs as follows :

" Whereas it has hither to been used the Board of Revenue to exercise judicial authority in the determination of cases of civil nature appealed from the decision of the Collectors, who were entrusted with the administration of the revenues and the distribution of justice in their respective districts."

என்று இருக்கிறது. ஆகவே கலெக்டர்களை நிர்வாகம் செய்கிற எஜமானன் மட்டுமல்லாமல், நீதி வழங்குகிற நீதிபதிகளாகவும் இந்த வாரியம் இருந்திருக்கிறது என்பதை ஆரம்பத்திலிருந்தே தெரிந்திருக்கிறோம். இவ்வளவு வேலைகளைச் செய்துகொண்டிருக்கிற இந்த வாரியத்தை இன்றைக்கு வருவாய்த் துறை அமைச்சர் திரு. எஸ். டி. சோமசுந்தரம் அவர்கள் மட்டும் கலைத்துவிட வேண்டுமென்று சொல்லவில்லை. இதற்கு முன்னாலே, இந்த வாரியம் ஆரம்பிக்கப்பட்ட 28-வது ஆண்டிலேயே, 1831 ஆம் ஆண்டிலே ஒரு மாண்புமிகு எஸ். டி. எஸ். தோன்றியிருக்கிறார். அந்த ஆண்டு, இந்த நிர்வாகத்திலே இருந்த ஒரு சீனியர் உறுப்பினர் சி. எம். லஷிங்டன். அவருடைய தலைமையில் Committee for the revision of the civil establishment. என்ற ஒரு கமிட்டியை அமைத்தார்கள். அதன் வேலை என்னவென்றால் முழுமுதல் வேலை இந்த ரெவின்யூ போர்டை ஒழிப்பது. 1831 ஆம் ஆண்டு அதை ஒழித்துவிட்டு என்ன செய்வது என்று பார்த்தார்கள். அந்த இடத்தில் டிவிஷனல் கமிஷனரை அமைக்க வேண்டுமென்று பலமாக வாதாடுகிற, உங்கள் மாதிரி ஒருவர் அதனுடைய சாதகங்களையும் பாதகங்களையும் ஆராய்ந்து பார்த்து, கடைசியில் முடியவில்லை என்று கைவிட்டு விட்டார்கள். ஆக, இந்த வாரியத்தைக் கலைத்திட வேண்டும்; இந்த வாரியம் தேவையில்லை என்ற முதல் குரல், அந்த முதல் அடி 1831 ஆம் ஆண்டிலேயே விழுந்திருக்கிறது. அதையடுத்து இரண்டாவது பயணம் துவக்கப்படுகிறது. 1855லேயும் 1857லேயும் இந்த ரெவின்யூ போர்டைக் கலைப்பது என்று கச்சைக் கட்டிக் கொண்டு புறப்பட்டது சென்னை சர்க்கார். ஆனால், நிலைமையை யோசித்து, அறிஞர்களைக் கூப்பிட்டு ஆலோசித்தது. நிர்வாகத்தினரை அழைத்துப் பேசியது. ஆராய்ச்சி வல்லுநர்களைக் கலந்தாலோசித்தது. அந்த ரெவின்யூ போர்டு இருக்க வேண்டும் என்ற முடிவுக்கு அந்த மூன்ற வந்துவிட்டது.

அடுத்து அதன்மீது நான்காவது தாக்குதல் 1878 ஆம் ஆண்டு மத்திய அரசு தொடுத்தது. அது என்ன சொல்கிற்று என்று கேட்டால் போர்டு மெம்பர்களுக்கும், கலெக்டர்களுக்கும் ஒரு நெருக்கம் இல்லை. இவர்கள் இருப்பது ஓர் இடம், அவர்கள்

இருப்பது ஓர் இடம். எனவே இவற்றை மறு பரிசீலனை செய்ய வேண்டும் என்று சொல்லி இதை ஒழிக்க வேண்டும் என்று சொன்னார்கள். ஒழிக்க வேண்டும் என்பதற்காக ஆராய்ந்து பார்த்த நேரத்தில் உருப்படியான யோசனை அவர்களுக்கு வந்தது. அத்தனை மெம்பர்களும் உட்கார்ந்த இடத்திலேயே இருந்துதான் நிர்வாகம் செய்கிறார்கள். பிறகு ஜில்லாக்களிலே அவர்கள் டூர் செய்யட்டும் என்று அவர்களுக்கு போனஸ் கொடுப்பது போல் கொடுத்தார்கள் அதுமட்டுமல்லஅந்த 1878ஆம் ஆண்டிலே அந்த போர்டு மெம்பர்களுக்கு கமிஷனர் என்ற அந்தஸ்து கொடுத்து ஒவ்வொருவரும் அந்தந்த இலாக்காக்களை நிர்வகிக்க வேண்டும் என்ற முறையையும் கொண்டுவந்தார்கள். ஒட்டைக் கூத்தன் பாட்டுக்கு இரட்டைத் தாழ்ப்பாள் என்று சொல்வது மாதிரி, ஒழிக என்பதற்கு பதிலாக வாழ்க என வாழ்த்தியது. ஆக அப்போது தொடுக்கப்பட்ட பாணமும் தோல்வி அடைந்தது.

அடுத்து 1919 ஆம் ஆண்டு மௌண்ட் ஃபோர்ட் ரிபார்ம்ஸ் வந்த நேரத்தில் இதை எப்படியாவது ஒழித்துவிட வேண்டும் என்று மீண்டும் போர் தொடுக்கப்பட்டது. இந்த முறை என்ன குறை சொன்னார்கள் என்று சொன்னால் கலெக்டர்களுக்கு இந்த மெம்பர்களால் சரியான கைடன்ஸ் தரமுடியவில்லை என்று சொன்னார்கள். ஆகவே இதை ஒழித்துவிட வேண்டும் என்று சொன்னார்கள். ரீஜினல் கமிஷன் வரவேண்டுமென்று பழைய பல்லவியைப் பாடினார்கள். பல்லவி, தாளம், ராகம், சங்கராபரணம் எல்லாவற்றையும் எடுத்துப் பாடினார்கள் ஆனால் முடியவில்லை. கடைசியிலே அந்த 1919 ஆம் ஆண்டு ரெவின்யூ போர்ட் தப்பித்துவிட்டது.

அடுத்து 6 வது தாக்குதல் நடைபெறுகின்றது. அதாவது 1921 ஆம் ஆண்டு லெஜிஸ்லேட்டிவ் கவுன்சில் ஒரு தீர்மானத்தை ஏகமனதாக நிறைவேற்றியது. அந்தத் தீர்மானம் என்ன வென்று கேட்டால் ஒரு குழு அமைக்க வேண்டும் என்பதுதான் அந்தக் குழுவினுடைய வேலை என்ன வென்று கேட்டால்

'To enquire into the expediency and feasibility of replacing the Bcard by such alternative agencies as might be required in order to carry on the administ ation with economy and at the same time without loss of efficiency'

என்று சொல்லப்பட்டது. அதாவது அதனுடைய திறன் பறிபோகாத அளவிற்கு அதை ஒழிப்பது என்று தீர்மானித்து அதற்காக ஒரு குழுவைப் போட வேண்டும் என்று லெஜிஸ்லேட்டிவ் கவுன்சில் தீர்மானம் போட்டது. அந்தக் குழுவிற்கு இன்றைக்கு இருக்கின்ற ரெவின்யூ அமைச்சரைப் போன்ற திரு எம். அபிபுல்லா என்பவர்



தலைவர். அந்தக் குழுவிலே சர். சி. பி. ராமசாமி அய்யர் ஓர் உறுப்பினர். அந்த மேதைகளைக் கொண்டு குழு ஆராய்ந்தது. உட்கார்ந்து பேசியது. ஆனால் இறுதியிலே ஒரு முடிவுக்கு வந்தார்கள். அது என்ன முடிவு தெரியுமா!

'There should be one intermediate authority between the Government and district Officers and that any attempt to bring the members of Government into touch with the District Administration would be a fatal mistake. It was inadvisable for the Members of the Government to hear statutory revenue appeals'.

என்று அந்த அறிவிப்பு கூறியது. அதுமட்டுமல்லாமல்

'Principle subsequently incorporated in Section 296 of the Government of India Act. 1935'

என்று அதிலே கொண்டு போய் சேர்த்து விட்டார்கள். நிலைமை என்ன ஆயிற்று என்றால் மறுபடியும் அது தப்பித்து விடுகின்றது. . . . . . . . . . . . .

திரு மு. அம்பிகாபதி : மாண்புமிகு உறுப்பினர் திரு துரை முருகன் அவர்கள் ரெவின்யூ போர்டு கலைக்கப்பட வேண்டும் என்கிறாரா, அல்லது கலைக்கப்பட வேண்டாம் என்கிறாரா, ஏதாவது ஒரு வழியில் அவர்கள் விளக்க வேண்டும்.

திரு துரை முருகன் : அதற்கு அங்கத்தினர் அவர்கள் பொறுத்திருந்து பார்க்க வேண்டும். ஆக அதன்பிறகு அதைக் கொண்டு போய் கவர்மெண்ட் ஆப் இண்டியா ஆக்டிலே சேர்த்து விட்டார்கள். அதை ஒழிக்க வேண்டும், ஒழிக்க வேண்டும் என்று சொல்லப்பட்டு பிறகு அது அரசியல் சட்டத்திலேயே ஏறி உட்கார்ந்து கொண்டது. பிறந்த உடனேயே சிலருடைய ஜாதகத்திலே சனியும் கூடவே பிறந்து விடும் என்று சொல்வார்கள். அதுபோல இது பிறந்த போதே இதற்கு எதிர்ப்பு கிளம்பி இருக்கின்றது. இந்த வகையிலே அதற்கு 7 வது முறையும் எதிர்ப்பு கிளம்பிற்று. அதாவது தலைவரவர்களே, 1924 ஆம் ஆண்டு லெஜிஸ்லேட்டிவ் கவுன்சிலிலே ஒரு கட் மோஷன் வந்தது ரெவின்யூ போர்டைக் கலைக்க வேண்டும் என்று.

[முற்பகல் 11–10]

அப்பொழுது இந்த மாநிலத்தின் கவர்னராக இருந்த லார்டு வெல்லிங்டன் பிரபு என்பவர் ஒரு மெசேஜ் அனுப்புகிறார். அந்த கட்மோஷன் மீது அனுப்புகிறார். அதிலே அவர் சொல்லுகிறார்

[திரு. துரை முருகன்] [1980 ஆகஸ்ட் 6

' It appears from the speeches of the Hon. Members that the desire in passing this resolution was that the Board of Revenue should be abolished. Similar views have been expressed more than once in the last hundred years.'

100 ஆண்டுகளுக்கு மேல் இதே கருத்துக்கள் சொல்லப்பட்டு வந்திருக்கின்றன.

'The question was lastly raised on a resolution passed by the Legislative Council in 1921 when a Committee was appointed which decided that the retention of the Board of Revenue was necessary'

என்று குறிப்பிட்டிருக்கிறார். எனவே 7 வது பாணமும் தோல்வியுற்றது. அப்போதாவது அதை விட்டார்களா இல்லை விடவில்லை. 1931–32 லே மீண்டும் கிளப்பியது. என்ன பெயரில்

'Retrenchment Committee of the Madras Government'

என்ற பெயரால் எட்டாவது தாக்குதலையும் திரும்பவும் அதை எடுக்கலாமா என்பது பற்றி கிளம்பியது.

அப்போது அரசியல் ராஜரிஷி என்று போற்றப்பட்டு வந்த மதிப்பிற்குரிய ராஜகோபாலாச்சாரியார் அவர்கள் அந்த நேரத்தில் வருகிறார். எத்தனையோ ராமபாணம் போட்டு பார்த்து தோற்றுவிட்டார்கள். நானே ராம அவதாரம் செய்திருப்பவன், ஆகையினால் நான் முயற்சி செய்கிறேன். என்று முயன்று பார்த்தார்கள். ஆனால் அவராலும் முடியவில்லை. அதற்குப் பிறகு, 1953 ல் ஆந்திர மாநிலம் பிரிந்த போது இப்போது மீண்டும் மக்களின் படை பலத்தோடு வந்திருக்கிறேன். ஆகையினால் ஜெயித்துவிடுவேன் என்று விடாமல் முயற்சி எடுத்தார். ஆனால் அப்போதும் தோல்வி கண்டார். எதுவும் நடக்க வில்லை,

கடைசியில் 1954 லே காமராசர் அவர்கள் முதலமைச்சர் ஆக வந்த போது சொன்னார்கள். 'வேறு வேலை இல்லையா, அது இப்போது இருக்கிறபடி, நடக்கிறபடி நடக்கட்டுங்கறேன். இப்போது என்ன அதனால் வந்துவிட்டது, அப்படியே இருக்கட்டும் என்று சொல்லி இதற்கு ஒரு முற்றுப் புள்ளியை அவர்தான் வைத்தார். ஆனால் விட்டார்களா, விடவில்லை.

அதற்குப் பிறகு திராவிட முன்னேற்றக் கழகம் ஆட்சிக்கு வந்த பிறகு, மதிப்பிற்குரிய மதியழகன் அவர்கள் நான் நினைத்ததை நடத்தியே தீருவேன் என்று முயன்று பார்த்தார். அவரும் தோல்விதான் கண்டார்.



1980 ஆகஸ்ட் 6] [திரு. துரை முருகன்]

அதற்குப் பிறகு 1969-ல் கலைஞர் ஆட்சிக்காலத்தில்மதிப்பிற்குரிய திரு வர்கீஸ் அவர்கள் தலைமையில் ஒரு கமிட்டி போடப்பட்டது. அந்தக் கமிட்டியிலே தெளிவாகச் சொல்லப்பட்டு இருக்கிறது.

' The flexibility of the present system has a distinct advantage and loss of it should be a matter of regret '

அது மட்டுமல்ல, இன்னும் கொஞ்சம் வருத்தத்தோடு சொல்லியிருக்கிறார்கள்.

' having decided to abolish the Board, it would be better to go he old way, rather than respond to expediency, which however convenient administratively may not bring in political satisfaction '

என்று அவர் முடித்திருக்கிறார். ஆகவே இப்படி வருத்தப்படக் கூடிய அளவிற்கு, அதைக் கொண்டுவந்த காரணத்தால் மீண்டும் மீண்டும் அதை நாம் தொடர்ந்து பார்த்துவர நேரிட்டது.

ஆங்கிலேயரின் ஆட்சி காலத்திலே கொண்டு வரப்பட்டது என்பதினால் கலைக்கக்கூடாது என்று நாங்கள் சொல்லவில்லை. கலைத்துவிட வேண்டுமென்றால் கலைத்துவிட்ட பிறகு அந்த ரெவின்யூ போர்ட்டின் நிர்வாகத்தை யாரைக் கொண்டு செய்யப்போகிறீர்கள். எப்படி நடத்தப் போகிறீர்கள். அப்படி நடத்துவது இதைவிட சிறப்பாக இருக்குமா என்றெல்லாம் எடுத்துச் சொன்னால், அதற்கு என்ன சரியான மாற்று வழி என்று எடுத்துக் காட்டினால், இந்த அவையில் இதற்கு முதலில் கையைத் தூக்குபவன் துரைமுருகனாகத்தான் இருப்பான் என்று சொல்லிக் கொள்கிறேன்.

ஆகவே அதன் நிர்வாகத்தை யாரைக் கொண்டு நடத்தப் போகிறீர்கள். அந்த போர்டில் யார்யார் இடம் பெற்றிருக்கிறார்கள். கலெக்டராக இருந்து, அதற்கு மேல் தலைமைச் செயலகத்தில் செக்ரட்டரியாக மாறி, நிறைய அனுபவம் பெற்றவர்தான் அங்கே போர்டு மெம்பராக போடப்படுகிறார். இங்கே சட்ட சபையிலே ஏதாவது ஒரு தீர்மானத்தைக் கொண்டு வருகிறபோது அதை வைத்துக் கொண்டு அந்த சீனியர் மெம்பர்கள் பேசி முடிவு எடுத்து சர்க்காருக்கு தெரிவிக்க முடியும். அனுபவம்தான் படிப்பைவிட மிகச் சிறந்தது என்பது உண்மை. அது அவர்களுக்

கும் தெரியும் என்று நம்புகிறேன். ஆகவே, போர்டை எடுத்து விட்ட பிறகு என்ன செய்யப் போகிறீர்கள் என்று நீங்கள் தெரிவிக்க வேண்டும்.

போர்டு மெம்பர்கள் இருக்க மாட்டார்கள். ஆனால் கமிஷனர் இருப்பார். மற்றவர்களின் இருக்கைகள் அப்படியே இருக்கும். அந்தந்த ஆட்களும் இருப்பார்கள். பைல்கள் வரும் போகும். நிர்வாகம் நடக்கும். ஆனால் வெளியே மெம்பர்கள் என்று இருக்கும் போர்டை நீக்கிவிட்டு கமிஷனர் என்று மட்டும் விட்டு வைத்திருப்பார்கள். அவ்வளவுதான். இதனால் என்ன உபயோகம் நாங்கள் 'டசன்' என்று சொல்கின்றோம், நீங்கள் 12 என்று சொல்லுங்கள் என்று சொல்கிறீர்கள்.

அதுதானே கூட்டுச் சிந்தனையில் பிறப்பது. உருப்படியான யோசனைகளாக இருக்காதா ? இங்கே நீங்கள், அமைச்சர்கள் இருக்கிறீர்கள். நாங்களே நிர்வாகம் செய்கிறோம், எங்கள் இலாக்காவிற்கு நாங்களே ராஜா என்று இருக்கலாம். சேல்ஸ் டாக்ஸ், சேல்ஸ் டாக்ஸ் இலாகா வைத்திருப்பவர்களிடம் இருக்கும், டிரான்ஸ்போர்ட், டிரான்ஸ் போர்ட் இலாகா வைத்திருப்பவர்களிடம் இருக்கும், ஹெல்த் அந்த இலாக்காவை வைத்திருப்பவர்களிடம் இருக்கும். ஆக கூட்டுச் சிந்தனை வேண்டாம் என்று சொல்கிறீர்களா? நீங்கள் ஏன் காபினெட் மீட்டிங் வைக்கிறீர்கள்? காபினெட் மீட்டிங் வைப்பதனால் கூட்டுச் சிந்தனை பிறக்கும். அதனால் நல்ல திட்டங்கள் உருவாகும். நாட்டு மக்களுக்கு நல்லது செய்ய வேண்டும் என்ற எண்ணம் தோன்றும். அதற்காகத்தான் காபினெட் மீட்டிங் வைக்கிறீர்கள். அந்தந்த அமைச்சர்கள் அவரவர்கள் இலாக்காக்களை பார்த்துக் கொள்வார்கள் என்றால், நீங்கள் ஒருவரையொருவர் எங்கே பார்க்கப் போகிறீர்கள்? சீப் மினிஸ்டரைப் பார்க்க நான்கு ஆண்டுகள் ஆகும். நீங்கள் அமைச்சர்கள் ஒருவரையொருவர் பார்த்துக் கொள்ள மாட்டீர்கள் . ஆகவே, உட்கார்ந்து பேசி நல்லதொரு முடிவு எடுப்பது ஒரு நாகரீகமான வழி. அது வரவேற்கத்தக்க திட்டம். எனவே கூட்டுச் சிந்தனையில் பிறக்கும் குழந்தையின் கழுத்தை நெரிக்கிறீர்கள், இது நியாயமா என்று கேட்கிறேன்.

கலைப்பதும் கலைக்காததும் உங்கள் இஷ்டம். இது உங்களுடைய விவகாரம். ஒரு மாவட்டத்திலிருந்து ஒருவன் அப்பீல் செய்யும் போது இப்போது நேராக கோட்டைக்கு வா என்கிறீர்கள். ஆனால் அவனுக்கு இருக்கிற ஒரு போரம் போய்விடுகிறது. ஒரு போரத்தை நீங்கள் அடைத்து விடுகிறீர்கள். நான் ஒன்றை வெளிப்படையாகச் சொல்ல விரும்புகிறேன். கலக்டரிடத்திலிருந்து ஒரு வழக்கு வருகிறது, ஆர். டி. ஓ. யிடமிருந்து ஒரு வழக்கு வருகிறது. என்ன நடக்கும்? பெரும்பாலும் அரசியல் தலையீடுகள்





இருக்கும். அது இருக்கக்கூடாது என்றால், சீனியர் மெம்பர் ஆப் தி போர்டுக்கு யாருடைய தயவும் வேண்டியதில்லை. ரிட்டயராகக்கூடிய ஸ்டேஜில் மெம்பராக இருக்கிறார். அவர்களிடம் போய் சொல்ல நாமே அச்சப்படுவோம். அவர் சொன்னால் கேட்பாரோ கேட்க மாட்டாரோ என்று நினைப்போம். நரைத்த தலை இருக்கும், பெரிய மனிதர் என்று நாமே கொஞ்சம் அச்சப் படுவோம். அதே நேரத்தில் இங்கே செகரட்டரியிடம் அதைப் பற்றிச் சொல்லலாம் என்று வந்துவிடுவார்கள். அரசியல் தலையீட்டிலிருந்து காக்கும் இடம் அல்லவா போர்ட். அதுஉங்களுக்கும் நல்லது எங்களுக்கும் நல்லது. நீங்களும் தப்பித்து கொள்ளலாம் உங்களிடம் கேட்பவர்களுக்கு நீங்கள் சொல்லலாம் இது போர்ட் விவகாரம் நான் என்ன செய்வது என்று சொல்லி தப்பித்துக் கொள்ளலாம். எம். எல். எ.-க்களிடம் வந்தால் நாங்கள் சொல்லலாம், இது போர்ட் விவகாரம், அங்கே எம்டன்கள் இருக்கிறார்கள் என்று சொல்லி தப்பித்துக் கொள்ளலாம் ஆகவே நான் சொல்கிறேன், இது தேவையில்லாத ஒன்று.

இன்னொன்று. நாட்டில் அடித்த புயல், ஏற்பட்ட வெள்ளம் போன்றவற்றையெல்லாம் இதுவரையில் தாங்கியிருக்கிற இடிதாங்கியாக இருக்கிறது இந்த வருவாய்த்துறை வாரியம் தானே? இதை நீங்கள் கலைத்துவிட்ட பிறகு அதற்கு அடுத்து என்ன செய்யப்போகிறீர்கள்? அப்படி உதவிகரமாக இருப்பதைக் கலைப்பதா? கலைக்க வேண்டாம் என்ற வாதத்திற்காக வக்காலத்து வாங்குகிறேன் என்பதல்ல. கலைக்கிறீர்கள். அதற்கு மாற்று யோசனை என்ன? இதிலே அது பற்றி ஏதாவது ஒரு வரி உண்டா? எப்போது செய்யப் போகிறீர்கள்? நீங்கள் சொல்வதை உட்கார்ந்து கேட்டுக் கொண்டிருக்கிறோம். ஒரு பழைய ஸ்தாபனத்தை வீணடித்து விடாதீர்கள் என்பதற்காக மறுபடியும் கேட்டுக் கொள்ள விரும்புகிறேன்.

இன்னொன்று. நீதி விசாரணை போடுகிறீர்கள். ஒரு போர்ட் மெம்பர் போகும் போது ஏற்படுகிற ஒரு அந்தஸ்து சாதாரண ஆர். டி. ஓ. க்கு வருவதில்லை. அதை நாம் மரியாதையாக ஒத்துக் கொள்ள வேண்டியது தான். ஆகவே அதற்கு வழியில்லாமல் நீங்கள் அடைத்து விடுகிறீர்கள் என்பதற்காகத்தான் சொல்கிறேன்.

ஒரு சினிமாக் கொட்டகை விவகாரத்தை எடுத்துக் கொள்வோம். மெம்பர் நேராக ஸ்பாட்டுக்குப் போகிறார். அதுபோக, இப்போது நேராக கோட்டைக்கு வாருங்கள் என்று சொன்னால் ஆர்.டி.ஓ.-வைப் பிடித்துக் கொண்டு நேராக இங்கே வருவார்கள்.

[திரு துறை முருகன்] [1980 ஆகஸ்ட் 6

ரெவின்யூ செக்கரட்டரிக்கு என்ன வேலை? உட்கார்ந்து கேட்கிற வேலைதான். அவரை மினிஸ்டர் கூப்பிடுகிறார் என்றால் இங்கே கட்சிக்காரர்கள் இருப்பார்கள், வக்கீல்கள் காத்துக் கொண்டிருப் டிருப்பார்கள். இங்கே பேசிக் கொண்டிருப்பார்கள். அவர்கள் காத்துக் கொண்டிருப்பார்கள். சரி, அந்த செகரட்டரியே கேட் டாலும் அதற்கு ஆர்டர் பாஸ் செய்வது நீங்கள்தான். இது நாச்சுரல் ஜஸ்டிஸ்க்கு விரோதமானது. வழக்கை விசாரிப்பது ஒருவர், தீர்ப்பு அளிப்பது ஒருவர். இன்டர்காம் வைத்து பேச முடியுமா? பார்லிமெண்டில் இருப்பது போல் காதில் மாட்டிக் கொண்டு கேட்க முடியுமா? கோட்டை வராந்தாக்கள் கோர்ட் வராந்தாக்கள் மாதிரி ஆகிவிடும். கணக்குப் பிள்ளைகள், மணியக்காரர்கள், லாண்ட் அக்விஸிஷன் குறித்து வருபவர்கள் என்று செகரட்டரி ரூமில் பத்து பேர்கள் உட்கார்ந்து இருப்பார் கள். (மணியடிக்கப்பட்டது) 150 ஆண்டுகால ஸ்தாபனத்தை கலைக்கப் போகிறீர்கள். இதுபற்றி இரண்டு நாட்கள் கூட விவாதிக்கலாம். 15 முறை இந்த வருவாய்த்துறை வாரியத்தின் மீது மோதல்கள் நடந்திருக்கின்றன. நியாயமாக விசாரித்த பிறகு தான் அதை விட்டிருக்கிறார்கள். நான் நல்ல எண்ணத்தோடுதான் சொல்கிறேன். பேசவேண்டாம் என்றால் விட்டு விடுகிறேன். எனவே ரெவின்யூ செகரட்டரி மற்ற செகரட்டரிகளுக்கு வேறு வேலை இருக்காது. காலையிலிருந்து கேஸ் பார்க்க வேண்டியது தான். அப்புறம் கோப்புகள் தேங்கிவிடும். கேட்டால் தேங்க வில்லை என்று சொல்வார்கள். ஆக, நிர்வாகம் ஸ்தம்பித்து விடக்கூடிய அளவிற்கு செய்கிறீர்கள், இது நியாயமா? என்பதை மட்டும் நீங்கள் சிந்தித்துப் பார்க்க வேண்டும் என்று கேட்டுக் கொள்கிறேன். அதிலே ஒன்றும் குடிமுழுகிப் போய்விடாது.

[முற்பகல் 11–20]

நான் அமைச்சர் அவர்களைக் கேட்டுக் கொள்கிறேன். 1786-லே இந்த வருவாய் வாரியம் ஆரம்பிக்கப்பட்டது. ஒரு வரியிலே நீங்கள் இதைக் கலைக்க வேண்டுமென்று சொல்லுகிறீர்களே? நான் ஜனநாயகத்தின் பேரால் கேட்கிறேன். இதிலே, அவசர மான முடிவை எடுத்துவிடாதீர்கள். வேண்டுமானால் இன்னும் கொஞ்சம் ஆராயலாம். இன்னும் திறமையானவர்கள். கெட்டிக்காரர்கள், அனுபவசாலிகள் எல்லாம் இருக்கிறார்கள் எனவே, அட்லீஸ்ட் ஒரு செலக்ட் கமிட்டிக்கு, பொறுக்குக் குழுவிற்கு விடுங்கள். அங்கே உட்கார்ந்து பேசி, விவாதித்து ஒரு முடிவிற்கு வரலாம். அப்படி தேவைப்பட்டால் கலைக்க வேண்டுமென்று ஏகமனதாக ஒரு முடிவிற்கு வரலாம். இதிலே எடுத்தேன் கவிழ்த்தேன் என்ற ஒரு முடிவிற்கு வரவேண்டாம். காரணம் 1786லே வெள்ளைக்காரன் காலத்திலே ஆரம்பிக்கப் பட்ட இந்த வாரியம். இதிலே ஒரு அவசரமான முடிவு வேண்டாம்.



1980 ஆகஸ்ட் 6] [திரு. துரை முருகன்]

இந்த வாரியத்தை மதிப்பிற்குரிய அமைச்சர் எஸ். டி. எஸ். அவர்கள் காலத்தில் ஒழிக்கப்பட்டு விட்டதாக ஒரு அவப் பெயர் அவருக்கு வந்துவிடக் கூடாதே என்று நான் அஞ்சுகிறேன். வரலாற்றிலே அவர் பெயர் இருக்கும். வெலிங்டன் போன்ற பல ஆங்கிலேயர்களின் முயற்சியால் ஆரம்பிக்கப்பட்டதை எஸ். டி. எஸ். அவர்கள் ஒழித்தார்கள் என்ற பெயர் இருக்கும். இதிலே உங்கள் பெயர் நல்லமாதிரியாக உருவாக வேண்டுமென்ப தற்காகச் சொல்கிறேன். ஒரு சில மாதங்களுக்கு இதைத் தள்ளிப் போடுவதால் ஒன்றும் குடிமூழ்கிப் போகாது. எனவே, இதை ஒரு பொறுக்குக் குழுவிற்கு செலக்ட் கமிட்டிக்கு விடுங்கள். அங்கே அனுபவம் வாய்ந்தவர்கள் உட்கார்ந்து, இன்னும் சொல்லப் போனால், ரிட்டையரான பல அதிகாரிகள்இருக்கிறார்கள் அவர்க ளுடைய ஆலோசனைகளை எல்லாம் கேட்டு, பின்னர் ஒரு முடிவு க்கு வருவோம். அந்த மாளிகையைப் பின்னால் எழுப்ப முடியாது. கலைப்பது சுலபம், ஆனால் எழுப்புவது கடினம். வெள்ளைக்காரன் மேல் உங்களுக்குக் கோபம் என்று கூட சொல்ல மாட்டேன் அவர்கள் கொடுத்ததைப் பலவற்றை நாம் அப்படியே வைத்துக் கொண்டிருக்கிறோம். கலெக்டர் என்பதை அப்படியே வைத்துக் கொண்டிருக்கிறோம். இன்னும் பலவற்றை நிர்வாகத்திலே நாம் அப்படியே வைத்துக் கொண்டிருக்கிறோம். எனவே, இதிலே அவசரப்பட்டு ஒரு முடிவிற்கு வந்துவிட வேண்டாம். இதை ஒரு செலக்ட் கமிட்டிக்கு விட்டு, ஆராய்ந்து பார்த்து நியாயம் என்று பட்டால், அதற்குப் பிறகு தீர்மானம் கொண்டு வந்து ஏகமனதாக நிறைவேற்றலாம். அதற்கு நான் மாலை போட்டு வரவேற்கவும் தயாராக இருக்கிறேன், என்று கூறி அமைகிறேன். வணக்கம்.

டாக்டர் கே சமரசம் : பேரவைத் தலைவரவர்களே, வணக்கத்திற்குரிய தமிழக முதல்வர் புரட்சித் தலைவர் அரசின் சார்பாக மாண்புமிகு வருவாய்த்துறை அமைச்சர் அவர்களால் கொண்டு வந்திருக்கக்கூடிய இந்த வருவாய்த்துறை வாரிய நீக்கத் தீர்மானத்தின் மீது நம் ஆட்சிக் கட்சியின் சார்பாக ஒரு சில கருத்துக்களைச் சொல்ல முன்வருகிறேன்.

இந்த மாமன்றத்திலே பேசுகின்ற போது, நண்பர் துரை முருகன் அவர்கள் எவ்வளவுதான் விவாதம் செய்தாலும் கூட அவரது கருத்தெல்லாம், "முந்திர சொன்னா முனிரத்னம் குர்றகா உந்தி, வெனகா சொன்னா வெங்கடாத்னம் குர்றகா உந்தி" ங்தாவது முன்னாலே முகத்தைப் பார்த்தால் முனிரத்னம் குதிரையைப் போலவும், பின்னாலே பார்த்தால் வெங்கடரத்னம் குதிரையைப் போலவும் இருக்கிறது என்பார்கள். இதேமாதிரி இந்த வருவாய் வாரியம் நீக்கப்பட வேண்டுமா வேண்டாமா என்று அவர்கள் சொல்கிறபோது, அவரது கருத்து இருந்தது என்பதுதான் என்னுடைய கருத்து என்பதை நான், சொல்லிக் கொள்கிறேன்.

[டாக்டர் கே. சமரசம்] [1980 ஆகஸ்ட் 6

ஆகவே, வருவாய் வாரியம் நீக்கப்பட வேண்டுமென்பது, ஏதோ இன்றைய தினம் புதியதாக அண்ணா தி. மு. க. 'ஆட்சியிலே கொண்டுவரப்பட்டதல்ல. தி. மு. க. ஆட்சியில் வருவாய் வாரியம் நீக்கம் சம்பந்தமாக வந்திருக்கிறது. அதற்கான விளக்கங்கள் ஏராளமாக இந்த மாமன்றத்திலே மட்டுமல்லாமல், மக்கள் மன்றத்திலேயும் வந்திருக்கிறது. அப்படி எடுத்துப் பேசிய கருத்துக்கள் ஏராளமாக இருக்கின்றன என்பது ஒரு தெளிவான கருத்தாகும். ஆகவே, இன்றைய தினம், ஆளுங் கட்சியைப் பொறுத்த வரை சொல்ல வேண்டுமானால், 'பழையனகழிதலும் புதியன புகுதலும் வழுவல்ல' என்று சொல்லக் கூடிய வகையிலே, இதிலே கொண்டு வருவதிலே கொஞ்ச காலதாமதம் ஆனாலும்கூட இதை நன்றாக ஆராய்ந்து பார்த்த பிறகு தான் மிக நல்ல முறையிலே கொண்டு வந்திருக்கக்கூடிய ஒன்று இது என்பதை நான் இங்கே தெளிவுபடுத்தக் கடமைப்பட்டிருக்கிறேன்.

அது மட்டுமல்ல. இங்கே பேசுகின்ற போது, பலபலக் கருத்துக்களைச் சொன்னார்கள். அதே நேரத்திலே, ஒரு நாடு உயர்ந்திருக்கின்றது என்று சொன்னால், ஒரு அரசு நன்றாக இருக்கிறது என்று சொன்னால் அதற்கு இரண்டு பேர்களைத்தான் சொல்வார்கள்.

ஒன்று கர்ணம் இனொன்று போலீஸ். போலீசுக்கு இருக்கிற அதிகாரம் அவர்களை கண்டால் பொதுமக்களுக்கு ஏற்பட கூடிய பயம் வேறுயாருக்கும் கிடையாது. பி.எச்.டி. பட்டம் பெற்ற ஆராய்ச்சியாளர்களுக்குக் கூட அந்த மரியாதை கிடையாது. அதே போன்று கர்ணம் நல்லது செய்தாலும் சரி, தவறு செய்தாலும் சரி — கவர்னரே பார்த்தால் கூட அதை நிவர்த்திக்க முடியுமா என்றால் முடியாது. பொதுவாக ஒரு அரசின் திட்டத்தைப் பொறுத்தது, கொள்கையைப் பொறுத்தது. நடைமுறையைப் பொறுத்து பெயரும் புகழும் வாங்கிக் கொடுப்பதற்கு அடிப்படை காரணமாக இருக்கக்கூடியவர்கள் இவர்கள் இருவர்தான்.

ரெவின்யூ போர்டு ஒழிப்புப் பிரச்சினை நாட்டில் இதுவரை ஒரு விவாதப் பொருளாகவே இருந்து வந்திருக்கிறது. ரெவின்யூ போர்டை ஒழிக்கும் காரணத்தால் என்ன ஏற்படுகிறது என்று சொன்னால் ஏஜன்ட் முறை ஒழிக்கப்படுகிறது. இரட்டையாட்சி முறை ஒழிக்கப்படுகிறது. தனி சாம்ராஜ்யம் என்ற நிலைமை மாற்றப்படுகிறது என்றுதான் அர்த்தம். ஒரு அரசு மக்களுடைய எண்ணங்களை சமுதாய உணர்வுகளை தீர்மானிக்கிறது என்றால் அந்தத் தீர்மானத்தை அமலாக்க வகை செய்கிறது ரெவின்யூ போர்டு என்று சொல்லும்போது சட்டமே ஆட்சி செய்யும், சமுதாய உணர்வுகள் சிரழிக்கப்படும் என்பது தெளிவாகத் தெரிந்த விஷயமாகும்.



1980 ஆகஸ்ட் 6] [டாக்டர் கே. சமரசம்]

இந்தத் திட்டம் 'மதி' காலத்திலேயே கொண்டு வரப்பட்டது என்று சொன்னார்கள். யார் செய்த சதியோ அப்போது விடப்பட்டு இப்போது நாம் தீர்மானிக்க வேண்டிய நிலைமை ஏற்பட்டிருக்கிறது.

வருவாய் வாரியத்தை ஒழிக்கும் கருத்துக்கள் தெளிவாகச் சொல்லப்பட்டிருக்கின்றன. ஒரு நாட்டுக்கு மிகப் பெரிய அபாயம் ஏற்பட்டிருக்கிறது என்று சொன்னால் அது நிர்வாகத்தில் ஏற்பட்டிருக்கிற மிகப் பெரிய சிக்கல்களாகும். நிர்வாகச் சீரமைப்பு என்ற காரண காரியங்கள் முன்னிட்டு ஒரு காலத்தில் கொண்டு வந்த சட்டங்கள் எல்லாம் திட்டங்கள் எல்லாம் நடைமுறையில் பல்வகையில் பலவீனப்பட்டிருக்கிறது என்பதை யாரும் மறந்து விட முடியாது. அப்படிப்பட்ட பலவீனங்களைப் போக்கி தேவையற்றவற்றைத் தூக்கி எறிந்து தேவையானவற்றை மட்டும் வைத்து நாட்டைக் காப்பாற்றும் வகையில் இந்தக் காரியம் செய்யப்பட்டிருக்கிறது. ஆங்கிலத்தில் சொல்வார்கள்—

To save ship the captain should throw superflucus [cargo in the Sea.

பெரும் அபாயத்தில் மூழ்கப்போகும் கப்பலின் தலைவன் கப்பலில் தேவையற்றவற்றை தூக்கியெறிந்து கப்பலைக் காப்பாற்றும் சக்தி படைத்தவனாக இருக்க வேண்டுமென்று சொல்லுவது வழக்கம்—

An efficient captain should throw superfluous cargo in the sea of save slip.

என்று ஆங்கிலத்தில் சொல்வதுண்டு. அந்த வகையில் ஒரு அரசின் நிர்வாகத்தைக் கட்டிக் காக்கக்கூடிய வகையில் எது தேவையோ அதை வைத்துக் கொண்டு நாட்டைக் காப்பாற்றக் கூடிய வகையில் ரெவின்யூ போர்டு ஒழிக்கப்படுவது மிக மிகத் தேவையான ஒன்று என்பதனை இந்த நேரத்தில் சொல்லிக் கொள்ள கடமைப்பட்டிருக்கிறேன்.

மாவட்ட ஆட்சித் தலைவர்களை எல்லாம் முன்பு கலெக்டர்கள் என்று சொன்னார்கள். கலெக்டர் என்று சொன்னால் தண்டல்நாயகம் என்று தமிழில் சொல்வார்கள். காரண காரியத்தினாலேயே அந்தப் பெயர் வழங்கப்பட்டது. இன்றைய தினம் கலெக்ஷன் செய்வது கலெக்டர் வேலை அல்ல. அது மற்றவர்கள் வேலை. நிர்வாகம் செய்வதுதான் அவர்களுடைய முக்கியமான வேலை என்று இன்று சொல்லப்படுகிறது. ஆகவே, ஏஜன்ட் முறை ஒழிக்கப்படும் வகையிலும் இரட்டை ஆட்சி ஒழிக்கப்படும் வகையிலும் தனி சாம்ராஜ்யம் நம்மை அறியாமலே நடந்து

கொண்டிருக்கும் நிலையை அழிக்கக்கூடிய முறையிலும், மக்களால் தேர்ந்தெடுக்கப்பட்ட ஆட்சி வாக்குறுதிகளை மக்களுக்குக் கொடுத்து சட்டப் பேரவைக்கு வரும்போது அதை நேரடியாக மக்களுக்காகச் செயலாற்றக் கூடிய வகையிலும் வருவாய் வாரியம் ஒழிக்கப்படுகிறது என்பது என்னுடைய தாழ்மையான கருத்து மட்டுமல்ல, இந்த நாட்டு மக்களின் மொத்தக் கருத்து என்பதையும் இந்த நேரத்தில் சொல்லிக் கொள்ளக் கடமைப்பட்டிருக்கிறேன்.

பல நேரங்களில் வருவாய் வாரியம் எப்படி எப்படி விளையாடி இருக்கிறது என்று சொன்னால் ஏராளமான காரண காரியங்களை எடுத்துச் சொல்ல முடியும். தரையில் இருக்கும் யானை குழியில் விழுந்தால் அங்கே உள்ள தவளைகூட யானையை உதைக்கும்நிலை ஏற்படும். அப்படிப்பட்ட நிலைதான் அரசுக்கு ரெவின்யூ போர்டால் ஏற்பட்டிருக்கிறது. அதே நேரத்தில் இந்த யானை கரையில் இருக்கும்போது யானைகால் பட்டு சரிந்த மண், தவளையைச் சமாதியாக்கிவிடும் என்று சொல்வார்கள். அப்படிப்பட்ட நிலையில் வருவாய் வாரியம் அரசுக்குத் தீங்கிழைக்கக்கூடிய நிலையில் பலப் பல நேரங்களில் நடந்து கொண்டிருக்கிறது என்பதற்கு கடந்த கால சான்றுகள் ஏராளமாக இருக்கின்றன. நினைத்ததை முடிக்கும் வல்லமை பெற்றவர்களாக அவர்கள் இருந்திருக்கிறார்கள். ஒரு என். ஓ.சி. பெற வேண்டுமென்று வைத்துக் கொள்வோம். அப்போது கர்ணம், முன்சீப் போன்றவர்களுக்கு அந்த வாரியம் பாதுகாப்பாக இருக்கிறது. ஏதோ ஒருவருக்கு உதவி செய்யவேண்டும்மென்று நினைத்தால் ப்ரொபோசல் வரும்போது அதிலே பக்கத்திலே ஒரு மார்க்—கோடு போடுகிறார்கள்.

[முற்பகல் 11-30].

மேலும் ரெவின்யூ போர்டு, அவர்களுக்கு ஆதரவாக இருக்கிறது, அது தேவையாக இருக்கிறது என்று கருதினால் ஒன்று என்று மார்க் போடப்பட்டிருந்தால் அதற்குப் பிறகு ஒரு ஜீரோவைப் போட்டு, அல்லது இரண்டு ஜீரோவைப் போட்டு ஒன்றை பத்தாகவும், பத்தை 100 ஆகவும் மாற்றக்கூடிய முறையிலே தாங்கள்நினைத்ததை முடிக்கக்கூடிய ஆற்றலைப் பெற்றிருந்தது அதே நேரத்தில் ரெவின்யூ போர்டு ஒரு காரியத்தை விரும்பவில்லை என்றால், அதை அரசாங்கமே சொன்னாலும் சரி, அல்லது அமைச்சர்கள் சொன்னாலும் சரி, உறுப்பினர்கள் சொன்னாலும் சரி, அது நியாயமாக இருந்தாலும் சரி, அதிலே சமுதாய உணர்வு இருக்கிறது என்று சொன்னாலும் சரி அதை ஏற்றுக்கொள்ளாத முறையிலே தான், ஒன்று என்று மார்க் போடப்பட்டிருந்தால் அதற்கு முன்னாலே ஒரு ஜீரோவை போட்டு அல்லது இரண்டு ஜீரோவைப் போட்டு ஒன்றை, 01 ஆகவோ அல்லது 001 ஆகவோ ஆக்கிவிட முடியும் என்ற நிலையை





தான் இருந்தது. இவ்வாறு அவர்கள் நினைத்தால் 1-ஐ 10ஆக்கவும், 10-ஐ 100 ஆக்கவும், அவர்கள் நினைக்கத் தவறினால் 1-ஐ 01 ஆக்கவும், 01-ஐ 001 ஆக்கவும் உரிமை பெற்றிருந்தார்கள் என்பதைத்தான் நாம் பார்க்க முடிந்தது.

இந்தக் கருத்துக்கள் எல்லாம் இன்றைக்கு நாம் சொல்லக் கூடியவை அல்ல. திராவிட முன்னேற்றக் கழகம் ஏற்பட்டதற்குப் பிறகு இந்த மன்றத்திலே இந்தப் பிரச்சினைகள் எல்லாம் எடுத்து வைக்கப்பட்டிருக்கின்றன. ஆகவே இது பழைய கதை. அதை மாற்றுகிற முறையிலே ரெவின்யூ போர்டை ஒழிக்க வேண்டுமென்ற தீர்மானத்தை தேவையான நேரத்திலே தேவையான வகையிலே இன்றைய தினம் அரசு கொண்டு வந்திருக்கிறது.

வாதங்கள் என்பது வேறு. எத்தனையோ வாதங்களை நம்மால் செய்யமுடியும். ஆண்டவன் உண்டு என்று வாதிக்க முடியும், அதே நேரத்திலே ஆண்டவன் இல்லை என்றும் வாதிக்க முடியும். வாதங்கள் எல்லாம் நியாயங்கள் ஆகிவிடமுடியாது என்பதை நான் தாழ்மையோடும் திட்டவட்டமாகவும் தெரிவித்துக்கொள்ள விரும்புகிறேன். ஆணும் பெண்ணும் சேர்ந்து வாழ்வது இல்வாழ்க்கை, அவர்கள் பெறுவது குழந்தை இது ஒரு வாதம். இதற்கு எதிர்வாதமாக ஹரியும் சிவனும் சேர்ந்து பெற்றது அய்யப்பன் என்று சொன்னால் அது வாதமாக இருக்கலாமே தவிர அது நியாயமாக இருக்க முடியாது என்பது என்னுடைய தாழ்மையான அபிப்ராயம் ஆகும்.

இப்போதுள்ள சூழ்நிலையில் தேவையான, நீண்ட நெடு நாட்களாக விரும்பிய, பொதுமக்கள் மத்தியிலே, அரசியல்வாதிகள் இதயத்திலே, பகுத்தறிவாளர்கள் நெஞ்சிலே, நல்லறிவாளர்கள் இதயத்திலே இருந்த அந்தக் கருத்தை தேவையான நேரத்திலே தீர்மானமாகக் கொண்டுவந்திருக்கிறார்கள். அந்த வகையிலே நல்ல ஒரு தீர்மானத்தை அரசு கொண்டு வந்து இருக்கிறது என்று சொல்லி அதை வரவேற்று அமர்கிறேன். நன்றி. வணக்கம்.

திரு. எல். இளையபெருமாள்: தலைவலவர் அவர்களே, இன்று சரித்திர சம்பந்தமானஒருநிலையான வாக்குவாதத்தை வருவாய்த் துறை அமைச்சர் அவர்கள் விவாதத்திற்கு வைத்திருக்கிறார்கள். அருமை சகோதரர் திரு. துரைமுருகன் அவர்கள் மிக அழகாக திறமையாக நம் எல்லோரையும் ஈர்க்கின்ற வகையிலே பேசினார்கள். அவர்களை நான் பாராட்டவும் கடமைப்பட்டிருக்கிறேன். திரு. துரைமுருகன் அவர்கள் ஒதுக்கொள்கிறேன் என்று உறுதியைக் கொடுத்திருக்கிறார்கள். ஆகவே அவர்கள் நிச்சயம் ஒத்துவருவார்கள் என்று நம்புகிறேன்.

[திரு. எல். இளையபெருமாள்] [1980 ஆகஸ்ட் 6

நான் ஒன்று மட்டும் சொல்ல விரும்புகிறேன். 1936 ஆம் ஆண்டு வட்ட மேஜை மாநாடு நடக்கிறபோது அண்ணல் அம்பேத்கார் அவர்கள் குறிப்பிட்டதைச் சொல்லவிருப்புகிறேன். ரெவின்யூ போர்டு பற்றி ஒரு சிறிய விஷயத்தைச் சொன்னார்கள். காலம் கடந்ததாக இருந்தாலும் சொல்கிறேன். அண்ணல் அம்பேத்கார் அவர்கள் ஒரு சட்ட நிபுணர் என்பதை நம் நாட்டில் எல்லோரும் ஒத்துக்கொண்டிருக்கிறார்கள். திருநெல்வேலி மாவட்டத்திலே ஒரு கிராமத்திலே ஒரு தோட்டியை 11 தடவைகள் சஸ்பெண்ட் செய்திருக்கிறார்கள், அதே தாசில்தார் அதே தோட்டியை அதே கிராமத்தில் 11 தடவை மறு உத்தரவு போட்டு உத்தியோகத்திலே அமர்த்தியிருக்கிறார் என்றால் ரெவின்யூ போர்டினுடைய திறமையான, கெட்டிக்காரத்தனமான, சட்ட நுணுக்கமான போக்கினால் இப்படிப்பட்ட நிலைமைகள் ஏற்பட்டிருக்கின்றன. ஆகவே அவர்கள் தங்களுக்குச் சாதகமாக பயன்படுத்தக்கூடிய ஸ்தாபனமாக அது இருந்தது என்பதை யாரும் மறந்துவிட முடியாது என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

மேலும் சகோதரர் திரு. துரைமுருகன் அவர்கள்கூட மிக அழகாகச் சொன்னார்கள். அன்றைக்கிருந்த மாவட்டச் ஆட்சித் தலைவர்களைக் கண்காணித்து மேற்பார்வை செய்து நல்லதொரு நிலைமைகளை உருவாக்க வேண்டுமென்பதற்காக இருந்தது என்று சொன்னார்கள். அதில் எனக்கு கருத்து வேற்றுமை ஒன்றும் இல்லை. அன்றைய ஆட்சி, அன்றைய நிலைமை, அன்றைக்கிருந்த இந்திய சுதந்திர வேட்கையைத் தணிக்க வேண்டுமென்பதற்காக அவர்களுக்கு ஆட்கள் தேவைப்பட்டார்கள்.

அதுமட்டுமல்ல, சுபாஷ் சந்திரபோஸ் அவர்கள் ஐ.சி.எஸ். பட்டம் பெற்ற பிறகு மிகத் திறமையாகச் சொன்னார்கள். வங்க தேச ரெவின்யூ போர்டைப் பற்றிச் சொல்லிவிட்டு, இந்த நாட்டை விட்டு வெளியே போகும்பொழுது சொன்னார்கள். ஐ.சி.எஸ். உத்தியோகம் பெரிய உத்தியோகம், கௌரவமான உத்தியோகம்; ஆனால் அன்னியர்களுக்கு ஏஜெண்டாக இருந்து, இந்திய சுதந்திர வேட்கை பெற்றிருக்கின்ற உத்தமர்களைத் துன்புறுத்துகின்ற தவற்றைச் செய்கின்ற பணியை விட, அந்தப் பணியே எனக்குத் தேவையில்லை என்று கடைசிக் காலத்தில் சொன்னார்கள்.

1945-ஆம் ஆண்டு இரண்டாவது உலக மகா யுத்தம் முடிகிற பொழுது, சிங்கப்பூரை விட்டுப் போகின்றபொழுதும் இதே கருத்தை இந்திய தேசீயப் படை வீரர்களுக்குச் சொல்லியிருப்பதை நான் எடுத்துக் கூறக் கடமைப்பட்டுள்ளேன்.



1980 ஆகஸ்ட் 6] [திரு. எல். இளையபெருமாள்]

இதற்கெல்லாம் காரணம், தொடர்ந்து சுதந்திரத்திற்காகத் தியாகம் புரிபவர்களைக் கட்டுப்படுத்தவேண்டும்; அவர்களுடைய சிந்தனாசக்தியை அடக்க வேண்டுமென்ற நிலை அன்றைக்கு அவர்களுக்குத் தேவைப்பட்டது. அதுமட்டுமல்லாமல் பிரித்தாளும் தன்மையில் கொண்டுவரப்பட்டது.

நிச்சயமாக இதில் நல்லதே இல்லை என்றும் நான் சொல்லவில்லை. நன்மைகளும் உண்டு. ஆனால் அது அன்றைய தேவை. இன்றைக்கு அதற்குத் தேவையில்லாத நிலைமையிருப்பதை கனம் அமைச்சரவர்கள் சுட்டிக்காட்டியதை ஏற்றுக்கொள்ளக் கடமைப்பட்டிருக்கிறேன்.

இன்றைக்கு இங்கு சொன்னார்கள். திரு. சர். சி. பி. இராமசாமி ஐயரைப்பற்றிச் சொன்னார்கள். அவர் உயர்ந்தவர், இலட்சிய புருஷர், தீர்க்க தரிசனம் உள்ளவர் என்பதில் ஆட்சேபணை கிடையாது. ஆனால் அவர் வைஸ்-சான்சலராக அண்ணாமலை யூனிவர்சிட்டியில் இருந்தபொழுது, நான் செனட் மெம்பராக இருக்கும் நிலையிலே அவரை அணுகி பல விஷயங்களைப் பற்றிப் பேசுகின்ற சந்தர்ப்பம் கிடைத்திருக்கிறது. அப்பொழுது போர்டு ஆஃப் ரெவின்யூவைப்பற்றிய நிலைமைகளைப் பேசும்பொழுது சொன்னதைச் சொல்லுகிறேன். உண்மைகளைச் சொல்லும் நிலைமையில் நான் சொல்கிறேன். அவர் சொன்னார், அன்றைய நிலைமைகள் வேறு, அன்றைக்கிருந்த நியாயங்கள் வேறு; ஆனால் இன்றைக்கு நிலைமைகள் வேறு; என் மகன் அமைச்சராக இருக்கிறான், இந்த நிலையிலே அவனால் ஏதும் செய்ய முடியாது என்று அவர்கள் சொன்னதை இங்கு பேசிய வழக்கறிஞர் சகோதரர் அவர்களுக்கு நினைவுபடுத்தக் கடமைப்பட்டிருக்கிறேன்.

அகில இந்திய ரீதியிலே அறநிலைய அறங்காவலர் துறையை உருவாக்குகின்ற பொழுது ஏற்பட்ட நிலையைச் சொல்கிறேன். சிதம்பரத்தில் உள்ள கோயில், பராந்தக சோழனாலும், இராஜராஜ சோழனாலும், இராஜேந்திர சோழனாலும், கிருஷ்ண தேவ ராயராலும் கட்டப்பட்டது ஆகும். மேலும் பொது மக்கள் சொத்தாலும் உருவாக்கப்பட்ட கோயில் அது. இன்றைக்கும் சமுதாயத்தில் உள்ள நல்லெண்ணம் கொண்டவர்களால் அறக்கட்டளைகள் ஏற்படுத்தப்பட்டு, ஆயிரக் கணக்கான ஏக்கரா நிலங்கள் கொடுக்கப்பட்டிருக்கிறது. ஆனால் அன்றைக்கிருந்த ரெவின்யூ போர்டோடு கலந்தாலோசித்து, அந்தக் கோயில் ஒரு தனிப்பட்ட சமூக சகோதரர்களுக்குச் சொந்தம் என்ற ரிக்கார்டு—நிலைமைகளை உருவாக்கினார்கள்,

[திரு. எல். இளையபெருமாள்] [1980 ஆகஸ்ட் 6

நான் ஏன் இதைச் சொல்கிறேன் என்றால், வருங்காலத்திலே நல்லதொரு சமுதாயத்தை உருவாக்க வேண்டுமென்ற நல்லெண்ணத்தோடு வரும் சட்டங்கள் காலங்கடந்து இருந்தாலும் சரி, அல்லது புரட்சிகரமாக வந்தாலும் சரி, மனித உள்ளத்தோடு, மனிதாபிமானத்தோடு வரும் சட்டங்களை வரவேற்க வேண்டுமென்று சொல்லிக்கொள்கிறேன். அவர் மேல் குறை சொல்ல வேண்டுமென்பதற்காகச் சொல்லவில்லை. இன்றைக்கும் குறிப்பிட்ட தவறை மற்றவர்கள் சொல்ல முடியாது. உண்மை என்னவென்றால், தொடர்ந்து ஒரு அறிவான கூட்டம் இருந்து கொண்டு அடிமையான மனிதன் சுதந்திர மனிதனாக வருவதற்கான வாய்ப்பு இல்லாமல் கால, சமய, சந்தர்ப்பங்களை உருவாக்கும் நிலைமை இருந்து கொண்டிருந்தது. சுப்ரீம் கோர்ட்டில், தமிழகத்தைச் சேர்ந்த ஒரு பெரியவர் நீதிபதியாக இருந்தார். சுப்ரீம் கோர்ட்டில் இந்த கோவிலை தனி இனத்தாருக்குச் சொந்தம் என்ற ரிக்கார்டைச் செய்தார்கள். சர். சி. பி. இராமசாமி ஐயர் அவர்களின் குமாரர் திரு. பட்டாபிராமன் அவர்களும், நானும் கலந்த கூட்டம். இதை நான் விளக்கத்திற்காகத்தான் சொல்கிறேன், நேரத்தைக் கடத்த வேண்டுமென்பதற்காக அல்ல—அமரகவி பாரதியாரின் பிறந்த நாளை நாங்கள் கொண்டாடினோம், 1952ஆம் ஆண்டிலே, பல பெரியவர்கள் பேசும் பொழுது ஒரு பெரியவர் சொன்னார், அமரகவியை நாட்டை விட்டே துரத்தி விட்டார்கள்; எங்களையும் துரத்துவார்கள் என்று சொன்னார். நான் பேசுகின்ற வாய்ப்பு வந்தபொழுது அமரகவி பாரதியாராக இருக்கிறோம்; அவரும் துரத்தப்படவில்லை, யாரும் துரத்தவில்லை என்று சொன்னபிறகு, சுப்ரீம் கோர்ட் நீதிபதி இந்த வார்த்தைகளைச் சொல்லிவிட்டார், அது நல்லது அல்ல என்று சொன்னபொழுது அன்றைய நிலையில் பத்திரிகைகள் கூட அதை வெளியிடவில்லை.

[முற்பகல் 11-40]

ஏன் இதையெல்லாம் சொல்கிறேன் என்றால், கால, சமய சந்தர்ப்பங்களை உத்தேசித்தும், நாட்டினுடைய நன்மையை உத்தேசித்தும் நல்லதொரு சீர்த்திருத்தத்தைக் கொண்டு வருகிற பொழுது, வரவேற்கின்ற நிலைமையிலே, இந்த ரெவின்யூ போர்டை கலைப்பதற்காக இந்த மசோதாவைக் கொண்டு வந்திருப்பது நல்லது என்ற என்னுடைய அபிப்பிராயத்தைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

மேலும், இராஜாஜி போன்ற பெரியவர் மிக வல்லமை படைத்தவர், மிக நுணுக்கம் உள்ளவர். அவர் தோற்கவில்லை. அவர் கொள்கை என்றும் தோற்காது என்று சகோதரர் துரை முருகன் அவர்களுக்கு நான் சொல்லிக்கொள்கிறேன். ஏனென்



1980 ஆகஸ்ட் 6] [திரு. எல். இளையபெருமாள்]

றால், இராஜாஜி அவர்கள், படித்து வேலையற்ற மக்களுக்கு, வேலை வாய்ப்புக்கு ஏதாவது வழி செய்ய வேண்டுமென்ற ஒரு கருத்து வந்தபொழுது, அந்தக் கருத்தை, கால, சமய, சந்தர்ப்பம் புரியாமலும், சுயநல அரசியல் காரணத்தாலும், என்னைக் கூடச் சேர்த்துக் கொள்ளுங்கள், அவர் கொண்டுவந்த தொழில் கல்வியை, வேறு விதமாகத் திருத்தம் கொடுத்து, அதைத் தடுத்தோம், இன்று அவல நிலையில் இருக்கிறோம். இராஜாஜி அவர்களுடைய கருத்து என்றைக்கும் தோற்றதில்லை, தோற்காது, அது நிச்சயம் வெற்றி பெறும் என்ற முறையிலே என்னுடைய அருமை சகோதரருக்கு நான் சொல்லக் கடமைப் பட்டிருக்கிறேன்.

மேலும், காமராஜ் அவர்களைப் பற்றிச் சொல்கிறார்கள். காமராஜர் தனக்கு இருந்த தொல்லை தாங்காது, அயர்ந்து போன நிலையில் அவர் சொன்ன கருத்துக்கள்—அவர் மிகக் கீழ் தளத்திலே இருந்து வந்தவர். அந்தக் கீழ்த் தளத்தின் களைப்பினால் சொன்ன வார்த்தையே தவிர, இந்த முறையை அவர் ஏற்றுக் கொள்ளவில்லை. அவரோடு 30 ஆண்டுகள் நான் பழகி இருக்கிறேன், பேசி இருக்கிறேன்.

நம்முடைய முன்னாள் முதல்வரும், இன்றைய எதிர்கட்சித் தலைவருமான கலைஞர் அவர்கள், நிலச் சீர்த்திருத்தச் சட்டங்களைக் கொண்டுவந்தபொழுது, பலபேர் தலைவர் காமராஜரிடம் சென்று, இப்படி இருக்கிறதே, 30 ஏக்கர்களைக் குறைத்து, 15 ஏக்கர்கள் என்று கொண்டு வந்தார்களே என்று சொன்னபொழுது, அவர் சொன்னார், ''அப்பொழுதிருந்த நிலையிலே நான் கொண்டுவந்தேன். இவர், என்னைவிட ஒரு படி மேலே போய் கொண்டு வந்தார். அது ஏழைகளுக்கு நன்மை செய்யுமானால், அதை நாம் ஏற்கவேண்டும். அதற்குத் தொல்லை கொடுப்பதற்கு இங்கு வந்து சொல்லாதீர்கள்'' என்று சொன்னதை, அருமை நண்பர் துரை முருகன் போன்ற கெட்டிக்கார வக்கீலாக இருக்கிற சகோதரருக்கு நான் நினைவுபடுத்த விரும்புகிறேன்.

ஏன், இதையெல்லாம் சொல்கிறேன் என்றால், நாட்டினுடைய நிலைமை என்ன? 33 வருஷங்களுக்குப் பிறகு கூட, நாயோடு சேர்ந்து மனிதன் சோறு சாப்பிடுகின்ற நிலையிலே, நாம் அரசியலை வளர்த்துக் கொண்டிருக்கிற நிலையிலே, நாம் வெட்கித் தலை குனிகின்ற நிலையிலே நாடு இருக்கிறபொழுது, இது போன்ற சீர்திருத்தங்கள் வருவதாலே, நன்மை அதிகமா, தீமை அதிகமா என்ற எண்ணமே வராமல், காலத்திற்கு ஏற்றதை ஒத்துக்கொள்வதிலே, எனது அருமைச் சகோதரர் என்னோடு

ஒத்துக் கொள்வேன் என்று முன்பே சொல்லியிருப்பதால், இப்பொழுது என்னோடு ஒத்துக்கொள்வார் என்ற நம்பிக்கையில் நான் சொல்கிறேன்.

மேலும், ஒரு உதாரணத்திற்குச் சொல்கிறேன், தென்னாற்காடு மாவட்டத்திலே, உளுந்தூர்பேட்டை தாலூகாவிலே அரசாங்கப் பள்ளிக்கு முன்னாலே, அரிசனங்களுக்கு இடுகாடு இருக்கிறது. அரசாங்கத்தினுடைய நிலம் அது. அதுபற்றி நம்முடைய கல்வி அமைச்சரிடமும், வருவாய்த் துறை அமைச்சரிடத்திலும் நான் நேரிலே தெரிவித்திருக்கிறேன். பள்ளிக்கூடம் இருக்கிறது. பள்ளிக்கூடத்திற்கு சுமார் 50 அடி தூரத்திலே அரிசனங்களுக்கான சுடுகாடு இருக்கிறது. அந்தச் சுடுகாட்டு இடத்தை, அந்த இடத்திலிருந்து மாற்ற வேண்டுமென்று இப்பொழுது அரசிடம் செயற்குறிப்பு இருக்கிறது. அந்த நிலையிலே உள்ளூர் பஞ்சாயத்து போர்டு தீர்மானம் போட்டுச் சொல்கிறது, அந்த இடத்திலே சினிமா கொட்டகை கட்டக்கூடாது என்று. பஞ்சாயத்து யூனியன் சொல்கிறது, சினிமா கொட்டகை கட்டக்கூடாது என்று. திராவிட முன்னேற்றக் கழகம், அனைத்திந்திய அண்ணா திராவிட முன்னேற்றக் கழகம், காங்கிரஸ் ஆகிய கட்சிகளைச் சேர்ந்தவர்கள் சொல்கிறார்கள், அந்த இடத்தில் சினிமா கொட்டகைக் கட்டினால், பிள்ளைகளின் கல்விக்கு இடையூறு உண்டாகும். மாட்னி ஷோ நடத்தினால் தவறு உண்டாகும். பிறகு, டி.இ.ஓ., சி.இ.ஓ., கலெக்டர் இவர்கள் எல்லாம் எழுதுகிறார்கள், அந்த இடத்திலே சினிமா கொட்டகை வைப்பது பள்ளிக்கூடத்திற்கு இடையூறாக இருக்கும், ஒரு பெரும் முதல்ாளிக்குச் சாதகமாக செய்யக்கூடாது; நீதியின் பெயரால், நியாயத்தின் பெயரால், கல்விக் கூடத்திற்கு களங்கம் வரக்கூடாது என்று. அதற்குப் பிறகு, எடுக்கேஷன் ஜாய்ன்ட் செக்கரட்டரி, செக்கரட்டரி இவர்களும் சேர்ந்து, அந்தக் கல்விக்கூடத்தின் எதிரிலே சினிமா கொட்டகை கட்ட அனுமதி தருவது, வருங்காலத்தில் கல்விக்கூடத்திற்கு, குழந்தைகளுடைய கல்விக்கு இடையூறு உண்டாக்கும் என்று தெரிவித்தும் ரெவினியூ போர்டார், அதைக் கட்டிக்கொள்ளலாம் என்று உத்தரவு கொடுத்தால், என்ன காரணம்? என்ன செய்வது? அவர்களிடத்திலே இருக்கிற அதிகாரத்திலே நல்லதே இல்லையென்று நான் சொல்லவில்லை. ஆனால், இன்றைய நிலையிலே உள்ள அரசியல் கட்சிகள், அரசியல் தலைவர்கள், இவர்களுடைய விருப்பு-வெறுப்புகளுக்கு அப்பாற்பட்டு, ரெவின்யூ போர்ட் விளங்குகிறதா? நாமெல்லாம் சக்தியற்ற நிலையில் இருக்கிறோம். அவர்கள் சக்தியுள்ளவர்களாக விளங்குகிறார்கள். அவர்களை அந்த நிலையில் வைத்திருக்கிறோம். அதற்கு நாம்தான் பொறுப்பாளி என்பதை ஒத்துக்கொண்டுதான் தீரவேண்டும். அதை மாற்றவேண்டுமென சொல்லி, கெட்டிக்காரத் தனமாக தப்பித்துக் கொள்வதற்கு



அரசியல்வாதிகளாகிய நாம் முன்னுக்கு வரவேண்டாமென்று உங்களை நான் வேண்டிக்கொள்வதோடு, இது போன்ற காரியங்களிலே, அரசாங்கம் சொல்லியிருந்தும், கல்வித்துறையின் காரியதரிசி சொல்லியிருந்தும் கூட, மீறி செய்கின்ற துணிவு அவர்களுக்கு வருகின்றதென்றால், அவர்களுக்கிருந்த வெள்ளைக்காரன் காலத்து அந்தஸ்தை நாம் ஒத்துக்கொண்டிருப்பதுதான் காரணம்.

ஆனால், அவர்களைக் கேவலப்படுத்துவதோ, அவர்கள் அத்தனை பேர்களும் குற்றவாளிகள் என்றோ சொல்வதற்கு நான் வரவில்லை. இது தேவையில்லாதது. இரண்டுவிதமான ஆட்சி. அமைச்சர் ஒரு பக்கம். கலெக்டர் ஒரு பக்கம், இந்த போர்டு என்கிற நிலைமை ஒரு பக்கம் என்று இருப்பதை விட, நிச்சயமாக அமைச்சர் அவர்களின் நிலைக்கு சகோதரர் துரை முருகன் அவர்கள் சொன்னதைப்போல, இதற்கு நல்லதொரு நிலைமையை உருவாக்கவேண்டும் என்று கேட்டுக் கொள்கிறேன். துரை முருகன் சொன்னதை நான் வரவேற்கிறேன். அது அவசியமான தேவைதான். இந்த தேவை அமைச்சருடைய அல்லது அரசு காரியதரிசிகள் யாரையாவது ஒருவரை அதற்குப் பயன்படுத்தி அதில் அக்கறை காட்டுவீர்கள் என்ற நம்பிக்கை இருக்கிறது. வருங்காலத்திலே, ரெவின்யூ போர்டை அபாலிஷ் செய்துவிட்டோம், அதை கேட்பாரற்ற நிலையிலே அரசாங்கம் விடாது, அமைச்சர் அவர்களும் விடமாட்டார் என்ற நம்பிக்கையைத் தெரிவித்துக் கொள்ளுகிறேன். காலம் கடந்து, அது 200 ஆண்டுகள் என்று சொல்லுகிறார்கள். அவர்கள் தோற்றார்கள் இவர்கள் தோற்றார்கள் என்று சொல்லுகிறார்கள். ஆனால், நேர்மையையும், சத்தியத்தையும் யாரும் அழிக்க முடியாது. இல்லாத மக்களுக்கு, எளிய மக்களுக்கு மனிதாபிமானம் அற்ற முறையிலே சட்டங்களை செய்வதிலே நாம் இன்றைக்கு கெட்டிக்காரர்களாக இருக்கிறோம். வருங்காலச் சந்ததிகள் நம்மைத் துச்சமாக எண்ணுவார்கள். அந்த அவல நிலையை, அது ரெவின்யூ போர்டாக இருந்தாலும் சரி, அரசாங்கம் என்ற பெயரை வைத்துக் கொண்டு இருந்தாலும் சரி, விஷயங்களை நுணுக்கமான, நியாயமானவைகளை வரவேற்கின்ற முறையிலே இந்த போர்டை நீக்குவது என்ற நிலைமை உருவாக்குவதை நான் வரவேற்கிறேன். மேலும் இதுபோன்ற சில விஷயங்களை—ஒரு சாதாரண விஷயம்—சுற்றிலும் வீடுகள் நடுவிலே சுடுகாடு. அந்த சுடுகாட்டை எடுக்கவேண்டும் என்று மக்கள் கலெக்டரிடம் உத்தரவு கேட்கிறார்கள். பஞ்சாயத்து யூனியன் எழுதுகிறது. அமைச்சரிடம் கொடுக்கிறார்கள். இது குறித்து 52ஆம் ஆண்டிலே இருந்து சொல்லுகிறேன். யாரையும் குறை சொல்வதாகக் கருதவேண்டாம். எங்களுடைய கட்சியின் அரசாங்கம் இருந்த காலத்திலே இருந்து சொல்லிக்கொண்டு வருகிறேன். இவைகளுக்கு எல்லாம் காரணம் ரெவின்யூ போர்டு உத்தரவு என்ற

நிலையில்தான் இன்றைக்கும் இருக்கிறது. ஆகவே, அது ஒரு பெரும் சாதிச் சண்டையைக் கூட உண்டாக்குமோ என்று அஞ்சுகிறேன். ஆகவே, இதுபோன்ற தீர்க்கமாக சிந்திக்காத நிலையிலும், அரசு ஒரு பக்கம், ரெவின்யூ போர்டு ஒரு பக்கம் என்று இரண்டு வித ஆட்சிகள், இரண்டு வித உத்தரவுகள் இருப்பதைவிட, அதைத் தீர்க்கமாக அமைச்சர் அவர்கள் சிந்தித்து, கொண்டு வந்ததை ஏற்றுக் கொள்கிறேன்.

இதை செலக்ட் கமிட்டிக்கு விடவேண்டும் என்று சொன்னார்கள். ஆஸ்துமா வியாதிக்காரனைப்போல இது இழுத்துக் கொண்டு இருக்கும். என்றைக்கும் முடியாது. டாக்டர்கள் சொல்வார்கள், உடம்புக்கு ஒன்றும் இல்லை, மருந்து சாப்பிடுங்கள் என்று. ஆனால் அவனுக்கு மப்பு வந்தால் இழுக்கும், வெளியே வரும்போதெல்லாம் வலிக்கும். கடைசியில் சீக்கிரமும் சாகமாட்டான். அந்த மாதிரி இருப்பதைவிட செலக்ட் கமிட்டிக்கு விடுவதைவிட உண்மையிலே சொல்லவேண்டுமானால், ராஜாஜி போன்றவர்கள் வேண்டாம் என்று எண்ணினார்கள், காமராஜ் போன்றவர்கள் அசந்து சொன்னார் என்றால், கலைஞர் போன்றவர்கள் இதை ஒரு முடிவுக்கு விடவேண்டும், இது வேண்டியதில்லை என்று எண்ணி இருக்கிறார்கள் என்று சொன்னால், அவர்கள் நாட்டுப் பற்றிலும், மக்களின் நலனில் அக்கறை உள்ளவர்கள் என்பதை நான் தெரிவித்து; கொண்டு, இதை செலக்ட் கமிட்டிக்கு அனுப்பத் தேவையில்லை இந்த மாமன்றமே செய்யவேண்டும் என்று சொல்லி, சந்தர்ப்பம் தந்ததற்கு தலைவருக்கு நன்றி கூறி முடித்துக் கொள்கிறேன்.

<u>*திரு. எம். எஸ். மாணிக்கம் :</u> மாண்புமிகு மாற்றுத் தலைவர் அவர்களே, மாண்புமிகு வருவாய்த் துறை அமைச்சர் அவர்கள் இந்த மாமன்றத்திலே கொண்டு வந்திருக்கிற வருவாய் வாரிய ஒழிப்பு சட்ட முன்வடிவை வரவேற்று, அதை நிறைவேற்றுவதன் மூலம் இந்த நாட்டு மக்களுக்கு, ஏழை எளிய மக்களுக்கு நன்மை செய்ய முடியும் என்கிற வகையிலே இந்த சட்ட முன்வடிவு வந்திருக்கிறது. அதை நான் வரவேற்கிறேன். எனக்கு முன்னாலே பேசிய எதிர்க்கட்சி உறுப்பினர் மாண்புமிகு துரைமுருகன் அவர்கள் வருவாய் வாரிய ஒழிப்புத் தேவையில்லை அதை ஒழிப்பதற்கு முயற்சி எடுத்துக் கொண்டவர்கள் எல்லாம் இன்றைக்கு இல்லை, அதை ஒழிப்பதற்கு பலமுறை முயற்சி செய்து பிறகு வேண்டாம் என்று விட்டுவிட்டார்கள் என்று சொன்னார்கள். ஆங்கிலேயர் இந்த நாட்டை விட்டுச் செல்கிற நேரத்தில் இப்படிப்பட்ட நாட்டை விட்டுச் செல்லுகிறோமே என்றுதான் சொன்னார்கள். அதைப்போல ஆட்சியிலே இருந்து விலகுகிறவர்கள் கூட, பதவியிலிருந்து விலகுகிறபோது வேதனையோடுதான் விலகினார்களே தவிர, அங்கேயே இருக்க வேண்டும் என்ற எண்ணம் இருந்ததே தவிர, நிம்மதியாக



போனவர்களே கிடையாது. அதைப்போலத்தான் இன்றைக்கு வருவாய் வாரிய ஒழிப்புப் பற்றி இருந்தால் இருக்கட்டும் என்று சொன்னார்கள். எனவேதான் மக்களுடைய நலனை எண்ணி சட்டங்களைக் கொண்டு வந்து நிறைவேற்றுகின்ற நேரத்தில் இப்படிப்பட்ட அமைப்புக் தேவையில்லை என்பதை பின்னாலே ஏற்றுக்கொள்வார்கள் என்று கருதுகிறேன்.

(முற்பகல் 11-50).

அதைப் போலவே, வருவாய் வாரியம் உருவானதற்கான காரணத்தைக் கூறுகிற போது, மக்களிடமிருந்து வரியை வசூல் செய்ய உருவாக்கப்பட்டது. அதற்குப் பிறகு, சினிமா தோன்றியது. அதனால், சினிமா சம்பந்தப்பட்ட சட்டங்கள் எல்லாம் அந்த மன்றத்தின் நிர்வாகத்தில் கொண்டு வரப்பட்டது. இதன் காரணமாக அந்த வாரியத்தின் உறுப்பினர்கள் தமிழ்நாடு பூராவும் சுற்றுப் பயணம் செய்து, ஒரு அமைச்சர் சுற்றுப் பயணம் செய்வது போல் செய்து, அங்கே உள்ள அதிகாரிகளை எல்லாம் சந்தித்து—அவர் சம்பந்தப்பட்ட இலாகா அதிகாரிகள் மட்டுமல்ல—அந்த மாவட்டத்தில் உள்ள அனைத்து அதிகாரிகளும் வந்து அவரை சந்திக்க வேண்டும். ஒரு மாவட்டத்திற்கு வருவாய் வாரிய உறுப்பினர் வருகிறார் என்று சொன்னால், அந்த மாவட்டத்தில் உள்ள அத்தனை அதிகாரிகளும் அவர் அந்த மாவட்டத்தை விட்டு வெளியே போகிற வரையில் அமைதியை இழந்து, நிம்மதி அற்று பயந்துக்கொண்டு இருப்பார்கள். அவர்கள் சென்ற பிறகு தான் அவர்களுக்கு நிம்மதி வரும். இப்படிப்பட்ட நிலை இப்போது மாற்றப்படுகிறது.

மாண்புமிகு அமைச்சர்கள் சுற்றுப்பயணம் செல்கிறபோது சம்பந்தப்பட்ட இலாகா அதிகாரிகள் வந்தால் போதும், பல அதிகாரிகள் வரக்கூடாது என்று இங்கே இருக்கும் எதிர்க்கட்சி உறுப்பினர்கள் எல்லாம் கூறுகிறார்கள். எல்லா அதிகாரிகளும் வரத் தேவையில்லை அமைச்சர் வருகிறபோது என்று சொல்கிற நேரத்தில் மக்களால் தேர்ந்தெடுக்கப்பட்டு அமைச்சர் பொறுப்பில் இருக்கிறவர்கள் வருகின்ற நேரத்திலேயே எல்லா அதிகாரிகளும் வரக்கூடாது என்று சொல்கிற இந்தக் காலத்தில், ஒரு வருவாய் வாரிய உறுப்பினர் வருகிறார் என்று சொல்கிறபோது, மாவட்டத்திலுள்ள அத்தனை அதிகாரிகளும் அச்சப்பட்டுக் கொண்டு இருக்கும் நிலை நாட்டிலே இருக்க வேண்டுமா என்று எண்ணிப் பார்க்க வேண்டும் என்று கேட்டுக் கொள்கிறேன்.

அந்த அதிகாரிகள் இங்கே அரசுத்துறையில் செயலாளராக இருந்து, அதற்குப் பின்னால் அவர் ரிடையர் ஆகிற நேரத்தில் அங்கே பதவியில் அமர்த்தப்பட்டு, அதன் மூலம் அவர்கள் தொடர்ந்து தனி அரசு நடத்துவது போல் நிலைமை இருந்ததால்

தான் மூதறிஞர் ராஜாஜி அவர்களும், அறிஞர் அண்ணா அவர்களும் இப்படிப்பட்ட அமைப்புகள் இருக்கக்கூடாது என்று போராடினார்கள், வாதாடினார்கள். ஆனால் அவர்களால் செய்ய முடியாததை இன்றைக்கு மாண்புமிகு புரட்சித் தலைவர் அவர்கள் செய்து காட்டியிருக்கிறார்கள். இந்தச் சட்டம் ஏழை எளிய மக்களுக்கு நன்மை செய்வதற்குக் கொண்டுவரப்பட்டு இருக்கிறது என்பதால் இதை அனைவரும் வரவேற்க வேண்டியது கடமையாகும்.

ஏழை எளிய மக்கள் நீதி மன்றங்களுக்குச் சென்று வழக்காடு மன்றங்களுக்குச் சென்று தற்போது பணத்தைச் செலவழித்துக் கொண்டு இருக்கிறார்கள். அவர்களுக்குச் சுலபமான முறையில் நீதி கிடைக்க வழி செய்கிற வகையில் இந்த வருவாய் வாரியம் நீக்கப் பெறுவது சாலப் பொருத்தமானதாகும் என்று சொல்லிக்கொள்கிறேன். அது மட்டுமல்ல, அரசுத்துறை செயலாளராக இருந்த அவர்கள் அங்கே சென்ற பின்னாலே ஒரு தீர்ப்பை எழுதி விட்ட பிறகு, அது மீண்டும் அப்பீல் என்ற முறையில் அரசுக்கு வருமானால் அவருக்கு கீழே பணியாற்றிய அதிகாரிகள் தான் இங்கே இருப்பதால், அவர்கள் அந்தத் தீர்ப்புக்கு எதிராக எழுதுவதற்கு தயங்குகிறார்கள், அல்லது அதைத் தள்ளிப் போடுகிறார்கள். இதனால் மக்களுக்குக் கிடைக்க வேண்டிய நன்மை கிடைக்காமல் போய்விடுகிறது. இப்படிப்பட்ட நிலைமைகளை மாற்றுவதற்குத் தான் மாவட்ட ஆட்சித் தலைவர்கள், மாவட்ட நிர்வாகத் துறையில் எந்த அளவிற்கு வரப்பெற்ற மனுக்களை பரிசீலித்து, ஆணையிட முடியுமோ அந்த அளவிற்கு வழிவகை செய்ய இந்தச் சட்டம் கொண்டு வரப்பட்டு இருக்கிறது.

இந்த வருவாய் வாரியம் செய்து வந்த பணிகளைச் செம்மையாக நடைமுறைப்படுத்த கமிஷனர்கள் நியமிக்கப்பட வேண்டும். டெபுடி கமிஷனர்கள் நியமிக்கப்பட வேண்டும். அதற்கு சட்டத்திலே வகை செய்யப்பட்டு இருக்கிறது. மாண்புமிகு உறுப்பினர் துரைமுருகன் அவர்கள் அப்பீல் செய்வதற்கு வழி இல்லை என்று சொன்னார்கள். பல கமிஷ்னர்கள், டெபுடி கமிஷ்னர்கள் போடுவதற்கு சட்டத்திலே இடம் இருக்கிற காரணத்தால், அப்பீல் செய்வதற்கும் அதன் மூலம் அந்த மக்களுக்கு நன்மை செய்வதற்கும் வாய்ப்பு இருக்கிறது என்பதை எனது கருத்தாகச் சொல்லிக் கொள்கிறேன்.

பீகார் போன்ற மாநிலங்களில் மாவட்ட ஆட்சித் தலைவர் என்ற பதவி இல்லாமல் டெபுடி கமிஷ்னர் என்று மாவட்ட ஆட்சித் தலைவர் அழைக்கப்படுகிறார். ஆகவே, இங்கே இருக்கும் மாவட்ட ஆட்சித் தலைவர்களையும் டெபுடி கமிஷ்னர்கள் என்று ஆக்கி, 3 மாவட்டங்களுக்கு ஒரு ஜாயின்ட் கமிஷ்னர்



என்று நியமித்து, அவர்கள் ஆங்காங்கு வருகின்ற அப்பீல்களை விசாரித்து, அதற்கு மேலே கமிஷனருக்கு வரவேண்டும் என்று கொண்டு வரலாம். அந்த முறையைச் செய்தால் ஏழை எளிய மக்களுக்கு தேர்தல் காலத்தில் நாம் அளித்த வாக்குறுதிகளை நிறைவேற்றவும், நல்ல பல திட்டங்களை செயல் முறைப்படுத்தவும் முடியும். அந்த வகையில் ரெவின்யூ போர்ட் அபாலிஷனை வரவேற்று, இந்தச் சட்ட முன் வடிவை இந்த மன்றம் ஏற்றுக் கொள்ள வேண்டும் என்று கேட்டு, வாய்ப்பளித்த மாற்றுத் தலைவருக்கு நன்றி கூறி முடிக்கிறேன்.

திரு. ஜே. ஹேமச்சந்திரன்: மாண்புமிகு பேரவையின் மாற்றுத் தலைவர் அவர்களே, முக்கியமான இந்த சட்ட முன் வடிவை நாங்கள் ஆதரிக்கிறோம். ஆதரித்து வரவேற்கக்கூடிய காலத்திலே இது சம்பந்தமாக சில கருத்துக்களை சில ஆலோசனைகளை சொல்ல வேண்டுமென்று நாங்கள் விரும்புகிறோம்.

பொதுவாக இந்த ரெவின்யூ போர்டு என்பது ஒரு ''த்ரி டயர் சிஸ்டம்'' என்ற முறையில் ''சூப்பர் ஃபளுவஸ் பாடி'' யாக இருக்கிறது. இன்று இந்த நாட்டில் இருக்கக்கூடிய ஏழை எளிய மக்கள் விவசாய மக்களுடைய பிரச்சனைகளைத் தீர்ப்பதில் கால தாமதம் ஏற்படுகிறது. ஆகவே, இந்த வாரியத்தை ஒழிக்க வேண்டுமென்று மக்களுடைய எண்ணத்தைத் தான் இந்த சட்ட முன்வடிவு பிரதிபலிக்கிறது.

இந்த நேரத்திலே இந்த சட்ட முன்வடிவிலே கொடுக்கப்பட்டிருக்கிற சில சரத்துக்களைப் பற்றி ஒரு சில ஆலோசனைச் சொல்வது தவறாக இருக்காது என்று நாங்கள் எண்ணுகிறோம். கமிஷ்னரை அப்பாயின்ட் பண்ணுவதற்கான ஒரு சரத்து இதிலே இருக்கிறது. அதை எந்த அளவுக்கு கால தாமதம் இல்லாமல் நிறைவேற்ற முடியுமோ அந்த அளவுக்கு முன்னாலேயே ''எர்லியராக'' நிறைவேற்றி, அமுலுக்குக் கொண்டுவர வேண்டுமென்று நாங்கள் விரும்புகிறோம். ஏனென்றால் இந்த விவசாயத் தொழிலாளர்களுடையவும், விவசாயிகளுடையவும், மக்களுடையவும் பல்லாயிரக் கணக்கான பிரச்சனைகள் கலெக்டர் அலுவலகங்களிலே இருந்து ரெவின்யூ போர்டு அலுவலகம் வரையில் தேங்கிக் கிடக்கின்றன.

குறிப்பாகச் சொல்வதாக இருந்தால் பல்லாயிரக்கணக்கான ஏழை எளிய மக்களுக்கு, விவசாயிகளுக்கு பட்டா கொடுக்க வேண்டுமென்று போட்ட மனுக்கள் இன்னும் முடிவு செய்யப்படாமல் இருக்கின்றன. பட்டா கொடுக்கப்பட்ட இடங்களிலே அது சம்பந்தப்பட்ட மற்ற ஏற்பாடுகள் பூர்த்தி செய்யப்படாத காரணமாக அந்த நிலத்தை உரிமையோடு அனுபவித்து கொள்ள முடியாத நிலைமை இருக்கிறது. இந்த பிரச்சனைக்குத் தீர்வு காண வேண்டுமென்றால் கமிஷ்னரை அல்லது

செக்ரட்டரியை எவ்வளவு விரைவில் அப்பாயிண்ட் பண்ண முடியுமோ அவ்வளவு விரைவில் அப்பாயின்ட் பண்ண வேண்டுமென்று கேட்டுக் கொள்கின்றோம்.

அதைப் போல இந்த ஜூரிஸ்டிக்ஷன் சம்பந்தமாகச சொல்லக் கூடிய நேரத்தில் ஒரே செயலாளர் அல்லது கமிஷ்னர் பொறுப்பில் பல இலாகாக்கள் இருக்கின்றன. அந்த நிலைமையை மாற்ற வேண்டும். முக்கியமான இலாகா என்றால் ஒரு இலாகாவுக்கு ஒரு செக்ரட்டரி அல்லது ஒரு கமிஷ்னர் என்று இருக்க வேண்டும். குறிப்பாகச் சொல்ல வேண்டும் என்றால் அரிசன மக்களைப் பொறுத்த மட்டில் இன்று அந்தத் துறை '' சோஷியல் வெல்பேர் டிபார்ட்மென்ட் '' உடன் இணைக்கப்பட்டிருக்கிறது. இதன் காரணமாக அரிசன மக்களுக்கு எந்த அளவுக்கு நியாயமான வசதிகள் கிடைக்க வேண்டுமோ அந்த அளவுக்கு கிடைப்பதற்கு காலதாமதம் ஏற்படுகிறது.

அதற்கு குறிப்பாக ஒரு எடுத்துக்காட்டைச் சொல்ல முடியும். என்னுடைய தொகுதியில் பேச்சிப்பாறை என்ற இடத்தில் அரிசன் வெல்பேர் ஸ்கூலில் வேலை பார்க்கும் '' கிராஃப்ட் இன்ஸ்டரக்டர்ஸ் '' என்கிற ஆசிரியர்களுக்கு 1971 ஆம் ஆண்டில் இருந்தே கிடைக்க வேண்டிய நியாயமான ஊதியம் இன்னும் கிடைக்கவில்லை. இந்த நிலையை தவிர்க்க வேண்டுமென்றால், அரிசன மக்களுக்கு இன்றைக்கு ஏற்பட்டிருக்கக் கூடிய பிரச்சனைகளைத் தீர்க்க வேண்டுமென்றால் அதை ஒரு தனி இலாகாவாக ஏற்படுத்தி, அதற்கு ஒரு தனி செக்ரட்டரியை நியமிக்க வேண்டும் என்று கேட்டுக்கொள்கிறோம்.

அதைப் போலவே '' லான்ட் ரீஃபார்ம் '' இன்றைக்கு ஒரு முக்கியமான விஷயமாக இருக்கிறது என்பதை எல்லோரும் ஒத்துக்கொள்வார்கள் என்று நம்புகிறோம். நிலச்சீர்திருத்தச் சட்டம் இந்த காலத்தில் மிகவும் முக்கியமாக இருக்கிற காரணத்தினாலே ரெவின்யூ செக்ரட்டரிக்கு கீழே அதை வைத்திருப்பதற்குப் பதிலாக '' லான்ட் ரீஃபார்ம் ''-க்கு ஒரு தனி இலாகாவை ஏற்படுத்தி, அதை தனியாகக் கவனிப்பதற்கு ஒரு தனி செக்ரட்டரியை நியமிக்க வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறோம்.

அதே போன்று, 7-வது கிளாசுக்கும், 10-வது கிளாசுக்கும் பின்னால் '' ரூல்ஸ் ஃப்ரேம் '' செய்யப்படும் என்று சொல்லப்பட்டிருக்கிறது. குறிப்பாக ரெவின்யூ போர்டில் வேலை செய்கிற ஊழியர்களைப் பொறுத்தமட்டில் ஆர்டிக்கிள் 311-க்கு பாதகம் இல்லாமல் நடவடிக்கை எடுக்கப்படும் என்று இருக்கிறது. இன்றும் ரெவின்யூ போர்டில் வேலை செய்கிற ஊழியர்கள் அரசு ஊழியர்களாகத் தான் இருக்கிறார்கள் என்பதாலே ஆர்டிக்கிள் 311 என்பதை அந்த ஊழியர்களுக்கு சாதகமாக வியாக்கியானப் படுத்தி, அதற்குத் தகுந்தவாறு ரூல்ஸ் கொண்டுவரப்பட வேண்டுமென்று சொல்லிக்கொள்ள விரும்புகிறோம்.





(நண்பகல் 12-00)

அடுத்துரெவின்யூ போர்டுசம்பந்தப்பட்ட ஸ்டேண்டிங் ஆர்டர்ஸைப் பொறுத்தவரையில் மாண்புமிகு விவசாயத் துறை அமைச்சரவர்கள் ஒன்றைச் சொன்னார்கள்—பல வருடங்களுக்கு முன்னாலே உருவாக்கப்பட்டது அந்த ஸ்டாண்டிங் ஆர்டர்ஸ, அது வெள்ளைக்காரன் காலத்திலே உருவாக்கப்பட்டது. அந்த ஸ்டாண்டிங் ஆர்டர்ஸைப் பொறுத்தவரையில் இப்போது இருக்கின்ற ஜனநாயகக் காலகட்டத்திலே எந்த அளவுக்கு மாற்றங்கள் கொண்டு வரவேண்டுமோ அந்த முறையிலே மாற்றங்கள் கொண்டுவர வேண்டும். அந்த ஸ்டாண்டிங் ஆர்டர்ஸை அப்படியே அமல் படுத்துவது என்ற எண்ணம் இந்த அரசுக்கு இருக்கக் கூடாது. அந்த முறையில் அதிலே தகுந்த திருத்தங்கள் உருவாக்க வேண்டும் என்று வலியுறுத்திக் கேட்டுக்கொள்கிறேன்.

அடுத்து பல ஆயிரக்கணக்கான ஃபைல்கள் ரெவின்யூ போர்டிலே தேங்கிக் கிடக்கின்றன. அவைகளைப் பைசல் செய்கின்ற முறையிலே மக்களுக்கு எந்த விதமான பாதிப்பும் இல்லாத முறையில் அந்தப் பிரச்சினைகளைத் தீர்க்கவேண்டும் என்று கேட்டுக் கொள்கிறேன். அந்த வகையிலே அரசு நடவடிக்கை எடுக்க வேண்டும் என்று கேட்டுக் கொள்கிறேன்.

அடுத்து கலெக்டர்களைப் பொறுத்தவரையில் அவர்கள் அட்வைசரி ஜூரிஸ்டிக்ஷன் இல்லாமலே செயலாற்றக்கூடிய நிலைமை இருக்கின்றது. அது மாறவேண்டும். மக்களுக்கு பயன்படக்கூடிய திட்டங்களை நல்ல முறையில் அமல்படுத்துவதற்காக அவர்கள் கீழே இருக்கக்கூடிய அதிகாரிகளுக்கு யோசனை சொல்வதற்குப் பதிலாக உத்தரவுகளைப் போடக்கூடிய நிலைமை ஏற்பட வேண்டும்.

குறிப்பாக இப்போது ஆசிரியர்களை ரெக்ரூட் செய்யும்போது தனியார் துறையிலே இருக்கின்ற ஆசிரியர்கள் அரசுத் துறையிலே உள்ள பள்ளிகளுக்கு இன்டர்வியூ வந்திருக்கின்றது என்று வருகிறார்கள். ஆனால் பிறகு தனியார் பள்ளிகளுக்கு செல்லவேண்டும் என்கின்றபோது தனியார் பள்ளிகளிலே மேனேஜர்ஸ்—ஆக இருக்கக்கூடியவர்கள் 5 ஆயிரம் ரூபாய் 10 ஆயிரம் ரூபாய் என்று வாங்கிக் கொண்டுதான் அந்த ஆசிரியர்களை நியமனம் செய்யக் கூடிய நிலைமை இன்று இருக்கின்றது. அவ்வாறு தனியார் ஸ்கூல்களிலே ஆசிரியர்களை நியமனம் செய்ய வேண்டாம் என்று கலெக்டர் அவர்கள் சி.ஈ.ஓ. மூலம் சொன்னாலும் கூட அவர்கள் ஏற்றுக்கொள்வதில்லை. கலெக்டர் அவர்களுக்கு உத்திரவிடுகின்ற நிலை இன்றைக்கு இல்லை. இப்படிப்பட்ட நிலைமையை மாற்றி கலெக்டர் அவர்கள் உத்திரவிடுகின்ற வகையிலே நிலைமையை ஏற்படுத்தவேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன்.

அடுத்து மாண்புமிகு திரு. துரைமுருகன் அவர்கள் 100 ஆண்டுகளுக்கும் மேலாக இந்தச் சட்டம் அமலுக்கு வரமுடியவில்லை என்று சொன்னார்கள். இந்தச் சட்டம் இப்போது வந்திருக்கின்றது என்று சொன்னால் தமிழகத்தில் இருக்கக்கூடிய மக்களிடத்தில் ஏற்பட்ட தெளிவுதான் அதற்குக் காரணம். மக்களிடத்திலே ஏற்பட்ட டெட்டர்மினேஷன் தான் காரணம். ஆகவே மாண்புமிகு உறுப்பினர் திரு. துரை முருகன் அவர்களும் இதை எதிர்க்காமல் ஒரு சம்பிரதாயமாகத்தான் பேசினார். ஆகவே மாண்புமிகு திரு துரை முருகன் அவர்கள் இதை ஆதரித்து நிறைவேற்றுவதற்கு ஆதரிக்கவேண்டும்.

திரு துரை முருகன் : தலைவரவர்களே, ஒரு தவறான கருத்து அவையிலே ஏற்பட்டு விடக்கூடாது என்பதற்காகச் சொல்கிறேன். இந்த விஷயத்தைப் பொறுத்தவரையில் நான் எதிர்க்கிறேன் என்று சொல்லவில்லை. ஆனால் எனக்கு இருக்கின்ற ஐயம் என்னவென்றால் இந்த ரெவின்யூ போர்டைக் கலைத்ததற்குப் பிறகு அடுத்த ஆல்டர்னேடிவ் என்ன செய்யப் போகிறீர்கள் என்பதுதான். ஆகவே அதை மாண்புமிகு அமைச்சரவர்கள் விளக்கவேண்டும் என்றுதான் சொன்னேன்.

Correct me if I am erroneous.

Convince me if you have got solid Points.

ஆகவே நான் எதிர்த்தேன் என்ற ஒரு தவறான தகவலை அவைக்கு சொல்லக்கூடாது.

திரு. ஜே. ஹேமச்சந்திரன் : மாண்புமிகு உறுப்பினர் திரு. துரை முருகன் அவர்கள் கூட இதைச் சம்பிரதாயமாக ஆதரிக்கத் தான் செய்கிறார்.

திரு. துரை முருகன்: நான் மறைமுகமும் அல்ல, நேர் முகமும் அல்ல. எனக்கு அமைச்சர் அவர்களிடத்திலே ஒரு விளக்கம் தேவையாக இருந்தது. போர்டை எடுத்து விட்டால், அதை செம்மையாக நடத்துவதற்கு வேறு வழி முறைகள் வைத்திருக்கிறீர்களா என்று தான் கேட்டேன்? இருந்தால் அது பற்றிய விளக்கம் எதுவும் இதில் தரப்படவில்லை. ஆகவே அதை விளக்கிச் சொன்னால் நான் ஏற்றுக் கொள்கிறேன் என்றுதான் சொன்னேன்.

திரு. சோ. அழகர்சாமி: பேரவையின் மாற்றுத் தலைவர் அவர்களே, வருவாய்த் துறை அமைச்சர் அவர்கள் கொண்டு வந்திருக்கிற இந்த வருவாய் வாரியம் நீக்குவது குறித்த சட்டம் சம்பந்தமாக நான் கம்யூனிஸ்ட் கட்சியின் சார்பாக அதை பாராட்டி வரவேற்கிறேன் என்று சொல்லிக் கொள்ள விரும்புகிறேன்.





எனக்கு முன்னால் பேசிய மாண்புமிகு துறைமுருகன் அவர்கள் பேசுகிறபோது, அவர் அதை எதிர்க்கிறார் என்றுதான் நான் நினைத்துக்கொண்டிருந்தேன். அவர் இதை எதிர்க்கவில்லை என்று சொன்னதற்காக நான் மகிழ்ச்சியடைகிறேன். நன்றி.

இந்த வருவாய் வாரியம் சம்பந்தமாக, அதை நீக்க வேண்டும் என்று, ஜனநாயகத்தை விரும்பும் மக்கள் அனைவரும் சொல்லிக் கொண்டு வந்திருக்கிறார்கள். எனக்கு முன்னால் பேசிய மாண்புமிகு இளைய பெருமாள் அவர்கள் கூட பல விவரங்களை எடுத்துச் சொன்னார்கள். அதே மாதிரியாக துரைமுருகன் அவர்கள் கூட எடுத்துச் சொன்னார்கள் இந்த வருவாய் வாரியம் ஏற்பட்டு ஏறக் குறைய 194 ஆண்டுகள் ஆவதாகச் சொல்லப்படுகிறது. அது ஆங்கிலேயர்களின் ஆட்சிக் காலத்தில் அவர்களுக்கு [illegible]மாக, மக்களை அடிமைப்படுத்த, அவர்களின் ஆட்சிக்கு என்று சௌகரியமாக ஏற்படுத்தப்பட்டது.

123102

ஆனால், இப்பொழுது ஜனநாயக முறையில் தேர்ந்தெடுக்கப் பட்டு வந்திருக்கிற அரசுகள் தீவிரமாக செயல்படுவதற்கு ஒரு தடங்கலாக, ஒரு முட்டுக்கட்டையாகவே இருந்து வருகிறது என்பதை பற்றியெல்லாம் பலபேர்கள் எடுத்துச் சொன்னார்கள். இந்த வருவாய் வாரியம் நீக்கப்பெற வேண்டும்என்று தொடர்ந்து பலவிதமான முயற்சிகள் எடுக்கப்பட்டன. முன்னால் இருந்த அரசுகளும் எடுத்தன. ஆனால் எப்படியோ தப்பிப் போய்க் கொண்டே இருந்தது.

திராவிட முன்னேற்றக் கழக ஆட்சிக் காலத்திலே கூட நம்முடைய மதிப்பிற்குரிய மதியழகன் அவர்கள் இந்த அவையிலே ரெவின்யூ போர்டை நீக்குவதற்கான சட்டம் கொண்டு வந்தார். அப்போது நாங்கள் எல்லாம் வரவேற்றோம். ஆனாலும் எப்படியோ அது அப்படியே நின்று விட்டது. நானும் 12 வருஷமாக சட்டமன்ற உறுப்பினராக இருக்கிறேன். என்னுடைய வட்டாரத்திலே, ஒரு இடத்திலே புறம்போக்கு மனையிலே மக்கள் வீடு கட்டிக் கொண்டு, முனிசிபாலிட்டிக்கு வரியும் செலுத்திக் கொண்டு வருகிறார்கள். ஆனால் அந்த இடத்திற்கு பட்டா வழங்க வேண்டும் என்று சொன்னால், அது ரெவின்யூ போர்டுக்கு வரவேண்டியிருந்ததால், அங்கேயே இன்னும் நிலுவையில் இருந்து கொண்டிருக்கிறது. ரெவின்யூ போர்டின் ரிக்கார்டில் 'தரிசு' நிலம் என்று குறிப்பிடப்பெற்றிருப்பதை மாற்ற வேண்டும். ஆனால், அது இன்னும் நடைபேறவில்லை. அரசாங்கமே முயற்சி செய்தாலும் அந்த வேலை நடக்க வில்லை. இன்றைய தினம் வரைக்கும் பட்டா கொடுக்கப் படவில்லை. அங்கே உள்ள மாவட்ட ஆட்சித் தலைவரே விரும்பினால் கூட பட்டா கொடுக்க முடியாத சூழ்நிலை இருக்கிறது.

அதே போல் ஒரு இடத்தில் நீர் பாசனத்திற்கு ஒரு குளம் அமைக்க வேண்டும் என்று சொன்னால் கூட, வருவாய் வாரியத்திற்கு அனுப்பப்பெற வேண்டும். அங்கே அது நீண்ட நாட்களாக தேங்கிவிடுகிறது. ஆகவேதான் தேர்ந்து எடுக்கப்பட்ட ஒரு அரசுக்கு வேகமாக செயல்களை ஆற்ற முடியாத நிலையில் வருவாய் வாரியம் ஒரு முட்டுக்கட்டையாக இருக்கிறது. ஒரு தடங்கலாக இருந்து வருகிறது என்று சொல்கிறேன். அந்த வகையில் இது நீக்கப்படத்தான் வேண்டும்.

அந்த காலத்தில் ஆங்கிலேயருடைய ஆட்சியில் வேண்டுமானால் அது அவர்களுக்கு வசதியாக இருந்திருக்கலாம். ஆனால் நமக்கு அது தேவையற்றது. அது நீக்கப்பெற வேண்டும் என்று தொடர்ந்து எவ்வளவோ முயற்சிகள் எடுக்கப்பெற்றும், அது முடியவில்லை. அது நமது மாண்புமிகு அமைச்சர் அவர்களின் காலத்திலேதான் நிறைவேறுகிறது. அதற்காக அவர் பெருமைபட வேண்டும், மகிழ்ச்சியடைய வேண்டும். நாங்களும் அதற்காக அவரைப் பாராட்ட கடமைப்பட்டிருக்கிறோம்.

விவசாயிகளுடைய எண்ணம் என்று சொன்னால், அவர்கள் வருவாய் வாரியம் எடுக்கப்பட வேண்டும் என்று தான் விரும்புகிறார்கள். எவ்வளவோ சட்டம் கொண்டுவந்தாலும் அவைகள் சரியாக நிறை வேற்றப்படாமல், இந்த வருவாய் வாரியத்தில் ஏதோ ஒரு காரணத்திற்காக முடக்கப்படுகின்றன. ஆகவே மக்களுக்கு நன்மைகள் வேகமான முறையில் கிடைக்க, இதைக் கொண்டு வருவதை வரவேற்கிறோம். திராவிட முன்னேற்றக் கழகத்தைச் சார்ந்த துரைமுருகன் அவர்கள் முதலில் எதிர்க்கிறார்களோ என்று நினைத்தேன். அவர் எதிர்க்கவில்லை என்று சொன்னதற்கு சந்தோஷம்.

(பிற்பகல் 12-10).

இப்போது எதிர்க்கவில்லை என்று சொன்னதற்காக மகிழ்ச்சி. ஏகமனதாக நிறைவேற்ற வேண்டிய ஒரு அவசரமான சட்டம் இது. வேகமாக காரியங்கள் நடைபெற வேண்டியிருக்கின்றன. துரிதமாக பல காரியங்கள் ஜனநாயக அமைப்பில் நடைபெற





இந்த போர்ட் அவசியமில்லை. ஆகவே இதை நீக்க வேண்டியது மிக மிக அவசியம். எனவே இந்த சட்ட முன்வடிவை வரவேற்று அத்தனை பேர்களும் இதை ஏகமனதாக ஏற்றுக் கொள்ள வேண்டும் என்ற என் ஆலோசனையைக் கூறி அமர்கிறேன். வணக்கம்.

<u>மாண்புமிகு திரு. எஸ். டி. சோமசுந்தரம் :</u> மாண்புமிகு பேரவை மாற்றுத் தலைவர் அவர்களே, வருவாய் வாரியத்தை நீக்குகிற சட்டமுன் வடிவு பற்றி பேரவை உறுப்பினர்கள் தங்களுடைய அரிய கருத்துக்களைச் சொல்லியிருக்கிறார்கள். முதலிலே பேசிய அருமை சகோதரர் மாண்புமிகு உறுப்பினர் திரு. துரைமுருகன் அவர்கள் பேசுகிற போது உள்ள உணர்வோடு அன்போடு பந்தபாசத்தோடு இதை நீக்கிவிட்டால் அதனால் ஒரு அவப் பெயர் எனக்கு வந்துவிடுமே என்ற ஐயத்தில் சொன்னார்கள். அதற்காக நான் நன்றி தெரிவித்துக் கொள்கிறேன். அவர்கள் பேசுகிற போது நீண்டதொரு வரலாற்றை நான் சொன்னதாகச் சொன்னார்கள். நீண்டதொரு வரலாற்றை நான் சொன்னதாகச் சொல்லி நீண்டதொரு வரலாற்றை அவர்கள் சொன்னார்கள். உங்களுக்கு நான் ஒன்று சொல்ல வேண்டுமானால் இராமாயணத்தைப் பற்றி சொல்ல வேண்டுமானால். பத்து நாட்கள் சொல்லலாம் எட்டு நாட்கள் சொல்லலாம். ஆனால் அதை தெருக் கூத்தில் சொல்லும் போது ஏழெட்டு நாட்கள் சொல்வார்கள். குறிப்பாக வீட்டில் சொல்ல வேண்டுமானால் ஒரே ஒரு வரியில் சொல்லலாம். நான் எனக்குத் தெரிந்த வரையில் இராமாயணம் சொல்வதைப் போல்—இராமனுடைய மனைவி சீதையை இராவணன் கொண்டு சென்றான். அனுமான் இருக்கிற இடத்தை கண்டுபிடித்தான். விபீடணன் உதவி கொண்டு இராமன் சீதையை மீட்டான் என்று இராமாயாணத்தை எவ்வளவு சுருக்கமாகச் சொல்ல முடியுமோ அப்படி சுருக்கமாக இந்த வரலாற்றை நான் சொன்னேன். ஆனால் அருமை சகோதரர் இந்த வரலாற்றை நீண்ட நேரம் சொன்னார்கள். அது மட்டுமல்ல. அவர்கள் சொல்கிறபோது பலர் ........

<u>டாக்டர் மு. கருணாநிதி:</u> தலைவர் அவர்களே, நம்முடைய மாண்புமிகு வருவாய்த்துறை அமைச்சர் அவர்கள் பெரியாருடைய வழியில் சுயமரியாதை இயக்க காலந் தொட்டு நடைபோட்டு வருகிறவர். இராவணனை குற்றவாளியாக ஆக்குவதற்கு அவர்கள் நிச்சயமாக முற்பட மாட்டார்கள். அண்ணா அவர்கள் எழுதிய நீதிதேவன் மயக்கம் என்ற நாடகத்தை அவர் பார்த்து இருப்பார், படித்தும் இருப்பார். அவர்கள் இப்போது சொன்ன இராமாயண கதைப்படி இராவணன் தான் குற்றவாளி ஆகிறான். ஏதோ அயோத்திக்கு வந்து இராமன் மனைவி சீதையை இராவணன் தூக்கிக் கொண்டு போய் விட்டது போல் கதை சொன்னார்கள். அவர்கள் சொன்ன கதையில் இராமன்

மனைவி சீதையை இராவணன் தூக்கிக் கொண்டு போய் விட்டான், அனுமன் போய் கண்டு பிடிக்கிறான், இராமன் சண்டை போட்டு சீதையை மீட்டு வந்தான் என்று இராவணன் வில்லனாக சித்தரிக்கப்படுகிறான். அவர்கள் சொன்ன இந்தக் கதை அவருக்கோ அல்லது பெரியார் கொள்கைக்கோ உடன்பாடுதானா ?

மாண்புமிகு திரு. எஸ். டி. சோமசுந்தரம் : இந்தக் கதையை நான் ஏற்றுக் கொள்ள மாட்டேன் என்பதை அவர்களே சொல்லி விட்டார்கள். சுருக்கமாகச் சொன்னேன் என்பதற்காகச் சொன்னேனே தவிர நான் நீதிதேவன் மயக்கம் நாடகம் பார்த்தது மட்டுமல்ல, அண்ணாவை கூப்பிட்டுக் கொண்டு பல இடங்களில் நடிக்க வைத்திருக்கிறேன் என்பதும் அவர்களுக்குத் தெரியும். அவர்கள் சிறிது காலதாமதமாக வந்தார்கள். முதலில் கேள்விக்கு பதில் சொல்கிற போது பாதாள பைரவி பற்றி அந்த ஆசி உங்களுக்குக் கிடைக்குமா என்று கேட்கிற போது, நான் பகுத்தறிவு வாதி, அந்த ஆசி பற்றி எனக்கு நம்பிக்கை இல்லை, எனக்கு தேவையும் இல்லை, என்று சொல்லி இருக்கிறேன். அதிலே நான் இராமபிரான் என்று சொல்லவில்லை. இராமன் என்றுதான் சொல்லி இருக்கிறேன். இல்லாவிட்டால் இராமபிரான் அவர்களைப் பற்றி, தசரதன் மகன் என்று சொல்லியிருப்பேன். அப்படிச் சொல்லவில்லை நான், சொல்லவும் மாட்டேன். அண்ணா, பெரியார் வழி நான் நடப்பேன் என்ற அசைக்க முடியாத நம்பிக்கை எனக்கு மட்டுமல்ல, எதிர்க்கட்சித் தலைவர் அவர்களுக்கும் இருக்கிறது என்று சொல்லிக் கொள்ள விரும்புகிறேன்.

மாண்புமிகு உறுப்பினர் திரு. துரைமுருகன் அவர்கள் பேசுகிற போது நீண்டதொரு வரலாற்றைச் சொன்னார்கள் என்பதற்காக இப்படி ஒரு உதாரணம் சொல்லி அதைச் சொன்னேனே தவிர எனக்கிருக்கிற ஆற்றலில் இப்படித்தான் சொல்ல முடியும். அதுவே எதிர்க்கட்சித் தலைவராக இருந்தால் இதை வேறு விதமான உதாரணம் மூலம் சொல்லி இதைவிட நன்றாக, திறமையாகச் சொல்கிற ஆற்றல் அவர்களுக்கு உண்டு. ஆனால் அவ்வளவு ஆற்றல் எனக்கு இல்லாததால் எனக்குத் தெரிந்த கதையை சொல்லி முடித்தேன் என்பதை தெரிவித்துக் கொள்கிறேன்.

நம்முடைய துரைமுருகன் சொல்கிற போது, பல ராஜ தந்திரிகளை அழைத்தார்கள். அது மட்டுமல்ல. இங்கே சொல்கிற போது, ராஜ தந்திரிகளையும், பெரும் புகழ்பெற்றவர்களின் பெயர்களை எல்லாம் சொன்னார்கள். ராம பாணத்தைப் பற்றியும் சொன்னார்கள். நான் உங்களுக்குச் சொல்வேன்—ராஜ தந்திரிகளைப் பற்றிச் சொல்வதற்கு மன்னிக்க





வேண்டும். அவர்கள் எப்படி தப்பித்துக் கொள்ள வேண்டும் என்பதற்காக ராஜ தந்திரத்தைப் பயன்படுத்துவார்களே தவிர, நாட்டு மக்களைப் பற்றி கவலைப்பட மாட்டார்கள். நல்ல திறமை வாய்ந்தவர்கள், அனுபவம் மிக்கவர்கள், நிர்வாக அனுபவம் பெற்றவர்களைப் பற்றியும், ராஜ தந்திரிகளைப் பற்றியும் சொன்னார்கள். அதே போல், சர் சி. பி. இராமசாமி ஐயரைப் பற்றியும் சொன்னார்கள். நான் இப்போது அண்ணா அவர்களைப் பார்க்கிறேன்.

திராவிட முன்னேற்றக் கழகம் விடுதலையிலே நம்பிக்கை வைத்திருக்கிற போது, பேரறிஞர் அண்ணா அவர்கள் ஜெயிலிலே இருந்தார்கள். மற்றவர்களும் ஜெயிலிலே இருந்தார்கள். சர் சி. பி. இராமசாமி ஐயர் தலைமையில் அந்தக் குழு போய் வந்த போது, அண்ணாவையும் கேட்கவில்லை. மற்றவர்களையும் கேட்கவில்லை. வெளியிலே இருந்தவர்களையும் கேட்கவில்லை. அண்ணா அவர்கள் நாடாளுமன்ற மேலவையிலே அந்தத் தீர்மானம் வருகிற போது சொன்னார்கள். சர் சி. பி. இராமசாமி ஐயர் அவர்கள் ஜெயிலிலே வந்து கேட்டு இருக்கலாம், என்று இதைப் பற்றி அண்ணா அவர்கள் சொல்கிற போது,

" Sir C. P. Ramaswamy Iyer never went to jail; but he had the experience of sending others to jail "

என்று சொன்னார்கள். அண்ணா அவர்கள் அவர்களைப் பற்றி எவ்வளவு பெரிய மேதையாக இருந்தாலும், பொது மக்களுடைய தேவைகளை எண்ணுகிற போது, எப்படி கருத்துக்கள் வைத்து இருந்தார்கள் என்பது உங்களுக்கு எல்லாம் நன்கு தெரியும். ஆகவே, ராஜதந்திரியைப் பற்றியும் சொல்லிவிட்டேன் ; சர் சி. பி. இராமசாமி ஐயரைப் பற்றியும் சொல்லிவிட்டேன்.

இராஜாஜியைப் பற்றிச் சொன்னார்கள். அவர்கள் எவ்வாறெல்லாம் முயன்றார்கள் என்று நீண்ட வரலாற்றைச் சொன்னார்கள். ஆனால், அவர்கள் எவ்வளவு முயன்றும் முடியாமல் போய் விட்டது. ஆனால், பல பேர்கள் இந்த இராம பாணம் உபயோகிப்பதைப் பற்றிச் சொன்னார்கள். ஆனால், இங்கேயும் ஒரு ஆஸ்திக கருத்து வருகிறது. இந்தக் கருத்தைச் சொல்கிற போது, எதிர்க் கட்சித் தலைவர் அவர்கள் தவறாகக் கருதக் கூடாது. இராம பாணத்தை உபயோகிப்பது என்பது ஒரு கதை தான். யாரோ உபயோகித்த போது, அது குறி தவறி விட்டது. ஆனால், அந்த இராம பாணத்தை இராமச்சந்திரனே உபயோகிக்கின்ற போது அது தவறாது என்று நான் கருதுகிறேன். இன்றைக்கு அந்த இராமபாணத்திற்கு உரியவர், இராமச்சந்திரனே பயன்படுத்தின்ற போது குறி தவறாது நிச்சயமாக விழும்.

இந்த ஆஸ்திக கருத்தோடு நான் இதைச் சொல்லும் போது, எதிர்க் கட்சித் தலைவர் அவர்கள் இதை ஏற்றுக்கொள்ள வேண்டுமென்று நான் தெரிவித்துக் கொள்கிறேன்.

அது மட்டுமல்ல, நம்முடைய துரைமுருகன் அவர்கள் கொஞ்சம் கற்பனையாகக் கூடச் சொன்னார்கள். அவர்கள் அப்படிச் சொல்வதற்குக் காரணம், நம்முடைய நண்பருக்கு, பழைய நண்பருக்கு என்று கூட நான் சொல்ல மாட்டேன், ஆபத்து வந்துவிட்டால், கெட்ட பெயர் வந்துவிட்டால், நண்பர் எஸ்.டி.எஸ்.-க்கு அப்படி வந்து விட்டால் என்ன செய்வது என்ற கருத்திலே எடுத்துச் சொன்னார்கள். இன்றைக்கு இந்த மாற்று முறையை ஏற்படுத்துகின்ற போது எல்லோரும் தலைமைச் செயலகத்திற்கு வந்து விடுவார்கள். நம்முடைய அமைச்சர் அவர்களிடம் வந்து விடுவார்கள் என்றெல்லாம் சொன்னார்கள். அப்படி எல்லாம் வராதபடி நாங்கள் பார்த்துக் கொள்வோம், அந்த அளவுக்கு சட்டங்கள் வரும் என்பதை நான் தெரிவித்துக் கொள்கிறேன்.

இங்கே பேசிய அருமைச் சகோதரர் இளைய பெருமாள், அவர்கள் ஒன்றைச் சொன்னார்கள். எதைச் செய்தாலும், நன்மையும் இருக்கும், கெடுதலும் இருக்கும் என்று சொன்னார்கள். இந்த நன்மை, கெடுதலை சீர்தூக்கிப் பார்க்க வேண்டும். முதலில், இந்த கெடுதலைப் போக்க வேண்டும். நன்மையை அதிகப் படுத்த வேண்டுமென்று சொன்னார்கள். நான் உங்களுக்குத் தெரிவித்துக் கொள்கிறேன். இதிலே கெடுதல் கூட இருக்கும். ஆனால், இதைவிட நன்மை அதிகமாக இருக்கும். அந்த அளவில் கெடுதலைப் போக்கிட இந்த அரசு நடவடிக்கை எடுக்கும் என்பதையும், எந்த அளவுக்கு நன்மைகளை அதிகப் படுத்த முடியுமோ அதற்கும் இந்த அரசு முயற்சி செய்யும்.

[பிற்பகல் 12-20.]

இந்த வருவாய் வாரியத்தை அவசரப்பட்டு கலைத்துவிடவில்லை. பல கமிஷன்கள் போடப்பட்டன. அதிலே சொல்லப்பட்ட கருத்துக்களைப் பற்றியெல்லாம் கூட அருமைச் சகோதரர் துரை முருகன் அவர்கள் சொன்னார்கள். அவர்கள் அதைபெயல்லாம் நன்றாகப் படித்திருக்கிறார்கள். எல்லாக் கமிஷன்களிலும் சாதக பாதகங்களை மாறி மாறிச் சொல்லியிருக்கிறார்கள். திராவிட முன்னேற்றக் கழகம் போட்ட அந்தக் குழுவில் சாதக பாதகங்களைச் சொல்லும்போது சாதகங்களைத்தான் அதிகமாக இருக்கிறது என்று சொல்லியிருக்கிறார்கள். பெரிய ராஜதந்திரிகள் என்ன சொல்வார்கள் என்று பார்க்காமல், பல வரலாற்றைப் படைத்தவர்கள் என்ன சொல்வார்கள், அறிஞர்கள் என்ன





சொல்லுவார்கள், ஆற்றல் மிக்கவர்கள், வெளிநாட்டு அறிஞர்கள் எல்லாம் என்ன சொல்வார்கள் என்பதையெல்லாம் கணக்கெடுத்துக் கொள்ளாமல் மக்களைப் பற்றி யார் படித்திருக்கிறார்களோ—புத்தகத்தைப் படிக்காமல் மக்களைப் பற்றிப் படித்தவர் பெருந் தலைவர் காமராஜர் அவர்கள் என்று அறிஞர் அண்ணா அவர்கள் சொன்னார்கள்—அப்படி மக்களைப் பற்றிப் படித்தவர்களை எல்லாம் கேட்டுத்தான் வருவாய் வாரியத்தை கலைக்க முடிவு மேற்கொள்ளப்பட்டிருக்கிறது.

வருவாய் வாரியத்தில் மக்களுடைய கோரிக்கைகள் தேங்கிக் கிடக்கின்றன என்ற ஐயப்பாடு இருக்கிறது. டாக்டர் நல்ல டாக்டராக இருக்கலாம். நோயாளிக்கு அந்த டாக்டரிடம் நம்பிக்கை இல்லையென்றால் நோயாளிக்கு நோய் தீராது. சிறந்த டாக்டரிடத்தில் அழைத்துச் சென்றாலும் நோயாளிக்கு டாக்டரிடத்தில் நம்பிக்கை இல்லையென்றால் நோயாளி, க்ளோஸ். அதேபோல் சிறந்த ஆற்றல் மிக்க உறுப்பினர்கள் வருவாய் வாரியத்தில் இருந்தாலும் அங்கே தாமதம் ஏற்படுகிறது என்ற ஐயப்பாடு மக்களுக்கு இருக்கும் காரணமாக இது மக்களுக்குப் பயனளிக்க முடியாத நிலையில் இருக்கிறது. இருநூறு ஆண்டுகளுக்கு முன்னால் அன்றைக்கு இருந்த முறைக்கு ஏற்றவாறு, அரசியலுக்கு ஏற்றவாறு, விஞ்ஞான வளர்ச்சிக்கு ஏற்றவாறு அது ஏற்படுத்தப்பட்டது. இன்றைக்கு மக்களாட்சி வந்த பிறகு அதன் பணி போதுமானதாக இல்லை, மக்களுக்குப் பயனளிக்கக்கூடிய அளவில் இல்லை.

வருவாய் வாரியத்தைக் கலைக்க வேண்டுமென்று சட்டம் கொண்டு வருகிறபோது தமிழக முதல்வர் புரட்சித் தலைவர் அவர்கள் அன்றாடம் மக்களுடைய தேவைகளை உணர்ந்து, மக்களுடன் நெருங்கிய தொடர்பு கொண்டிருக்கும் அவர்கள் எப்படியெல்லாம் தேவை மக்களுக்கு ஏற்படுகிறது, எப்படி மாற்றம் செய்ய வேண்டும், அரசினுடைய கொள்கைகள், திட்டங்கள், எப்படியெல்லாம் நிறைவேற்றப்பட வேண்டும், மாற்றம் செய்ய வேண்டுமென்று சிந்தித்து, அது பற்றி முடிவு செய்ய நாங்கள் பல முறை கூடி முடிவு செய்து கொண்டு வரப்பட்டிருக்கிறதே தவிர, அவசரப்பட்டு கொண்டு வரப்படவில்லை. அவசரப்படக்கூடாது என்பதை நாங்களும் உணர்ந்திருக்கிறோம்.

இதிலே முக்கியமான நோக்கம் அரசின் கொள்கைகள், திட்டங்கள் பல மட்டங்களில் நிறைவேற்றப்படும்போது தாமதப் படுவதைத் தவிர்க்க, ஏழை எளியவர்கள், கிராமப்புற மக்களை அடைய, மாவட்ட அளவில் செயல்பட வழிவகைகளைக் காண வேண்டுமென்ற முறையில் இந்த முயற்சி மேற் கொள்ளப் பட்டிருக்கிறது. அதன் காரணமாகத்தான் வருவாய் வாரியத்தைக் கலைத்துவிட்டு புதிய அமைப்பு உருவாக்க அரசு எண்ணி இந்தச் சட்ட முன்வடிவைக் கொண்டு வந்திருக்கிறது என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

புதிய அமைப்பு எப்படி இருக்குமென்று கேட்டார்கள். ஒவ்வொரு இடத்திற்கும் புதிய துறைத் தலைவர்கள் நியமிக்கப்படுவார்கள். போக்குவரத்துத் துறை என்று எடுத்துக் கொண்டால் போக்குவரத்து ஆணையராக ஒருவர் இருப்பார். எல்லா ஃபைல்களையும் அவர் கவனித்துக் கொள்வார். அதேபோல் வணிக வரித் துறை என்றால் வணிக வரித்துறை ஆணையாளர் சம்பந்தப்பட்ட வேலைகளைக் கவனித்துக் கொள்வார். வருவாய்த் துறை என்றால், வருவாய்த்துறை ஆணையாளர் இருப்பார். நிலச் சீர்திருத்தத் துறை என்றால் நிலச் சீர்திருத்தத் துறை ஆணையாளர் இருப்பார். நிர்வாகத் துறை என்றால் நிர்வாகத் துறை ஆணையாளர் இருப்பார். இப்படி அவர்கள் எல்லாம் அவரவர்களுடைய துறைகளைக் கவனித்துக் கொள்வார்கள். இப்படிப்பட்ட ஆணையாளர்களை இந்த அரசு நியமிக்க இருக்கிறது.

அவர்களுக்குள்ள பணிகளை பங்கிட்டுக் கொடுக்க இருக்கிறோம். அந்த நேரத்திலே அந்தப் பணிகளிலே இருக்கிற சிக்கல்களை மாற்றுவதற்கு அரசு முடிவு எடுக்கும் என்று கூறி, இந்த வருவாய் வாரிய கலைப்பு சட்ட முன்வடிவை நீங்கள் எல்லோரும் நிறைவேற்றித் தரவேண்டுமாய்க் கேட்டுக் கொண்டு அமர்கிறேன்.

திரு. துரை முருகன் : தலைவர் அவர்களே, மாவட்டத்திலிருந்து கலெக்டரிடமிருந்தோ, டி.ஆர்.ஓ.விடமிருந்தோ வருகின்ற அப்பீல்கள் கமிஷனருக்குப் போகுமா அல்லது செக்கரட்டரியிடம் போகுமா ?

மாண்புமிகு திரு. எஸ். டி. சோமசுந்தரம் : கமிஷனரிடம் தான்.

திரு. எல். இளையபெருமாள் : தலைவர் அவர்களே, அமைச்சர் அவர்கள் சொல்கிறபோது அண்ணா அவர்கள் பற்றி குறிப்பிட்டார்கள். எதிர்கட்சித் தலைவர் அவர்களும் சொன்னார்கள். அண்ணா அவர்கள், ஒன்றே குலம், ஒருவனே தேவன் என்று சொன்னார்களே அதைப்பற்றி அமைச்சர் அவர்கள் ஏதாவது விளக்கம் சொல்ல விரும்புகிறார்களா ?

மாண்புமிகு திரு. எஸ். டி. சோமசுந்தரம் : பெரியவர்கள் எதுவும் சொன்னால் அதற்கு நான் விளக்கம் சொல்லிக் கொண்டு இருக்கக்கூடாது.





மாண்புமிகு பேரவைத் தலைவர் : பேரவை முன்னுள்ள கேள்வி : " தமிழ்நாடு 1980-ம் ஆண்டு வருவாய் வாரிய நீக்கச் சட்ட முன்வடிவு (சட்டமன்றப் பேரவை சட்ட முன்வடிவு எண் 22/1980) ஆய்வுக்கு எடுத்துக் கொள்ளப் பெறவேண்டும் ".

தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப் பெற்று, நிறைவேற்றப் பெற்று, சட்ட முன்வடிவு பிரிவு வாரியாக ஆய்வுக்கு எடுத்துக் கொள்ளப் பெற்றது.

பிரிவுகள் 2 முதல் 4 முடிய பேரவையின் முடிவிற்கு விடப் பெற்று நிறைவேற்றப் பெற்றன.

பிரிவு 5.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: பேரவை முன்னுள்ள கேள்வ்: பிரிவு 5 இச்சட்ட முன்வடிவின் உரிய பகுதியாக ஆக்கப் படவேண்டும்.

HON. THIRU S. D. SOMASUNDARAM : Sir, I move the following amendment :

In clause 5 *for* sub-clause (1), *substitute* the following sub-clause, namely :—

(i) " For purpose of authorisation under section 4, the Government may, by notification, appoint one or more officers as Commissioner or as Commissioners with such designation as may be specified "

திருத்தம் பேரவையின் முடிவிற்கு விடப் பெற்று, நிறைவேற்றப் பெற்றது.

பிரிவு 5, திருத்தப் பெற்றபடி, பேரவையின் முடிவிற்கு விடப்பெற்று நிறைவேற்றப்பெற்றது.

பிரிவுகள் 6 முதல் 9 முடிய பேரவையின் முடிவிற்கு விடப் பெற்று, நிறைவேற்றப்பெற்றன.

பிரிவு 10.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: பேரவை முன்னுள்ளகேள்வி: பிரிவு 10 இச்சட்ட முன்வடிவின் உரிய பகுதியாக ஆக்கப்பெற வேண்டும்.

HON. THIRU S. D. SOMASUNDARAM : Sir, I move the following amendment :

Clause 10 :

(a) in the marginal heading, *for* "Board" or "Member", *substitute* "Board of Revenue" or "Member of Board of Revenue" or "Standing Orders of Board of Revenue";

(b) renumber clause 10 as sub-clause (1) of that clause and after sub-clasue (1) as so renumbered, *insert* the following sub-clause, namely :

"(2) The "Standing Orders of the Board of Revenue" as in force on the date of the commencement of this Act shall on and from the said date, be called "Revenue Standing Orders" and continue in force, until altered, amended or rescinded by the Commissioner or the Government, as the case may be."

திருத்தம் பேரவையின் முடிவிற்கு விடப்பெற்று, நிறைவேற்றப்பெற்றது.

பிரிவு 10, திருத்தப் பெற்றபடி, பேரவையின் முடிவிற்கு விடப்பெற்று நிறைவேற்றப்பெற்றது.

[பிற்பகல் 12-30].

<u>டாக்டர் மு. கருணாநிதி :</u> பாயிண்ட் ஆஃப் ஆர்டர். அவையின் கவனத்திற்கு, அவை முன்னவர் அவர்களுக்கும் அல்லது அவையில் உள்ள அமைச்சர்களுக்கும் அல்லது பொதுவாக அரசாங்கத்தின் கவனத்திற்குக் கொண்டு வர விரும்புகிறேன். முக்கியமான மசோதாக்கள் நடைபெறுகின்ற நேரத்தில்—மாற்றுத் தலைவரை நான் குறைத்துக் கூறுவதாக எடுத்துக் கொள்ளக் கூடாது—சபாநாயகரோ அல்லது துணை சபாநாயகரோ அவையிலே இருப்பதுதான் அந்தத் தீர்மானத்திற்கு மதிப்பு அளிப்பதாக இருக்கும் என்பது என்னுடைய கருத்து. அதைப் பற்றி அரசாங்கம் இனிமேலாவது கவனம் செலுத்தும் என்று கருதுகிறேன்.

<u>மாண்புமிகு மாற்றுத் தலைவர் (திரு. இ. ரா. முத்தையா) :</u> தலைவரவர்கள் இருந்துதான் ஆரம்பித்துவிட்டுப் போய் இருக்கிறார்கள்.

(மாண்புமிகு பேரவைத் தலைவர்—தலைமை).

<u>மாண்புமிகு பேரவைத் தலைவர் :</u> அலுவல் ஆய்வுக் குழு நடந்தது. எதிர்க்கட்சித் தலைவர் இல்லை. நான் என்ன செய்வது ?

<u>டாக்டர் மு. கருணாநிதி :</u> தலைவரவர்களே, அலுவல் ஆய்வுக் குழு பற்றிய விவரம் எதிர்க்கட்சித் தலைவருக்குத் தெரிவிக்கப்படவில்லை. 11-15 மணிக்கு நான் வந்த பிறகு கூட எனக்குத் தெரிவிக்கப்படவில்லை. அலுவல் ஆய்வுக் குழு முடிந்து அமைச்சர் இங்கே வந்து அரை மணி நேரம் ஆகிறது.



<u>மாண்புமிகு பேரவைத் தலைவர் :</u> நேற்று டி.ஓ. லெட்டர் அனுப்பப்பட்டிருக்கிறது. எதிர்க்கட்சி கொறடாவிடமும் சொல்லப்பட்டிருக்கிறது. எங்கள் முறைகள் பூராவையும் கையாண்டு விட்டோம்.

பிரிவுகள் 11 மற்றும் 12 ஆகியவை பேரவையின் முடிவிற்கு விடப்பெற்று நிறைவேற்றப் பெற்றன.

பிரிவு 1, முகப்புரை, நெடுந்தலைப்பு ஆகியவை பேரவையின் முடிவிற்கு விடப் பெற்று நிறைவேற்றப் பெற்றன.

<u>மாண்புமிகு திரு. எஸ். டி. சோமசுந்தரம் :</u> தலைவர் அவர்களே, நான் கீழ்க்கண்ட தீர்மானத்தை மொழிகிறேன்:—

தமிழ்நாடு 1980-ம் ஆண்டு வருவாய் வாரிய நீக்கச் சட்ட முன் வடிவு (சட்டமன்றப் பேரவை சட்ட முன்வடிவு எண் 22/1980) திருத்தப்பெற்றபடி நிறைவேற்றப்பெறவேண்டும்.

தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்பெற்று சட்ட முன் வடிவு திருத்தப்பெற்றபடி நிறைவேற்றப்பெற்றது.

<u>(ஊ) பொது விற்பனை வரி (திருத்த) சட்ட முன்வடிவு 1980 (சட்டமன்றப் பேரவை சட்ட முன்வடிவு எண் 29/1980.)</u>

<u>மாண்புமிகு திரு. எஸ். டி. சோமசுந்தரம் :</u> தலைவர் அவர்களே, "தமிழ்நாடு 1980 ஆம் ஆண்டு பொது விற்பனை வரி (திருத்த) சட்ட முன்வடிவு (சட்டமன்றப் பேரவை சட்ட முன்வடிவு எண் 29/1980) ஆய்வுக்கு* எடுத்துக்கொள்ளப்பெற வேண்டும்" என்று மொழிகிறேன்.

<u>திரு. மு. அம்பிகாபதி :</u> மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, அமைச்சவரவர்கள் இங்கே அறிமுகம் செய்திருக்கக்கூடிய 1980 ஆம் ஆண்டு பொது விற்பனை வரி சட்டத்தை மேலும் திருத்துவதற்குரிய இந்த முன் வடிவில் சில முக்கிய விஷயங்களை நான் சொல்லிக்கொள்ள விரும்புகிறேன்.

பொதுவாக, இந்தச் சட்ட முன்வடிவில் சில குறிப்பிட்ட வரிகள் ஒரு முனை வரிகளாக ஆக்கப்பட்டு, அதிகரிக்கப் பட்டிருக்கிறது. உதாரணமாக, நான்காம் பக்கத்தில், பூட்டுகள், சீப்புகள், நோட்டு புத்தகங்கள், பால் பாயின்ட் பேனாக்கள் உட்பட பேனாக்கள் ரீபில்கள் (Refills) எழுது

---

*1980 ஆம் ஆண்டு ஜூலை திங்கள் 23 ஆம் நாளிட்ட தமிழ்நாடு அரசு சிறப்பிதழில் வெளியிடப்பெற்றுள்ளது.

பொருள்கள், பிளாஸ்டிக் பொருட்கள், துத்தநாகம் பூசப்பட்ட இரும்பு வாளிகள், மெழுகுவத்திகள், பெருங்காயம், கற்பூரம் ஆகியவற்றை 8 சதவீத ஒருமுனை வரி விதிப்பின்கீழ்க் கொண்டு வருதல் என்று கூறப்பட்டிருக்கிறது. இது சாதாரணமாக எழுதுகின்ற நம்முடைய பகுதிகளில் தயாரிக்கப்படும் பேனாக்கள்—உதாரணத்திற்கு குமரி பென் என்று மாண்புமிகு உறுப்பினர் திரு. அனந்தன் அவர்கள் பொறுப்பிலே தயாரிக்கப்படுகிறது. அதுபோன்ற சிறிய தொழிற்சாலையிலே பேனாக்கள் தயாரிக்கப்பட்டு வெளி மாநிலங்களுக்கு ஏற்றுமதி செய்யப்படுகிறது.

அப்படிப்பட்ட பேனாக்களுக்கு ஒருமுனை விற்பனை வரியிலிருந்து விலக்களிக்க வேண்டும். குடிசைத் தொழில்களை நாம் ஊக்குவிக்கின்ற முறையில் அத் தொழில்களின் மூலம் உற்பத்தி செய்யும் பொருள்களுக்கு வரி விதிப்பு கூடாது என்று நான் தெரிவித்துக்கொள்கிறேன்.

அடுத்து, சிவகாசி பகுதியிலும் சரி, கோயில்பட்டி பகுதியிலும் சரி, தஞ்சாவூர் மாவட்டத்தில் பல்வேறு பகுதிகளிலேயும் சரி, சிறிய அளவில் தீப்பெட்டிகள் தயாரிக்கின்ற தொழிற்சாலைகள் இருக்கின்றன. கையினால் தயாரிக்கப்படுகிற அந்த தீப்பெட்டிகள் காஷ்மீர், கல்கத்தா போன்ற வெளி மாநிலங்களுக்கு ஏற்றுமதி செய்யப்படுகின்றன. கையினால் தயாரிக்கப்படுகிற தீப்பெட்டிக்கு, விற்பனை வரியிலிருந்து விலக்களிக்க வேண்டுமென்று நான் கேட்டுக்கொள்ள ஆசைப்படுகிறேன்.

அதே போல், நம்முடைய சிவகாசி பகுதியில் நிப்புகள் தயாரிக்கப்படுகின்றன. அந்த நிப்புகளுக்கும் ஒரு முனை விற்பனை வரியிலிருந்து விலக்களிக்க வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன். கையினால் தயாரிக்கப்படுகிற தீப்பெட்டி சிறிய அளவிலே தயாரிக்கப்படுகிறது. நிப்புகள், அதேபோல், குடிசைத் தொழில்களாக இருக்கக்கூடிய பேனாக்கள், இவற்றிற்கு விதிக்கப்படுகிற வரியிலிருந்து விலக்களித்து, அத்தகைய தொழில்களை ஊக்குவிக்க அரசாங்கம் முன் வரவேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

கும்பகோணம் பகுதியில் எவர்சில்வர் தகடுகளைக் கொண்டு சிறிய பாத்திரங்கள் தயாரிக்கின்ற தொழில்கள் செய்கின்றார்கள். அப்பொருள்களுக்குப் பலமுனை விற்பனை வரி போடப்படுவதாகச் சொல்லப்படுகிறது. அந்த வரியை ஒருமுனை விற்பனை வரியாக மாற்றி, மாநிலத்து, மெட்டல் கார்ப்பரேஷன் மூலம் வசூலித்தால் எவர்சில்வர் தகடுகளைக் கொண்டு சிறிய பாத்திரங்கள் செய்கின்றவர்கள் பலன் பெறுவார்கள், என்று சொல்லப்படுகிறது. பல முனை விற்பனை வரி இருப்பதால், கும்பகோணம் பகுதியிலே இருக்கிற வியாபாரிகள்



பாதிக்கப்படுவதாகச் சொல்லப்படுகிறது. அவர்களுக்கு ஒரு முனை விற்பனை வரி விதிக்கவேண்டும். அந்த வரியையும், மாநிலத்து மெட்டல் கார்ப்பரேஷன் மூலமாக வசூலிப்பதற்கான நடவடிக்கையை அரசாங்கம் மேற்கொள்ள வேண்டுமென்று நான் கேட்டுக் கொள்கிறேன். குறிப்பாக, சிறிய வியாபாரிகள் பாதிக்கப்படுகிறார்கள். தமிழகத்தில் இருக்கக்கூடிய வர்த்தக கழகம் சார்பில்கூட, அரசாங்கத்திற்கு, மாண்புமிகு முதலமைச்சரவர்களுக்கு விண்ணப்பம் கொடுத்திருக்கிறார்கள். குறிப்பாக ஏழை, எளிய மக்கள் அன்றாடம் உபயோகிக்கின்ற பொருள்களுக்கு வரியிலிருந்து விலக்களிக்க வேண்டும்.

அடுத்து, அனைத்து சகல பொருள்களுக்கு ஒருமுனை விற்பனை வரி விதிக்கின்ற முறையை—மல்ட்டி பாய்ன்ட் டாக்ஸ் என்றில்லாமல், சிங்கிள் பாய்ன்ட் டாக்ஸ் விதிக்கின்ற முறையை—கொண்டு வரவேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

அரசாங்கம் முன்பு அறிவித்ததைப் போல், வணிக நல வாரியம் என்ற ஒன்று அமைக்கப்பட வேண்டும். பொருள்களுடைய விலை ஏற்றப்படாமல் இருக்கவும், பொருள்களுக்கு விதிக்கப்படுகிற வரி முறையாகக் கட்டப்படுகிறதா என்று பார்க்கவும், அவர்களுக்குப் பொறுப்புகள் அளிக்கப்படுகிற முறையில், வணிக நல வாரியம் என்று அமைக்க வேண்டும்.

சிறிய வியாபாரிகள் கலப்படம் செய்வது கிடையாது....

மாண்புமிகு பேரவைத் தலைவர் : நாளைக்கு, விற்பனை வரி சம்பந்தமாக தனி 'பில்' வருகிறது. அதிலே விற்பனை வரியைப் பற்றி முழுக்க, முழுக்கப் பேசலாம். அதிலே பார்ட் தான் இப்பொழுது வந்திருக்கிறது. ஆகவே, இதிலே சுருக்கமாகப் பேசி முடியுங்கள்.

திரு. மு. அம்பிகாபதி : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இந்த பில்லிலேயே 4 ஆம் பக்கம் ஒரு முனை விற்பனை வரி விதிக்கப்படும் பொருள்கள் என்று, பூட்டு, சீப்பு, பேனா, ரிஃபில், பால்பாய்ன்ட் பேனா எல்லாம் இருக்கிறது. ஆகவே, அதைப்பற்றியெல்லாம் சொன்னேன். நீங்கள் சொன்னதற்கு மிக்க நன்றி, சுருக்கமாகச் சொல்லிவிடுகிறேன். நான் கேட்டுக்கொள்வது, அனைத்துப் பொருள்களுக்கும் ஒருமுனை விற்பனை வரி இருக்கவேண்டும். சிறிய கடைக்காரர்கள் கலப்படம் செய்வது கிடையாது. அவர்கள் வாங்கி விற்கிறார்கள், கலப்படம் செய்கிறார்கள் என்று சிறிய கடைக்காரர்களைப் பாதிப்புக்கு உள்ளாக்குவதிலிருந்து அவர்களைப் பாதுகாக்க வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

[திரு. மு. அம்பிகாபதி] [1980 ஆகஸ்ட் 6

இறுதியில் நான் கேட்டுக்கொள்வது பல முனை விற்பனை வரியை ஒரு முனை விற்பனை வரியாக ஆக்கவேண்டும். பேனா, நிப்பு, கையினால் தயாரிக்கப்பட்ட தீப்பெட்டி போன்றவைகளுக்கு வரி விலக்கு அளிக்கவேண்டுமென்று கேட்டுக்கொண்டு இந்த பில்லின்மீது, என்னுடைய கருத்துக்களை இத்துடன் முடித்துக்கொள்கிறேன்.

[பிற்பகல் 12·40]

திரு. வி. கிருஷ்ணமூர்த்தி : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு ரெவின்யூ அமைச்சர் அவர்களால் கொண்டு வரப்பட்ட இந்த சட்டத்திலே இருக்கக்கூடிய சில குறைபாடுகளை நான் சுட்டிக்காட்டுவது என்னுடைய கடமை என்று கருதுகிறேன். பொதுவாக விற்பனைவரியை பல முனை வரியில் இருந்து ஒரு முனை வரியாக மாற்றவேண்டும் என்று வியாபாரிகள் மத்தியிலேயும், மற்ற மட்டங்களிலேயும் கோரிக்கைகள் அடிக்கடி வருவதும், அதை அரசாங்கம் சில சமயங்களிலே பரிசீலனை செய்கிறபோதும் இதிலே உள்ள சில சிரமங்களை எடுத்துச் சொல்வது என் கடமை என்று கருதுகிறேன்.

பல முனை வரி 2, 3, 4 சத விகிதங்களாக என்று குறைந்த அளவிலே இருக்கின்றன. அதை ஒரு முனை வரியாக மாற்றுகின்ற போது 8 , 10, 12 சத விகிதங்கள் என்று விதிக்கவேண்டி வரும். பல முனை வரிகள் குறைவாக இருக்கிற காரணத்தால் வரி ஏய்ப்பு குறைவாக இருக்கிறது. 2 சத விகிதம்தானே 3 சத விகிதம்தானே என்று ஏய்ப்புகள் குறைவாக இருக்கும். ஆனால் ஒரு முனை விற்பனை வரி 8 சத விகிதம் 10 சதவிகிதம் என்று வைத்துவிட்டால் ஏய்ப்புகள் அதிகம் செய்யலாம் என்று கருதி ' டாக்ஸ் எவேஷன் ' இருக்கத்தான் செய்யும். ஒரு முனை வரிக்கான சட்டம் நாளை அல்லது நாளை மறுநாள் வருகிறது என்று அமைச்சர் அவர்கள் சொல்கிறார்கள், அதற்கு ஒரு பூர்வாங்க ஆலோசனையாக இதைச் சொல்ல விரும்புகிறேன். சிங்கிள் பாயிண்ட் டாக்ஸ் என்பது வரி ஏய்ப்பு செய்கின்றவர்களுக்கு உதவியாக இருக்கும். அரசாங்கத்திற்கு வரவேண்டிய பணம் வராது. பல முனை வரி 2./· ஆக இருந்தால் வரியை குறைவாக வசூல் செய்து விடலாம். 2 லட்சம் 3 லட்சம் அல்லது 5 லட்சம் டர்ன்ஓவர் இருந்தால் 10 சத விகிதம் வரிபோடலாம். 5 லட்சம் டர்ன்ஓவர் இருந்தால் 50,000 வரி இருக்கிறது. எனக்குத் தெரியும் சென்னையிலே இருக்ககூடிய சில ஸ்தாபனங்கள், இந்தப் பொருள்களை விற்பனை செய்யக்கூடியவர்கள், ஹோல்சேலாக விற்பனை செய்யக்கூடியவர்கள், முதலில் ரிஜிஸ்டிரேஷன் வாங்குகிறார்கள். சேல்ஸ்டாக்ஸ் ரிஜிஸ்டிரேஷன் வாங்கி வைத்து ஓராண்டு, இரண்டாண்டுகள் கழித்து ரிட்டர்ன் கொடுக்கிறார்கள். அவர்கள்



1980 ஆகஸ்ட் 6] [திரு. வி. கிருஷ்ணமூர்த்தி]

அதிகாரிகளுடைய ஒத்துழைப்போடு இரண்டு ஆண்டுகளுக்கு அந்த அசெஸ்மன்டை முடிக்காமல் இருக்கும் நிலை இருக்கிறது. அப்படி சில பேர்கள் ரிஜிஸ்டிரேஷன் செய்து விட்டு ஒரு வருஷத்திற்கு 5 லட்சம், இன்னொரு வருஷத்திற்கு 5 லட்சம் என்று வியாபாரம் செய்து, அதற்குப் பிறகு ரிட்டர்ன் பைல் செய்கின்ற நிலை இல்லாமல் இருக்கிறது. பல இடங்களில் 'பிக்சிஷியல் நேமிலே' ரிஜிஸ்டிரேஷன் செய்து 10 லட்சம் ரூபாய் வரையில் டர்ன்ஓவர் செய்துவிட்டு அதில் கிடைக்கின்ற ஒரு லட்சம் ரூபாயை வரி ஏய்ப்பு செய்து விடுகிறார்கள். அப்படி வரி ஏய்ப்பு செய்துவிட்டு மாயமாக மறைந்துவிடுகிறார்கள். சைனா பஜாருக்குப் பக்கத்திலே சென்று பார்த்தால் அங்கே இருக்கக்கூடிய இடங்களில் இப்படி நிறைய நடக்கின்றன.

இந்த ஒரு முனை வரியான 8 சத விகிதம், 10 சதவிகிதம் என்று போட்டால் அது வியாபாரிகளுக்கு சுலபம் என்று சொல்கிறீர்களே தவிர, இதன் மூலம் அரசாங்கத்திற்குப் பல கோடி ரூபாய்கள் வரி ஏய்ப்புகள் நடப்பதற்கு காரணமாக அமையும் என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன். எனவே இந்த விஷயத்தில் அரசாங்கம் சர்வ ஜாக்கிரதையாக நடக்க வேண்டும் என்று என்னுடைய ஆலோசனைகளை சொல்லிக் கொள்கிறேன்.

அடுத்து பெருங்காயத்திற்கு வரி போட்டிருக்கிறீர்கள். வயதானவர்கள் உபயோகப்படுத்துகின்ற பண்டம். தாய்மார்கள் மீது என்ன கோபமோ தெரியவில்லை, அல்லது வயதானவர்கள் மீது கோபமா என்றும் தெரியவில்லை. அதனால்தான் பெருங்காயத்திற்கு 8 சதவீதம் வரிபோட்டிருக்கிறீர்கள். இதுதானா தாய்மார்களுக்கு எம்.ஜி.ஆர். ஆட்சியில் கிடைக்கும் நன்மை. அடுத்து கற்பூரத்திற்கு 8 சதவீதம் போட்டிருக்கிறீர்கள். பக்தர்கள் அதிகமாக உபயோகப்படுத்துவது, அவர்கள் மீது உங்களுக்கு என்ன கோபமோ தெரியவில்லை. இப்படித்தான் தாய்மார்களுக்கு எம்.ஜி.ஆர். ஆட்சியில் உதவி புரிகிறீர்கள். பக்தர்களுக்குத் தண்டனை கொடுக்கவேண்டும் என்று கற்பூரத்திற்கு 8 சதவீதம் வரி போட்டிருக்கிறீர்கள்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : கற்பூரம் மருந்துக்குக் கூட பயன்படும்.

திரு. வி. கிருஷ்ணமூர்த்தி : அதனால் ஏற்றச் சொல்லுகிறீர்களா ? நீங்கள் பெரியார் சிஷ்யராயிற்றே .

மாண்புமிகு பேரவைத் தலைவர் : கற்பனையிலே போகக்கூடாது. நான் அப்படிச் சொல்லவில்லை. ]

திரு. வி. கிருஷ்ணமூர்த்தி : நீங்கள் அப்படிச் சொல்லவில்லை என்றால் எனக்குச் சந்தோஷம். இந்தப் பெருங்காயத்திற்கும் கற்பூரத்திற்கும் வரியேற்றியதே சரியில்லை. இது பக்தர்களுக்குக் கொடுக்கக் கூடிய தண்டனை போல் இருக்கிறதோ என்கிற அச்சத்தைத் தெரிவித்து, இந்த மசோதா மீதான என்னுடைய கருத்தை தெரிவித்து அமர்கிறேன்.

திரு. ரா. கிருஷ்ணன் : தலைவர் அவர்களே, இந்த மசோதா மீது மார்க்சிஸ்ட் கம்யூனிஸ்ட் கட்சியின் சார்பில் ஒரு சில கருத்துக்களைச் சொல்ல விரும்புகிறேன். ஏற்கெனவே இங்கே பொதுவாக கைத்தொழில்களுக்கு முக்கியத்துவம் கொடுக்க வேண்டும். பாதுகாப்பு கொடுக்கவேண்டும் என்று எல்லோரும் ஒப்புக்கொள்கிறோம். இயந்திரத்தால் செய்யும் பொருள்களை விட கையால் செய்யும் பொருள்களுக்கு அதிகமாக ஆதரவு தருவதன் மூலம் கிராமப்புறத்தில் வசிக்கும் மக்களுக்கு அதிகமாக நாம் ஆதரவைத் தரமுடியும் என்கிற அடிப்படையில் முக்கியத்துவம் கொடுக்கப்படுகிறது. அந்த நடைமுறையை அரசு கையாள வேண்டும் என்றும் கருதுகிறோம்.

மேலும் இயந்திரத்தால் செய்யப்படும் பொருள்களுக்கும், கையால் செய்யப்படும் பொருள்களுக்கும் இடையே வியாபாரப் போட்டி ஏற்பட்டால், கிராமத்தில் அத்தகைய பணிகளில் ஈடுபட்டு இருக்கிறவர்களுக்கு வேலை வாய்ப்பு பாதிக்கும் என்ற காரணத்தால் கைத்தொழிலுக்கு முக்கியத்துவம் கொடுக்க வேண்டும் என்று கேட்கிறோம்.

இப்படிப்பட்ட நிலையில் இன்றைக்கு பூட்டு, பேனா, ரீபில், கைத்தீப்பெட்டி, பெருங்காயம் போன்ற அன்றாடம் பயன்படுத்தும் பொருள்கள் மீது வரியைப் போடுவது நியாயம் அல்ல. வரியைக் குறைக்கவேண்டும் என்று சொல்லிக்கொள்கிறேன். மாநில அரசாங்கத்திற்கு இருக்கும் ஒரே ஒரு வருமானம் இந்த விற்பனை வரி தான் என்று சொல்லலாம். மறைமுகமாக வரி அதிகமாகப் போடுவதால், அதிலும் குறிப்பாக அன்றாடம் பயன்படுத்தும் பொருள்களுக்கு அதிக வரி போடுவதால், விலைவாசி கூடிக்கொண்டே போகிறது. ஆகவே, இன்றைக்கு மத்திய அரசாங்கம் நேர்முக வரியை வசூலித்தாலும், அங்கேயும் மறைமுக வரியை வசூலிக்கக்கூடிய வாய்ப்பு இருந்தாலும், இன்றைக்கு நேர்முக வரி மிகவும் குறைவாகவும், மறைமுக வரி அதிகமாகவும் இருப்பதால்தான் விலைவாசி உயர்ந்து கொண்டே போகிறது. மறைமுக வரி சிங்கள் பாயின்ட், மல்டி பாயின்ட் என்கிற குழப்படி ஏற்படுத்திக்கொண்டு அதிகமான வரியை வசூல் செய்கிறார்கள்.

அப்பளம் என்பது சாதாரண ஒரு கைத்தொழில். கல்லிடைகுறிச்சியில் அப்பளத்தைத் தயாரிப்பவர்களுக்கு வரிவிலக்கு கொடுக்கப்பட்டு இருக்கிறது. மற்றவர்களுக்குக் கொடுக்கப்





படவில்லை. மாநிலம் பூராவும் இந்தத் தொழில் செய்வதால் அதற்கு மாநிலம் பூராவிலும் வரியில் இருந்து விலக்கு அளிக்க வேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன்.

இன்றைக்கு ஒவ்வொரு பொருளின் மீதும் விலைக் குறிப்பு போடப்பட்டு இருக்கிறது,. அதன் கீழே 'லாகல் டாக்சஸ்' எக்ஸ்ட்ரா என்று போடப்பட்டு இருக்கிறது. அதன் காரணமாக ஒரு கடையில் 4 ரூ. என்று சொன்னால், மற்றொரு கடையில் 4,25 என்று இப்படி ஒரு பொருளின் விலை கடைக்குக் கடை வித்தியாசப்படுகிறது. பொருள்கள் கிடைக்காத நேரத்தில் குறிக்கப்பட்டுள்ள விலைக்கு கூடுதலாகவே வசூலிக்கப்படுகிறது. ஆகவே, இதைச் சீரான முறையில் விற்பனை செய்வதற்கு அரசாங்கம் நடவடிக்கை எடுக்கவேண்டும்.

விற்பனை வரித் துறையைப் பொறுத்தவரையில், இன்றைக்கு பரவலாக இருப்பது லஞ்ச லாவண்யம். இது பரவலாகப் பேசப்படுகிற ஒன்று. விற்பனை வரி அலுவலகத்தில் பணியாற்றுகிறார் என்று சொன்னால், அவருக்குப் பெண் தாராளமாக மனமுவந்து கொடுக்கவும், டவுரி அதிகம் கொடுக்கவும் தயாராக இருப்பதை நாம் பார்க்கிறோம். இதற்குக் காரணம் என்ன ? அந்த விற்பனை வரி துறையினருக்கு அந்த வியாபாரி தனக்கு வரும் லாபத்தில் குறைந்தது 10 சதவீதம் அல்லது 20 சதவீதம் கொடுக்கக்கூடிய சூழ்நிலை இருக்கிறது. இதன் காரணமாக டாக்ஸ் எவேஷன் ஒரு பக்கம், அரசாங்கத்திற்கு வர வேண்டிய வருமானம் போவது ஒரு பக்கம், அது மட்டுமல்லாமல் கருப்புப் பணம் பெருகுவதற்கு வாய்ப்பு அளிப்பது ஒரு பக்கம், விலைவாசி ஏறுவது ஒரு பக்கம் என்று இப்படி பல்வேறு முறையில் பாதிப்பு ஏற்படுகிறது. ஆகவே, அந்தத் துறையில் இருப்பவர்களைக் கறாராக கவனிப்பதற்கு விஜிலென்ஸ் மூலமாக நடவடிக்கை எடுக்கவேண்டும் என்று கேட்டுக் கொள்கிறேன்.

இன்னும் சொல்லப்போனால், வியாபாரிகளுக்கு ஆடிட்டர்கள் வரியைக் குறைக்கின்ற முறையில் * * * எழுதிக் கொடுக்கிறார்கள்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : அப்படிப்பட்ட குற்றச்சாட்டுகளைச் சொல்லக்கூடாது. அந்த வார்த்தைகளை அவைக் குறிப்பில் இருந்து நீக்குகிறேன்.

---

***மாண்புமிகு பேரவைத் தலைவரின் ஆணைக்கிணங்க அகற்றப்பெற்றது.

[1980 ஆகஸ்ட் 6

(பிற்பகல் 12-50)

திரு. ரா. கிருஷ்ணன் : ஆக இப்படிப்பட்ட ஒரு டாக்ஸ் எவேஷன் செய்கிற முயற்சியில் நிலைமைக்கு மாறாக அல்லது உண்மைக்கு மாறாக எழுதக்கூடிய கணக்காக இருந்தால் அப்படி எழுதக்கூடியவர்களுடைய லைசென்சை ரத்து செய்கின்ற ஒரு முறையை அமுல்படுத்த வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

முக்கியமாக, கையால் செய்கின்ற, கைத்தொழில் முறையில் செய்கின்ற பொருட்களுக்கு வரியைக் குறைக்க வேண்டுமென்று கேட்டு, முடித்துக்கொள்கிறேன்.

திரு. ரா. கு. பெருமாள் : மாண்புமிகு பேரவைத் தலைவரவர்களே, இந்த விற்பனை வரிச் சட்டத்தை ஆதரித்து பேசும் அதே நேரத்தில் நான் என்னுடைய கருத்துக்கள் ஒன்றிரண்டைக் கூற விரும்புகிறேன்.

பொதுவாக எனக்கு முன்னால் பேசிய உறுப்பினர்கள் எல்லாம் இந்த வரி விபரங்களைப்பற்றிச் சொன்னார்கள். சாத்தூர், சிவகாசி, கோவில்பட்டி போன்ற இடங்களில் சிறிய தீப்பெட்டித் தொழிற்சாலைகள் அமைத்து, அவை மூலம் கிராம மக்கள், ஏழை எளிய மக்கள், விவசாயப் பெருங்குடி மக்கள் ஓரளவுக்கு வருவாய் பெற்று வாழ்கிறார்கள். அவ்வாறு கையால் செய்யப்படுகிற தீப்பெட்டிகளுக்கும் மற்ற பொருட்களுக்கும் 2 சதவீதம் விற்பனை வரி இருக்கிறது. இவ்வாறு சிறிய அளவில் தொழில் செய்கிற நபர்கள் எல்லாம் கணக்குகளை காட்ட சிரமப்படுகிறார்கள். விற்பனை செய்கின்ற பொருட்களின் கணக்கு விவரங்களை சரியாகக் காட்டினால் அவர்களால் தொழில் நடத்த முடியாத அளவுக்கு சிரமங்கள் ஏற்படுகின்ற காரணத்தால் கணக்குகளை மறைத்துக் காட்ட வேண்டிய அவசியம் வருகிறது. ஆகவே, இன்கம்டாக்சை குறைப்பதற்காக அல்லது கட்டாமல் இருப்பதற்காக (குறுக்கீடு)—இன்கம்டாக்ஸ் அல்ல, சேல்ஸ் டாக்ஸ்—சரியாக்க் கணக்கு காட்டாமல் இருக்கிறார்கள்.

கிராமப்புறங்களில் தொழில் பெருக வேண்டுமென்று தமிழக அரசு முயற்சி செய்து, 50-க்கு மேற்பட்ட சிறு தொழில்களை ஏற்படுத்தியிருக்கிறது. மேலும் தொழில்கள் பெருகவும், கைத் தொழில்களை ஊக்கப்படுத்தவும் தீப்பெட்டிக்குப் போட்டிருக்கிற 2 சதவீதம் வரியை ரத்து செய்யாவிட்டாலும் குறைக்க வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

அதைப்போல 'நிப்பு' தொழில் செய்கிறவர்கள் இருக்கிறார்கள். தமிழ்நாட்டில் குறிப்பாக சாத்தூரில்தான் 111 நிப்புத் தொழிற்சாலைகள் இயங்கி வருகின்றன. அவர்கள்



1980 ஆகஸ்ட் 6] [திரு. ரா. கு. பெருமாள்]

கையால் செய்கின்ற இந்த நிப்புகளை வெளி மாநிலங்களுக்கு அனுப்பிவிடுகிறார்கள். ஒரு நிப்புத் தொழிற்சாலையில் சுமார் 10 பேர்கள்தான் வேலை செய்வார்கள். வருடம் பூராவும் பார்த்தால்கூட சுமார் 5,000 ரூபாய்தான் அதற்கு வருமானம் வரும். அதற்கு பலமுனை வரி போட்டிருப்பதால் அந்தத் தொழிலில் ஈடுபட்டிருக்கிறவர்கள் பாதிக்கப்படுகிறார்கள். ஆகவே, இந்த நிப்புகளுக்கு வரி விலக்கு அளிக்க வேண்டுமென்று கேட்டு, என்னுடைய உரையை முடித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு திரு. எஸ். டி. சோமசுந்தரம் : மாண்புமிகு தலைவரவர்களே, அருமை உறுப்பினர்கள் தங்களுடைய கருத்துக் களை எல்லாம் சொல்லியிருக்கிறார்கள். அவைகளை எல்லாம் ஆராய்ந்து, இந்த அரசு நல்ல முடிவு எடுக்கும் என்று சொல்லிக் கொள்கிறேன். நம்முடைய மாண்புமிகு உறுப்பினர்கள் பேசும் போது எல்லாவற்றையும் ஒருமுனை வரியாக்க வேண்டுமென்று சொன்னார்கள். ஆனால் மாண்புமிகு உறுப்பினர் திரு. கிருஷ்ண மூர்த்தி அவர்கள் ஒருமுனை வரி, வரி ஏய்ப்புக்கு அதிக வாய்ப்பு இருக்கிறது என்று சொன்னார்கள். அரசு அதுபற்றி எல்லாம் ஆராய்ந்து வருகிறது.

ஒருமுனை வரி போட்டால் சிறு வியாபாரிகளுக்கு நன்மை இல்லை என்பதால் பலமுனை வரி போடப்பட்டிருக்கிறது. ஒரு முனை வரியில் வரி ஏய்ப்பு இருக்கிறது என்பது ஓரளவுக்கு உண்மைதான். அதனால்தான் ஒருமுனை வரியை எல்லாவற் றுக்கும் கொண்டுவர இந்த அரசு பயப்படுகிறது.

அடுத்தபடியாக இங்கே செய்யப்படுகின்ற நிப்புக்கு வரி விலக்கு அளிக்க வேண்டுமென்று சொன்னார்கள். அதுபற்றி இந்த அரசு ஆராய்ந்து கொண்டிருக்கிறது என்று சொல்லி, அது பற்றி மற்றொரு சட்டம் வரும்போது உங்களுடைய ஆலோசனை களை ஏற்று விவரமாகப் பதில் தருகிறேன் என்று சொல்லி, இந்தச் சட்டத்தை நிறைவேற்றித் தரும்படி கேட்டுக் கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : பேரவை முன்னுள்ள கேள்வி—" தமிழ்நாடு 1980ஆம் ஆண்டு பொது விற்பனை வரி (திருத்த) சட்ட முன்வடிவு (சட்டமன்றப் பேரவை சட்ட முன் வடிவு எண் 29/1980) ஆய்வுக்கு எடுத்துக்கொள்ளப் பெற வேண்டும் ".

தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்பெற்று, நிறை வேற்றப் பெற்று, சட்ட முன்வடிவு பிரிவு வாரியாக ஆய்வுக்கு எடுத்துக்கொள்ளப் பெற்றது.

[1980 ஆகஸ்ட் 6

பிரிவு - 2

மாண்புமிகு பேரவைத் தலைவர் :—பேரவை முன்னுள்ள கேள்வி— ''பிரிவு 2 இச்சட்டமுன்வடிவின் உரிய பகுதியாக ஆக்கப்பெற வேண்டும்''

மாண்புமிகு திரு. எஸ். டி. சோமசுந்தரம் : பேரவைத் தலைவரவர்களே, I move—

'That in clause 2, in sub-clause (g), in item 144, *for* stationery articles including note books, pens, ball points pens and refills'', *substitute* the following namely ;

> ''Stationery articles (other than those specified elsewhere in this Schedule) including note books, account books, pens, ball-point pens and refills.''

திருத்தம் பேரவையின் முடிவிற்கு விடப் பெற்று நிறைவேற்றப் பெற்றது.

பிரிவு 2, திருத்தப் பெற்றபடி, பேரவையின் முடிவிற்கு விடப் பெற்று நிறைவேற்றப்பெற்றது.

பிரிவு 1, முகப்புரை, நெடுந்தலைப்பு ஆகியவை பேரவையின் முடிவிற்கு விடப் பெற்று நிறைவேற்றப் பெற்றன.

மாண்புமிகு திரு. எஸ். டி. சோமசுந்தரம் : தலைவரவர்களே, நான் கீழ்க்கண்ட தீர்மானத்தை மொழிகிறேன்:— தமிழ்நாடு 1980 ஆம் ஆண்டு பொது விற்பனை வரி (திருத்த) சட்ட முன் வடிவு திருத்தப் பெற்றபடி (சட்டமன்றப் பேரவை சட்ட முன் வடிவு எண். 29/1980) நிறைவேற்றப்பெற வேண்டும்.

தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப் பெற்று, சட்ட முன் வடிவு திருத்தப் பெற்றபடி நிறைவேற்றப்பெற்றது.

(4) அறிவிப்புகள்—தொடர்ச்சி.

(ஏ) பேரவையின் அலுவல்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : பேரவைக்கு ஓர் அறிவிப்பு. இன்று கூடிய அலுவல் ஆய்வுக் குழுவின் முடிவிற்கிணங்கப் பேரவையின் அலுவல்கள் கீழ்க்கண்டபடி நடைபெறும் என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்:—

| | |
|---|---|
| 7—8—1980 (வியாழன்) | காலை—தனியார் அலுவல்கள் |
| | மாலை—அரசினர் சட்ட முன் வடிவுகள்—ஆய்வு செய்தலும் நிறைவேற்றலும். |



1980 ஆகஸ்ட் 6]

| | |
|---|---|
| 8—8—1980 (வெள்ளி) | அரசினர் சட்ட முன் வடிவுகள் ஆய்வு செய்தலும் நிறைவேற்றலும். |
| 9—8—1980 (சனி) | படத்திறப்பு விழா. |
| 10—8—1980 (ஞாயிறு) | விடுமுறை. |
| 11—8—1980 (திங்கள்) | அரசினர் சட்ட முன் வடிவுகள் — ஆய்வு செய்தலும் நிறைவேற்றலும். |
| | பேரவை மாலையிலும் கூடும். |
| 12—8—1980 (செவ்வாய்) | அரசினர் சட்ட முன் வடிவுகள் — ஆய்வு செய்தலும் நிறைவேற்றலும். |
| | தேவை இருப்பின், பேரவை மாலையிலும் கூடும். |

ரம்சான் விடுமுறை 12—8—1980 அன்று இருப்பின், பேரவை 13—8—1980 அன்று கூடும். 12—8—1980-க்கான நிகழ்ச்சிகள் அன்று எடுத்துக்கொள்ளப்படும்.

(7) அரசினர் சட்ட முன் வடிவுகள்—தொடர்ச்சி.

(எ) அடகுக் கடைக்காரர்கள்—கடன் நிவாரணச் சட்டங்கள் (திருத்த) சட்ட முன் வடிவு 1980 (சட்ட மன்றப் பேரவை சட்ட முன் வடிவு எண் 28/1980).

மாண்புமிகு திரு. சி. பொன்னையன் : தலைவரவர்களே, தமிழ்நாடு 1980 ஆம் ஆண்டு அடகுக் கடைக்காரர்கள் — கடன் நிவாரணச் சட்டங்கள் (திருத்த) சட்ட முன் வடிவு (சட்ட மன்றப் பேரவை சட்ட முன் வடிவு எண் 28/1980) ஆய்வுக்கு * எடுத்துக் கொள்ளப் பெற வேண்டும் என்று மொழிகிறேன்.

திரு. அ. ரகுமான்கான் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இங்கே என்னுடைய கட்சியின் சார்பாக திரு. பழனியப்பன் அவர்கள் பேச இருக்கிறார்கள். அமைச்சர் அவர்கள் இந்த சட்ட முன் வடிவு குறித்து முன்னுரை நிகழ்த்துவார்கள் என்று எதிர்பார்த்தேன். ஆனால் அவர்கள்

*1980 ஆம் ஆண்டு ஜூலை மாதம் 16 ஆம் தேதியிட்ட தமிழ்நாடு சிறப்பு அரசிதழில் வெளியிடப் பெற்றுள்ளது.

உரையாற்றவில்லை, அது அவர்களுடைய விருப்பம். ஆனால் ஒரே ஒரு கருத்தை மட்டும் அரசின் கவனத்திற்குக் கொண்டு வந்தால் பதில் சொல்வதற்கு உதவியாக இருக்கும் என்பதற்காகச் சொல்கிறேன். பான் ப்ரோக்கர்ஸ் என்று சொல்லபடுகின்ற அடகுக் கடைக்காரர்களிடத்திலே நகைகள் எல்லாம் அடகு வைக்கப்பட்டிருக்கின்றன. இந்தச் சட்டம் காலாவதியாவதால் இன்னும் 6 மாதங்களுக்கு அதை நீட்டிப்பதற்கு இந்தச் சட்டம் இப்போது கொண்டுவரப்படுகின்றது. ஆனால் எனக்குக் கிடைத்த தகவலின்படி அடகுக் கடைக்காரர்கள், அடகு வைக்கப்பட்ட நகைகளை எல்லாம் விற்பனை செய்து விட்டதாகத் தெரிகின்றது. இப்படிப்பட்ட பிரச்சினை பல்வேறிடங்களில் இருப்பதாகக் கேள்விப்படுகிறேன். ஆகவே இந்த சட்டத்தின் மூலம் 6 மாதங்களுக்கு நீட்டித்தால் அதனால் பயன் இருக்காது. நகைகளைத் திரும்பப் பெற முடியுமா என்றால் முடியாது. அதாவது ஒரு கதை சொல்வார்கள். குதிரையை வெளியே போக விட்டு விட்ட லாயத்தை அடைத்தார்கள் என்று சொல்வார்கள். அது போன்றுதான் இந்த சட்டத்தின் மூலமும் பலன் இருக்காது. ஆகவே இது பற்றிய தகவல்கள் வேண்டுமென்றால் அவற்றைத் தருவதற்கு நான் தயாராக இருக்கிறேன்.

(பிற்பகல் 1.00)

*<u>திரு. கு. பா. பழனியப்பன் ;</u> மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தமிழ்நாடு அடகு கடைக்காரர்கள் சட்டத்திலேயும் தமிழகத்திலே செயலில் இருக்கிற கடன் நிவாரண சட்டங்களிலேயும், மேலும் திருத்துவதற்காக கொண்டு வரப்பட்டிருக்கிற இந்த சட்ட முன்வடிவின் மீது, திராவிட முன்னேற்றக் கழகத்தின் சார்பிலே என்னுடைய கருத்துக்களைக் கூற விரும்புகிறேன்.

இந்தக் கடன் நிவாரணச் சட்டங்கள் பல்வேறு கால கட்டங்களில் வெவ்வேறு அரசுகளினால் வைக்கப்பட்டிருந்த போதிலும் இன்றைய தினம், இந்த நிவாரண சட்டத்தினுடைய திருத்தச் சட்டத்திலே, அதன் நோக்கமாக சொல்லப்படுவது, 'இது வரையில் அப்படி வைக்கப்பட்ட சட்டங்களிலே முழுமையான பலன்களை கடனாளிகள் பெறவில்லை' என்று ஒரு காரணத்தை காட்டியிருக்கிறார்கள்.

எங்களுக்கு தெரிய வேண்டியது எல்லாம் இப்படி ஒவ்வொரு முறையும் கடன் நிவாரணச் சட்டங்களைப் போட்டு, அதை தீவிரமாக நிறைவேற்ற அரசுகள் முடியாத நிலையில். குறிப்பாக இந்த அரசு கடன் நிவாரணச் சட்டத்தை அளிக்கிற நேரத்திலே அதை தீவிரமாக நிறைவேற்ற வேண்டும் என்று





ஒரு நடைமுறையையும் செய்யாத வகையில் இதன் முழுப் பலனையும் இன்றைக்கும் அடைய முடியுமா என்ற சந்தேகம் ஏற்படுகிறது.

இதற்குக் காரணம், தாசில்தாரிடத்திலே இன்றைக்கு ஏற்கெனவே, பல்வேறு அலுவல்கள் இருக்கிற காரணத்தினாலே இப்படிப்பட்ட பெரிய பொறுப்புகளையும் கொடுத்தால், அதை அவர்களால் நல்லபடியாக நிறைவேற்ற முடியுமா, அவர்களுக்கு போதுமான நேரம் இருக்கிறதா என்ற சந்தேகம் வருகிறது. ஏற்கெனவே ஏராளமான வழக்குகள் எல்லாம் விசாரிக்கவேண்டிய பொறுப்புகளிலே இருப்பவர்கள், இதை முழுமையாக நிறைவேற்றக் கூடிய வாய்ப்புகளை பெற்றிருக்க முடியாது. அந்த வாய்ப்புகள் நடை முறையிலே குறைவாகத்தான் இருப்பதாக நான் கருதுகிறேன்.

இன்னொன்று, இது தொடர்பான விசாரணையில் வழக்கறிஞர்கள்கூட கலந்துக் கொள்ளக் கூடாது என்கிற நிலைமை இருப்பதாகத் தெரிகிறது. அப்படி இருக்கிறபோது, அதிகாரிகள் இந்த அதிகாரத்தை தன்னிச்சையாக, துஷ்பிரயோகம் செய்யக்கூடிய வாய்ப்புகள் பல்வேறு இடங்களில் இருப்பதாக, நடைபெறுவதாக தெரிகிறது. அதை மாமன்ற உறுப்பினர்கள் அனைவரும் அறிவார்கள் என்று நம்புகிறேன்.

இந்தச் சட்டத்தின்கீழே கொடுக்கப்பெற்றிருக்கிற பலனை மக்கள் முழுமையாக அனுபவிக்க வேண்டும் என்ற எண்ணம் உள்ளபடியே அரசுக்கு இருக்குமேயானால், இந்தச் சட்டத்தை நிறைவேற்றுகிற அதே நேரத்தில், இதற்கு ஒரு மாற்றுத் திட்டம், ஏழை, எளியவர்கள் கடன் பெறுகிற வகையில் வசதிகள் செய்து தர வேண்டும் என்ற ஒரு நல்ல எண்ணம் இந்த அரசுக்கு இருந்தால், இதற்கு ஒரு மாற்றுத் திட்டத்தையும் தயாரித்து இருக்கும் ; அந்த எண்ணம் இந்த அரசுக்கு இல்லை என்பதை குற்றச்சாட்டாக சொல்லிக்கொள்ள விரும்புகிறேன்.

காரணம், இப்படிப்பட்ட கடன் நிவாரணச் சட்டத்தின் மூலமாக பொதுவாக மக்களிடையே நாணயக் குறைவு ஏற்படுவதற்கு தக்க சூழ்நிலை இருக்கிறது என்பதையும் இந்த மன்ற உறுப்பினர்கள் அனைவரும் அறிவார்கள் என்று நம்புகிறேன். ஆகவே, மாற்றுத் திட்டம் என்று சொல்கிற போது, ஏற்கெனவே இந்த மன்றத்திலே முதலமைச்சர் அவர்கள் கூட ஒரு திட்டத்தை அறிவித்தார்கள். அது நினைவிற்கு வருகிறது. தபால் ஆபீஸ்களிலேகூட கடன் கொடுக்கும் முறையை கொண்டு வரப்போவதாக அறிவித்தார்கள். அதைச் செய்ய

[திரு. கு. பா. பழனியப்பன்] [1980 ஆகஸ்ட் 6

முடியுமா, முடியாதா என்பதற்காக இதை நான் சொல்லவில்லை. ஆனால் கூட்டுறவுச் சங்கங்கள் மூலமாக அதிகப்படியான அளவில் கடனை கொடுப்பதற்கு, இந்த அரசினிடம் ஏதாவது திட்டம் இருக்கிறதா என்றால் இல்லை. அதை கூட்டுறவுத் துறை மானியம் வந்தபோதுகூட சொன்னார்கள். இப்பொழுது அதிலே ஏதோ சில வழி முறைகள் செய்யப் பெற்றிருந்தாலும் கூட அதிக அளவில் இல்லை. பல்வேறு கூட்டுறவுச் சங்கங்களி லிருந்து பலவகை கடன்கள் வழங்குவதற்கு வசதிகள் செய்யப் பெற்றிருப்பதாக சொன்னார்கள்.

இருந்தாலும் மாற்று முறைகள் என்று ஏழை எளியவர் களுக்கு இதிலே பயன் பெறும் வகையில் ஏதாவது செய்திருக் கிறார்களா என்று கேட்டால் இல்லை என்று தான் சொல்ல வேண்டும். நான் இதை தெளிவாகக் கூறுவதற்குக் காரணம் கூட்டுறவு நிலவள வங்கிகளில் கொடுக்கப்படுகிற கடன்களைக் கூட ஏழை எளியவர்கள் அதை பயன் படுத்தும் வகையில் அமைக் கப்படவில்லை என்பதை நான் கண்கூடாகப் பார்த்திருக்கிறேன். இன்றைக்கு பெரிய தேயிலைத் தோட்டங்கள், ரப்பர் தோட்டங் கள், மின் வாரியம் போன்ற நிறுவனங்களுக்கு அந்தக் கடன்கள் திரும்பப் பெற்றிருக்கின்றன என்கிற சில நிகழ்ச்சிகள் மாண்பு மிகு அமைச்சர் அவர்கள் கூட மானியத்தின் மீது பதிலளிக்கையில் இங்கே அறிவித்தார்கள்.

எனவே இப்போதிருக்கிற சட்டங்களை எளியமுறையில் மாற்றி எளியவர்களுக்கு எளிய வகைகளில் கடன் பெருவதற்கான வசதி களை, மாற்று திட்டமாக முறையாக அறிவிக்காத நிலையில் இப்படிப்பட்ட சட்டங்களை இயற்றுவதினால், எந்த அளவிற்கு மக்களுக்கு அது நன்மை பயக்கும் என்பதை இந்த அரசு, பரி சீலனை செய்ய வேண்டும் என்று நான் மீண்டும் கேட்டுக் கொள் கிறேன்.

குறிப்பாக சொல்லவேண்டும் என்று சொன்னால், பாத்திரங் கள், கல்வைத்த நகைகள், இவைகளையெல்லாம் வைத்துக் கொண்டு கூட்டுறவுச் சங்கங்கள் மூலமாகக் கடன் தருவதற்கான கள் ஒன்றும் இல்லை. பல்வேறு கூட்டுறவுச் சங்கங்களிலும் வசதி அரசு பாங்குகளிலும், பட்டா வர வேண்டும். அப்ரைசர் இல்லை என்றெல்லாம் சொல்லி மறுத்து விடுகிறார்கள். இப்படி எல்லாம் நிலைமைகள் இருப்பதினாலே, ஏழை விவசாயிகளோ, அல்லது சாதாரண மக்களோ, தங்களுடைய அன்றாடச் செலவுகளுக்கோ அல்லது இன்றியமையாத செலவுகளுக்கோ, அவசரச் செலவு களுக்கோ கடன் பெற முடியாத நிலை இருக்கிறது. அதற்கு எந்தவிதமான வசதியும் இதில் செய்யப்படவில்லை என்பதை அரசின் கவனத்திற்குக் கொண்டு வர விரும்புகிறேன்.



1980 ஆகஸ்ட் 6] [திரு. கு. பா. பழனியப்பன்]

இப்படிப்பட்ட சட்டங்களை மேலும் ஒரு 6 மாதம் 1 வருஷம் என்று நீட்டித்துக் கொண்டு போவதால் என்ன காரியங்களைச் சாதிக்க முடியும் என்பதையும் என்னால் புரிந்துக் கொள்ள முடிய வில்லை. கடன் கொடுப்பவர்கள் 1 லட்சம் முதலீட்டை வைத்துக் கொண்டு, சுமார் 6 லட்சம், 7 லட்சம் பெறுமான நகைகளின் மீது கடன் கொடுக்கிறார்கள். அவர்கள் திடீரென்று ஒரு நாள் எல்லா வற்றையும் தூக்கிக் கொண்டு நாட்டை விட்டே ஓடிவிடுகிறார்கள் என்றால் என்ன செய்வது ? அவர்களுக்கு 3 மாதம் தண்டனையும் ரூபாய் 5,000 அபராதமும் என்று வைத்திருப்பதாகத் தெரிகிறது. அது போதாது. 6, 7 லட்சம் ரூபாய் பெறுமானமுள்ள நகைகளை வைத்து கடன் கொடுப்பவர்களுக்கு, தண்டனைகளை இன்னும் அதிகமாக்க வேண்டும். அவர்கள் திடீரென்று 6, 7 லட்சம் பெறு மான நகைகளுடன் காணாமல் போய்விட்டால் அந்த ஏழை எளிய மக்கள்தான் பாதிக்கப்படுவார்கள். ஆகவே, இந்தச் சட்டத்தை நிறைவேற்றுகிற நேரத்திலேயே, அந்த நகைகளையெல்லாம் வாங்கி அரசு வங்கிகளிலோ அல்லது டிரஷரிகளிலோ பாதுகாப்பாக வைத்திருந்து பிறகு நடவடிக்கை எடுக்கும் வகையில் இந்த அரசு செயல்பட்டால் ஒழிய நிச்சயமாக இதை அமல் செய்வதில் வெற்றி ஏற்படாது என்பதை சொல்லிக் கொள்ள விரும்புகிறேன்.

திராவிட முன்னேற்றக் கழகத்தின் பொதுக்குழு தீர்மானத்தை மட்டும் அதில் இணைத்துச் சொல்ல கடமைப்பட்டிருக்கிறேன். ஆண்டு வருமானம் ரூபாய் 4,800 க்கு குறைவாக உள்ளவர்கள் அடகு வைத்திருக்கின்ற பொருள்களுக்கு வட்டியும் அசலும் இல் லாமல் மீட்டுக் கொள்ளலாம் என்றும் இது சம்பந்தமாக முறைப் படி அந்த வட்டாட்சியரிடம் மனு செய்யவேண்டும் என்று கவர்னர் ஆட்சிக் காலத்தில் வாக்குறுதி அளிக்கப்பட்டது. அதன் படி ஏழை எளிய மக்கள் வட்டாட்சியரிடம் விண்ணப்பங்கள் கொடுத்து மாதங்கள் பல ஆகியும்கூட, இதுவரை ஒன்றும் பரி சீலனை செய்யப்படவில்லை. வட்டிக் கடைக்காரர்களிடம் இருக் கிற அந்த அடகுப் பொருள்கள் ஏற்கெனவே ஏலத்திற்கு விடப் பட்டு விட்டதாகத் தெரிவிக்கிறார்கள். ஆகவே விளம்பரத் தோடு இருக்கிற இந்தத் திட்டத்தை ஏழை எளிய மக்கள் பலன் அடையத்தக்க விதத்தில் நிறைவேற்ற வேண்டும். ஏலத்தில் விடப்படாதிருக்கும் பொருள்களை ஏலத்தில் விடாதிருக்கும் வகை யில் அரசு உடனடியாக நடவடிக்கை எடுத்துக் கொள்ள வேண்டும்.

ஆகவே, இந்த அரசு மாற்றுத் திட்டங்களை அறிவித்து உட னடியாக அடகு வைக்கப்பட்டிருக்கும் நகைகளை மீட்டு அர சாங்கமே தன் பொறுப்பில் வைத்து ஏழை எளிய மக்களுக்கு கடன் வசதி செய்து தரவேண்டும். தாசில்தார்களுக்கு அதிக அதிகாரங்கள் கொடுப்பதால் பலன் இல்லை. ஆகவே ஏழை எளிய மக்களுக்கு நிவாரணம் கிடைக்கத்தக்க வகையில் ஏற்பாடுகளைச் செய்ய வேண்டும் என்று கேட்டு விடைபெறுகிறேன்.

[1980 ஆகஸ்ட் 6

திரு. கே. குப்புசாமி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, அரசியலமைப்புச் சட்டம் 46 வது பிரிவிற்கிணங்க மாநில அரசு கொள்கையை நடைமுறைப்படுத்துகிற வகையில் 1980 ஆம் ஆண்டு அடகுக் கடைக்காரர்கள்—கடன் நிவாரணச் சட்டங்கள் (திருத்த) சட்ட முன்வடிவை வரவேற்றுப்பாராட்டு கிறேன். எனக்கு முன்னால் பேசிய எதிர்க்கட்சியைச் சார்ந்த மாண்புமிகு உறுப்பினர் திரு. பழனியப்பன் அவர்களும், திரு. ரகுமான்கான் அவர்களும் இந்தத் திருத்த சட்ட முன்வடிவினால் ஏழை எளிய மக்களுக்கு எந்தவிதப் பலனும் இல்லை. இந்தத் திருத்தச் சட்டமுன் வடிவினால் கடன் சுமையில் இருப்பவர்களுக்கு எந்தவிதப் பயனும் இல்லை என்றும் வேறு ஏதாவது செய்ய வேண்டும் என்ற நோக்கத்தோடும் அவர்கள் சொன்னார்கள். ஏழை எளிய மக்களுக்கு கடன் சுமையிலிருந்து நிவாரணம் அளிக்க வேண்டும் என்ற நல்ல நோக்கத்தோடுதான் இந்த திருத்த சட்ட முன் வடிவு கொண்டுவரப்பட்டிருக்கிறது என்பதை அறிந்தும் அறியாதவர்கள் போல் அவர்கள் பேசியது உண்மையில் விந்தையாக இருக்கிறது.

இந்த நகைகளை எல்லாம் கடன் சுமையில் இருப்பவர்கள் திரும்பப் பெறுவதற்குள் ஏலம் போட்டுவிடுகிறார்கள் என்று அவர்கள் சொன்னார்கள். அவ்வாறு அடகுக் கடைக்காரர்கள் ஏலம் போடாமல் இருப்பதற்காகத்தான் இந்த காலக்கெடு நீட்டித்துக் கொடுக்கப்பட்டிருக்கிறது. காரணம், ஆறு மாத காலமாக இருந்த இந்த காலக்கெடு, கிராமப் புறங்களில் இருக்கின்ற படிப்பு அறிவில்லாத ஏழை எளிய மக்கள், கடன்பட்டவர்கள் இந்தக் காலக்கெடுவை அறிந்திருக்க மாட்டார்கள் என்ற காரணத்திற்காகத்தான் அவர்களுக்கு தொடர்ந்து நிவாரணம் அளிக்க வேண்டும் என்ற காரணத்திற்காகத்தான் இந்த அடகுக் கடைக்காரர்கள் திருத்த சட்ட முன்வடிவை அரசு இன்று கொண்டு வந்திருக்கிறது.

இதுவரை, இந்தக் கடன் நிவாரணச் சட்டத்தில் ஒரு குறிப்பிட்ட நிவாரணம் பெற்றவர்கள் மிகுதித் தொகையை உடனடியாக செலுத்த வேண்டும் என்ற வகையில் 1979 ஆம் ஆண்டு 40 ஆவது சட்டம் இருந்தது. 1913 ஆம் ஆண்டுச் சட்டம், மறுபடி 1928 ஆம் ஆண்டுச் சட்டம் இவைகள் எல்லாம்—கடன் சுமையில் இருப்பவர்களுக்கு நிவாரணம் அளிக்கவேண்டும் என்ற வகையில் பல வகைகளில் திருத்தங்கள் செய்யப்பட்டிருக்கின்றன. மூன்று தவணைகளில் செலுத்தியவர்கள், இப்போது கோர்ட் டிக்ரி ஆன பிறகு 18 மாதங்களில் செலுத்தும் வகையில் இந்தச் சட்டமுன்வடிவை சட்ட அமைச்சர் அவர்கள் கொண்டு வந்திருக்கிறார்கள். இது உண்மையில் கடன் சுமை தாங்காமல் அவதிப்படுகின்ற கிராமப்புற மக்களுக்கு நலன் பயக்கும் என்ற எண்ணத்தோடு கொண்டுவந்திருப்பதைக் கண்டு நான் மனமுவந்து பாராட்டுகின்றேன்.





இந்த மசோதா மீது நான் சில கருத்துக்களைக் கூற விரும்புகிறேன். வழக்கு மன்றங்களுக்குச் செல்கிற நேரத்தில், வழக்கறிஞர்களிடம், நீதிபதிகளிடம் பல பிரிவுகள் பல பிரச்சினைகளை ஏற்படுத்தியிருக்கின்றன. அதை அரசு கவனித்து பரிசீலிக்க வேண்டும் என்று சொல்லி சிலவற்றைக் குறிப்பிட விரும்புகிறேன்.

ஏற்கெனவே உள்ள சட்டத்தில் சில விதிவிலக்குகள் கொடுக்கப்பட்டிருக்கின்றன. விதவைகளுக்கு, மைனர் குழந்தைகளுக்கு விதிவிலக்கு கொடுக்கப்பட்டிருக்கிறது.

[பிற்பகல் 1-10]

A widow or a minor child both of whose parents are dead

என்றிருக்கிறது. இதன்படி பார்த்தால், ஒரு விதவைக்கோ, மைனர் குழந்தைக்கோ அவர்களுக்கு தாய் தகப்பன் இல்லாமல் இருந்தால், விதிவிலக்கு கொடுத்திருப்பதைப் பார்க்கிறோம்.

அடுத்து, A minor child whose father is dead என்றிருக்கிறது. இது முன்னுக்குப் பின் முரண்பட்ட கருத்தாக இருக்கிறது. காரணம், ஒரு விதவைக்கு தாய் தகப்பன் இல்லாமல் இருந்தால், இதிலே பலன் பெறுவதற்கு வழி இருக்கிறது. ஆனால், ஒரு மைனருக்கு தாய் மட்டும் இருந்து, தகப்பன் இறந்திருக்க வேண்டும், அப்படி தாய் மட்டும் இருந்தால் அதிலே பயன்பெற வழி உண்டு என்றிருக்கிறது. இவ்வாறு இருந்தால், விதவைகளுக்கு நலன் பயக்காது என்ற வகையிலே, இதற்கு திருத்தம் கொண்டு வந்து, இதைப் பரிசீலிக்க வேண்டுமென்று நான் அரசை விரும்பிக் கேட்டுக் கொள்கிறேன்.

அடுத்து, இதிலே வழக்குரைஞர்கள் நேரடியாக கடன்பட்டவர்களுக்கோ, கடன் கொடுத்தவர்களுக்கோ தாசில்தார் முன்னாலே அப்பியர் ஆகமுடியாத ஒரு நிலை இருக்கிறது. இந்தச் சட்டம் தடை செய்கிறது. அதனால், கடன்பட்டவர்கள் பாதிக்கப்படுகிறார்கள். காரணம், அங்கே தாசில்தார் சட்ட அனுபவம் அதிகம் இல்லாதவர். இதே போன்று வழக்குரைஞர் இல்லாத நிலையிலே சில நடைமுறைப் பிரச்சினைகளைப் பின்பற்ற முடியாமல் போகின்றது. அப்படி அவர்கள் அப்பீலுக்குச் செல்லுகின்றபோது, நீதிமன்றத்திலே சட்டப் பிரச்சினை வருகிறது. எனவே, கடன் பட்டவர்களுக்கும், கடன் கொடுத்தவர்களுக்கும் ஆகிய இருவருக்கும் ஒரு நிலையான நீதி வழங்கப்பட வேண்டுமென்றால் அவர்கள் வழக்குரைஞர்களை வைத்து வாதாடுகின்ற அந்த உரிமையை மீண்டும் சட்டத் திருத்தத்திலே கொண்டு வருவதற்கு இந்த அரசு ஆலோசிக்க வேண்டும் என்பதை நான் இந்த நேரத்திலே கேட்டுக் கொள்கிறேன்.

அதோடு, இதிலே தாசில்தாருக்கு அடுத்து அப்பீல் செய்ய வேண்டுமென்றால், அதற்கு ஆர். டி. ஓ. அல்லது சப் கலெக்டர் ஆகியோருக்கு பவர் கொடுத்திருக்கிறார்கள். அந்தந்தப் பகுதியிலே உள்ள நீதி மன்றங்களிலே உள்ள டிஸ்டிரிக்ட் முன்சீப்பிற்கு அந்தப் பவரை கொடுத்துவிட்டால், இன்னும் அதிகமாக உண்மையான பலன் ஏற்படுவதற்கு இதிலே ஏது இருக்கிறது.

இதிலே 4,800 ரூபாய் வருமானத்திற்கு குறைவாக இருப்பவர்கள் பலன் பெறுகிறார்கள். அப்படி வரும்போது, சாதாரண ஏழை எளியவர்கள்கூட கடன் கொடுக்கிறார்கள். அவர்களையும் இந்த '' டெட்டார் '' டெபனிஷனிலே சேர்த்தால், அதாவது ஒருவர் மாதம் 200 ரூபாய் சம்பளம் வாங்குகிறார் அவர் 5,000 ரூபாய் கடன் கொடுத்திருந்தால், அவருக்கு நிவாரணம் கிடையாது என்று சொன்னால், இத்தகைய ஏழை எளியவர்களையும் '' கிரடிட்டார் '' ஆக்கினால், பணம் கொடுத்தவனுக்கு மீண்டும் பணம் கொடுக்கின்ற அளவிலே இதைப் பரிசீலிக்க வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன்.

அடுத்து, சாதாரணமாக இந்த 4,800 என்று சொல்லும் போது ஒருவர் 2 இலட்சம் பெறக்கூடிய காலி சைட் வைத்திருக்கலாம். அவரும் இதிலே விதிவிலக்கு பெறுகிறார். இதிலே சொத்துக்கான அசெஸ்மெண்ட் அல்லது மொத்த மதிப்பீடு சொல்லப்படவில்லை. எனவே, அப்பேர்ப்பட்ட காலி சைட் இருந்து, அவருக்கு இந்த 4,800 ரூபாய்க்கு கீழே வருமானம் வந்தால், அவருக்கும் இந்த விதிவிலக்கு கொடுக்கப்பட்டிருக்கிறது. எனவே, அவரையும் இந்தச் சட்டத்தின் கீழ் கொண்டுவருவதாக இருந்தால், நிச்சயமாக அவருக்கும் இதிலே விதிவிலக்கு தரப்படுகின்றது. அதைப்பற்றியும் பரிசீலிக்க வேண்டும்.

டாக்டர் கே. சமரசம் : பாயிண்ட் ஆப் ஆர்டர், தலைவர் அவர்களே, திராவிட முன்னேற்றக் கழக உறுப்பினர் பேசுகின்ற போது கவர்னர் அவர்கள் ஆட்சியிலே 4,800 ரூபாய் வருமானம் என்று இருந்தது என்று சொன்னார்கள். அது தவறு. அனைத்திந்தியா அண்ணா தி. மு. க. ஆட்சியிலே தான் 4,800 ரூபாய் என்றும், கவர்னர் அவர்கள் ஆட்சியிலே 2,400 ரூபாய் இருந்தது என்றும் அவருடைய தகவலுக்காகவும், அதே சமயத்தில் தவறான கருத்து வந்துவிடக்கூடாது என்பதற்காகவும் இதை உங்கள் மூலமாகத் தெரிவித்துக் கொள்ளக் கடமைப்பட்டிருக்கிறேன்.

திரு. கு. பா. பழனியப்பன் : கவர்னர் ஆட்சிக் காலத்தில் விளம்பரப் படுத்தப்பட்டதை நடைமுறைப்படுத்தியது சரியல்ல என்று சொல்லியிருக்கிறேன்.





*திரு. என். வரதராஜன்: மாண்புமிகு பேரவைத் தலைவரவர்களே, தமிழ்நாடு 1980 ஆம் ஆண்டு அடகுக் கடைக்காரர்கள் கடன் நிவாரணச் சட்ட முன்வடிவு சட்டம் மேலும் ஆறு மாதம் கடன்களை நீட்டிப்பதற்கான சட்டத்தின் மீது சில கருத்துக்களை கூற விரும்புகிறேன். சாதாரணமாக வறுமை வயப்பட்ட மக்கள் தங்கள் பொருள்களை அடகுக் கடையில் வைக்கிறார்கள். குறிப் பாக நம்முடைய நாட்டில் பழைய சமுதாயத்தினுடைய சிலவித மான சின்னங்கள் இருக்கின்றன. முக்கியமாக அடிமைக்காலத்தில் உருவான சின்னந்தான் அடகுக் கடை, வட்டிக்கடை என்பது. அங்கே பாங்கு வட்டியில் பணம் கொடுப்பதில்லை. அடகுக் கடைக் காரர்கள் சாதாரண மக்களிடமிருந்து நகைகளைப் பெற்று அவர்கள் பாங்குகளில் அடகு வைத்து அந்தப் பணத்தை வாங்கி இவர்களுக்கு அதிக வட்டிக்கு கொடுத்து இந்த மக்களைச் சுரண் டும் மோசமான நிலைமை இருக்கிறது. இப்படிப்பட்ட அடகுக் கடைகளே இல்லாத நிலையை ஏற்படுத்த வேண்டும். இந்தச் சட்ட முன்வடிவு பொருட்களை மீட்டும் காலத்தை நீட்டிக் கொடுத்தாலும் இடையில் பொருள்கள் மறைமுகமாகவும், நேர்முகமாகவும் அபகரித்துக் கொள்ளக்கூடிய நிலை இருக்கிறது. அந்தப் பொருள்களைப் பெற்றுத்தர முயற்சி என்ன என்று அரசு ஆராய வேண்டும்.

அடுத்து, இன்று நாம் சட்டம் போட்ட உடனே தப்பிக்க பலர் முயற்சிக்கிறார்கள். பெருமாள் பெத்த பெருமாள் ஆன கதையில் இன்று சட்டம் போட்டால் ரசீதுகள் கொடுக்காமல் அடகுக் கடைகள் சரக்குகளைப் பெற்று கடன் கொடுக்கிற நிலைமை ஏற்படுகிறது. 100 ரூபாய் விவசாயத் தொழிலாளி கடன் வாங்க வேண்டுமென்று சொன்னால் பத்து ரூபாயை அவன் முதலில் கொடுத்துவிடுகிறான். இப்படி அடகுக் கடைகள் வைப்பதற்கானவிதிகளையே புறக்கணிக்கிறார்கள். காலையில் கூட வருவாய்த்துறை அமைச்சர் பேசும் போது அலாவுதீனும் அற்புத விளக்கும் அரசு கையில் இல்லை என்று சொன்னார்கள். மாநில அரசு கையில் அலாவுதீனின் அற்புத விளக்கும் இல்லை. இன்று தமிழ்நாட்டில் அலாவுதீனின் அற்புத விளக்கு அடகுக் கடைக் காரர்கள் கையில்தான் இருக்கிறது. சிறிய தொகையில் ஒரு அடகுக் கடையை ஆரம்பித்தால் பல லட்சக்கணக்கான ரூபாயைச் சம்பாதித்து விடுகிறார்கள். சட்ட முன்வடிவில் சில சிக்கல்கள் ஏற்படுகின்றன. விதவைகள் பாதிக்கப்படுகிறார்கள் என்று சொன்னார்கள். ஒரு சிலர் பாதிக்கப்படுகிறார்கள் என்பதற்காக அடகுக் கடையில் கடன் வாங்கியிருக்கும் லட்சக்கணக்கான மக்கள் பாதிக்கப்படக்கூடாது. இன்றைக்கு ஒரு மனிதன் சாதாரணமாக இறந்துவிட்டால் கூட வீட்டிலே உள்ளவர்கள் அடகுக் கடைக்குச் செல்ல வேண்டி நேரிடுகிறது. தங்களுடைய சகோதரனோ வேண்டியவரோ ஊருக்குச் செல்ல பானையை அடகுக் கடையில் வைத்து அனுப்பிவைக்கிறார்கள். அப்படிப்பட்ட அவல நிலை நம்முடைய நாட்டில் இருக்கிறது. இன்று நம்முடைய

அரசு இதனைக் கவனிக்க வேண்டியது அவசியம். கூட்டுறவுத் துறையிலும் வேறு துறைகளிலும் இந்த மக்களுக்குக் கடன் கிடைக்க ஏற்பாடு செய்ய வேண்டும். இந்தச் சட்டம் நிறைவேற்றப்படும் போதே அதற்கான முயற்சிகளைச் செய்ய வேண்டும். லைசென்ஸ் பெறாமல் நடத்தப்படக்கூடிய வியாபாரத்தைத் தடுத்து நிறுத்த கண்காணிப்புக் குழுக்கள் வேண்டும்.

ஆண்டு ஒன்றுக்கு 4,800 ரூபாய்க்குள் வருவாய் வரக்கூடியவர்களுக்குச் சலுகை என்று இருக்கிறது. தாசில்தாரிடத்தில் சான்றிதழ் வாங்கச் சென்றால் அதிலே பல கஷ்டங்கள் இருக்கின்றன. தாசில்தார் சான்றிதழ் கொடுக்க மறுக்கிறார். தீபாவளிப் பண்டிகை வர இருக்கிறது. இந்த தீபாவளிப் பண்டிகை யாருக்குக் கொண்டாட்டம் என்றால் இந்த அடகுக் கடைக்காரர்களுக்குத்தான். வருமானச் சான்றிதழ் கிடைத்தால் அடகுப் பொருட்களை திருப்பிக் கொடுக்க வேண்டும் என்பதற்காக அந்தச் சான்றிதழை தாசில்தார் கொடுப்பதை இவர்கள் தடுத்துக் கொண்டிருக்கிற நிலைமை ஏற்பட்டிருக்கிறது. இப்படிப்பட்ட பிரச்சினையை சட்டப் பிரச்சினையாக்கி நீதிமன்றத்திற்கு கொண்டு போக வேண்டும் என்பது சரியானதல்ல. தாசில்தார் உட்பட மக்கள் பிரதிநிதிகளைக் கொண்ட ஆலோசனைக் குழுவை அமைத்து இந்தப் பிரச்சினையைத் தீர்க்க வேண்டும். தமிழ்நாட்டில் உள்ள பின்தங்கியவர்கள் தாழ்த்தப்பட்ட மக்கள் . . . . . . . . . .

[பிற்பகல் 1—20]

மாண்புமிகு பேரவைத் தலைவர் : மொத்தமாக வறுமைக் கோட்டிற்கு கீழே இருக்கிறவர்கள் என்று சொல்லிவிடுங்கள்.

திரு. என். வரதராஜன் : என்னுடைய ஆலோசனை என்னவென்றால் சட்டத்தை அமல் நடத்துகிற போது ஏற்படுகிற சிக்கல்களைத் தீர்க்க, சட்ட முன்வடிவைக் கொண்டு வருவது மட்டும் உதவி செய்துவிடாது, அரசு நிர்வாகத்துறையிலே ஆலோசனைக் குழுக்கள் போட்டு அவைகளின் மூலமாக உடனடியாக பிரச்சினைகளைத் தீர்க்க நடவடிக்கை எடுக்க வேண்டுமென்று வற்புறுத்தி அமர்கிறேன்.

திரு. எல். இளைய பெருமாள்: மாண்புமிகு தலைவரவர்களே, நம்முடைய அமைச்சர் அவர்கள் கூட்டுறவு மட்டுமல்லாமல் சட்டத்திலேயும் மிக நுணுக்கமாக இருப்பதால் இந்தச் சட்டத்தால் 6 மாத கால அளவுக்கு ஒத்தி வைப்பது மட்டும் போதாது. குறிப்பாக மாண்புமிகு உறுப்பினர் திரு. வரதராஜன் அவர்கள் சொன்னதைப் போல் அந்த நகைகள், பண்டபாத்திரங்கள் வைத்திருக்கின்றவர்களுடைய நிலைமையை அமைச்சர் அவர்கள் இளைஞராக இருந்தாலும் உணரக்கூடிய சக்தி பெற்றவர்கள்





என்று நம்புகிறேன். கடந்தகால (குறுக்கீடு) நிலைமைகள் தெரிந்திருக்கும் என்ற முறையில்தான் சொன்னேன். சகோதரர் சித்தன் அவர்கள் இளைஞர் என்று கருத வேண்டாம்; பேரப் பிள்ளையும் கிடைத்திருக்கிறது என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன். தாசில்தாருக்கு பல வேலைகள் ஏற்கனவே இருக்கின்றன. அமைச்சருக்கு நன்றாகத் தெரியும். ஒரு சட்டத்தை நாம் நல்ல எண்ணத்தோடு கொண்டுவந்து நிறைவேற்றுகிறோம். முன்பே அதிக வேலைப் பளு உள்ளவர்களிடம் இதை ஒப்படைப்பதால் அவர்களுக்கு மிக கஷ்டமாக இருக்கும், ஒழுங்காகவும் செய்ய முடியாது. அங்கே இருக்கின்ற பான்புரோக்கர்ஸ் எல்லாம் சேர்ந்து அன்பளிப்பு என்று வைத்துக் கொண்டாலும், அல்லது உதவி என்று வைத்துக் கொண்டாலும் அல்லது தர்ம சிந்தனை என்று வைத்துக் கொண்டாலும் சரி வெள்ளம் அல்லது புயல் ஏற்படுகிறபோது அவர்களிடம் இனாம் கொடுக்க வேண்டுமென்று கேட்கிற பாவமான காரியங்களை வைத்திருக்கிறோம். அதில் அவர்கள் இவர்களுக்கு உதவி செய்கிறார்கள்; இவர்கள் அவர்களுக்கு இதில் உதவி செய்கிறார்கள்; என்ற நிலைமை தான் இருக்கிறது. நல்லவர்களாக இருக்கின்ற தாசில்தார்களும் மாட்டிக்கொள்கிறார்கள். நல்லவர்கள் அல்லாதார்களுக்கு அது அன்பளிப்பாகவும் இருக்கிறது. ஆகவே இந்த ஒத்திவைப்புக் கேட்பதிலே பலன் அதிகமாக இருக்காது. அப்படிப்பட்ட நிலைமைகளையெல்லாம் அறவே களைவதற்கான நடவடிக்கைகளை அரசாங்கம் மேற்கொள்ள வேண்டும்.

குடியரசுத் தலைவர் ஆட்சிக்காலத்திலே சென்னையிலே பல பிரச்சினைகளைப்பற்றி அப்போது இருந்த அட்வைசரிடமும், கவர்னரிடமும் நேரிடையாகவே நான் தெரிவித்திருக்கிறேன். இன்ன தேதியில் நகைகள் பறிமுதல் செய்யப் போகிறார்கள், அவர்கள் அவதிக்குள்ளாகப் போகிறார்கள் என்று சொல்லியும் கூட எந்தவிதமான நடவடிக்கையும் எடுக்கப்படவில்லை. அந்த ஏழை மக்களுக்கு நியாயம் வழங்கப்படவில்லை. ஆகவே கால அளவை நீட்டிப்பதாலே பிரச்சினைகள் தீர்ந்துவிடாது. குடியரசுத் தலைவர் ஆட்சியிலேயும் சரி, அதற்கு முன்னாலே இருந்த ஆட்சியிலேயும் சரி உண்மையிலேயே எத்தனை பேர்கள் பாதிக்கப்பட்டார்கள், யார் யாருடைய நகைகள் எல்லாம் ஏலம் விடப்பட்டன, யார்யாருடைய நகைகள் எல்லாம் கணக்கற்றுப் போய்விட்டன என்ற முழுக் கணக்கையும் எடுத்து, அவைகளையெல்லாம் கண்டுபிடித்து நடவடிக்கை எடுத்தாலொழிய, நீங்கள் இந்தச் சட்டத்தை எந்த நோக்கத்தோடு கொண்டுவருகிறீர்களோ அந்த நோக்கம் நிறைவேறாது என்பது மட்டுமல்ல, நன்மைகள் உண்மையாகவே அவர்களுக்கு போய்ச்சேராது என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

[திரு. எஸ். இளையபெருமாள்] [1980 ஆகஸ்ட் 6

நம்முடைய அரசியலமைப்புச் சட்டத்தின் 46-வது பிரிவுப்படி வீக்கர் செக்ஷனுக்கு உதவி செய்ய வேண்டுமென்று இருந்தாலும் வேறு பல நிலைமைகள் இருந்தாலும் இப்படிப்பட்ட நிலைமைகள் ஏற்படுகிறபோது சோஷியல் பாய்காட் என்ற முறையிலே, கடைக்காரர்களாக இருந்தாலும், சமுதாயத்திலே வலுவுள்ளவர்களாக இருந்தாலும் அல்லது வட்டாட்சியருக்கு சொந்த ஊராக இருந்தாலும் இப்படிப்பட்ட நிலைமைகளில் சிக்கிக்கொண்டு அந்த நிலைமையிலே சட்டங்களை சரியாக அமல் நடத்த முடியாமல் அவர்களின் வேலைப்பளு, அதற்கு மேலே அவர்களுக்கு மற்றவர்களுடைய தொல்லைகள், அதற்கும் மேலே அவர்கள் இஷ்டப்படி எதையும் செய்யலாம் என்ற நிலைமைகள் இருக்கின்றன. சிதம்பரத்திலே 18 மாதங்களுக்கு முன்பாக ஏழை எளிய விவசாய சங்கத் தலைவர்கள் அதை எடுத்துக் கொண்டு போய் கொடுத்தும் நான் கொடுக்க முடியாது செய்ய முடியாது என்று சொல்லி, பொருட்களை, நகைகளை வைத்திருக்கிற ஏழைகளுக்கு காலம் கடத்தி கடைசியிலே பான்புரோக்கரிடம் போய் மன்னிப்புக் கேட்டு கொடுக்க வேண்டிய வட்டியைவிட அதிகமாகக் கொடுத்து வாங்கியிருக்கிறார்கள். தனிப்பட்ட காரியமாக இருந்தாலும் கூடதாசில்தாரிடம் ஒப்படைக்கப்படும்போது இப்படிப்பட்ட அவல நிலைமை ஏற்படுவதால் குறைந்த பட்சம் தனி அதிகாரியிடமோ ஆர். டி. ஓ. விடமோ அல்லது லேபர் ஆபீஸரிடமோ கொடுக்க வேண்டும். அவர்களிடமோ இதைத் தனித்துப் பிரித்துக் கொடுத்தால் நீங்கள் செய்கின்ற பலனானது அவர்களுக்குக் கிட்டும்.

மாண்புமிகு உறுப்பினர் திரு. வரதராஜன் அவர்கள் சொன்னதைப் போல, இதற்கு முன்னாலே சட்டத்திலே இருந்தது, கூட்டுறவு வங்கிகளிலே, கிராமங்களிலே நாணயக் கூட்டுறவுச் சங்கத்தின் மூலம் ஆயிரம், ஐநூறு ரூபாய் கொடுக்கலாம், நகைகளையோ அல்லது பண்ட பாத்திரங்களையோ வைத்துக் கொடுக்கலாம் என்ற மரபு நம்மிடத்தில்—அரசாங்கத்தில் இருக்கிறது. அதை அதிகமாகப் பணமாகக் கொடுத்து, அவர்களை வைத்துக் கொண்டால் நமக்கு ஆபத்து இல்லை, அரசாங்கத்திற்கும் நல்ல பெயர் வரும். அதை உடனடியாக அமல் செய்ய வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன்.

பான் புரோக்கர்களெல்லாம் நகைகளைக் கொண்டு போய் ரிசர்வ் பேங்கிலும், ஏனைய நேஷனலைஸ்ட் பேங்குகளிலும் வைத்துத் தான் வியாபாரம் செய்வதாகச் சொல்லியிருக்கிறார்கள். அதைவிட அரசு எடுத்துக் கொண்டு செய்வீர்களேயானால் பலன் கிட்டும் என்று கூறி, அந்த வகையில் செய்ய வேண்டுமென்று கேட்டுக் கொண்டு, சந்தர்ப்பம் தந்தமைக்காக நன்றி கூறி அமர்கிறேன், வணக்கம்.



[980 ஆகஸ்ட் 6]

<u>மாண்புமிகு திரு. சி. பொன்னையன் :</u> மாண்புமிகு பேரவைத் தலைவரவர்களே, மாண்புமிகு உறுப்பினர் சகோதரர் திரு. ரகுமான்கான் அவர்கள் பேசுகின்ற பொழுது அடகுக் கடைக்காரர்கள் நகை போன்ற பொருட்களையெல்லாம் ஏலம் விட்டு விடுகிறார்கள், ஏழைகளுக்குப் பாதுகாப்பு ஏற்பாடு இருக்கிறதா, அரசுக்குத் தகவல் வந்திருக்கிறதா என்று கூடக் கேட்டார்கள். ஒரு சில நேர்வுகளில் உயர்நீதிமன்றத்தின் மூலம் தடை உத்தரவுகளைப் பெற்று இதுபோன்ற விற்பனைகள் நடைபெற்றிருக்கின்றன. அதையெல்லாம் கருத்திற் கொண்டு தான் உடனடியாக இந்தச் சட்ட முன்வடிவைக் கொண்டு வருகிறோம்.

அது மட்டுமல்ல, சில அடகுக் கடைக்காரர்கள்—பான் புரோக்கர்ஸ்—உயர் நீதிமன்றத்தில் தடை உத்தரவு பெறாமல் கூட ஆங்காங்கு அடகுப் பொருட்களை விற்பனை செய்திருப்பது பது கூட அரசாங்கத்திற்கு தகவல் வந்து, அந்த அடிப்படையின் பேரில் தான் அந்தந்த கோட்டாட்சி அலுவலர் மூலம் அவர்கள் மீது நடவடிக்கை எடுப்பதோடு, இப்படிப்பட்ட சட்டத்தைக் கொண்டு வருகின்ற பொழுது தீவிரமாக இதை நடை முறைப் படுத்த முடியும் என்ற நம்பிக்கையோடு நாங்கள் கொண்டு வந்திருக்கிறோம்.

மாண்புமிகு உறுப்பினர் விழுப்புரம் பழனியப்பன் அவர்கள் பேசுகின்ற பொழுதும், உறுப்பினர் குப்புசாமி அவர்கள் பேசுகின்ற பொழுதும் சொன்னார்கள். தாசில்தார் அளவிலே இதை நடை முறைப்படுத்துகின்ற காரணத்தால் அவர்களுக்காக—பாதிக்கப்பட்டவர்களுக்காக, வாதாடுவதற்கு வழக்கறிஞர்கள் வேண்டும், அவர்களுக்கு அனுமதி தர வேண்டுமென்று கோரினார்கள். இந்தச் சட்டத்தினுடைய உள்நோக்கமே, ஏழை எளியவர்களுக்கு விரைந்து பலன் கிட்ட வேண்டுமென்ற நோக்கந்தோடு இது நிறைவேற்றப்பட இருக்கின்ற காரணத்தால் வழக்குரைஞர்கள் தாசில்தார் அலுவலகம் என்ற அளவிற்குச் செல்கின்ற பொழுது வழக்குரைஞர்களான அருமைச் சகோதரர்கள் பழனியப்பன், இரகுமான்கான், குப்புசாமி போன்றவர்களுக்குத் தெளிவாகத் தெரியும், 'டெக்னிகல் இண்டர்பிரடேஷன்' அதிகமாகச் செய்து, அப்பலெட் கோர்ட்டிலும் அவர்களே ஆஜர்ஆகி, அதற்குமேல் உள்ள மேல்கோர்ட்டுகளுக்கும் எடுத்துச் சென்று, இறுதியிலே அந்த ஏழைகளுக்கு நன்மை கிட்டுவதற்குப் பதிலாக கால தாமதத்தின் காரணமாய் தீமையே அதிகம் கிட்டும் என்று நாம் கருதிய காரணத்தினால்தான் வழக்குரைஞர்கள் இதில் தடைப்படுத்தப்பட்டிருக்கிறார்கள்.

மாற்றுக் கடன் வசதி ஏதேனும் ஏற்பாடு செய்யவேண்டுமென மாண்புமிகு உறுப்பினர் திரு. வரதராஜன் அவர்களும், மாண்புமிகு உறுப்பினர் பெரியவர் திரு. இளையபெருமாள் அவர்களும், மற்றும் பலரும் எடுத்துக் கூறினார்கள். இதையும் நான் ஏற்றுக் கொள்கிறேன். அடகுக் கடைக்காரர்கள்—பான் புரோக்கர்ஸ் மூலமாகவும் ஏழைகள் கடன் வாங்குகிறார்கள். லைசென்ஸ் பெறாமல் கடன் தருகின்றவர்களின் மூலமாகவும் கடன் பெறுகிறார்கள். ஆங்கு அதிகப்படியான வட்டி—முதலை விட—அசலை விட இரண்டு அளவுக்கு எழுதி பின்னர் நீதிமன்றத்தில் இழுக்கடித்து அவர்களுக்குத் தொல்லை தருவது போன்ற பல இன்னல்கள், இடர்ப்பாடுகள் ஏழைகளுக்கு இருக்கின்ற காரணத்தால்தான் நாம் விரைந்து கூட்டுறவு அமைப்புகளின் மூலம் இந்த ஏழைகளுக்குக் கடன் உதவி தருவதை தீவிரப்படுத்த வேண்டுமென்பதை இந்த அரசு ஏற்றுக் கொள்கிறது.

நான் கூட்டுறவுத் துறை மானியத்தின் பொழுது எடுத்துச் சொன்னேன். அர்பன் கூட்டுறவு பேங்ஸ் மூலமாக நகர்ப்புறத்திலே இருக்கின்ற ஏழை எளிய மக்களுக்கு இதுகாறும் கொடுத்து வருகின்ற ஜுவல் லோன் பொறுத்த வரையில் இன்னும் அதிகமாக, பரவலாக்கப்பட வேண்டுமென்றும், மற்றும் அர்பன் கூட்டுறவு வங்கிகளின் மூலமாக ஏழைகளுக்கு ''ஜுவல் லோன்'' அதிகமாகத் தர வேண்டுமென்றும் நாம் இப்பொழுது நடவடிக்கை எடுக்க இருக்கிறோம்.

அதைப்போலவே, கூட்டுறவு சேவா சங்கங்களின் மூலமாக அதிகப்படியாக கிராமப்புறத்திலே இருக்கின்ற நலிந்த பிரிவினருக்கு இதுபோன்ற கடனுதவி தர நாம் நடவடிக்கை எடுப்பதன் மூலம் அவர்கள் வசதி படைத்த அடகுக் கடைக்காரர்களால் சுரண்டப்படுவதிலிருந்து அவர்களைக் காப்பாற்ற முடியும் என்ற நம்பிக்கையில் இதை நடப்பாண்டிலேயிருந்து நாங்கள் தீவிரப்படுத்த இருக்கின்றோம்.

(பிற்பகல் 1-30)

மாண்புமிகு பேரவைத் தலைவர் : பேரவையின் அனுமதியுடன், அவையின் நேரம் நீட்டிக்கப்படுகிறது.

மாண்புமிகு திரு. சி. பொன்னையன் : 1976 ஆம் ஆண்டில் கொண்டு வரப்பட சட்டம், ஆக்ட் 31 ஆஃப் 1976—சட்டத்தின் அடிப்படையில் 1976 ஆம் ஆண்டு ஜூலை மாதம் 29 ஆம் நாளுக்கு முன் வாங்கிய கடன்கள் அனைத்தும் தள்ளுபடி செய்யப்பட வேண்டுமென ஷரத்தைக் கொண்டு வந்தோம். ஆனால், அந்தச் சட்டத்தின் அடிப்படையில் கடன் கொடுத்தவர்கள்





தாசில்தாரிடம் மனு செய்யலாம் என்ற விதிமுறை இருக்கிறது. அந்த விதி முறையின் அடிப்படையில் கிட்டத்தட்ட 70 இலட்சம் மனுக்கள் தமிழகம் முழுவதும் வரப்பெற்றன. ஆனால், நேர்வு காணுகின்ற நேரத்தில், 2 இலட்சம் நேர்வுகள் மட்டுமே மேற்கொள்ளப்பட்டன. $3\frac{1}{2}$ ஆண்டுக்காலம் ஆன போதிலும். மீதி உள்ள 68 இலட்சம் நேர்வுகள் செய்ய முடியாத அளவிற்கு பல தடைக் கற்கள் ஏற்பட்டு விட்டன. எனவேதான், 1980 ஆம் ஆண்டில், ஆக்ட் 5 ஆஃப் 1980—அமென்ட்மென்ட் ஆக்ட் பிரகாரம், 1979 ஆம் ஆண்டு டிசம்பர் மாதம் 13 ஆம் நாளிலிருந்து மேலும் 6 மாத காலம் அதை நீட்டித்து 1980 ஆம் ஆண்டு ஜுன் மாதம் 12 ஆம் நாள் வரை மனு செய்து கொள்ளலாம் என்ற சட்டத் திருத்தத்தைக் கொண்டு வந்தோம்.

இந்த அரசைப் பொறுத்த வரையிலும் தக்க விளம்பரம் செய்யாமல் இல்லை. அரசு தீவிர நடவடிக்கை எடுக்கவில்லையென்று கோடிட்டு காட்டினார் மாண்புமிகு உறுப்பினர் திரு. பழனியப்பன் அவர்கள். அப்படி அல்ல. அதிகப்படியான விளம்பரங்களை இந்த 6 மாத காலத்தில் மேற்கொண்டும் கூட, ஒரு வேளை, அத்தகைய கடன் சுமைக்கு உட்பட்டிருக்கின்றவர்கள், ஏழைகளாக, படிக்காதவர்களாக, அப்பாவிகளாக இருக்கிற காரணத்தால், விவரம் புரியாமல் அவர்கள் மனு செய்ய முன் வரவில்லையென்று கூட அரசு அஞ்சுகிறது. காரணம், கடன் கொடுக்கின்றவர்கள் எப்போதுமே வசதி படைத்தவர்களாக இருக்கிறார்கள். ஆக்ட் 31 ஆஃப் 1976-ஐப் பொறுத்த வரைக்கும் கடன் கொடுத்தவர்கள் மனு செய்யலாம் என்ற நிலை இருந்த பொழுது 70 இலட்சம் மனுக்கள் வந்தன. ஆனால், கடன் பட்டவர்கள் மனு செய்யலாம் என்ற சட்டத் திருத்தம் வந்த பொழுது, அவர்கள் நலன் கருதி, இந்தச் சட்டத் திருத்தத்தைக் கொண்டு வந்த பொழுது மனு செய்தவர்களுடைய எண்ணிக்கை மிகக் குறைவாக இருக்கிறது. ஆனால், கடன் கொடுத்தவர்கள் எண்ணிக்கையும் அதிகமாக இருக்கிற காரணத்தால், இந்தச் சட்டத்தின் பலனை அவர்கள் நுகர முடியாமல் போய் விடக் கூடாது என்ற நோக்குடன் தான் மேலும் 6 மாத காலம் நீட்டித்துத் தர வேண்டுமென 1980 ஆம் ஆண்டு ஜுன் மாதம் 12 ஆம் நாளுக்குப் பிறகு 6 மாத காலம் நீட்டித்துதர இந்தச் சட்ட முன்வடிவைக் கொண்டு வந்திருக்கிறோம்.

ஆக்ட் 31 ஆஃப் 1976 பொறுத்த வரைக்கும், கிராமப்புறத்திலே இருக்கிற சிறு விவசாயிகள், ஏழைகள், கைவினைஞர்கள் போன்றவர்களுக்காகக் கொண்டு வரப்பட்ட சட்டம் அது. ஆனால், கிராமப் புறம், நகர்ப்புறம் ஆகிய இரண்டு பகுதிகளிலும் இருக்கிற ஏழைகளுக்கு நலன் பயக்கும் முகத்தான்

இந்த அடிப்படையில் ஆக்ட் 31/79; ஆக்ட் 40/79: ஆக்ட் 13/80 ஆகிய மூன்று சட்டங்களுக்கும் இந்தத் திருத்தத்தைக் கொண்டுவந்து அதோடு ஆக்ட் 23/1943 என்ற அடகுக் கடைக் காரர்கள் சட்டத்திலே, அவர்களுக்குத் தடை விதிக்க அடகுப் பொருள்களை விற்பனை செய்வதை தடைவிதிக்க இந்தச்சட்டத் திலே திருத்தம் கொண்டுவந்தால்தான் செல்லுபடியாகும் என்ற காரணத்தால், அதற்கும் ஒரு திருத்தத்தைக் கொண்டுவர இந்தச் சட்ட முன்வடிவைக் கொண்டு வந்து மேற்கூறிய திருத்தங்கள் மூலம் கடன் தொல்லையிலே இருந்து ஏழை எளிய மக்கள் இன்னல்கள், இடர்பாடுகளைச் சந்தித்து வருகின்ற மக்களைப் பாதுகாக்க முடியும் என்ற நம்பிக்கையோடு இந்தச் சட்ட முன் வடிவை ஏற்குமாறு வேண்டுகிறேன்.

<u>மாண்புமிகு பேரவைத் தலைவர் :</u> அமைச்சர் அவர்களின் தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்படுகிறது ........

<u>டாக்டர் கே. சௌரிராஜன் :</u> தலைவர் அவர்களே......

<u>மாண்புமிகு பேரவைத் தலைவர் :</u> நேரம் ஆகிவிட்டது உட்காருங்கள்.

<u>டாக்டர் கே. சௌரிராஜன் :</u> தலைவர் அவர்களே, இந்தச் சட்ட முன்வடிவை ஏற்றுக் கொள்வதற்கு முன்னால் நான் ஒரே ஒரு சந்தேகத்தைக்கிளப்ப விரும்புகிறேன். அதாவது இந்த நகர்ப் புறங்களில் எல்லாம் புடவை, வேஷ்டி, தேக்சாக்களைக் கூட அடகு வைத்திருக்கிறார்கள். நீங்கள் சொல்லியபடி அர்பன் கோவாப்ரேட்டிவ், ரூரல் கோவாபரேட்டிவ் மூலமாக அவர்களு டைய கஷ்டங்களை நிவர்த்தி செய்ய முடியும் என்று சொன்னால் முதலாவதாக சில சில பொருள்களை அடகே வைக்கக் கூடாது, அவர்கள் அடகுபிடிக்கக்கூடாது என்ற அளவுக்கு மந்திரி அவர்கள் சட்டமோ அல்லது கவர்மெண்ட் ஆர்டரோ கொண்டுவருவாரா என்பதைக் கேட்டுக் கொள்கிறேன்.

<u>திரு. தி. கா. நல்லப்பன் :</u> தலைவர் அவர்களே, மாண்புமிகு பேரவைத் தலைவரவர்களே, இந்தச் சட்டத்தைப் பொறுத்த வரையில் அதை வரவேற்றால் கூட ஏழை எளிய மக்களுக்கு நகைகளின் பேரில் கடன் கொடுக்க கூட்டுறவு சங்கங்கள் முன்வர வேண்டுமென்று சொல்லுவதோடு, இந்த அடகுக் கடையையே இல்லாமல் செய்ய வேண்டும் என்று சொல்லிக் கொள்ள ஆசைப் படுகிறேன்.

[திரு. பி. எம். தங்கவேல்ராஜ்] [1980 ஆகஸ்ட 6

With regard to Agriculture and non-agriculture என்று சட்டத்திலே கிளியராக சொல்லுகிறது. அந்த அக்ரிகல்சர் என்று வரும்போது ஒரு விவசாயி 63 செண்ட் நஞ்சை வைத்திருந்தால் அவர்களுக்கு என்று ஒரு கணக்கு வைத்திருந்தார்கள். தோட்டப் பயிர் ஒரு ஏக்கர் 24 செண்ட், புஞ்சை 4 ஏக்கர் என்று அவர்கள் கிளாரிபிகேஷன் கொடுத்திருந்தார்கள். ஆக்ட் 13/80 லே 4,500 ரூபாய் வருமானம் உள்ளவர்களுக்குக் கடன் நிவாரணத்திலிருந்து விதிவிலக்கு அளிக்கப்படும் என்று இருக்கிறது. விவசாயிகள் 10 ஏக்கர் 20 ஏக்கர்கள் வைத்திருப்பவர்கள், கிராம முன்சீப் அவர்களைப்பார்த்து 4,000-க்கும் கீழே ஒரு அத்தாட்சியை வாங்கி வந்துவிடுகிறார்கள். நான் அமைச்சர் அவர்களைக் கேட்டுக் கொள்வது விவசாயி கடன்பட்டால் ஒரு குறிப்பிட்ட இத்தனை ஏக்கருக்குக் கீழே இருப்பவர்களுக்கு 4,500 என்று வருமானம் இருக்கும் என்று கொண்டு வருவார்களா என்பதைக் கேட்க விரும்புகிறேன்.

திரு பெ. சு. திருவேங்கடம் : பேரவைத் தலைவர் அவர்களே, விவசாயிகள் ஏழை எளியமக்களைக் காப்பாற்றுவதற்கு இப்போது சட்டத்தை நாம் கொண்டு வருகிறோம். அப்படி இருக்கும் போது பல அடகுக்காரர்கள் தவணை நீடித்துப் போகின்ற காரணத்தாலே, வெளி மாநிலங்களிலிருந்து லைசென்சு பெற்ற அடகுக்காரர்கள் 2, 3 இடங்களிலே நகைகளையெல்லாம் எடுத்துக் கொண்டு ஒடிவிட்டார்கள். போலீசாரிடம் சொன்னால் இன்னும் கிடைக்கவில்லை என்று சொல்லுகிறார்கள். பல்வேறு ஏழை, நடுத்தரக் குடும்பங்கள் பாதிக்கப்பட்டிருக்கின்றன. உதாரணத்திற்குச் சொல்ல வேண்டுமானால் திருவண்ணாமலையில் கூட இத்தகைய சம்பவம் நடைபெற்றிருக்கிறது. அதற்கு அரசாங்கம் என்ன வழிவகைகளை காணப் போகிறது என்பதை அறிந்து கொள்ள விரும்புகிறேன்.

[பிற்பகல் 1–40]

மாண்புமிகு திரு. சி. பொன்னையன் : மாண்புமிகு திரு. திருவேங்கடம் அவர்கள் கூறியது போல், சில மன்னிக்க முடியாத இதுபோன்ற தவறுகள் நடந்துதான் வருகின்றன. அவைகள் அரசின் கவனத்திற்கு வந்து இருக்கின்றன. தக்க கிரிமினல் நடவடிக்கை எடுக்க அரசு உத்தரவிட்டு இருக்கிறது. எந்தெந்த மாநிலங்களுக்கு அவர்கள் சென்றுவிடுகிறார்கள் என்பதைக் கண்டறிந்து, அவர்கள் மீது நடவடிக்கை எடுக்க இருக்கிறோம். சட்டத்திலே இதற்கு வழிவகை இருப்பதால் தீவிரப்படுத்தி நடவடிக்கை எடுக்க உத்தரவிட்டு இருக்கிறோம்.

மாண்புமிகு உறுப்பினர் சுட்டிக்காட்டியதைப் போல், 31/76படி எந்த அளவிற்கு வருமானம் அல்லது எந்த அளவிற்கு வரி என்று இல்லாமல்—2 ஹெக்டேர் நிலம் என்று இல்லாமல் 4,800 என்று இருப்பதால் கிராமத்திலே இருக்கிற நிலம் அதிகமாக உள்ளவர்கள் ஏற்கனவே வசதி படைத்தவர்கள் கூட 4800 கடன்பட்டு இருக்கிறோம் என்று சர்ட்டிபிகேட் வாங்கிக் கொடுத்து விட்டால் என்ன செய்வது என்று சொன்னார்கள். 4,800—க்குக் கீழ் கடன் உள்ளவர்களைப் பொறுத்தவரைக்கும், அவர்கள் தாசில்தாரிடம் மனுவைக் கொடுத்து சர்ட்டிபிகேட் வாங்குவதற்குச் சட்டத்திலே தெளிவாக வகை செய்யப்பட்டு இருக்கிறது. தாசில்தாரைப் பொறுத்த வரையில் மனுவைப் பெற்று, அதற்கு ஆதாரங்கள் என்ன என்பதைப் பார்த்து

The Tahsildar should get himself satisfied to the correctness of the claim made by the Debtor.

அதுமட்டுமல்ல, அவர் கிரிடிடெர்ஸ்க்கும் ஆப்பர்சூனிட்டி கொடுக்க வேண்டும்.

Reasonable oppo tunities are also given to the creditors.

இருவருக்கும் ஆதாரங்கள் தாக்கல் செய்ய முடியும். மாண்புமிகு உறுப்பினர் சொல்லுகிறமாதிரி 10 ஏக்கர் நிலம் இருக்குமானால், அவருக்கு சிட்டா அடங்கல் இருக்கும். அதிலே என்னென்ன பயிர் செய்து இருக்கிறார் என்ற விவரம் இருக்கும். அதற்கு வேல்யூ போடப்பட்டு இருக்கும், அதைக் காட்டி அவர்கள், பால்ஸ் கிளெய்ம் செய்து இருந்தால் அதைத் தடுக்க முடியும். இதிலே ஆர். டி. ஓ. விற்கு அப்பீல் பவர் கொடுக்கப்பட்டு இருக்கிறது. நடைமுறையில் இதுபோன்ற சிக்கல்கள் வருமானால் அதற்குரிய நடவடிக்கை எடுக்கப்படும். நிச்சயமாக எடுக்கப்படுகிற நடவடிக்கை ஏழை எளியவர்களுக்குச் சாதகமாகத்தான் இருக்கும், 'நாட் இன் பேவர் ஆப் தி கிரிடிடெர்ஸ்' என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

<u>மாண்புமிகு பேரவைத் தலைவர் :</u> பேரவை முன்னுள்ள கேள்வி : நான் கீழ்கண்ட தீர்மானத்தை மொழிகிறேன் ;—

"தமிழ்நாடு 1980 ஆம் ஆண்டு அடகுக் கடைக்காரர்கள் கடன் நிவாரணச் சட்டங்கள் (திருத்த) சட்ட முன்வடிவு (சட்ட மன்றப் பேரவை சட்ட முன்வடிவு எண். 28/1980) ஆய்வுக்கு எடுத்துக் கொள்ளப் பெற வேண்டும். "

தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்பெற்று, நிறைவேற்றப்பெற்று, சட்ட முன்வடிவு பிரிவு வாரியாக ஆய்வுக்கு எடுத்துக் கொள்ளப்பெற்றது.

பிரிவுகள் 2 முதல் 6 வரை பேரவையின் முடிவிற்கு விடப்பெற்று நிறைவேற்றப் பெற்றன.

பிரிவு 1, முகப்புரை, நெடுந்தலைப்பு ஆகியவை பேரவையின் முடிவிற்கு விடப்பெற்று நிறைவேற்றப் பெற்றன.

மாண்புமிகு திரு. சி. பொன்னையன் : தலைவர் அவர்களே, நான் கீழ்கண்ட தீர்மானத்தை மொழிகிறேன் ;—தமிழ்நாடு 1980 ஆம் ஆண்டு அடகுக் கடைக்காரர்கள் கடன் நிவாரணச் சட்டங்கள் (திருத்த) சட்டமுன்வடிவு (சட்டமன்றப் பேரவை சட்டமுன்வடிவு எண். 28/1980) நிறைவேற்றப் பெற வேண்டும்.

தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்பெற்று சட்டமுன்வடிவு நிறைவேற்றப் பெற்றது.

## 4. அறிவிப்புகள்—தொடர்ச்சி.

### (ஐ) நிகழ்ச்சி நிரலில் மாற்றம்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : பொது முக்கியத்துவம் வாய்ந்த பொருள் குறித்து அரை மணி நேர விவாதம், தேதி குறிப்பிடப் பெறாமல் ஒத்திவைக்கப்பெறுகிறது.

பேரவையின் இன்றைய அலுவல்கள் இத்துடன் முடிவுற்று நாளை (7–8–1980) காலை 9 மணிக்கு பேரவை மீண்டும் கூடும்.

பின்னர், பேரவை பிற்பகல் 1–43 மணிக்கு ஒத்திவைக்கப் பெற்றது.

[1980 ஆகஸ்ட் 6]

77. தமிழ்நாடு 1980 ஆம் ஆண்டு கடன் நிவாரண விதிகள் செய்வது குறித்து வருவாய்த் துறையின் 29—2—1980 ஆம் தேதியிடப்பெற்ற 473 ஆம் எண் அரசாணையில் வெளியான அறிவிப்பு [தமிழ்நாடு 1979 ஆம் ஆண்டு கடன் நிவாரணச் சட்டத்தின் (தமிழ்நாடு சட்டம் 40/1979) 30 (3) பிரிவின் கீழ் பேரவைமுன் வைக்கப்பெற்றது].

78. தமிழ்நாடு 1959 ஆம் ஆண்டு பொது விற்பனை வரி விதிகளில் சில திருத்தங்கள் செய்வது குறித்து வணிகவரிகள்—சமய அறக்கட்டளைகள் துறையின் 25—4—1979 ஆம் தேதியிடப்பெற்ற 435 ஆம் எண். அரசாணையில் வெளியான அறிவிப்பு [தமிழ்நாடு 1959 ஆம் ஆண்டு பொது விற்பனை வரிச் சட்டத்தின் (தமிழ்நாடு சட்டம் 1/1959)53 (5)பிரிவின் கீழ் பேரவைமுன் வைக்கபெற்றது].

79. தமிழ்நாடு 1959 ஆம் ஆண்டு பொது விற்பனை வரி விதிகளில் திருத்தமொன்று செய்வது குறித்து வணிகவரிகள்—சமய அறக்கட்டளைகள் துறையின் 5—11—1979 ஆம் தேதியிடப் பெற்ற 1694 ஆம் எண் அரசாணையில் வெளியான அறிவிப்பு [தமிழ்நாடு 1959 ஆம் ஆண்டு பொது விற்பனைவரி சட்டத்தின் (தமிழ்நாடு சட்டம் 1/1959) 53 (5) பிரிவின் கீழ் பேரவைமுன் வைக்கப்பெற்றது].

## ஆ. அறிக்கைகள், அறிவிப்புகள், ஏனைய தாள்கள்.

*127. தமிழ்நாடு 1980 ஆம் ஆண்டு பொதுப் பொறுப்புக் கழகங்கள் (வேளாண்மை நிலங்கள் நிர்வாகத்தை முறைப்படுத்துதல்) இரண்டாம் திருத்தச் சட்ட முன்வடிவின் நகலும், இணைப்பும் (சட்டமன்றப் பேரவை சட்டமுன்வடிவு எண். 33/1980).

*128. தமிழ்நாடு 1980 ஆம் ஆண்டு கூட்டுறவுச் சங்கங்கள் (தனி அதிகாரிகள் நியமனம்) திருத்தச் சட்ட முன்வடிவின் நகலும் இணைப்பும் (சட்ட மன்றப் பேரவை சட்ட முன்வடிவு எண். 34/1980).

129. 1980 ஆம் ஆண்டு இந்திய மின்சார (தமிழ்நாடு திருத்த) சட்ட முன் வடிவின் நகலும், இணைப்பும் (சட்டமன்றப் பேரவை சட்ட முன்வடிவு எண். 35/1980).

*130. தமிழ்நாடு 1980 ஆம் ஆண்டு பொது விற்பனைவரி (இரண்டாவது திருத்த) சட்ட முன்வடிவின் நகலும், இணைப்பும் (சட்டமன்றப் பேரவை சட்ட முன்வடிவு எண். 36/1980).

*131. தமிழ்நாடு 1980 ஆம் ஆண்டு நகராட்சி மன்றங்கள் (தனி அதிகாரிகளை நியமித்தல்) திருத்தச் சட்ட முன்வடிவின் நகலும், இணைப்பும் (சட்டமன்றப் பேரவை சட்ட முன்வடிவு எண். 37/1980).

*132. 1980 ஆம் ஆண்டு கோயம்புத்தூர் நகராட்சி மன்றத் (தனி அதிகாரியை நியமித்தல்) திருத்தச் சட்ட முன்வடிவின் நகலும், இணைப்பும் (சட்டமன்றப் பேரவை சட்ட முன்வடிவு எண். 38/1980).

*133. தமிழ்நாடு 1980 ஆம் ஆண்டு ஊராட்சி ஒன்றியக் குழுக்கள் (தனி அதிகாரிகள் நியமனம்) திருத்தச் சட்ட முன் வடிவின் நகலும், இணைப்பும் (சட்டமன்றப் பேரவை சட்ட முன் வடிவு எண். 39/1980).

*134. தமிழ்நாடு 1980 ஆம் ஆண்டு ஊராட்சிகள் (திருத்தச் சட்ட முன்வடிவின் நகலும், இணைப்பும் (சட்டமன்றப் பேரவை சட்ட முன்வடிவு எண். 40/1980).

*135. தமிழ்நாடு 1980 ஆம் ஆண்டு ஊராட்சிகள் (தனி அதி காரிகளை நியமித்தல்) திருத்தச் சட்ட முன்வடிவின் நகலும், இணைப்பும் (சட்டமன்றப் பேரவை சட்ட முன்வடிவு எண். /1980).

123102

N81.7-3

## LIST OF AGENTS FOR THE SALE OF TAMIL NADU GOVERNMENT PUBLICATIONS IN MADRAS CITY.

1 Account Test Institute, Egmore, Madras-8.
2 The City Book Company, Madras-4.
3 Higginbothams (Private) Limited, Madras-2.
4 P. Varadachary and Company, Madras-1.
5 C. Subbiah Chetty and Company, Madras-5.
6 The Universal Book House, Moore Market, Madras-3.
7 C. Sitharaman and Company, Madras-14.
8 Mohan Pathippagam and Book Depot, Madras-5.
9 C. Venkatesan Chetty and Company, No. 8-C, Pycrofts Road, Madras-5.
10 The South India Saiva Siddhanta Works Publishing Society, (Tirunelveli), Limited, Madras 1.
11 The Sangam Publishers, No. 11, Sunkurama Chetty Street, Madras-1.
12 New Century Book House (Private), Limited, Madras-2.
13 Kalaivani Book Centre, No. 1, Ponnaiamman Koil Street, Egmore, Madras-8.

### IN MOFFASIL OF TAMIL NADU.

1 A. Venkatasubban and Company, Vellore (North Arcot) District.
2 Bharathamatha Book Depot, Thanjavur (Tanjore District).
3 P. V. Nathan and Company, Kumbakonam (Tanjore District).
4 Appar Book Stall, Thanjavur.
5 P. N. Swaminathan and Company, Bazaar Street, Pudukkottai.
6 Palaniappa Brothers, Tiruchirappalli-2.
7 S. R. Subramania Pillai, Tirunelveli Junction.
8 B. Aruldoss, Villupuram (South Arcot District).
9 Vasantham Stores, Booksellers, 9/31, Cross Cut Road, Coimbatore-12.
10 Mercury Book Company, 20, Karuppa Gounder Street, Coimbatore-1.
11 S. M. Jegannatham Book House, 35, Nandhi Koil Street, Tiruchi 1.
12 Ganesh Stores, South Car Street, Sivakasi.
13 Mary Martin, Booksellers, Kotagiri (The Nilgiris).
14 A. K. Chandriah Chettiar and Sons, Salem-1.
15 Parameswari Book Shop, No. 45-D, Old Market Street, Salem.
16 Meenakshi Pathippagam, Pudukkottai.
17 K. V. Narayana Iyer and Sons, Dindigul, Madurai District.
18 Jayakumari Stores, Nagercoil (Kanyakumari District).
19 Baby Stores, Booksellers, Villupuram (South Arcot District).
20 Dinamani Stores, No. 3/1, Old Post Office Road, Coimbatore-18.
21 Kumaran Book Depot, Book-sellers, Erode-1.
22 Vela Book Company, No. A. Annaji Rao Street, Erode-1.
23 Radhamani Stores, 6-A, Raja Street, Coimbatore-1.
24 Ajentha Book Centre, Salem -1.
25 Sri Vidya, 63, Tennure High Road, Tiruchy-2.
26 Sri Ramavilas Book Shop, 90, Amman Sannathi, Madurai-1.

### IN OTHER STATES.

1 Jain Book Agency, New Delhi-1.
2 International Book House, Trivandrum.
3 The Book Syndicate, Hyderabad-1.
4 Labour Law Publications, Hyderabad.
5 Puthaghalayam, Pondicherry.
6 Prabu Book Service Gurgaon, Haryana.
7 K. P. Bogchi and Company, 286, B. B. Ganguli Street, Calcutta 12.

Published under Rules 234 and 237 of the Tamil Nadu Legislative Assembly Rules and Printed by the Director of Stationery and